
சமூக நீதி காத்த வீராங்கனை
புரட்சித்தலைவி
டாக்டர். ஜெ. ஜெயலலிதா
அவர்களின்
மூன்றாண்டுப்
பொற்கால ஆட்சியில்
எழுச்சிமிகு தமிழகம்
தமிழரசு
16-6-1994 – 1-7-1994 ரூ. 6



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

**தமிழரசு**
*திருவள்ளுவர் ஆண்டு 2025*
*ஆனித் திங்கள் 2, 17*
*மலர்: 25* *இதழ்: 1*

*16.6.94-1.7.94*
*விலை ரூபாய் ஆறு*



## 25-ஆவது ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' 25-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரைகள், கவிதைகள் என இப்படிப் பல் வேறு பயனுள்ள எழுத்தோவியங் களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாகத் தமிழரசு விளங்கி வருகிறது. ஆம். படிக்க - பயன்பெற - பாதுகாக்கத் தக்க வகையிலே மிக்க கவனத்துடன் தயாரிக்கப் படுகிறது.

'தமிழரசு' இதழுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சந்தா தாரர்கள், முகவர்கள், விளம்பர தாரர்கள் அனைவருக்கும் எங் களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

ஆசிரியர்.

## தமிழ்நாடு அரசின் மூன்றாண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள்

# உங்களுக்காகப் பணியாற்றுவதே என் கடமை!

## மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா

தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்று சூளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன். அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக்கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல, புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ்செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன்னேற்றப்பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.

எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும், இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங்களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மையான வளர்ச்சியை நாம்

அடைய முடியும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில் நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான், வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தி உள்ளோம்.

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியாவிலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடு தான் என்று, மைய அரசே பாராட்டி உள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள் தான், சகோதரிகள் தான் இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.

எங்கள் பாதையும் பயணமும், சத்திய சோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித்தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம்!



# ஏற்றங் கொண்ட எழில் மிகு ஆட்சி!

## மாண்புமிகு நிதியமைச்சர்
## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழக ஆட்சிப்பொறுப்பை ஏற்று, மூன்று ஆண்டுகள் முறையான நல்லாட்சியை முடித்துவிட்டு, 24.6.94ஆம் நாளன்று, நலம்மிகு நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏராளமான நலன்களையும், பலன்களையும், நல்வாழ்வுக்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் பெற்றுள்ள ஏழை எளிய மக்களும், பாட்டாளித் தொழிலாளி மக்களும், நலிந்த நடுத்தரவகுப்பு மக்களும், இந்த ஆட்சியை உளமாரப் பாராட்டி மகிழ்கிறார்கள். வாயாரப் போற்றிப் புகழ்கிறார்கள். இந்த ஆட்சியைப் பாராட்ட வேண்டியவர்கள் பாராட்டுகிறார்கள் – வாழ்த்த வேண்டியவர்கள் வாழ்த்துகிறார்கள் – போற்றிப் புகழ வேண்டியவர்கள் புகழ்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் மன நிறைவு அளிப்பதாகும்.

ஆட்சியாளர்களிலெல்லாம் உயர்ந்த ஆட்சியாளராய், ஒளி வீசும் விளக்குப்போல் விளங்குபவர் யார் என்பதை விளக்க வந்த வள்ளுவப் பெருந்தகையார், நன்கொடை வழங்குதல், முக மலர்ச்சியோடு இனியவற்றைக் கூறுதல், செங்கோல் ஆட்சி செலுத்துதல், தளர்வுற்ற குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய இந்த நான்கு பண்புகளையும் உடையவரே ஆவார் என்று வலியுறுத்துகிறார்.

கொடை அளி செங்கோல் குடி
ஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி.

– என்பது குறள்.

வள்ளுவப் பெருந்தகையார் கூறியுள்ள இலக்கணத்திற்கு



ஏற்பதான், தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், ஏழைஎளிய மக்கள் இன்புற்றுவாழ, நன்கொடைக்ளையும், நல உதவிகளையும் அளித்து வருகிறார்கள். குறையிரந்து வருவோர்க்கு முக மலர்ச்சியோடு இனியவற்றைக் கூறி, அவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்து வருகிறார்கள். செங்கோல் ஆட்சியைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தி வருகிறார்கள்; நலிவுற்று, மிகவும் தளர்ந்து காணப்படும் குடி மக்களுக்குத் தக்கப் பாதுகாப்பினை அளித்து வருகிறார்கள். இவற்றையெல்லாம் நடுநிலையில் நின்று காணும் நல்லவர்கள் அனைவரும் ஏற்றிப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த சனநாயகக் கொள்கைகோட்பாடுகளையும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதப் பண்போடு கூடிய ஆக்க நிறைவான திட்டங்களையும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற மூன்றாண்டுக்காலமாக நிறைவேற்றி, அவற்றில் மெச்சத்தகுந்த வெற்றிகளைப் பெற்று வருகிறார்கள்.

சென்ற மூன்றாண்டுக் காலத்திற்கு முன்பு, சீர்கெட்டுச் சிதைந்து, சின்னாபின்னமாகிக் கிடந்த தமிழகத்தை ஒழுங்குபடுத்தி, சட்டம்-அமைதி-ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்டி வருவதில், தொடர்ந்து கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆளுகையின் கீழ்த், தமிழகம் சமூக முன்னேற்றத் துறையிலும், பொருளாதார மேம்பாட்டுத்துறையிலும் ஒட்டுமொத்த வளர்ச்சியினைப் பெற்றுத் தனிச்சிறப்பை எய்தியுள்ளது.

இன்றைய நிலையில், தமிழகம், அமைதி- ஆக்கம்- நல்வளர்ச்சி- நல்லிணக்கம் ஆகியவற்றைப் பொறுத்து, இந்தியப் பாலைவனத்திற்கிடையே ஒரு பூஞ்

சோலையாகத் திகழ்கின்றது என்று கூறினால், அது மிகையாகாது.

தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கில், சென்ற மூன்று ஆண்டுக்காலத்தில் வரவுகளின் போக்கு மற்றும் செலவுகளின் போக்கு ஆகியவை எப்படி இருந்து வருகின்றன என்பதைக் கூர்ந்து கவனித்தால், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆளுகையின் கீழ் எப்படிப்பட்ட வளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, ரூ.5,088 கோடியாக இருந்த வரவினங்கள், இப்பொழுது ரூ.7,844 கோடியாக உயர்ந்துள்ளன. அதே நிலையில், ரூ.5,641 கோடியாக இருந்த செலவினங்கள் இன்றைய நிலையில், ரூ.9,084 கோடியாக மிகுந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுக் காலத்திற்குப்பிறகு, வருவாய்க் கணக்கில் வரவுகள் மட்டும் ரூ.2,756க்குக் கூடுதலாக உயர்ந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, மக்களின் நலங்கருதிச் செய்யப்படும் செலவினங்கள் ரூ.3,443 கோடிக்குக் கூடுதலாக ஆகியிருக்கின்றன.

ரூ.1,454 கோடியாக இருந்தவந்த பொதுவான பணிகள், இன்றைய நிலையில் ரூ.2,696 கோடியாகவும், ரூ.2,492 கோடியாக இருந்துவந்த சமூகப்பணிகள், இப்பொழுது ரூ.3,728 கோடியாகவும், ரூ.1,587 கோடியாக இருந்துவந்த பொருளாதாரப் பணிகள், இப்பொழுது ரூ.2,510 கோடியாகவும், ரூ.108 கோடியாக இருந்துவந்த உதவிமானியங்கள், இன்றைய நிலையில் ரூ.150 கோடியாக்வும், உயர்ந்திருப்பதிலிருந்து தமிழக ஆட்சியின் வளர்ச்சியை எவரும் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும்.

மூலதனக் கணக்கை எடுத்துக் கொண்டால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரூ.223 கோடியாக இருந்தது, இப்பொழுது ரூ.423



■ **திறமைக்கும் நேர்மைக்கும் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக் காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்.**

கோடிக்கு வளர்ந்துள்ளதை அறியலாம்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டச் செலவுக் கணக்கை ஆராய்ந்து பார்த்தால், ரூ.1,591 கோடியாக இருந்தது, மூன்று ஆண்டுக்காலத்திற்குப் பிறகு இப்பொழுது ரூ.2,750 கோடியாக உயர்ந்துள்ளதைக் காணலாம். 1992-93ஆம் ஆண்டில், சிறப்புவகையின் கீழ் வராத 15 மாநிலங்களில், 8 மாநிலங்களால் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை நிறைவேற்றி வைக்க முடியவில்லை. ஆனால் தமிழ்நாடோ, ஏற்பளிக்கப்பட்ட ரூ.1,766 கோடி திட்ட ஒதுக்கீட்டை முடித்ததோடல்லாமல், ரூ.1,935 கோடி திட்ட ஒதுக்கீட்டுக்கு, அதாவது ரூ.169 கோடி கூடுதல் ஒதுக்கீட்டளவிற்கு வகை செய்து தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகிறது.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு, 100க்கு 100 விழுக்காடு அளவிற்குமேல் நிறைவேற்றி, அகில இந்தியாவிலுள்ள மாநிலங்களில், முதல் மாநிலமாகப் பெயர்பெற்று விளங்குகிறது என்பது பெருமைக்குரிய ஒரு செய்தியாகும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1,284 கோடி இப்பொழுது ரூ.1,968 கோடியாக உயர்ந்துள்ளது. மருத்துவத்துறைக்கு முன்பு ரூ.391 கோடி இப்பொழுது ரூ.620 கோடி. ஆதிதிராவிடர் பழங்குடியினர் துறைக்கு முன்பு ரூ.132 கோடி. இப்பொழுது ரூ.215 கோடி. வேளாண்மைத்துறைக்கு முன்பு ரூ.359 கோடி இப்பொழுது ரூ.583 கோடி. சமூகப்பாதுகாப்புத் துறைக்கு முன்பு ரூ.141 கோடி. இப்பொழுது ரூ.219 கோடி. காவல்துறைக்கு முன்பே ரூ.213 கோடி. இப்பொழுது ரூ.367 கோடி. இப்படியாக ஒவ்வொரு துறையிலும் கணிசமான அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் புள்ளிவிவரங்கள் மூலம் தெள்ளத் தெளிவாக உணரலாம்.

தமிழ்நாட்டை வளமிக்க வளர்ச்சி வழியில் மேலும் இட்டுச் செல்ல, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையிலான அரசு மீது மக்கள் நம்பிக்கை வைத்துப் பேராதரவு தந்து வருகின்றனர். அந்த நம்பிக்கை பொய்க்காத வகையில், இந்த அரசு செயல்பட்டுவருகிறது. இனியும் தொடர்ந்து செயல்பட்டுவரும்.

தமிழ்நாட்டில், சட்டம், ஒழுங்கு, அமைதி, நல்லிணக்கம் அகியவை நல்லமுறையில் நிலை நாட்டப் பட்டுள்ளன. விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஏழை எளிய மக்களின் நிலையை உயர்த்தி, அதனைப் பாதுகாத்து வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தமது ஆட்சிப் பயணத்தில் சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது, என்றாலும், அவற்றையெல்லாம் அவர்கள் தமது சிந்தனை ஆற்றல் திறன், செயலாற்றல் திறன், பண்பாட்டுத்திறன், செய்து முடிக்கும் திறன் ஆகியவற்றால் தவிடுபொடியாக்கிவிட்டுச், சாதனைகள் பலவற்றிலும் வெற்றி பெற்று விளங்குகிறார்கள் என்பதைக் கடந்த மூன்று ஆண்டுக்கால ஆட்சி காட்டிக் கொண்டிருக்கிறது.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புகழ்வாழ்க! அவரது ஆட்சிக்கரம் வலிவு பெறுக! அவரது தொண்டுகள் என்றும் வெல்க! ●

# நீதித்துறையில் மறுமலர்ச்சி தமிழகத்தின் தனிச்சிறப்பு!

## மாண்புமிகு சட்ட அமைச்சர்
## திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

நீதி நிர்வாகம் மற்றும் சிறைத் துறையில் மூன்று ஆண்டுகளில் பல முனைப்பான புதிய திட்டங்கள், எண்ணிலடங்கா நிர்வாகச் சீர்திருத்தங்கள் எனப் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியின் மாட்சி என்றால் அது மிகையாகாது.

"தாமதப்படுத்தப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு ஒப்பாகும்" என்பதைக் கருத்தில் கொண்டு ஏழை எளிய, பாமர மக்களுக்கு விரைவில் நீதி கிடைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்று –

காலத்திற்கு ஒவ்வாத சட்டங்களை மாற்றவும், அல்லது திருத்தி அமைக்கும் வகையிலும் அரசுக்குத் தக்க அறிவுரைகளை வழங்குவதற்காகச் 'சட்ட ஆணையம்' (Law Commission) ஒன்றை அமைத்துள்ளார்கள். மைய அரசு அமைத்துள்ளதைப் போல தமிழகத்தில் இவ்வாணையம் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி வி. இராமசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

### வழக்குகளில் தேக்கம்

டெல்லி உச்ச நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் நிலுவையிலிருக்கும் அரசு



வழக்குகளில் விரைவில் தீர்வு காணும் வகையில் அரசுக்கும் அரசு வழக்கறிஞர்களுக்கும் இடையே "ஒருங்கிணைப்பு நிறுவனமாக- Directorate of Litigation என்ற ஒரு அமைப்பினை மீண்டும் உருவாக்கத் தலைமை வழக்கறிஞர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், மாவட்டங்களில் உள்ள பல்வேறு சட்ட அதிகாரிகளின் பணிகளை ஒருங்கிணைத்து, சீரமைத்து வழக்குகளைத் துரிதப்படுத்த 'Directorate of Prosecution' என்ற அமைப்பை ஏற்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, உள்துறை இணைச் செயலாளர் அவர்களைத் தனி அதிகாரியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு முழுமையாகச் செயல்படும் வண்ணம் இயக்குநர் ஒருவரை நியமிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### சட்டக் கல்வி

சட்டக் கல்வியை மேம்படுத்தவும், இக்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு உள்ள பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்கவும், வளர்ந்து வரும் சட்டக் கல்வித்துறையின் மாணவ, மாணவியர் 6020 பேர்களுக்குப் புதிய விடிவெள்ளியாகத் தோன்றியுள்ளதுதான், "தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம்".

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு ஆகிய துறைகளில் உள்ளதுபோல், மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப, பெருகி வரும் தேவைகளுக்கேற்ப, சட்டக் கல்வித்துறையையும் மேம்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முழு முயற்சியால் தொடங்கப்பட்டுள்ளதுதான் தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம் ஆகும்.

இதற்காகத் தனி அதிகாரி ஒருவரை நியமித்து, நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி, அடிப்படைத் தேவைகள், நிதி வசதி, பணியாளர்கள் என அனைத்து வகைக்கும் தேவையான விவர அறிக்கையைத் தனி அதிகாரி அரசுக்கு அளித்தபின், உரிய பல்கலைக் கழகச் சட்டம் உருவாக வகை செய்யப்படும்.

பெருகிவரும் தேவைக்கேற்ப, சட்டக் கல்வி பயில வரும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அதற்கேற்ப சென்னை, திருச்சி, கோவை ஆகிய சட்டக் கல்லூரிகளின் இடங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. திருச்சி சட்டக் கல்லூரிக்கு ரூ.1.25 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய சட்டங்களை உருவாக்கவும், தேங்கியுள்ள வழக்குகளை விரைவில் தீர்க்கவும், சட்டக் கல்வியை மேம்படுத்தவும் ஆகிய இந்த மூன்று முனைகளிலும், மூன்றாண்டுகளில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழகத்தை உயர்த்தியவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி, என்றால் அது மிகையாகாது.

சட்டக் கல்வித்துறை, வழக்குகள் தீர்வு மட்டுமல்லாமல், நீதி நிர்வாகத்தின் மற்றொரு அங்கமாகிய நீதிமன்றம், சிறைகள் ஆகிய இரு பிரிவுகளும் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இதன் வெளியீடாகத்தான், சென்ற மூன்றாண்டுகளில் 37 நீதிமன்றங்கள் 'தொழிலாளர் நீதிமன்றம்', 'தனிச் சிறப்பு நீதிமன்றம்' 'குற்றவியல் நீதிமன்றம்' மற்றும் 'சிவில் நீதிமன்றம்' என்று பல்வேறு வகைகளின் கீழ் திறக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, நீதித்துறை என்பது இதுவரை திட்டம் சாராப் பிரிவில், இருந்ததை (Non Plan Scheme) 'திட்டப் பிரிவில்' (Plan Scheme) சேர்த்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.



இதன்மூலம், இத்துறைக்கு 1993-94 இல் ரூ.3 கோடியே 84 இலட்சமும், 1994-95 இல் ரூ. 6 கோடியே 52 இலட்சமும் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது. இது, நீதி நிர்வாகத் துறையின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசின் பொற்காலச் சாதனையின் மைல் கல் என்றால் அது மிகையாகாது.

புதிய மாவட்டங்கள் தோன்றும்போது, மாவட்ட நிர்வாகமும் சீரமைக்கப்படுகின்றன. ஆனால், இந்த அடிப்படையில், மாவட்டங்களில் நீதி நிர்வாகம், சீரமைப்பதில் காலதாமதம் இருந்து வந்தது. இதனைக் களைந்து, மாவட்டங்கள் பிரிக்கப்படும்போது, மாவட்ட நிர்வாகமும் (Revenue Administration), நீதி நிர்வாகமும் (Judicial Administration) ஒரே, சமயத்தில் சீரமைக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் தனித்துச் செயல்பட வேண்டுமென்ற கொள்கை முடிவு எடுத்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசிற்கே உரியதாகும்.

இதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில், தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் இரண்டிற்கும் நீதி நிர்வாகமும் தனியே செயல்படும் வகையில், விழுப்புரத்தில் மாவட்டத் தலைமை நீதிமன்றமும் (District and Sessions Court) மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றமும் (Chief Judicial Magistrate Court) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் இல்லாத மாவட்டங்களான நாகப்பட்டினம் காயிதேமில்லத், திருவண்ணாமலை சம்புவராயர், மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களின் தலைநகர்களில் நாகை, திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்பட உள்ளன.

சென்னை நகர நீதிமன்றக் கூடுதல் கட்டடம், தருமபுரி, ஒசூர், ஆகிய இடங்களில் குற்றவியல் நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள், திண்டுக்கல், செங்கற்பட்டு, சேலம், கோவை, திருவள்ளூர்,அரியலூர்,விழுப்புரம், குழித்துறை, செங்கம், பட்டுக்கோட்டை, திருச்செங்கோடு, உசிலம்பட்டி, திண்டிவனம், மணப்பாறை, சிவகங்கை, விருதுநகர், ஈரோடு, திருச்சி, ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் நீதிபதிகள் குடியிருப்புகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

நீதிமன்றங்களுக்குப் புத்தகங்கள், நவீன 'பேக்ஸ்' இயந்திரம், 'ஜெராக்ஸ்' இயந்திரம், நீதிபதிகளுக்குப் புதிய கார்கள், ஜெனரேட்டர் ஆகியவை வாங்க ரூபாய் ஒரு கோடி செலவிடப்

பட்டுள்ளது.

குறிப்பாக, சென்னை நகரில் ரூ.7 கோடி செலவில் நீதிபதிகள் குடியிருப்புகள் கட்டவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஆணையிட்டுள்ளது.

நீதித்துறையில் பணியாற்றும் நீதிபதிகளில் இருந்து பணியாளர்கள் வரை உள்ள அனைவரின் நலன் காக்கும் வகையில் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு பல்வேறு சலுகைகள் அளித்துள்ளது. சான்றாக, நீதிபதிகளுக்கு ஓய்வுபெறும் வயது வரம்பை 60 ஆகவும், விடுப்பு நாட்கள் சலுகை, கூடுதல் பணியிடங்கள் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

**இலவசச் சட்ட உதவி**

நீதி என்பது வசதியானவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய ஒன்று என்பதல்ல; ஏழை, எளிய, பாமர மக்களுக்கும் சம உரிமை அதில் உண்டு என்பதை மெய்ப்பிக்க, மாவட்டந்தோறும், 'இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுக்கள்' சிறப்பாகச் செயல்படுகின்றன. இதற்கு உறுதுணையாக வளர்ச்சிக்கு அடித்தளமாக உறுதியான அமைப்பாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாண்டு ரூபாய் ஒரு கோடி வழங்கினார்கள்.

**சிறைத்துறை**

சிறை என்பது குற்றவாளிகளின் கூடாரமல்ல. சந்தர்ப்பச் சூழ்நிலையால் தடுமாறிப் போனவர்களைத் திருத்தி, புதிய மனிதர்களாக மாற்றியனுப்பும் சீர்திருத்த அமைப்பு என்ற முறையில் சிறைகள் அமைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சிறைச்சாலைகளில் நவீன வசதிகளையும், அங்குள்ள தொழிற்கூடங்களில் பணிபுரிவோருக்கு ஊதிய உயர்வுகளையும், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படிப்போருக்கு உரிய உதவிகளையும் தந்து சிறைவாசிகளாக இருப்பவர்களும் மனிதர்கள்தான் என்ற நிலையில் அவர்களைப் புதியவர்களாக்கி வெளியுலகிற்கு அனுப்ப இவ்வரசு எடுத்துள்ள மனிதாபிமான நடவடிக்கைகள் பலப்பல உள்ளன.

சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கைதிகளுக்கு உதவி செய்வதற்காகச் சிறைத் துறைக்குத் தற்போது அளிக்கப்படும் ஒதுக்கீடான ரூபாய் ஒரு இலட்சம் 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் ரூ.10 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்கள் வழியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், விடுதலை ஆகும் கைதிகளுக்கு வழங்கப்படும் பண உதவி இணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் **IRDP** வழங்கப்படுவது போல கடன் தொகையாக வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

குற்றமிழைப்பவர்கள் உணர்ந்து திருந்தி வாழ வாய்ப்பளித்து, சமூகத்தில் சமமாக வாழ வகைசெய்யும் வண்ணம், 'தண்டனைக் குறைப்பு' என்ற வகையில் 1992-இல் 713 பேர்களும், 1993-இல் 629 பேர்களும், 1994-இல் 802 பேர்களும், ஆக சென்ற மூன்றாண்டுகளில் 2144 பேர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதுதவிர, இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக, சென்ற மூன்றாண்டுகளில், சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இதுவரை யாரும் செய்யாதவகையில், ஆயுள் தண்டனை பெற்ற 12 ஆண்டுகள் சிறைவாசம் முடித்த கைதிகளின் குடும்பங்களில் ஒளியேற்றி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1992-இல் 209 பேர்களும், 1993-இல் 134 பேர்களும், 1994-இல் 169 பேர்களும், பெண் சிறைக் கைதிகள் 84 பேர்களும், ஆக மொத்தம் 596 பேர்களை முன் விடுதலை செய்துள்ளார்கள். இது ஒரு மகத்தான சாதனையாகும்.

சிறை நிருவாகத்தினை மேம்படுத்தும் மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 1987-90-ஆம் ஆண்டுகளில் ரூ.653.47 இலட்சத்திற்கான திட்டங்களைத் தீட்டி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனை நிறைவேற்ற மத்திய அரசு 100 சத மானியம் என்ற வகையில், ரூ.224.17 இலட்சமும், 50:50 இணை மானியம் என்ற வகையில் ரூ.207.83 இலட்சமும் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் மாநில அரசின் பங்கு ரூ.207.83 இலட்சம் ஆகும். இதன்கீழ் கைதிகளின் பாதுகாப்பு, மருத்துவவசதி, அடிப்படை வசதிகள், பயிற்சி ஆகியவை அளிப்பதற்காகத் தமிழக அரசு இத்திட்டங்களின் மீது ஒப்புதலளித்தது.

இந்த மத்திய நிதியுதவியின் கீழ், முக்கியக் கட்டடங்கள், ஆம்புலன்ஸ் வேன்கள் வாங்குதல், சுற்றுச்சுவர் கட்டுதல், இசிஜி வசதி, பைனாகுலர்கள் வாங்குதல், கணினி வசதி ஆகியவற்றிற்கு வகை செய்யப்படும்.

ஆக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய மக்கள் நல அரசு சென்ற மூன்றாண்டுகளில், நீதி நிர்வாகம், சிறைகள், சட்டக் கல்வி ஆகிய மூன்று துறைகளில் முத்தான சாதனைகள் பலப்பல புரிந்துள்ளது என்பதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுக்கள், பல்வேறு நடைமுறைகள் உள்ளன என்பதே இத்துறையின் வெற்றிச் சின்னமாக விளங்கி, பல்லாண்டுகள் நிலைத்து நிற்கும் சாதனைச் செல்வி டாக்டர் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் வெற்றி மகுடத்தில் மாணிக்கக் கல்லாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

# வளமான தமிழ்நாட்டில் வருவாய்த் துறை சாதனைகள்

## மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம்

தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் இந்த மூன்றாண்டுகள் 'பொற் காலம்' என்று போற்றத்தக்கதாகும். காரணம் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களின் அரிய தலைமையிலான அற்புத ஆட்சி மலர்ந்து மூன்றாண்டுக் காலமாகிறது.

முத்தான இந்த மூன்றாண்டுக் காலத்தில், வளமார்ந்த தமிழ் நாட்டின் அரசுப் பொறுப் பேற்றுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சீரிய தலைமை யிலான வருவாய்த் துறையின் ஆக்கபூர்வப் பணிகள் அதிசயிக்கத் தக்க சாதனைகள் அளவிடற் கரியனவாகும். அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்திற்கு அரசு அங்கீகாரம் அளிக்கப்பட்டு உள்ளது.

கிராம உதவியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே பணியில் இருக்கும் போதே இறந்த கிராம உதவியாளர் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி ரூ.60,000 வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

கிராம ஊழியர்கள் இறந்த அன்றே, அவர்களது ஈமக்கிரியைக் காக ரூ.2,000 வழங்க வட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



கிராம உதவியாளர் பணிக்குப் பெண்களையும் நியமனம் செய்ய லாம் என அரசு ஆணை யிட்டுள்ளது.

கிராம உதவியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் ரூ.200 லிருந்து ரூ.300 ஆக உயர்த் தப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்கள் ஊதிய உயர்வு அளிக்கப்படவேண்டு மென எழுப்பிய கோரிக்கையை ஏற்று, அவர்களுக்குத் தற்போது மாதமொன்றுக்கு வழங்கப்படும் ரூ.612 தொகுப்பூதியத்தை 1.7.92 முதல் ரூ.712 எனவும் 1.1.93 முதல் ரூ.745 மற்றும் அகவிலைப்படியாக ரூ.80 ஆக மொத்தம் ரூ.825 எனவும் உயர்த்தி வழங்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1.7.93 முதல் அடிப்படை ஊதியத் துடன் 9 சதவிகித அகவிலைப் படியும் கிராம உதவியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

முழுநேர ஊழியர்களாக மாற்ற வேண்டும் என எழுப்பிய கிராம ஊழியர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புவதற்காகக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

### இரண்டாம் பகுதித் திட்டம் 1991-92.

### வருவாய்த்துறை கட்டடங்கள்

நான்கு வட்டாட்சியர் அலுவல கங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.8 இலட்சத்திற்கு, நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது:

காங்கேயம் வட்டம் ... பெரியார் மாவட்டம்

பொன்னாகரம் வட்டம் ... தருமபுரி மாவட்டம்

கந்தர்வக்கோட்டை வட்டம் ... புதுக்கோட்டை மாவட்டம் மற் றும் ஏர்க்காடு வட்டம் ... சேலம் மாவட்டம்,

பரமத்தி வேலூர், ராதாபுரம் ஆகிய ஊர்களில், இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட ரூ.85 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

பரமக்குடி வருவாய்க் கோட் டாட்சியர் அலுவலகம் ரூ.33 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலேதான்,

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குடியிருப்பு மாளிகை முகாம் அலுவலகம் கட்ட ரூ.22.39 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

### மாவட்டங்களைச் சீரமைத்தல் மாவட்ட வருவாய்த் நிர்வாகம்

மாவட்ட நிர்வாகத்தை மேலும் செவ்வனே செயல்படுத்துவதற்கும், பொதுமக்கள் குறைகளைக் கவனிப்பதற்கும் நலத் திட்டங்களைக் காலதாமதமின்றிச் செயல்படுத்துவதற்கும் பெரிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் ஆகியவற்றை அரசு படிப்படியாகச் சீரமைத்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்ட தஞ்சாவூர் மாவட்டம் என்றும், நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 18.10.1991 முதல் செயல்படுகிறது. மேலும் தற்பொழுது தென்னார்க்காடு மாவட்டத்தைப் பிரித்தமைத்து, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட 'தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டமும், விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டமும் 15.9.1993 முதல் செயல்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டம், உசிலம் பட்டி மற்றும் திருமங்கலம் வட்டங்களைத் திருத்தியமைத்து, பேரையூர் என்று புதிய வட்டம் 25.9.93 முதல் செயல்படுகிறது.

தருமபுரி மாவட்டம், கிருஷ்ண கிரி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களைத் திருத்தியமைத்து போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாவதற்கு உத்தர விடப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் குறைகளைத் துரிதமாகக் களைவதற்கும் வருவாய்த் துறையின் இயந்திரம் மேலும் செம்மையாகச் செயல்படவும், தற்போதுள்ள 172 வருவாய் வட்டங்களின் கீழ், 360 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மண்டலத் துணை வட்டாட்சியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

இதன் பயனாகப் பொதுமக்கள் தங்களது பல கோரிக்கைகள் உதாரணமாக வருமானச் சான்றிதழ், குடியுரிமை மற்றும் சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல் பிறப்பு இறப்புச் சான்றுகள் வழங்குதல் போன்றவைகள் பெறுவதற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய அவசியமில்லாமல், மண்டலத் துணை வட்டாட்சியர் அவர்களிடமிருந்தே பெறுவதற்கு ஏதுவாகின்றது. இதனால் பொது மக்களுக்குக் காலம் மற்றும் பொருட்செலவும் விரயமாவது மிக அதிகமான அளவில் குறைக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.60 இலட்சத்திற்கு அரசு 7.7.93-இல் ஆணையிட்டுள்ளது.

கோயம்புத்தூர் (வடக்கு), கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் புதிய வட்ட அலுவலகங்கள் கட்ட ரூ.168 இலட்சத்திற்கு அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியதில், ரூ.40 இலட்சம் தற்போது நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 25 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.50 இலட்சத்திற்கு அரசு நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பணியாளர்களும், பொதுமக்களும் பயன்படுத்துவதற்காக அனைத்து வட்ட அலுவலகங்களிலும் கழிவறைகளைக் கட்டுவதற்காக ரூ.23 இலட்சத்திற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட தலா ரூ.9.20 இலட்சம் வீதம் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் கரையோரப் பகுதிகளில் உள்ள மாவட்டங்கள் புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் மிகவும் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகின்றன. அதுவுமில்லாமல் கிராமங்களில் உள்ள பெரும்பான்மையான வீடுகள் கூரை வீடுகளாக உள்ளன. சென்னை நகரிலும் இந்த மாதிரியான குடிசைகள் அதிகமாக உள்ளன. ஆகையால் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேற்படி இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகைகளைப் பெற்றுப் பட்டுவாடா செய்ய மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளைச் சீரமைப்பதற்காக, முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குத் தலா ரூ.500-ம், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ.250 உயர்த்தியும் வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிவாரணத் தொகை சென்னை நகரில் முறையே, தலா ரூ.600-ம் ரூ.300-மாக வழங்கப்படுகின்றது. இதுதவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி அல்லது லுங்கி மற்றும் ஒரு சேலை இலவசமாக வழங்கப் படுகின்றன.

இயற்கைச் சீற்றத்தினால் மரணமடைந்தவர் குடும்பத் தலைவராகவும் குடும்பத்தில் பொருளீட்டுபவராகவும் இருப்பினும், இல்லாவிட்டாலும் அவரது குடும்பத்திற்கு முன்பெல்லாம் கருணைத் தொகையாக ரூ.2000






வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் ரூ.10,000ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இறந்தவர் குழந்தை யாக இருப்பினும்கூட இத்தொகை வழங்கப்படுகிறது என்பது குறிப் பிடத்தக்கது.

தற்போது மழை மற்றும் வெள்ளத்தினால் முழுமையாகச் சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு ரூ.500 வழங்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடு இழந்தவர்களுக்கு ரூ.5,000 வழங்கிட ரூ.5 கோடி • ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கு அவர்களது வீடுகளை மீண்டும் புதுப்பித்துக் கட்டிக் கொள்ள 10,000 வீடுகளுக்கு அனுமதி வழங்கியிருப்பதுடன், ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.15,000 வீதம் வழங்கிட உத்தர விட்டுள்ளது. இதில் 70 சதவிகிதம் கடனாகவும் மீதமுள்ள 30 சதவிகிதம் அரசு ஊக்குதவியாக வழங்குவது என்றும் உத்தர விடப்பட்டுள்ளது.

முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசு 1.4.62 முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டம் ஒன்றினைக் கொண்டு வந்து அமலாக்கியது. உற்றார் உறவினர், ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், முதியோர் உதவித்தொகை தவிர ஆதரவற்ற ஊனமுற்றோர், ஆதர வற்ற விதவை, ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற இளம் பெண்கள் போன்ற இனங்களின் கீழும் இத்திட்டத்தினை, பின்பு, மாநில அரசு விரிவாக்கியது.

தற்போது 1.2.92 முதல், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் இந்த அரசு, ஆதரவற்ற ஏழை எளிய மக்களின் நிலை அறிந்தும், தற்போது நிலவி வரும் விலைவாசி உயர்வினையும், நலிந்தோர் நலன் களையும் மனதில் கொண்டும், இந்த உதவித் தொகையினை ரூ.50லிருந்து ரூ.75 வீதம் உயர்த்தியுள்ளது. இந்த உதவித் தொகையின் உயர்வு, முந்தைய உயர்வுகளைக் காட்டிலும், கூடுதலாகச் செய்தது, அரசின் சமூக நல அக்கறையைக் காட்டுகிறது.

இந்த உதவித் தொகை தவிர, ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகை தினங்களில் உதவித் தொகை பெறுப்வர்களுக்கு இலவசமாகக் கைத்தறி ஜனதா வேட்டியும், சேலையும் வழங்குவதுடன், நாள்தோறும் மதிய உணவு, இலவசமாகச் சத்துணவுக் கூடங்களில் வழங்கியும், ஆதரவற்ற இந்த முதியோர் மற்றும் மேலே கண்ட நபர்களுக்கு, இலவச அரிசி அளித்தும் ஆதரவு அளித்துக் கொண்டு வருகின்றது இந்த அரசு. முதியோர் உதவித் திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்கும் திட்டம் மே 89-ஆம் ஆண்டில் கைவிடப் பட்டு இருந்ததை, இந்த அரசு செப்டம்பர் 91 முதல் திரும்பவும் செயலாக்கியுள்ளது. இந்த முறை யில், இந்த அரசு ஆதர வற்றவர்களுக்குச் சமூகப் பாது காப்பு எந்த வகையில் அளித்து வருகின்றது என அறியலாம்.

பாதிக்கப்பட்ட ஆதரவற்ற வர்கள் நேரடியாக, வட்டாட்சி யரை அணுகி, தங்களது குறை களைத் தீர்த்துக் கொள்ளவும், முதியோர் உதவித் தொகை, கால தாமதமின்றி உடன் பெறவும், வழி வகுக்கப்பட்டுள்ளது.

12.5.92 நாளன்று முதியோர் உதவித் தொகை பெறுபவர்

விண்ணபங்களின் காத்திருப்போர் பட்டியலினால் ஏற்படும் கால தாமதங்களைக் களையும் பொருட்டு, ஒட்டு மொத்தமாக ஆண்டு தொடக்கத்தில் முன் பாகவே ஒட்டுமொத்த எண்ணிக் கையில் இடங்கள் அளித்து 1992-93-ஆண்டுக்கு, ஏற்கெனவே 30,000 இடங்களை ஒப்பளிப்பு அளித்து உத்தரவிட்டுள்ளது. இந்த இடங்கள் யாவும் முன்னதாகவே அந்தந்த மாவட்டங்களுக்குத் தேவைக்கேற்பப் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை மூலம், இந்த அரசு, உதவித் தொகை உரியவர்களுக்கு கிடைக்க, தாமதம் ஏற்படாமல் தவிர்க்கிறது.

இதுநாள் வரை இந்த முதியோர் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு அஞ்சல் வழியாக மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டது. இதற்கான பண அஞ்சல் கமிஷன் தொகையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டது. ஆனால், இனி புதிய மின் அணு இயந்திரம் மூலம் மணியார்டர் பாரங்கள் பூர்த்தி செய்து அனுப்பும் திட்டத்தினை உடன் அமல்படுத்த அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இதிலிருந்து, நலிந்தோர் நலன் காக்கவும், துயர் துடைக்கவும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்தப் பொன்னான அரசு, எவ்வளவு கவனம் கொண்டுள்ளது என அறியலாம்.

## விபத்து நிவாரணத் திட்டம்

தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்துக்கு நிதியுதவி வழங்கு வதற்காக, அரசு ஒருங்கிணைந்த 'விபத்து நிவாரணத் திட்டம்' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின்கீழ், தற்போது 42 இன ஏழைத் தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர்.

கீழ்க்கண்ட புது இனங்கள் இந்த ஆட்சிக் காலத்தில்தான் சேர்க்கப் பட்டுள்ளன-

மலைகளிலுள்ள மரங்கள் மற்றும் பாறைகளில் ஏறி கல்பாசம், கடுக்காய் மற்றும் தேன் போன்ற வனப் பொருள்களைச் சேகரம் செய்யும் தொழிலாளர்கள் (கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பி னர்களாக இல்லாதவர்கள் மட்டும்).

தனியார் லாரி, டிரக் மற்றும் வேன்களில் பணி புரியும் கிளீனர்கள் போன்ற தொழி லாளர்கள்.

முழு நேர வேலையாகப் பிளம்பர் தொழிலில் ஈடு பட்டிருக்கும் நபர்கள்.

விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோருக்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக் கப்படவில்லை. தொழிலில் ஈடு பட்டிருக்கையில் இறக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்கள் குடும் பத்திற்கு ரூ.10,000, ரூ.7,000 மற்றும் ரூ.5,000, என இறப்பிற்கும், அங்கங்கள் இழப்பிற்கும் ஏற்ப வழங்கப்படுகிறது.

## பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு

பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காணப் பல வழிகள் இருப்பினும், பொதுமக்களின் குறைகளைக் கவனித்து அதனை உடனுக்குடன் தீர்ப்பதே அரசின் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு அப் பணியைச் சிறந்த முறையில் நிறைவேற்றவும், அதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாகச் செயலாற்றவேண்டிய நோக்கத் துடனும் மாண்புமிகு முதல்வரின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவ லகத்திலும் ஒரு தனித் துணை ஆட்சியர் நியமிக்கப்பட்டனர்.

## தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டம்

குடும்பக் காப்புப் பொருளீட்டு பவர்கள் இறந்தால் அன்னாரின் வருமானத்தை இழந்து தவிக்கும் ஏழைக் குடும்பத்திற்குத் தனி உதவி செய்யும் வகையில் ரூ.2000 வீதம் நிவாரணம் வழங்க தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. பின்னர் இந் நிவாரணத் தொகையினை ரூ.3,000-ஆகவும் பிறகு 5,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 14,811 குடும்பங்களுக்கு பயன் பெற்று ரூ.2,80,22,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.3 கோடி பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் இது ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டு 22,904 குடும்பங்களுக்கு, ரூ.6,87,66,000 நிவாரணத் தொகை வழங்கிப் பயனடையச் செய்துள்ளது.

1991-92-ஆம் ஆண்டு ரூ.6,96,56,000 நிவாரணத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டு 28,566 குடும்பங்களுக்கு ரூ.8,48,96,000 நிவாரணத் தொகை வழங்கப் பட்டது.

1993-94-ஆம் ஆண்டில் 34,260 குடும்பங்களுக்கு, ரூ.15,62,00,000 நிவாரணத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

## பொங்கல் பண்டிகைக்கு இலவசப் புடவை, வேட்டி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில், முதல் முதலாக 1992-ஆம் ஆண்டுதான், பொங்கல் பண்டிகைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாகப் புடவை வேட்டி வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் பயன் பெற்றனர். இதன் அடிப்படையில் 1993-ஆம் ஆண்டுக்கும் 60,66,503 புடவைகள் 60,56,709 வேட்டிகள் வழங்கப்பட்டன. முழுமையாக கோ-ஆப்டெக்ஸ் மூலமாகவே வழங்க டாக்டர் புரட்சித்தலைவி

அவர்களின் பொற்கால அரசில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இயற்கையின் சீற்றம் அதிகமாக இருந்தால் கூடுதலாக 15 இலட்சம் சேலைகளும் வழங்க ஆணையிடப்பட்டது. இதன்படி 1994 பொங்கல் பண்டிகைக்கு 62,98,701 சேலைகளும், 62,67,405 வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. பொங்கல் பண்டிகைக்கு இலவசப் புடவை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்திற்குக் கீழ்க்கண்டுள்ளபடி செலவினம் செய்யப்பட்டுள்ளது:

1992-ஆம் ஆண்டிற்கு ரூ.38.34 கோடி
1993-ஆம் ஆண்டிற்கு ரூ.45.00 கோடி

1994-ஆம் ஆண்டிற்கு ரூ.47.00 கோடி

## நில அளவை மற்றும் பதிவுருக்கள்

தமிழ்நாட்டில், நில அளவைப் பதிவுருக்கள் கட்டுமானம், 1923-ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டம் 8 என்ற தனிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சந்தேகத்திற்கோ, குழப்பத்திற்கோ இடமற்ற வகையில் நில உடைமைகள் புலத்தில் அடையாளம் காணப்பட்டு, புலத்தின் சரியான இலக்கும் அதன் பரப்பளவும் வரையறுக்கப்படுகின்றன. விற்பனை, பாகப் பிரிவினை, உரிமை வழி மாற்றம் மூலம் அன்றாடம் ஏற்பட்டு வரும் பதிவு மாற்றங்களைக் கிராம ஆவணங்களில் மேற்கொண்டும், நில அளவைக் கட்டுமானத்தைப் பராமரித்தும் வருவதுடன், தேவைக்கேற்ப, விவசாய நிலங்கள் மற்றும் நகர்ப்புறங்களிலும் நில அளவைப்பணி மேற்கொள்கிறது.

நிலச்சீர் திருத்தத்திற்கும், விவசாயப் பொருளாதார வளர்ச்சிக்கும் நில உடைமைகள் மேம்பாடு ஓர் அடிப்படைத் தேவையாகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு கீழ்க்கண்ட திட்டங்கள் இம்மாநிலத்தில் அமல் செய்யப்பட்டு வருகின்றன:

1. நத்தம் நில அளவை மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது பிற இனங்களில் உபயோகப் படுத்தப்படும் விவசாய நிலங்களை அளத்தல்:

2. நகரியம், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்.

3. மலைக்கிராமங்கள் அளவை செய்தல்.

**☐ மக்களாட்சிச் சிறப்புக் கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழவேண்டுமெனில் நமக்குள் போட்டி பொறாமைகளை விலக்கி, வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகும்.**



### நத்தம் அளவை

இத்திட்டப்பணி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலத்தின் இதர மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தினால் பயனடைந்தோர் தனது குடியிருப்பு உரிமைகளைப் பெறுவதோடன்றி, வங்கிக் கடன் போன்ற சலுகைகளையும் பெறவும் வாய்ப்புள்ளது. இப்பணி இம்மாநிலத்தில் 167 வட்டங்களில் 16,800 கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதுவரை 162 வட்டங்களில் 16,428 கிராமங்களை உள்ளடக்கி, 4,168 ச.கி.மீ. பரப்பில் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 4,141 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

### நகர அளவை

3 மாநகராட்சிகள் மற்றும் 106 நகராட்சிகளையும் உள்ளடக்கி சுமார் 2,300 ச.கி.மீ பரப்பில் பணிமேற்கொள்ள வேண்டி உள்ளது. 1,239 ச.கி.மீ. பரப்பை உள்ளடக்கி 3 மாநகராட்சி மற்றும் 67 நகராட்சிகளில் பணி இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவற்றுள் மொத்தம் 929 ச.கி.மீ. பரப்பு அளவைப் பணி இதுவரை முடிக்கப்பட்டுள்ளது.

### மலைக்கிராம அளவைப் பணி

பின்தங்கிய பகுதி மக்களாகிய ஆதிவாசிகள் நல வாழ்வுத் திட்டமாக மலைக்கிராம அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் சமன் பகுதிகளில் உள்ள நில உடைமைகளுக்கு இணையாக மலைப்பகுதிகளில் உள்ள நில உடைமையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட நில உடைமைகள் கொணரப்படுகிறது. மேலும், மலைவாழ் மக்களால் இதுகாறும் செய்து வந்த சிவஜமா சாகுபடியினை ஒழுங்குபடுத்த வகை செய்கிறது.

இப்பணி ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, கொல்லிமலை, அரநூத்து மலை, பச்சமலை மற்றும் ஆனைமலை ஆகிய ஆறு மலைகளில் 904 ச.கி.மீ. பரப்பை உள்ளடக்கி 66 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது வரை 859 ச.கி.மீ. பரப்பில் அளவைப்பணி முடிக்கப்பட்டு உள்ளது.

### பட்டா பதிவுப் புத்தகம் திட்டம்

பட்டா பதிவுப் புத்தகத் திட்டம் முதல் கட்டமாக 1.4.93 முதல் இம்மாநிலத்தில், ஆறு மாவட்டங்களில் (வடஆர்க்காடு-அம்பேத்கார் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சிதம்பரனார் மாவட்டங்கள்) செயல்படுத்தப்படுகிறது. இப்புத்தகம் எவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதோ, அவர் பெயருக்கு அந்நிலத்தின் உரிமைக்கு ஒரு சான்றாகவும், அவருக்குச் சொந்தமான நிலத்தின் விவரங்களுடன் அதனில் குறிக்

கப்பட்ட வில்லங்கச் சான்று ஆவணமாகவும் பயன்படுகிறது.

## நிலப்பதிவுருக்கள் கணினி மயமாக்குதல்

நிலப்பதிவுருக்கள் மேம்படுத்துதல் மூலம் மாவட்ட நிர்வாகத்தை நவீனமாக்கும் தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாக சேலம் மாவட்டத்தில் நிலப்பதிவுருக்களை கணினிமயமாக்கும் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென 20 கணினிப் பொறிகள் ரூ.25 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 9 கிராம கணக்குகளும் மற்றும் 15 வட்டப் பதிவேடுகளும் கணினி மயமாக்கப்படுகிறன. இதற்கான விவர வகைப்பாட்டுப் பணிகள் சென்னை, அரசு புள்ளி சேகரிப்பு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சேலம் மாவட்டத்தில் 56 கிராமங்களுக்குக் கம்ப்யூட்டர் மூலம் உத்தேசப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாகத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் எல்லா மாவட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் கொணரப்படவுள்ளன.

வருவாய்ப் பதிவேடுகள் பதிதலும், பராமரித்தலும் கவனமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மத்திய அரசு நிதி உதவி

வருவாய் நிர்வாகம், மற்றும் நில உடைமைப் பதிவுருக்களை மேம்படுத்த மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், நவீன கருவிகள் வாங்கவும், பயிற்சி உள்ளமைப்புக்களை வலுப்படுத்தவும், 1990-91-ஆண்டிற்கு ரூ.200 இலட்சமும், 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.187.97 இலட்சமும் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ.125.76 இலட்சமும் மைய அரசு ஒதுக்கியுள்ளது. இதனில் 50 சதவிகிதம் மாநில அரசு ஏற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நவீன உபகரணங்களாகிய இ.டி.எம். தியோடலைட் பிளைண் பேப்பர் காப்பியர், லாமினேட்டிங் மெஷின், மைக்ரோ ஆப்டிக் தியோடலைட், ஆடியோ விஷுவல்ஸ்கிரைப்பிங் கருவிகள், கார்ட்டோகிராபிக் கருவிகள் மற்றும் மினி பஸ் போன்றவை வாங்கப்பட்டு, மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு இதுவரை சுமார் 223 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

## பணியாளர்கள் மாற்றுப்பணி அமர்த்தல்

இத்துறையில் திட்டப்பணி செயலாக்கத்திற்கெனத் தொகுப்பூதியப் பணியாளர்கள் உள்ளிட்ட சிறப்புப் பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பணியாளர்கள் திட்டப்பணியில் பல ஆண்டுகள் பணி முடித்து வேறு பணிகளில் நியமனம் செய்வதற்கான வயது வரம்பு கடந்த நிலையில் உள்ளனர். இவர்களது நிலையை மனிதாபிமான கண்ணோட்டத்தில் அணுகிய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் இந்தப் புனித அரசு, இவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் மாற்றுப்பணி வழங்கத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்து உள்ளது. அதன்படி 5,015 தொகுப்பூதியப் பணியாளர்கள் காலச் சம்பள ஏற்றுமுறை விகிதத்தில் கீழ்க்கண்டவாறு பணி அமர்த்தப்பட்டுள்ளனர்:

1. நில அளவைத்துறையில் ஏற்பட்ட காலியிடங்கள் 4060.
2. பிற துறைகளில் பணி அமர்த்தப்பட்டவர்கள் 955.

எஞ்சியுள்ள தொகுப்பூதியப் பணியாளர்கள் அனைவரும் பிற துறைகளில் ஏற்படும் காலி இடங்களில் அமர்த்தப்பட வேண்டும் என அரசு மீண்டும் உத்தரவிட்டுள்ளது.

## வேளாண்மை வருமான வரி

வேளாண்மை வருமான வரி விதிப்பு தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், மராட்டியம், மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் திரிபுரா ஆகிய ஏழு மாநிலங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1955-ஆம் ஆண்டில் வேளாண்மை வருமானவரி விதிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, மலைத் தோட்டப் பயிர்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரி விதிப்பு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1958-ஆம் ஆண்டில் சட்டம் திருத்தப்பட்டு மலைத் தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அச்சட்டப்படி, சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத் தோட்டமல்லாத பயிர்கள் மீது வேளாண்மை வருமானவரி விதிப்பு 1.4.92 முதல் முழுமையாகக் கைவிடப்பட்டது.

எட்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்போர் மட்டுமே 1.4.92 முதல் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிவிதிப்புச் சட்டம் 1955-ன் கீழ் வரிவிதிப்பு செய்யப்படுகின்றனர். இணக்க முறை வரிவிதிப்பு 9 சாதாரண ஏக்கர் முதல் 50 சாதாரண ஏக்கர் வரை அனுமதிக்கப்படுகிறது.

**அனுபவம் என்பது தேர்வு இல்லாத பாடம், அனுபவம் என்பது பாடம் கற்கும் பொழுதே வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கல்வி முறையாகும்.**



வரிவிதிப்பாண்டு 1992-93- முதல் சுயவரிவிதிப்புக்கும், முன்னதாக வரிசெலுத்தும் முறைக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

பலவிதமான தோட்டப்பயிர்களில் பயன்தரு ஆயுட்காலத்தில் அடிப்படையில் அப்பயிர்களைத் திரும்பவும் நடுவதற்காகும் செலவினங்களுக்கான வருமானக் கழிவின் வீதங்கள் விவசாய வருமானவரிச் சட்டம் பிரிவு 5ஏ-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. தேயிலைக்கு மொத்தப் பரப்பில் 25 சதவிகிதமும், இரப்பருக்கு 3.33 சதவிகிதமும், ஏலக்காய்க்கு 10 சதவிகிதமும் அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நடைமுறை முதலீட்டினை வட்டிச் செலவினம் வருமானத்தின் 25 சதவிகிதத்தில் 9 சதவிகிதம் என்று இருந்ததை மாற்றி, வட்டிச் செலவினம் முழுவதுமாக வருமானக் கழிவிற்கு அனுமதிக்குமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது போனஸ், சேமநலநிதி, பணிக்கொடை மற்றும் தொழிலாளர்களுக்குத் தரப்படும் இதரச் சலுகைகளுக்கான செலவினம் அனுமதிப்பதில் உள்ள சில அம்சங்கள் வருமானவரிச் சட்டம் 1961-ல் உள்ளது போன்று இருக்குமாறு சட்டத் திருத்தம் 1994-95 வரிவிதிப்பு ஆண்டு முதல் அமலுக்குக் கொண்டுவர 1994-95-ஆம் ஆண்டில் பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை வருமானவரி உச்சவரம்பு, 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ. 10,000ல் இருந்து ரூ. 22,000 வரையிலும் 1993-94-ஆம் ஆண்டு முதல் ரூ.22,000-லிருந்து ரூ.28,000 வரையுலுமாக உயர்த்தப்பட்டு உள்ளது. வேளாண்மை வருமான வரிதாரர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

இவ்வாறாகப் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிக் காலத் தமிழகத்தில், வருவாய்த் துறைப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன.



# வளரும் தமிழகத்தில் மலரும் புதிய மாவட்டம்!

'கண்ணியத்தின் மறுபெயர் காயிதே மில்லத்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட, இந்திய இஸ்லாமிய இனத்தின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான, பெருந்தகை முகமது இமாயில் அவர்களின் நினைவினை என்றும் பசுமையாகப் போற்றிடும் வகையில் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த முடிவின்படி, சீர்மிகு கடற்கரை நகரான இந் நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண், 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தை தொடங்கி வைப்பதில் மெத்தப் பெருமையும் பூரிப்பும் கொள்கிறேன்.

சோழ வளநாடென்னும் தஞ்சைத் தரணி மகிழ்ச்சி பொங்க, ஆனந்த வெள்ளத்தில் குதூகலிக்கும் இந் நன்னாளில், அலை கடலெனத் திரண்டுள்ள உங்கள் அனைவரையும் காணுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கரிகால் சோழனும், ராஜ ராஜ சோழனும் பிறந்த மண், காவிரி அன்னை காலங்காலமாக ஓடி வளப்படுத்திய கழனிகளின் சொர்க்கம் கவிச் சக்கரவர்த்தி கம்பனும், கற்புக்கரசி கண்ணகியும் பிறந்த பூமி உலகையே வசப்படுத்தும் இசையும், பாடலும், நடனமும் தோன்றிய இடம் மக்களாட்சித் தத்துவத்திற்கு முதல் முதல் வழிகாட்டிய குடவோலை முறையையும், உள்ளாட்சி நிர்வாக அமைப்பையும் நமக்கு அறிமுகப்படுத்திய நாடு என்ற சிறப்பினை எல்லாம் பெற்ற பண்டைய சோழ நாட்டின் ஒரு பகுதிதான், இன்று புதிய மாவட்டமாக அமைகிறது.

அண்ணல் காந்தியடிகளின் அன்பைப் பெற்ற தில்லையாடி வள்ளியம்மையின் புகழும் பெருமையும், இம்மண்ணின் தியாகப் பெருமையை எடுத்துக்காட்டுவனவாகும். இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில், உப்பு சத்தியாக்கிரகம் நடந்த சிறப்பு பெறும் இடங்கள் இரண்டு ஆகும். அவற்றில் ஒன்று வடநாட்டில் உள்ள தண்டி ஆகும். மற்றொன்று இம்மாவட்டத்தில் இடம்பெறும் வேதாரண்யம் என்ற பெருமையும் இப்பகுதிக்கு உண்டு.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவரே, இம்மாவட்டத்தில் பிறந்தவர் என்ற சிறப்பையும் பெற்றிருக்கின்றோம். இவ்வாறு இம்மாவட்டத்திற்கு நானும் உரிமை கொண்டாடக் காரணம், எனது மூதாதையர்கள் பிறந்து வளர்ந்தது இதே சோழ மண்டலத்தில் உள்ள ஸ்ரீரங்கம் ஆகும்.

பல்வேறு சிறப்புகளின் தொகுப்புத்தான் தஞ்சை மாவட்டம் ஆகும். இன்று புதிதாக அமையும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், உலகப்புகழ் பெற்ற திருத்தலங்களையும் தன்னகத்தே கொண்ட சீர்மிகு மாவட்டம் ஆகும். இந்துக்கள் பெரிதும் விரும்பும் சிக்கல் சிங்கார வேலன் திருக்கோயிலும், இஸ்லாமியர்கள் மனங்கவர்ந்த நாகூர் தர்காவும், கிறிஸ்தவர்கள் போற்றிப் புகழும் வேளாங்கண்ணி ஆலயமும், இங்கே அமைந்திருந்தாலும், அவை அனைத்தும் மத வேறுபாடின்றி அனைவரும் வழிபடும் ஸ்தலங்களாகத் திகழுவது நமது வரலாற்றின் மத ஒற்றுமைக் கொள்கைகளுக்கு ஒரு சீரிய எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி – 1-லிருந்து

# உணவுத்துறையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அரசின் மூன்றாண்டுச் சாதனைகள்

## மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன்

சட்டம் ஒழுங்கைப் பாது காப்பது, வரி வசூல் செய்வது, அதை நிர்வகிப்பது இவைகள் மட்டுமே அரசின் கடமையாக இருந்த காலம் மாறி, குடி மக்களுக்குத் தேவையான இன்றிய மையா உணவுப் பொருட்களை வழங்குவதும் அரசின் கடமை களில் ஒன்று என்ற அவசியம் உலக மகாயுத்தம் முடிந்த பிறகு ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட் டின் காரணமாய் எழுந்தது. மக்கள் நலம் பேணும் அரசுகள் உணவுப் பங்கீட்டு என்னும் திட்டத்தை அமல்படுத்தத் துவங் கின.

தமிழ்நாடு அரசு பொதுமக்களுக் குத் தேவையான இன்றியமையா உணவுப் பொருட்களை வழங்கு வதைத் தனது தலையாய கடமைகளில் ஒன்று எனக்கருதி, அரசின் நுகர் பொருள் வழங்கு துறை மூலமாக வழங்கி வந்தது. ஆண்டுதோறும் வழங்கப்படுகிற உணவுப் பொருட்களின் அளவு அதிகமாகி வந்ததைக் கருத்திற் கொண்டு, 1972 -ஆம் ஆண்டு இப்பணியைச் சிறப்பாக நிர்வாகம் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ற வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டு பொது விநியோக முறை மூலம் இன்றிமையாப் பொருட்களை, பொதுமக்களுக்கு வழங்கும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டது.

கடந்த மூன்றாண்டுகளில் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் அரசு, இக்கழகத்தின் மூலம்



உணவுத்துறையில் புரட்சிகரமான செயல் திட்டங்களை மக்கள் நல னுக்காகச் செயல்படுத்தியுள்ளது. நீண்டகாலமாக ஏகபோக நெல் கொள்முதல், தேவையின் நெருக் கடியை எண்ணி, அரசால் செய்யப்பட்டு வந்தது. நெல் அரிசி நடமாட்டமும் கட்டுப்படுத்தப் பட்டது. பின்னர், நெருக்கடி குறைந்த போதும், மாநிலம் முழுவதும் சுதந்திரமான நெல் அரிசி போக்குவரத்து தடை செய்யப்பட்ட நிலை நீடித்து, மக்கள், வியாபாரிகள், விவ சாயிகள் ஆகிய முத்தரப்பினரும், ஏதோ ஒரு வகையில் குறை கூறும் நிலை இருந்தது. மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சென்ற ஆண்டு துணி வோடு நடவடிக்கை எடுத்து, இணைக் கொள்முதல் எனும் திட்டத்தினைச் செயல்படுத்தி, தமிழகம் முழுவதும் நெல் அரிசி தங்கு தடையின்றி எடுத்துச் செல்லவும் வழி வகுத்துத் தந்தார்கள்.

தமிழ்நாட்டில், மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்குப் பிறகு உணவுப் பிரச்சினையில் இது போன்று துணிந்து கொள்கை முடிவெடுத்து, மக்கள் நலம் பேணும் வகையில் நடவடிக்கை எடுத்தது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சிறப்புமிக்க சாதனையாகும். இதனால் விவ சாயிகள் விரும்புகிற விலைக்கு உற்பத்தி செய்த நெல்லை விற்கவும், மாநிலம் முழுவதும் சீரான நெல், அரிசி நடமாட்டம் இருக்கவும், மக்களுக்கு நியாய மான விலையில் அரிசி வெளிச் சந்தையில் கிடைக்கவும், தனி நபர்கள் பதுக்கி வைத்து கொள்ளை லாபம் பெறும் முறை ஒழிக்கப்படவும் வழி ஏற்பட்டது. இது ஒரு மாபெரும் உணவுத் துறைப் புரட்சியாகும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுதான் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம் மூலம் 1992-93ஆம் ஆண்டில் உச்ச அளவான 18 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் அரிசி விலை, மற்ற மாநிலங்களில் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்தபோதும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில்தான் தமிழகத்தில் குறைந்த விலையில், மற்ற மாநிலங்களைப் போல் அல்லாது, எவ்வித வருமான வரம்பும் இன்றி, 1.5 கோடி குடும்ப அட்டைகளுக்கு அரிசி வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்க

சாதனையாகும். இதற்காக ஆண்டிற்குத் தற்போது ரூ.400 கோடி மானியமாகத் தமிழக அரசு வழங்கி வருகிறது.




இதன் மூலம் தமிழக மக்களுக்கு மாநிலம் முழுவதும் எவ்விதத் தட்டுப்பாடுமின்றிச் சீராகவும், குறைந்த விலையிலும் அரிசி கிடைக்கச் செய்துள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனையை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் உள்ள 23 நவீன அரிசி ஆலைகளின் தரத்தை உயர்த்தி, நல்ல தரமான அரிசி அரவை செய்யப்பட டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெறாமல் – இப்பொழுதான் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூரில் உள்ள அரிசி ஆலை ரூ.52 இலட்சம் செலவிலும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள அம்மன்பேட்டை அரிசி ஆலை ரூ.3.18 கோடி செலவிலும் நவீனமாக்கப்பட்டு, அரவைத்திறனும், அரிசியின் தரமும் உயர்த்தப்பட உள்ளன. குறைந்த விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் அரிசியின் தரத்தை உயர்த்திட, தொழில் நுணுக்கங்களை மேம்படுத்தி தொடர் அவியல் முறையை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொது விநியோக முறை சீர்படுத்தப்பட்டு தவறிழைக்கும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதுமுள்ள சுமார் 22,000 நியாய விலைக் கடைகள் திறம்பட இயங்கி, மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை முறையாக வழங்கிட அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்தான் மிகப் பெரும் அளவில், ஆண்டுக்குச் சுமார் ரூ.1,500 கோடி அளவுக்கு உணவுப் பொருள் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டு, தமிழகம் முழுவதும் உள்ள 1.50 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பணியாற்றி வருகிறது.

விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், சென்ற ஆண்டு 25% வரை ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும் தமிழகத்தில், சில பகுதிகளில் கடந்த ஆண்டு ஏற்பட்ட புயல், பெரும் மழை காரணமாகச் சேதமுற்ற நெல்லையும், இதுவரை எப்போதுமே இல்லாத வகையில் 3 வது ரகம் எனப் புதிதாக வகைப்படுத்தி, அதனையும் விவசாயிகளிடமிருந்து அரசு கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு நஷ்டமும் துன்பமும் ஏற்படாவண்ணம் அவர்களைக் காத்தவர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆவார். இதனால் விவசாயிகளுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்பு தவிர்க்கப்பட்டது.

கொள்முதல் விநியோகம், விலைக்கட்டுப்பாடு ஆகிய மூன்று முக்கியமான உணவுத்துறையின் நடவடிக்கைகளைக் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் திருப்திகரமாகவும் வெற்றிகரமாகவும் நடைமுறைப்படுத்தி மக்களின் நலன் காத்து வருவது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் அரும்பெரும் சாதனையாகும்.

கடந்த 10 ஆண்டுகளாக, குடும்ப அட்டைகளில் மாற்றம் செய்யாததால், புதிய குடும்பங்கள் இடமாற்றம் ஏற்பட்ட குடும்பங்களுக்கு, குடும்ப அட்டைகள் வழங்காததால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நீக்கி சுமார் 27 லட்சம் குடும்பங்களுக்குப் புதிதாகக் கடந்த ஆண்டில் குடும்ப அட்டைகள் தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு, தற்போது 1 கோடியே 50 லட்சம் குடும்ப அட்டைகளுக்கு 22,000 நியாய விலைக்கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது நியாயவிலைக் கடைகளில் மைதா, ரவை

ஆகியவை பாலீத்தின் பைகளில் நிரப்பப்பட்டு கிலோ ஒன்றுக்கு முறையே ரூ.6.50, ரூ.6.60 என்ற விலையில் வழங்கப்பட்டு வருகிறது. வெளிச்சந்தையில் இந்த மைதா ரவை கிலோ ஒன்றுக்கு ரூபாய் . ஒன்பது முதல் பன்னிரண்டரை வரை விற்கப்பட்டு வருகிறது. இவ்வளவு குறைந்த விலையில் கோதுமைப் பொருட்கள் விற்கப்படுவது இதுதான் முதல் முறை.

ஆண்டு ஒன்றுக்கு அரிசி 18,75,825 டன், சர்க்கரை 3,11,000 டன். கோதுமை - கோதுமைப் பொருட்கள் 1,53,000 டன், மண்ணெணெய் 8,55,761 கிலோ லிட்டர், ஆகியவைகளை நுகர் பொருள் வாணிபக்கழகம் நுகர் பொருள் வழங்குத்துறை, பொது விநியோகத் திட்டத்திற்காக வழங்கி வருகிறது. இந்தியா விலேயே, பொது விநியோக முறை இவ்வளவு பெரும் அளவில் அரசின் கட்டுப்பாட்டில் செயல் படுத்தப்படுவது தமிழகத்தில் மட்டும்தான். பொது விநியோக முறையைச் சிறப்பாகச் செயல் படுத்தி வரும் மாநிலங்களில் தமிழகம் தலைசிறந்த மாநில மாகத் திகழ்ந்து வருவது, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரிசின் சாதனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்..

பொது விநியோகத்திட்டம் தவிர, தமிழகத்தின் சிறப்பான திட்டமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத் திற்கும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.130 கோடி மதிப்புள்ள அரிசி, பருப்பு, எண்ணெணெய், சோயாமாவு போன்ற பொருட்களைத் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது.

தமிழ்நர்ட்டு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பணிகளுக் காக, கடந்த மூன்றாண்டுகளில் 27,500 மெ.டன் கொள்ளவு கொண்ட 15 புதிய கிடங்குகள் ரூ. 3.85 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 72 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்கள் ரூ. 2.85 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள் ளன.



**☐ தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் காகவும், நியாயத்திற்காகவும் ஜனநாயக முறையில் நாங்கள் கடைசிவரை போராடுவோம்!**

## நுகர்வோர் பாதுகாப்பு:

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி களின் தலைமையில் நுகர்வோர் வழக்குகளைச் சிறப்பாகத் தீர்வு செய்கின்றன. மாநில அளவில் ஒரு குறை தீர்க்கும் ஆணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் இயங்கி வருகிறது. குறை தீர்க்கும் மன்றத் தலை வர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் தங்களுக்கு ஏற்படும் ஐயப்பாடு களைத் தீர்த்துக் கொள்ளவும் நுகர்வோர் நலச் சங்கங்கள் அவர்களுக்குள்ள பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவும் 1992-இல் கோயம்புத்தூரிலும், 1993-இல் மதுரையிலும் மாநில அளவில் இரு கருத்தரங்குகள் நடத்தப் பட்டன. இதுபோன்ற ஒரு கருத்தரங்கம் திருச்சியில் இந்த ஆண்டு நடைபெற உள்ளது.

நுகர்வோர் நலச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளில், ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 50000 வழங்கப்பட்டு உள்ளது. நடப்பு ஆண்டில் இது ரூபாய் 2.5 லட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது. இதுதவிர, சிறந்த பணியாற்றும் நுகர்வோர் இயக்கச் செயல் வீரர்களுக்கு அரசு பரிசுகள் வழங்கி வருகிறது. கிராமங்களில் கருத்தரங்குகள் நடத்துதல், கல்லூரி மாணவர் களுக்குப் பயிற்சி, பாடத் திட்டங்களில் நுகர்வோர் பாது காப்புப் பற்றிய குறிப்புகள் போன்ற நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்களும், தமிழக நுகர்வோர் பாதுகாப்புத் துறையும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவதாக, தேசிய நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தின் தலைவர் நீதி அரசர் திரு. பாலகிருஷ்ண எராடி அவர்கள் பாராட்டியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மூல மாகப் பெறப்படும் மனுக்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 1.7.1991 முதல் 31.5.94 முடிய 3,136 மனுக்கள் பெறப்பட்டன. இவற்றின் மீது நடவடிக்கை மேற்கொண்டு 31.5.94 முடிய 1,876 இனங்களில் மனு தாரர்களின் கோரிக்கையை ஏற்றும், 842 இனங்களில் மனு தாரர்களின் கோரிக்கையை நிரா கரித்தும் முடிவு செய்யப்பட்டன. மீதமுள்ள 418 இனங்களை முடிவு செய்ய நடிவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளன.

'மண்திணி ஞாலத்து வாழ் வோர்க்கெல்லாம உண்டி கொடுத் தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மூதுரைக்கிணங்க மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் கீழ் சிறப்பாக இயங்கி வரும் தமிழக அரசு பொது மக் களுக்கு உயிர் காக்கும் உணவினை அளிப்பதில் பாராட்டப்படுகின்ற வகையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

# மக்கள் நல்வாழ்வுத் துறையின் மகத்தான பணிகள்

## மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
## திரு எஸ். முத்துசாமி

மருந்துகளையும் அவற்றைப் பயன்படுத்துவதையும் குறித்த அறிவியல் ஆராய்ச்சி, மிகவும் கொடிய நோய்களை விரைவில் கண்டறிய உதவுகிறது. அதன் மூலம் அறிவியல் மருந்தியலின் நோய் தீர்க்கும் அம்சம் எளிமைப் படுத்தப்பட்டு உள்ளது. மருத்துவச் சாதனங்களில் கணினிகளும் மின்னணு முறைகளும் அறிமுகப் படுத்தப்பட்டு அவை பெரும் புரட்சிகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. தற்போது மருத்துவச் சிகிச்சையைச் சிறந்த முறையில் அளிப்பதற்காகப் பல தனியார் மருத்துவ நிறுவனங்கள் விலை உயர்ந்த நவீன சாதனங் களை அறிமுகப்படுத்தி வருகின் றன. இந்தப் பெரும் மாற்றங் களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசு, சிறந்த முறையில் மருத்துவப் பணிகளை அளிக்க வேண்டு மென்ற நோக்கத்துடன், சுகாதாரத் துறைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை ஒவ்வோர் ஆண்டும் உயர்த்தி வந்துள்ளது. சுகாதார — குடும்பநலத் துறைக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில், 1990-91-இல் ரூபாய் 343.09 கோடி, 1991-92-இல் ரூபாய் 410.83 கோடி, 1992-93-இல் ரூபாய் 469.23 கோடி, 1993-94-இல் ரூபாய் 557.70 கோடி, மற்றும் 1994-95-இல் ரூபாய் 618.02 கோடி, ஒதுக்கப்பட்டது.

### புதிய திட்டப்பணிகள்

1992-93-ஆம் ஆண்டில் ரூ.7.29 கோடி செலவில் 50 புதிய பணி களை இத்துறை செயல்படுத்தி உள்ளது. மேலும் 1993-94-இல் ரூபாய் 8.44 கோடி செலவில் 61 புதிய திட்டப்பணிகளுக்கான ஆணைகளை இத்துறை வெளி



யிட்டுள்ளது. நடப்பு ஆண்டுக்கான 1994-95-இல், ரூபாய் 9.05 கோடி, செலவில் 54 புதிய பணிகளை தொடர நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

### டாக்டர் புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டம்

18.1.92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தை' ஆரம்பித்து வைத் தார்கள். இந்தத் திட்டத்தின்படி கிராமப்பகுதிகளில் மற்றும் நக ராட்சிப் பகுதிகளில் உள்ள துணை நிலை மையங்களில் ஒவ் வொரு முகாம் நடத்தப்பட்டது. தவிர, இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டமையால், முகாம் களுக்கு வந்த பொதுமக்களுக்கு நலவாழ்வு பற்றிய கல்வி கிடைக் கப்பெற்றது. மொத்தமாக 9226 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

நடைபெற்ற முகாம்களின் விவரங்கள் பின்வருமாறு:

1. நடைபெற்ற மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை .. 9226, 2. மருத்துவ முகாமுக்கு வருகை புரிந்தவர்களின் எண்ணிக்கை .. 51,64,641, 3. இம்முகாமினால் மருத்துவமனைக்கு சோதனைக் காக அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை .. 1,85,400

### புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம்

குழந்தைகள் நோயினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினருக்கு (அதாவது மகளிர், குழந்தைகள்) மருத்துவச் சோதனையை மேற்கொண்டு சிகிச்சையளிக்கும் அரும்பெரும் திட்டத்தை, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

12.3.1993-ஆம் நாள் முதற் கொண்டு மாவட்ட மருத்துவ மையத்தில், அமைந்துள்ள ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரு முகாம் வீதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முகாம்கள் செயல்பட்டு வரு கின்றன. இந்த முகாமில் பின்வரும் சிகிச்சைகளை அளிப்பதற்கான மருத்துவ வல்லுநர்களின் விவரம் பின்வருமாறு:

பொது மருத்துவ சிகிச்சை - 1, பொது அறுவை சிகிச்சை .. 1, மகளிர் நோயியல் மகப்பேறு சிகிச்சை .. 5, குழந்தைகள் சிகிச்சை .. 5, பல்நோய்ச் சிகிச்சை - 1, பால்வினை நோய் நிபுணர் - 1

மேற்கொண்டும், தொடர்ந்து சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் சிறப்பு மருத்துவச் சிகிச்சை முகாம்களுக்கு அனுப்பி

வைக்கப்படுகின்றனர். அம் முகாம்கள் அருகிலுள்ள வட்ட மருத்துவமனைகள்தலைமையிட மருத்துவமனைகள்மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பச் சுகாதார நிலைய முகாம் களிலிருந்து, சிறப்புச் சிகிச்சை அளிப்பதற்காக அனுப்பப்படும் நோயாளிகளுக்கு ஒவ்வொரு மாத மும் குறிப்பிட்ட ஒரு நாளில் சிறப்பு மருத்துவச் சிகிச்சை முகாம்களை நடத்தி வருகிறது.

இதுவரையில் (27.5.1994) வரை மாநிலம் முழுவதும் 1362 அடிப்படை சுகாதார முகாம்கள் (ஆரம்பச் சுகாதார நிலையம்) நடத்தப்பட்டன. இந்த முகாம்கள் வாயிலாக 2,16,537 பெண்களும், 2,23,436 சிறுவர்களும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

## நடமாடும் மருத்துவமனை

வட ஆர்க்காடு அம்பேத்கர், தருமபுரி, சேலம், திருவண்ணா மலை சம்புவராயர் ஆகிய மாவட் டங்களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு மருத்துவ அறுவைச் சிகிச்சையளிப்புதற்காக 4.6.1993 லிருந்து 4.7.1993 வரையிலான ஒரு மாதத்திற்கு ஜோலார்ப்பேட்டை ரயில்வே சந்திப்பில் தென்னக இரயில்வே, பம்பாய் இம்பாக்ட் இந்திய பவுண்டேஷன் அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடமாடும் மருத்துவமனை என்ற புதுமையான திட்டமொன்றை அரசு செயல்படுத்தியது. இதன் மூலம் 4386 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.

## புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளம்பிள்ளை வாதத்தடுப்பு அறுவைச் சிகிச்சை முகாம்கள்

1988-89-லிருந்து இம்மாநிலத்தில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக் கப்பட்ட சிறுவர்களுக்கு இளம் பிள்ளை வாதச் சிகிச்சைத் திட்டத்தை, இயலாமையுற்றோ ருக்கான புது வாழ்வுத் திட்டத் துறை செயல்படுத்தியது. நமது மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 182 வளர்ச்சி வட்டாரங்கள், நான்கு கட்டங்களில் படிப்படியாக இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் ஐந்தாவது கட்டப்பணி 42 வட்டாரங்களில் 1993-94-இல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஐந்தாவது கட்டப் பணியைச் செயல்படுத்துவதற் குரிய செலவிற்கு அரசு சமூகநலன் சத்துணவுத் திட்டத்துறையில் ரூ.85.15 இலட்சம் அனுமதித்தது.

## மருந்துகள் வாங்க நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கம்

1990-91-ஆம் ஆண்டில் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்



களுக்கான நிதியொதுக்கம் ரூ.38.78 கோடி. ஆனால் 1993-94-இல் ரூ.75 கோடியாக உயர்த்தப்பட்டது. இது 1990-91-ஆம் ஆண்டைக் காட்டிலும் ஏறக்குறைய இரு மடங்காகும். மற்றும் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.88 கோடியாக அதிகரிக்கப்பட்டுள் ளது.

## முதலமைச்சர் பொது நிவாரண நிதி

"ஏழை மக்களுக்கான விரிவுபடுத் தப்பட்ட மருத்துவத் திட்டம்" என் றொரு புதிய திட்டம் 1992-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத் தின்படி இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள் பவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்துவழங்கப்பட்ட ரூ.5,000 உதவித்தொகை ரூ.15,000 - 20,000-மாக உயர்த்தப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஜூலை 91 முதல் 15.5.94 முடிய ரூ.1.45 கோடி நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

## குடும்பநலத் திட்டம்

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5.56 கோடி ஆகும். பத்தாண்டு பிறப்பு வீதம் 14.94 சதவிகிதம் ஆகும். நாட்டிலேயே இது இரண்டாவது குறைவான மக்கள் தொகை வீதமாகும். தமிழ்நாடும் கேரளாவும் மட்டுமே தேசிய இலக்கை அதாவது நிகரப் பிறப்பு வீதம் ஒன்று என்னும் இலக்கை எய்திவிட்டன. அதாவது பிறப்பு வீதம் 1000 க்கு 21, இறப்பு வீதம் 1000-க்கு 9 என்னும் இலக்குகளை இவை எய்திவிட்டன. 1983-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட தேசிய சுகாதாரக் கொள்கை இந்நாட்டில் கி.பி. 2000-ஆம் ஆண்டில் எய்தக்கூடிய மக்கள் தொகைக் கணக்கு குறித்த சில குறிக் கோள்களை வரையறுத்தது.

தேசிய சுகாதாரக் கொள்கையில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனை அடைந்திருக்கிறது. கி.பி. 2000 ஆண்டில் உத்தேச தேசிய பிறப்பு வீதம் 1000-க்கு 21 என்று நிர்ணயம் செய்யப்பட்டது. தமிழக அரசு இப்போதே 20.7/1000 என்ற நிலையை எட்டியிருக்கிறது. இதைப்போலவே கி.பி. 2000 இல் 1000-க்கு 60-க்கு குறைவாக என நிர்ணயம் செய்யப்பட்ட தேசிய குழந்தை இறப்பு இலக்கினை தமிழக அரசு இப்போதே 57/1000 என்ற நிலையை அடைந்து சாதனை புரிந்திருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 4.11.93 அன்று நடைபெற்ற மாநில குடும்பநலத் திட்டக்குழுக் கூட்டத் தில் தமிழ்நாட்டிற்கு கி.பி.2000 ஆண்டில் பின்வரும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு வீதம் 1000 பேருக்கு 15 பேர்

குழந்தை இறப்பு வீதம் 1000 பிரசவங்களுக்கு 30-க்குக் குறைவாக.

மருத்துவமனைகளில் நிகழும் மகப்பேறுகளின் எண்ணிக்கை அளவு 90 சதவிகிதம்.

குடும்ப நலத்திட்டத்தின்கீழ் 1993-94 இல் 3,50,000 என இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சையில் 31.3.1994 வரை 3,52,057 எய்தி தமிழக அரசு சாதனை படைத்திருக்கிறது.

### தங்கப்பதக்கம் பரிசுத் திட்டம்

தாய்மார்களைக் கவரும் வகையில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்கின்றவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று மாதங்களுக்கொரு முறை பரிசுச்சீட்டுக் குலுக்கல் மூலம் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்தடை செய்து கொண்ட தாய்மார்கள் இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 3.750 கிராம் எடை கொண்ட தங்க நகைகள் வழங்கப்படுகின்றன.

### கிராமச் சுகாதாரச் செவிலியருக்கு அரை சவரன் தங்கம்

இரு குழந்தைகள் மட்டுமே போதும் என்கிற குடும்பக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு அளவை வரையறுத்துக் கொள்கின்றவர்களுக்குச் சம்பந்தப்பட்ட கிராம சுகாதாரச் செவிலியர் பணிபுரியும் பகுதியில் ஓராண்டுக் காலத்தில் அப்பகுதியிலுள்ள தம்பதியர்களுக்கு மூன்றாவது குழந்தை எதுவும் பிறக்காமலிருந்தால் அரசு அக்கிராமச் செவிலியருக்கு அரை சவரன் தங்கம் வழங்குகிறது.

### பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா திட்டம்

அரசு பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா திட்டம் என்கிற திட்டம் ஒன்றை 1.4.92 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்து ஆண் குழந்தையில்லாத ஏழைக் குடும்பத்தினர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் அவர்களுக்கு ரூ.2,000 வழங்கப்படும். இத்தொகை ஒரு நிதியில் முதலீடு செய்யப்பட்டு, அந்தப் பெண் குழந்தைகளுக்கு அவர்களது தொடக்கக்கல்வி, நடுநிலைக் கல்வி, உயர் மேல்நிலைக் கல்வியை முடிப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு அத்தொகை குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது அடைகிற போது, தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு அல்லது உயர் கல்வியைத் தொடருவதற்கு ஒட்டுமொத்தத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும். இத்திட்டம் 1.4.1992-ஆம் நாளுக்குப் பின்னர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தம்பதியர்களுக்குப் பொருந்தும்.

பின்னர், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்தத் தொகையை 11.11.1993 ஆம் நாளன்று, ரூ.20,000 ஆக அதிகரித்ததோடு பெண் குழந்தையின் முதல் பிறந்தநாளில் தங்க மோதிரம் ஒன்றும் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தார்.

### புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங்குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்

சென்னை எழும்பூர் அரசினர் குழந்தைகள் மருத்துவமனையில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி 1993-94-இல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 1993-94-இல் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் 1994-95-ஆம் ஆண்டிற்கு ரூ.25 இலட்சம் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பள்ளிச் சுகாதார முகாம்கள்

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 5-15 வயதுத் தொகுதியில் உள்ள சிறார்கள் அனைவருக்கும் மருத்துவச் சோதனை செய்து, சத்துணவு குறைவு காரணமாக ஏற்படும் தோல், பல், கண்பார்வை குறைவு, இருதயக்கோளாறு போன்றவற்றை தொடக்கத்திலேயே தடுத்தல் ஆகும். அச்செலவினங்களுக்காக ரூ.33.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994 ஜூலை முதல் செயல்பட உள்ளது.

### தடுப்பூசி போடும் திட்டம்

எல்லோருக்கும் நோய்த் தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் கருவுற்ற தாய்மார்கள் அனைவருக்கும் 100 சதவிகிதம் இசிவு நோய்த் தடுப்பூசி இருமுறை போடப்படுகிற நோக்கத்துடனும், கைக்குழந்தைகளுக்குக் காசநோய் தடுப்புக்காக 100 சதவிகிதம் பி.சி.ஜி. தடுப்பூசி ஒரு முறையும், தட்டம்மை, தடுப்பு மருந்து ஒரு முறையும், (தொண்டை அடைப்பான், கக்குவான் இசிவு நோய் ஆகிய மூன்று நோய்களைத் தடுப்பதற்கான) முத்தடுப்பூசி மூன்று முறையும், இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு சொட்டு மருந்தும் கொடுக்கப்படுகிற நோக்கத்துடனும் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. தற்போது இத்திட்டம் சிசு உயிர் பிழைத்தல் தாய்மைப் பாதுகாப்பு நலத்திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. நோய்த் தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் 1993-94-இல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

### எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டம்

மருத்துவக் கல்வித்துறையில் 1993-ஆம் ஆண்டில் மாநில எய்ட்ஸ் தடுப்புத் திட்டப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் 88 அரசு இரத்த சேமிப்பு வங்கிகளும், 61 தனியார்

இரத்த சேமிப்பு வங்கிகளும் உள்ளன. இம்மாநிலத்திலுள்ள 88 இரத்தச் சேமிப்பு வங்கிகளில் பாதுகாப்பான இரத்தம் பெறும் வகையில், 44 இரத்தச் சேமிப்பு வங்கிகளில் சாதனங்கள் வழங்கப் பட்டுள்ளன. வரும் ஆண்டில் மத்திய அரசின் ஆதரவுடன் எஞ்சியுள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் அனைத்திலும் இச் சாதனங்களை வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. அமெரிக்க நாட்டு நிதி உதவியுடன் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தை புகழ் பெற்ற அரசு சாரா அமைப்பான தொண்டு சுகாதாரப் பணி நிறுவனம் (வி.எச்.எஸ்.) மேற்கொள் ளும். இவற்றில் 13 மண்டல இரத்தச் சோதனை நிலையங்கள் என்று பெயரிடப்பட்டு இங்கு எச்.ஐ.வி. தொற்று நோய் கிருமி களைக் கண்டறிய எலிசா ரீடர் சாதனம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 37 மருத்துவ மனைகளிலும் 9 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 4 கண்காணிப்பு இல்லங்களிலும் பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. பால்வினை வியாதியின் மூலம் எச்.ஐ.வி. தொற்றுநோய் ஏற்படவும், ஒரு வரிடமிருந்து மற்றொருவருக்கு தொற்றுவதற்கு வாய்ப்பும் உள்ள காரணத்தால் பால்வினை நோயி னால் பாதிக்கப்பட்டவர்களில் ஐயத்திற்குரியவர்கள் எச்.ஐ.வி. தொற்றுநோய் சோதனைக்கு உட் படுத்தப்படுகின்றனர். உடலுறவின் மூலம் எச்.ஐ.வி. நோய்க் கிருமிகள் தொற்றுவததைத் தடுக்க பாது காப்பு உறைகளைப் பயன்படுத்து வதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இத்தகைய தவறான உடலுறவில் ஈடுபடுபவர்களுக்கிடையே உயவுத்தன்மை கொண்ட காப் புறைகளை அரசு சாரா நிறு வனங்கள் மூலம் இலவசமாக வழங்க அரசு முயன்று வருகிறது. தொலைபேசி மூலம் ஆலோசனை நல்கப்படுகிறது. 1993 டிசம்பர் வரையில் 5,62,501 பேர்கள் சோதனை செய்யப்பட்டு 4520 பேர்களுக்கு (0.80 சதவிகிதம் எச்.ஐ.வி.) பாஸிட்டிவ் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

## காச நோய்த் தடுப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் காசநோயாளிகள் உள்ள னர். அவர்களில் நான்கில் ஒரு பங்கினர் அதாவது 2.5 இலட்சம் பேர்களால் நோய் பரவக்கூடிய நிலையுள்ளது. காசநோய் உள்ளதா என்பதைக் கண்டறிந்து அந்நோய் இருந்தால் உரிய மருந்துகள் அளிப்பதற்கான இலவச மருத்துவ வசதிகள் அரசு மருத்துவமனைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்திலும் உள்ளன. இந் நோய்க்காக அவசர தீவிரச் சிகிச்சை செய்திட காச நோயாளி களுக்கெனத் தனிப்படுக்கை வசதிப் பிரிவுகள் எல்லா மாவட் டங்களிலும் இருக்கின்றன. இம் மாநிலத்தில், காசநோயாளி நலம் பேண் மருத்துவமனைகள், காச நோய் மருத்துவமனைகள் பத்து உள்ளன. அவற்றில் காசநோய்ச் சிகிச்சைக்காக மொத்தம் 3630 படுக்கை வசதிகள் உள்ளன.

1994-95-இல் காசநோய்த் தடுப்புப் பணிகளுக்காக மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4.9 கோடியாகும்.

தொழுநோய் மிக அதிகமாகக் காணப்படும் மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகும். கி.பி. 2000 ஆம் ஆண்டிற்குள் தொழுநோயை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத் துடன், தொழுநோயாளிகளை விரைவில் குணப்படுத்துவதற்காக முன்னர் அளிக்கப்பட்டு வந்த ஒரே மருந்தில் நோய் தீர்க்கும் சிகிச்சை முறைக்குப் பதிலாக பல்வகை மருத்துவச் சிகிச்சை முறையில் டேப்கோன் மாத்திரை யுடன் லேம்பரேன் மற்றும் ரிப்பேர்பிசின் என்னும் மாத் திரைகள் கொடுக்கப்படுகின்றன.

## பார்வையின்மைத் தடுப்புக்கான தேசியத் திட்டம்

தேசிய சுகாதாரக் கொள்கையில் பார்வையின்மையைத் தடுக்கும் தேசியத் திட்டத்தின் குறிக்கோள் இந்தியாவில் கி.பி. 2000 த்தில், கண் பார்வையற்றோர் எண்ணிக் கையை 1000 பேர்களுக்கு 14 பேர் என்ற வீதத்திலிருந்து 1000 பேர் களுக்கு 3 என்ற வீதமாகக் குறைக் கப்பட வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் பார்வையற்றோரின் எண்ணிக்கை விகிதாச்சார அளவு 1.65 ஆகும்.

மேற்குறிப்பிட்ட திட்டப்பணி களுக்காக 1994-95-ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத் திட்ட மதிப் பீட்டில் ரூ.1.76 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவக் கல்லூரி, மாவட்ட தலைமையிட மருத்துவமனை களில், கண் சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. இம்மாநிலத்தில் மொத் தம் 8 மாநில நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவுகளும், 7 மாவட்ட நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவுகளும், இயங்கி வருகின்றன. ஒவ்வோராண்டும் இம்மாநிலம் இந்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்கிற்கு அதிகமாகவே சாதனை நிகழ்த்தியுள்ளது. இந்த இலக்கு களை எய்துவதில் மாநிலதிலுள்ள தொண்டு நிறுவனங்கள் உறு துணையாகச் செயல்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள 22 மாவட் டங்களிலுமே மாவட்டப் பார்வை யின்மைக் கட்டுப்பாட்டுச் சங்கம் அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சி யர் அதன் தலைவராகச் செயல் பட்டு வருகிறார். கண் சிகிச்சை முகாம்கள் நடத்துவதற்காக இந்திய அரசு 19 மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ரூ.300 இலட்சம் ஒதுக்கீடு செய் துள்ளது. எஞ்சிய மாவட்டங் களுக்கும் மத்திய அரசின் நிதி உதவியினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உலக வங்கியின் உதவியுடன் ரூ.64 கோடி செலவில் பார்வை யின்மைக் கட்டுப்பாட்டுக்காக புதிய திட்டம் ஒன்று விரைவில் தொடங்கப்படவுள்ளது. அண்மை யில் உலக வங்கி அதிகாரிகளுடன் ஒப்பந்தமொன்று கையெழுத்திடப் பட்டுள்ளது.

## சில புதிய பதவிகளை ஏற்படுத்துதல்

மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மாவட்டத் தலைமை யிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்ட மருத் துவமனை அல்லாத பிற மருத்

துவமனை ஆகியவற்றில் மருத்துவ வசதிகளை அதிகரிக்கவும், நிருவாகத்தின் தரத்தை மேம்படுத்தவும் அரசு நான்காண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. அதற்கிணங்க கடந்த மூன்றாண்டுகளில் 564 முதுநிலை சிவில் மருத்துவர், 1,281 சிவில் மருத்துவர் மற்றும் 1,212 முதுநிலை உதவி மருத்துவர் பதவிகள் ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது.

1994-95-ஆம் ஆண்டுக்கு 188 முதுநிலை, சிவில் மருத்துவர் பதவிகளையும், 427 சிவில் மருத்துவர் பதவிகளையும் 404 முதுநிலை உதவி மருத்துவர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு அனுமதியளிக்கக் கருதியுள்ளது.

## ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காகக் கட்டடம் கட்டுதல்

'அட்கோ' நிறுவனத்தில் கடன் உதவியுடன் 120 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. பின்னர் அட்கோ நிறுவனம் மேற்படி பணிக்குக் கடன் வழங்க மறுத்து விட்டது. தற்போது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக 1994-95-ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ.7.21 கோடி ஒதுக்கக் கருதியுள்ளது.

## டேனிடா சுகாதார நலத்திட்டம்

சேலம், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மக்களுடைய குறிப்பாக மகளிர் சிறார்களின் நல வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 'டேனிடா' உதவியுடனான மக்கள் நலவாழ்வு குறித்த தமிழ்நாடு பகுதித்திட்டம் 1981-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. [illegible] மக்களின் ஆதரவோடு 4[illegible] சுகாதார துணை நிலைய கட்டடங்கள் தொடங்கப்பட்டு தற்பொழுது 259 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக ரூ.369 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 605 சுகாதாரத் துணை நிலையங்களுக்கும், 70 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் ரூ.188.17 இலட்சம்செலவில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சமுதாய மக்கள் ஆதரவுடன் கூடிய சுகாதார நிலையங்கள் கட்டுவதை ஊக்குவிக்க 'நமது செல்வம்' மற்றும் தாய்மார்கள் பாதுகாப்பாக குழந்தைகள் ஈன்றெடுக்கவும் குழந்தைகள் உயிர் பிழைக்கவும் முக்கியத்துவம் கொடுத்து 'அன்புள்ள அம்மா' என்ற வீடியோ திரைப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கல்விக்காக ரூ.39.70 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சுகாதாரத் துணை நிலையங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் சமுதாய நல நிலையங்கள் ஆகியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்க அவற்றை அவ்வப்பொழுது பழுதுபார்க்க ரூ.173.39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்ராயன் மலைகளில் வாழும் பழங்குடியினருக்கு விரிவான சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைச் செயலாக்க பத்து சுகாதார துணை நிலையங்களும், சுகாதார மேற்பார்வையாளர்கள் (பெண்கள்) குடியிருப்புக்கான நான்கு கட்டடங்கள் ரூ.46.46 இலட்சத்தில் கட்டப்பட்டது. கரியலூரில் ரூ.82.50 இலட்சத்தில் 12 படுக்கைகள் கொண்ட சமுதாய சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இன்றியமையாத மருந்துப் பொருட்கள் சரிசமமாகவும் எளிதாகவும் கிடைப்பதற்கு உறுதி செய்யும் பொருட்டு கடலூரிலும், சேலத்திலும் மருந்துப் பொருள்கள் கிடங்குகள் இரண்டு ரூ.27.21 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

விழுப்புரத்தில் ரூ.34 இலட்சம் செலவில் மருந்து பொருள் கிடங்கு ஒன்று கட்டப்படவுள்ளது. 5 வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைகளின் இசிவு நோயைத் தடுக்க 1542 துணை சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வழங்கப்படுகிறது. இதற்கு ரூ.46.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5

சென்னை மாநகரிலும், சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் உலக வங்கியின் உதவியுடன் 1988-லிருந்து இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5 செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992 செப்டம்பரிலிருந்து மேலும் இரு மாநகராட்சிகளிலும் ஆறு நகராட்சிகளிலும் இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. குடிசை வாழ் மக்களின் நலனுக்காகவும் குறைந்த வருவாய்த் தொகுதியினரின் நலனுக்காகவும் 1993 ஏப்ரலிலிருந்து இத்திட்டம் மேலும் பதினைந்து நகராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5, தமிழ்நாட்டு நகர்ப்பகுதிகளிலுள்ள சுமார் ஒரு கோடி மக்களை உள்ளடக்கியதாகும். தேசிய நகர்ப்பகுதிச் சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மகப்பேறு சிறார் நலன் குடும்ப நலனுக்கு அமைப்பு ரீதியிலான பணி வசதி செய்து கொடுக்கப் படுவதைச் சீரமைப்பதற்குரிய, மத்திய அரசின் கொள்கைகள் திட்டங்களைச் செயல்படுத்த உதவுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1988 செப்டம்பரிலிருந்து ஏழாண்டு கால அளவிற்கு மூலதனச் செலவிற்கு ரூ.69.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5-ன் கீழ் 240 சுகாதார மையங்கள் ஒரே சீரான பணியாளரமைப்புடன் அதாவது ஒவ்வொரு மையத்திலும் மருத்துவ அதிகாரி ஒருவர், சுகாதாரப் பார்வையாளர் ஒருவர் கணக்கிடுபவர் ஒருவர் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் (பெண்) நால்வர், பெண் உதவியாளர் ஒருவர் ஆகியோருடன் செயல்பட்டு வருகின்றன. இவை, சென்னை மாநகரிலும் மூன்று மாநகராட்சிகளிலும், இருபத்தொன்பது நகராட்சிகளிலும் பணிகள் மக்களுக்குச் சென்[illegible] வதை உறுதி செய்யும் வ[illegible] செயல்பட்டு வருகின்றன. [illegible] உடன்பாட்டில் வகை செய்[illegible] பட்டிருந்தவாறு, சில சுகாதா[illegible] மையங்களைச் செயல்படுத்த இ[illegible] திட்டத்தின்கீழ், 244 [illegible] தொண்டு நிறுவன[illegible] பட்டுள்ளன.

# தமிழகப் போக்குவரத்துத் துறையின் முத்தான மூன்றாண்டுகள்

## மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன்

முத்தான மூன்றாண்டுகள்! சத்தான சாதனை படைத்த ஆண்டுகள்! சங்க கால மூவேந்தர்களின் சாதனைகள் என்று சரித்திரத்திலே படித்திருக்கிறோம், விரல் விட்டு எண்ணக்கூடிய அவையெல்லாம் அன்னையின் பொற்கால ஆட்சியில் பூத்த புரட்சிச் சாதனைகளில் ஒரு துளியே! பொங்கிவரும் கடல் அலையாய், வண்ணமிகு வாடா மலர்களாய் அன்னை அவர்கள் படைத்திட்ட சாதனைகள் அவனி வியக்கும் சாதனைகளாக உள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் எத்தனை எத்தனையோ மாநிலங்கள்! அவற்றில், இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தமிழகம் பெற்றுள்ள நிலையான ஆட்சி, அமைதியான ஆட்சி, சரித்திரம் காணா ஆட்சி சாதனை படைத்த ஆட்சி எங்கேயும் இல்லை.

நாட்டு மக்கள் வாட்டம் போக்கிட நாளெல்லாம் நல்ல திட்டம் தீட்டும் அன்னையின் ஆட்சி செயல்படும்போது பிற மாநிலங்களிலோ அன்றாடம் ஆட்டம் காணும் ஆட்சிகளே அமைந்துள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்திலே இதற்குமுன்னரும் ஓரிரு மாநிலங்களில் பெண் முதல்வர்கள் இருந்ததுண்டு. ஆனால், என்றென்றும் மக்கள் மனதிலே நிலையாக நின்று இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதல்வராகவும் இருபத்



தோராம் நூற்றாண்டிலும் நிரந்தர முதல்வராகவும் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட 6 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வம், காலம் காலமாய் தமிழ்த்தாய் தவமிருந்து பெற்ற தன்னேரிலாத் தலைவி நமது இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர்புரட்சித் தலைவி அவர்களே. காரணம் அவர்தான் கடந்த மூன்றாண்டுகளில் மூன்று தலைமுறைகளிலே சாதிக்க இயலாத சாதனைகளை சாதித்துக் காட்டி இருக்கிறார்கள். எந்தத் துறையிலும் இங்கே ஏற்றம்! நேற்றிருந்ததைவிட இன்று ஒரு மாற்றம் ; அதுவும் முன்னேற்றம்! என்று ஆரவாரம் ஏதுமில்லாமல் அமைதிப் புரட்சியைச் செய்து வந்துள்ளார்கள்.

மூன்றாண்டுகள் அவர்தம் ஆட்சியில் பூத்த புரட்சி மலர்கள் ஏராளம். மாற்றார் மருட்சி கொள்ளும் அளவுக்கு நாள் தோறும் அவரது சாதனைகள் பல்கிப் பெருகுவதால்தான் இது வரை எதிர்க் கட்சிகளாக இருந்தவர்கள் எல்லாம் கூட உதிரிக் கட்சிகளாக மாறி வருகின்றனர்.

எந்தத் துறையை நோக்கினாலும் மாபெரும் முன்னேற்றம்! இதற்குக் காரணம் இதயதெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வழி காட்டுதலும் திட்டங்களுமே ஆகும்.

அந்த வகையில், அவர்தம் ஆணைப்படிச் செயலாற்றி வரும் போக்குவரத்துத்துறையில் கடந்த 3 ஆண்டுகளில் அடைந்துள்ள சாதனைகள் அனைத்தையும் இங்கே பட்டியலிட்டுக் காட்டுவதைப் போக்குவரத்துத்துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் விரும்பினாலும் இந்த இதழில் உள்ள இடப்பற்றாக்குறை காரணமாகச் சிலவற்றை மட்டுமே இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகப் போக்குவரத்துத் துறை இந்தியத் துணைகண்டத்திற்கே இன்றைய தினம் ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு முன் மாதிரியாக இருந்து வருகிறது. திறமையான நிர்வாகம், வியத்தகு வள்ர்ச்சி, மக்கள் சேவையில் மகத்தான ஈடுபாடு குறைந்த கட்டணத்தில் நிறைந்த வசதிகளோடு பேருந்து இயக்கம் என்று அனைத்துக் கோணங்களிலும் சாதனை படைத்து வரும் போக்குவரத்துத்துறை, உலக வங்கியின் பாராட்டுதலையும், மைய அரசின் திட்டக் குழுவின் பாராட்டுதலையும் அண்மையில் பெற்றுள்ளது என்றால், அதற்கு

முழு முதல் காரணம் நம்மையெல்லாம் வழி நடத்திச் செல்லும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதலமைச்சராம் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களேயாவார்

1991-ஜூன் திங்கள் அன்னை அவர்கள் அரியணை ஏறிய பின்னர் அடுத்த ஆண்டே பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரால் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்றைத் காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கிவைத்தார்கள்.

அதற்கு அடுத்த ஆண்டுகளில் மேலும் மூன்று புதிய போக்குவரத்துக் கழகங்களைத் துவக்கி வைத்து, வண்ணமிகு எழிற்கோலம் கொண்ட எண்ணற்ற பேருந்துகளை தமிழகம் முழுவதும் இயக்கியுள்ளார்கள்.

விடுதலை உணர்வை மக்களுக்கு ஊட்டிய வான்புகழ் பெற்ற "மகாகவி பாரதியார் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம்'' மலையரசியாம் உதகையைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு நம்பிக் கைச்சுடராய், அரசியலமைப்பை உருவாக்கித் தந்த அற்புதத் தலைவர்களில் முதன்மையாக விளங்கியவரான டாக்டர் அம்பேத்கர் பெயரில் தமிழகத்தின் தலைநகரிலேயே ஒரு போக்குவரத்துக் கழகம்.

மாநிலங்களுக்கு இடையே அமைதிப் புறாவாய், அழகிய தேராய் அன்றாடம் இயக்கப்படும் பேருந்துகளைக் கொண்டு அன்னையின் பெயரால் "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்".

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ் தமிழகத்தில் எல்லைகளையெல்லாம் விஞ்சியது. அவரது புகழுக்கேற்பவே அக்கழகத்தின் பேருந்துகள் எல்லாம் தனித் தன்மை வாய்ந்தவையாகும். புத்தம் புதிய பேருந்துகள்! கண்ணைப் பறிக்கும் வண்ண எழிற்கோலம் கொண்ட இக்கழகப் பேருந்துகள் இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஏன் ஆசியா கண்டத்திலேயே வேறு எந்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் பெற்றிராத வசதிகளோடு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சொகுசுப் பயணத்திற்கேற்ற சாய்வு இருக்கைகள் பயணத்தின் போதே பருகிட சுவை நீர் பானங்கள் சூப் வகைகள்! இரவு



நேரப் பயணத்தை இனிதாக்க ஆடியோ வீடியோ வசதிகள் அதுமட்டுமல்ல அலுப்பற்ற பயணத்தை அளிக்க குளிர்சாதன வசதிபெற்ற பேருந்துகள். விரைவிலேயே கழிப்பறை வசதி பொருத்திய பேருந்துகளும் இக் கழகத்தால் இயக்கப்பட உள்ளன. இவ்வாறு வேறு யாரும் எப்போதும் எண்ணிப்பார்க்காத வசதிகளை வழங்கி வழிப் பயணத்தை நெஞ்சை விட்டு நீங்காத ஒன்றாக ஆக்கிய பெருமை நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.

அதுமட்டுமல்ல; மக்கள் தமிழகத்தில் மூலை முடுக்கெல்லாம் சென்று வரவும், காடு கழனிகளைப் பயிரிட்டு நாடு வாழ உணவுப் பொருட்களை விளைவிக்கும் கிராம மக்கள் நகர்ப்புறத்திற்கு நாள்தோறும் வந்து போகவும் வசதியாய் 1000 மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமத்திற்கும் பேருந்து வசதி செய்து கொடுத்தது.

தி.மு.க. ஆட்சியின்போது 10% டீசல் வெட்டைக் காரணமாக்கி கிராமப்புறங்களுக்குச் சென்று வந்த 1000க்கும் மேற்பட்ட பேருந்துகளை நிறுத்திய நிலைமையை அடியோடு மாற்றி அனைத்துப் பேருந்துகளையும் இயக்கியது

ஆண்டுதோறும் மைய அரசு ரெயில் கட்டணத்தை அபரிமிதமாக உயர்த்திய நிலையிலும்,கடந்த 4 ஆண்டுகளில் மட்டுமே மைய அரசு டீசல் விலையை சுமார் 55 சதவீதம் கூட்டிய நிலையிலும், பேருந்து இயக்கத்திற்குத் தேவையான டயர், டியூப், மசகு எண்ணெய், உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் விலையை மிக அதிகமாக ஏற்றிய நிலையிலும் பிற மாநிலங்களெல்லாம் பேருந்து இயக்கச் செலவை அடிப்படையாகக்

கொண்டு பேருந்துக் கட்டணங்களை ஆண்டுதோறும் திருத்தி அமைத்த நிலையிலும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களே அதிகமாகப் பயன்படுத்தும் பேருந்துகளில் கட்டணத்தை உயர்த்துவதைத் தள்ளிப் போட்டு, இரண்டு முறை மட்டுமே சிறிதளவு உயர்த்தி, இன்னமும் இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் மிக அதிக வசதிகளுடன் பேருந்துகளை இயக்கும் துறை தமிழக அரசின் போக்குவரத்துத் துறையே என்று சாதனையைப் படைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, விரைந்து செல்ல விரும்பும் பயணிகளுடைய நலனுக்காக மிகக் குறைந்த கூடுதல் கட்டணத்தோடு “ஜெ, ஜெஜெ, ஆர் மற்றும் ஆர்ஆர்., எல்.எஸ்.எஸ்., பாயிண்ட் டு பாயிண்ட் என்னும் புதிய விரைவு சர்வீஸ்களை இயக்கியதும் அவரது கருத்துக் கருவூலத்திலிருந்து சிதறிய சில சிந்தனைகளின் விளைவே ஆகும்.

தமிழகத்தில் உள்ள 19 அரசுப் போக்குவரத்துக் கழகங்களும், தங்களின் 15,024 பேருந்துகள் மூலம், நாள் ஒன்றுக்கு 1,59 கோடி மக்களைச் சுமந்து செல்கின்றன.

இவற்றில் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை ... 7,306

புறநகர்ப் பேருந்துகளின் எண்ணிக்கை ... 5,787

மலைப்பாதைப் பேருந்துகளின் எண்ணிக்கை (விரைவு மற்றும் ஸ்பேர்) ... 1,884

கடந்த 3 ஆண்டுகளில் மட்டுமே புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| 1991-92 | 1981 |
| 1992-93 | 2282 |
| 1993-94 | 1771 |

மேலும் கடந்த 4 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள்:

| | |
|---|---|
| 1990-91 | 216 |
| 1991-92 | 413 |
| 1992-93 | 446 |
| 1993-94 | 244 |

■ தினந்தோறும் பல்வேறு பிரச்சினைகளால் பரிதவிக்கும் சாதாரண மக்களின் பாதுகாப்பிற்கு, இந்த அரசு ஓடோடி வந்து உதவும்!



பணியாளர்கள் எண்ணிக்கையில் வளர்ச்சி:

| | |
|---|---|
| 1991-92 | 1,00,562 |
| 1992-93 | 1,05,419 |
| 1993-94 | 1,12,310 |

நாள் ஒன்றுக்குப் பேருந்துகள் அனைத்தும் 51.67 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்களைச் சுமந்து சென்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு நாளைக்கு ஒரு பேருந்து மிகப் பெரிய சாதனை அளவான 1,200 பயணிகளை ஏற்றிச் செல்லும் சாதனையை எட்டியுள்ளது.

இக்கழகங்களின் மொத்தப் பணியாளர்களான 1.20 இலட்சம் பேரும் இரவு பகல் பாராமல் செயல்படுவதன் காரணமாகவே தமிழக மக்கள் மட்டுமே எல்லா நேரங்களிலும் பேருந்து வசதி பெறும் சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

அதிக லாபம் தராத வழித்தடங்களே பெரும்பான்மையாக இருந்தும் மக்கள் சேவையை மட்டுமே மனதில் கொண்டு செயல்படும் இக்கழகப் பேருந்துகள் ஒரு நாளைக்குச் சராசரி 395 கிலோ மீட்டர் பயணம் செய்து சரித்திரச் சாதனை படைத்து உள்ளன.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது மிகக் குறைந்த வயதுடைய அதாவது பெரும்பாலும் புதிய பேருந்துகளையே இயக்குவதன் மூலமும் சிறந்த நிர்வாகத் திறமை காரணமாகவும் நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்லும் அன்னை அவர்களின் வழிகாட்டுதல் காரணமாகவும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநில அரசுகளும் பெறாத அளவுக்கு கடந்த 2 ஆண்டுகளில் மட்டுமே 21 விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று போக்குவரத்துத்துறை, சரித்திரம் படைத்துள்ளது.

ஆண்டுக்கு 582.72 கோடி பயணிகளை ஏற்றிச் செல்லும் தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே சாதனை அளவை எட்டியுள்ளன.

இத்தகைய செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளர் பெருமக்களின் நலன் கருதி இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் — ஏன் ஆசிய கண்டத்திற்குமே ஒரு புதுமைத் தாயாக இருந்து, புரட்சித் தலைவியாக இருந்து கடந்த 1992 செப்டம்பர் திங்கள் முதல், பணியிலிருந்து ஓய்வுபெறும் போக்குவரத்துக் கழகத் தொழிலாளிக்கு 3வது சலுகையாக ஓய்வுக்காலச் சேமநல நிதித் திட்டம் என்ற ஒன்றை உருவாக்கி வாழ்வின் வயோதிகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகத் தொழிலாளி மாதந்தோறும் ஓய்வூதியம் பெறும் உன்னத நிலையை உருவாக்கியுள்ளது உலகமே வியக்கும் ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல, பணிக்காலத்தில் இறக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் அரசு ஊழியர் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் அளவுக்கு ரூ.60,000 வழங்கியதும் அவர்களின் பிள்ளைகள் படிப்பதற்காக உள்ள பெருந்துறை மருத்துவக்கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளோடு புதியதாக மூன்று பாலிடெக்னிக்குகளை உருவாக்கியதும் இந்த ஆண்டு நர்சிங் கல்லூரி தொடங்க

இருப்பதும், பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகரித்து அளித்ததும், பல கோடி ரூபாய் அளவுக்குப் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் மூலமாகவும் சலுகைகள் மூலமாகவும் அளித்ததுவும், 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பயணச் சலுகைகளையும் 8ஆம் வகுப்புக்குமேல் கல்லூரி வரை பயிலும் மாணவர்களுக்குச் சலுகைக் கட்டண வசதியையும் விடுதலைப் போராட்ட வீரர்கள், செய்தியாளர்கள், மொழிப்போர் மற்றும் எல்லைப் போரில் பங்கேற்றோர், நாடகக் கலைஞர்கள் ஆகியோருக்கும் உடல் ஊனமுற்றோர்களுக்கும் சலுகைக் கட்டண இலவசக் கட்டண வசதி அளித்ததும் அவரது தாயுள்ளத்திற்கு ஒரு சான்றாகும்.

இவ்வாறு ஆண்டுக்கு ரூ.30 கோடி அளவுக்கு மாணவர்களுக்கு இலவசப் பயணம் அளிப்பதன் மூலமாக இழப்பை ஏற்றும், ஏறியுள்ள டீசல் விலையை யொட்டிக் கட்டணத்தை ஏற்றாமலும், மக்களின் சேவையையே மகேசன் பணியாகக் கொண்டு இந்தியத் துணைக் கண்டத்திலே குறைந்த கட்டணத்திலேயே பேருந்துகளை இயக்கும் புதுமையைச் செய்துவரும் புரட்சித் தலைவி அவர்களின் சாதனைகள் பார் அறியாச் சாதனைகளாகும்.

இவ்வாறு போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டியுள்ள சாதனைகளையும் ஆற்றிவரும் பணிகளையும் முழுமையாகப் பட்டியல் போட்டால் அதுவே ஒரு சாதனை மலராக அமையும் என்பதால், போக்குவரத்துத் துறையோடு இணைந்துள்ள பிற வற்றையும் பற்றிய சில குறிப்புகளை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

மோட்டார் வாகனச் சட்டத்தை அமல்படுத்தும் போக்குவரத்துத் துறை தமிழகத்தில் அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டித் தருவதோடு, தனியார் துறை பேருந்துகளைத் தவிர்த்த ஆம்னி பேருந்துகளை இயக்குவோர், மேக்சி பேருந்துகளை இயக்குவோர்—பயணிப் பேருந்துகளைப் போல் தங்கள் வாகனங்களை இயக்கி அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பைத் தடுக்கவும், வாகனங்களின் பராமரிப்பு, தகுதியைச் சரிபார்த்தல், புகைக்கட்டுப்பாடு, வரி ஏய்ப்பு ஆகிய துறைகளில் சிறப்பான பணியை ஆற்றி வருகிறது.

மேலும் இத்துறை ஓட்டுநர், நடத்துநர் போன்ற உரிமங்களை வழங்குவதில் முறைகேடுகள் நடவாமல் தடுக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் கடுமையான சோதனைக்குப் பின்னரே ஓட்டுநருக்கான உரிமங்களை வழங்கும் முறையையும் அதனையும் காலதாமதமின்றி வழங்கும் முறையையும் உறுதி செய்துள்ளது.

தகுதியுள்ள ஓட்டுநர்கள் மூலம் தமிழகத்தில் விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் இயங்கும் சாலைப் போக்குவரத்து நிறுவனம் கும்மிடிப்பூண்டியிலும் மற்றும் போக்குவரத்துக் கழகத் தலைமையிடங்களிலும் ஓட்டுநர் மையம் அமைத்து முறையான பயிற்சி அளித்து ஆயிரக்கணக்கான ஓட்டுநர்களை உருவாக்கி கடந்த 2 ஆண்டுளில் மேற்கொள்ளப்பட்டுஉள்ள முயற்சி இந்தியாவில் வேறு எங்கேயும் இல்லாத ஒன்றாகும்.

சென்னையில் அண்ணாசாலையில் விபத்துக்களைக் குறைக்கவும் நெரிசலைத் தவிர்க்கவும் 4 வழிப்பாதை உருவாக்கியது பிற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாகும்.

போக்குவரத்துத்துறையோடு தொடர்புடைய துறைமுகத் துறை மூலம் தமிழகத்தில் உள்ள சிறு துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும் வாணிகத்தை அதிகரிக்கவும் "மெரைன் போர்டு" என்ற அமைப்பை உருவாக்க குஜராத் மாநிலத்தில் உள்ள நடைமுறையைக் கண்டு வரச் செய்து இங்கேயும் சிறு துறைமுகங்களை மேம்பாடு செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியும் மூன்றாண்டுக் காலச் சாதனைகளில் ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல; பூம்புகார் கப்பல் கழகத்தின் மூலம் தமிழக மின்வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்குக் கிழக்குக் கடற்கரையோரமாக நிலக்கரி கொண்டு வரும் பணியையும் போக்குவரத்துத்துறை மேற்கொண்டுள்ளது.

தொடங்கப்பட்ட நாளிலிருந்து லாபத்தை ஈட்டிவரும் இக்கழகம் தங்கு தடையற்ற நிலக்கரி தமிழகத்திற்கு வந்து சேருவதற்குத் துணையாக இருக்கிறது என்பதோடு, தனியார் ஒத்துழைப்போடு புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்கி சிறப்பான முறையில் நிலக்கரியைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் மூன்றாண்டுக் காலச் சிந்தனை மற்றும் சாதனைகளில் ஒன்றாகும்.

இறுதியாக, போக்குவரத்துக் கழகங்களின் உதவியோடும், அவற்றிற்குத் தேவைப்படும் நிதித் தேவைகளைப் பெற்றுத் தரவும் உருவாக்கப்பட்ட போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் பொதுமக்களிடமிருந்தும் பொது நிறுவனங்களிடமிருந்தும் வைப்பு நிதியைப் பெறுவதில் அதிக அக்கறையும் தீவிரத்தையும் காட்டியதன் விளைவாக இந்த ஆண்டு ஜூன் திங்களில் உள்ளபடி அதன் வைப்புத் தொகை ரூ.265 கோடியை எட்டியிருப்பதும் ஒரு இமாலயச் சாதனையாகும்.

இவ்வாறு சாதனைகளையே சரித்திரமாக்கிவரும் சத்தியத் தாயின் உத்தமப் புதல்வி 6 கோடி தமிழ் நெஞ்சங்களிலும் நீங்காமல் நிலைத்து நிற்கும் புரட்சித்தலைவி அவர்கள் - தமிழகத்திற்கு மேலும் வளம் சேர்க்கவும் நலம் சேர்க்கவும், அவரது அனைத்து முயற்சிகளுக்கும் நாமும் துணை நிற்போம், தோள் கொடுப்போம் என்று கூறி முடிக்கிறேன்.

# கைத்தறித் துறையின் சாதனைகள்

## மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்
## திரு. இ. மதுசூதனன்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் கைத்தறித்துறையின் வளர்ச்சி அபரிமிதமான ஒன்று.

கைத்தறித்துறையைப் பொறுத்த வரை இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் இந்த அளவில் செயல் படவில்லை. அதேபோல் தமிழகம் பல தலைவர்களைச் சந்தித்துள்ளது. அந்தத் தலைவர்களில் தலை சிறந்த முதல்வராக நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் திகழ்ந்து வருகிறார்.

சமத்துவச் சமுதாயம் காண்பதில் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயல்படும் முதல்வர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் கைத்தறித்துறை அளப்பரிய சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாட்டம் போக்கிய வள்ளலார் வழியில் தமிழக முதல்வர் செயல்பட்டு- நெசவாளர் பெருமக்களின் வாட்டம் போக்கி வாழ்வில் ஏற்றமடையச் செய்து வருகிறார்.

இருள் சூழ்ந்த தமிழகத்து நெசவாளப் பெருமக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிய அந்த ஒப்பற்ற தலைவியின் ஆட்சியில் கைத்தறித் துறையின் காலம் பொற்காலமாகும்.

அந்தப் பொற்கால ஆட்சியின் சாதனைகளுக்குச் சான்று பகர்வது சாலப்பொருத்தமாகும்.

1992-ஆம் ஆண்டு முதல் பொங்கல் திருநாளை முன்னிட்டு 120 லட்சம் நிலமற்ற ஏழை



விவசாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு ரூ.42 கோடி செலவில் இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கப்பட்டன. அதேபோல், 1993-94-ஆம் ஆண்டுகளிலும் வழங்கப்பட்டது. இதன் மூலம் சமுதாய மறுமலர்ச்சியைத் தந்தவர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

### முக்கியச் சங்கங்கள்

வளர்ந்து வரும் ஆலைகள் மற்றும் விசைத்தறிகளினால் ஏற்பட்டு வரும் பலத்த போட்டியின் நிமித்தம் கைத்தறித் துணி விற்பனைக்கு ஏற்படக்கூடிய பாதிப்பினைத் தடுக்கும் வகையில் முக்கியக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவைகள் மூலம் விற்பனையாகும் துணிகளுக்கு 1992- ஆம் ஆண்டு முதல் ஆண்டு ஒன்றுக்குச் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டு வந்த ரூ.40 கோடி, 1994-ஆம் ஆண்டுகளில் 54.18 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### தொழில் வாய்ப்பு

இந்த மாநிலத்தில் 89 விழுக்காடு நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரப்பட்டுள்ளனர். இக்கூட்டுறவுச் சங்கங்களில் 1992- 93- ஆம் ஆண்டில் செயல்பாட்டிலிருந்து சுமார் 56 விழுக்காடு சங்கங்கள் லாபத்தில் இயங்குகிறது. ஜனதா துணி உற்பத்தித் திட்டமானது கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து தொழில் வாய்ப்பு அளிக்கவும், கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு மலிவு விலையில் துணிகள் கிடைக்கவும் கைத்தறித் துறைக்கென ஜனதா துணித் திட்டத்தின் கீழ் மானியமாக ரூ.9.60 கோடி தொகையினை வழங்கியுள்ளது.

### வளர்ச்சி மையங்கள்

1993-94- ஆம் ஆண்டிலிருந்து 1996-97-ஆம் ஆண்டு வரையுள்ள வரும் நான்கு ஆண்டுகளில் கைத்தறி நெசவாள்ர்கள் மிகுந்து காணப்படும் பகுதியில் 303 கைத்தறி வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன. ஒருங்கிணைந்த கைத்தறி கிராம மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டமானது 1991- 92-ஆம் ஆண்டிலிருந்து எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள விளாகம் கிராமம் மற்றும் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை கிராமம் ஆகிய இரண்டு கிராமங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி கிராமங்களின் மேம்பாட்டிற்காகவும், நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் ரூ.28.42 இலட்சம் மற்றும் ரூ.31.26

இலட்சம் செலவினத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டிலீ மொத்தம் 101.75 லட்சம் செலவில் இத்திட்டமானது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள அம்மாபாளையம், பெரியார் மாவட்டத்திலுள்ள கருக்குபாளையம் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள இடங்கன்ன சாலை திருச்சி மாவட்டதிலுள்ள கே. பிச்சாம்பட்டி ஆகிய மேலும் நான்கு கிராமங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

### நெசவாளர்களுக்கு ஓய்வூதியம்

தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நெசவாளரின் ஆயுள், காப்பு செய்யப்பட்டு, நெசவாளர்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகதத்திற்குச் சந்தாத் தொகையாக ஆண்டு ஒன்றிற்குத் தலா ரூ.75 வீதம் அரசு செலுத்தி வருகிறது. 31.3.93இல் 1,13,956 நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் சந்தாத் தொகைக்காக 1993- 94 -ஆம் ஆண்டிற்கு ரூ. 76,58,355 ஐ ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு அரசு செலுத்தியுள்ளது. மேலும், 1.7.93 முதலல் கோ-ஆப்டெக்ஸ் தன் பங்காக மறைந்த உறுப்பினரின் வாரிசுதாரருக்கு ரூ.3,000 வழங்குகிறது. 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ.3.58 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1993- 94-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 6,776 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மறைந்த நெசவாளர்களின் வாரிசுகளான 77 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். 28.2.94 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தில் 28,335 உறுப்பினர்கள் உள்ளனர்.

நெசவாளர்களின் வீட்டுவசதி மற்றும் தொழில்கூடத் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 600 தறிக்கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு அவைகள் கட்டப்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டில் 1,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பாக ஏற்பாடு செய்யப்படும் கண்காட்சியில் விற்பனை செய்வதற்கெனத் "தேசிய வடிவமைப்புகளைச் சேகரித்துப் பயன்படுத்தும் திட்டம்" என்ற புதிய திட்டமானது 1994-95-ஆம் ஆண்டில் ரூ.450 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.



தமிழ்நாடு அரசு ரூ.28.22 இலட்சத்தை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும், கோவை மாவட்டத்தில் கண்ணம்பாளையத்திலும் இரு விசைத்தறி பணிமையங்களை நிறுவ முறையே ரூ.14.11 இலட்சம் வீதம் நிதியுதவி அளித்துள்ளது.

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத தனியார் துறையிலுள்ள நெசவாளர்களின் வளர்ச்சிக்கு 1994-95ஆம் ஆண்டில் ரூ.450 இலட்சம் கைத்தறி வளர்ச்சிக் கழகம் கடனாக வழங்க உத்தேசித்துள்ளது.

**நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் நவீனப்படுத்துதல்**

நிதி நெருக்கடியின் காரணமாக சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிய போதிலும் சில இயந்திரங்களை நவீனப்படுத்தப்பட வேண்டிய பணிகள் குறிப்பிட்ட நேரத்தில் செய்யவில்லை. இதன் காரணமாக, கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனும், தரமும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்து தொடர்ந்து நட்டத்தில் இயங்குகிறது.

எனவே, உற்பத்தியையும், தரத்தையும் அதிகரித்து நட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு புரட்சித் தலைவியின் அரசு முதன்முறையாக நவீனப்படுத்துவதற்காக ரூ.2.5 கோடி, ரூ.7.25 கோடி, ரூ.3.79 கோடி என கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்று கட்டங்களில் வழங்கி நலிந்த ஆலைகளை வளப்படுத்தியுள்ளது. புரட்சித்தலைவியின் அருட்கொடையால் இவ்வாலைகளின் உற்பத்தித் திறனும், தரமும் படிப்படியாக முன்னேறி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### நெசவாளர் நலத்திட்டங்கள்

நெசவாளர்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்றிய உத்தமத் தலைவி டாக்டர் புரட்சித்தலைவியின் தீவிர முயற்சியால் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் முன்னர் வழங்கப்பட்டு வந்த காப்புறுதித் தொகை

ரூ.10,000லிருந்து ரூ.15,000மாக உயர்த்தப்பட்டுள்ளது.

நெசவாளர்களின் கூலியில் ரூபாய்க்கு 3 காசு வீதம் அளிக்கப்பட்ட அரசின் பங்கு கடந்த ஆண்டு முதல் ரூபாய்க்கு 4 காசுகளாக உயர்த்தப்பட்டதன் மூலம் நெசவாளர்கள் இன்னல் போக்கி, இன்பம் தழைத்திட இவ்வரசு பாடுபட்டு வருகிறது.

நாட்டிலேயே முதன்முதலாக குடும்ப ஓய்வூதியத் திட்டம் நெசவாளர்களுக்குத் தமிழ் நாட்டில்தான்- புரட்சித்தலைவியின் ஆட்சியில் தான்- அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் 58 வயதிற்குள் இறந்துவிட்டால் உறுப்பினர் குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.250 குடும்ப ஓய்வூதியமாக இந்த அரசு வழங்குகிறது. ஆதரவற்ற குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வாழ வழிகண்டுள்ளார் புரட்சித்தலைவி அவர்கள்.

கடந்த 3 ஆண்டுகளில் 2,600 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டி கூட்டுறவுச் சங்க நெசவாளர் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ளன.

நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்குத் தமிழக அரசு வீடு ஒன்றுக்கு ரூ.5,000 மானியம் அளிக்கிறது.

மாறிவரும் நுகர்வோரின் தேவைகளுக்கேற்பப் புதிய புதிய துணி வடிவமைப்புகள் உடனுக்குடன் அதிகச் செலவின்றி வழங்கும் பொருட்டு ரூ.20 இலட்சம் செலவில் கம்ப்யூட்டர் வடிவமைப்பு ஒன்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.

புதிய வடிவமைப்பின் மூலம் கைத்தறி நெசவாளர்களின் திறனை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு ரூ.5,000 முதல் 15,000 வரை வழங்கிய வள்ளல் புரட்சித்தலைவியின் புகழ் மகுடத்தில் மற்றுமொரு வைரக்கல் தான் இத் திட்டம்.

# நெசவாளர் வாழ்வில் ஒளியேற்றிட...



வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்து, நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு; அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்குகிற பெருமை, நெசவுத் தொழிலுக்குத்தான் உண்டு.

தொன்மை வாய்ந்த இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான சகோதரர்களும், சகோதரிகளும், இன்று ஏழ்மையிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கின்றனர் என்ற உண்மையை, நான் நன்கு அறிவேன். அதனால்தான், தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, முழு முயற்சியுடன் எங்கள் அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி, அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வருகிறது.

உடுத்தித் தெரிந்துகொள்ள வேண்டிய இந்தத் துறையின் பெருமைகளோடு, படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளும் பல உண்டு. மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறும், பொருந்துவதாகவும், தங்கள் தயாரிப்புகளை மாற்றிக்கொண்டால் தான், எதிர்காணும் தொழில் போட்டிகளில், கைத்தறி நெசவாளர்கள் வெற்றி காண முடியும் என்பதை, நெசவாளப் பெருங்குடி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவேதான், நெசவாளர்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் புதிய ரகங்களைத் தயார் செய்யவும் உதவும் வகையில், நவீன யுக்திகளைக் கையாள, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். அவர்களுடைய தறியில் சிறு மாறுதல்கள் செய்து, உற்பத்தித் திறனையும், தரத்தையும் உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறை மேலும் கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும், உற்பத்தியாளர்களின் மேம்பாட்டிற்காகவும் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு வந்த அனைத்து திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

காலமாற்றத்திற்கேற்ப, கருத்துக்கள் மாறுபடும். அதேபோல் செயல்திறனும், சிந்தனையும் மாறுபடும் என்ற பேரறிஞர் அண்ணாவின் வார்த்தைக்கேற்ப, புதிய சிந்தனையுடன் செயல்படும் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி தொடரும். மங்களம் கொழிக்கும்.

# பொதுப்பணித் துறையின் பொன்னான சாதனைகள்

## மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன்



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின், கடந்த மூன்றாண்டுக் கால ஆட்சியில், முத்தான பல திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன. துறைதோறும் நிறை வேற்றப்பட்டுவரும் பாங்கான பணிகள், பல மாநிலத்தவரால் பாராட்டப்படுவதைக் காண கிறோம்.

'செயற்கரும் செயல் செய்தல் வேண்டும்
பெறற்கரும் புகழ்பெறுதல் வேண்டும்'

என்ற கவிதை வரிகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள். அவரது நல்லாட்சியில் இந்த மூன்றாண்டுக் காலத்தில் பொதுப் பணித் துறை புரிந்த அற்புதச் சாதனைகளின் விவரம் வருமாறு:

### பாசனத் துறையின் சாதனைகள்

தமிழ்நாட்டில், சுமார் ரூ.343 இலட்சம் மதிப்பீட்டில், 19 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டு நடைபெற்று வருகின்றன.

நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம், தமிழகத்தில் நீர்வளத்தைத் திட்டமிட்டுப் பெருக்குவதற்கும், பாசன ஆதாரங்களை நவீனப்படுத்துவதற்கும், உலக வங்கி உதவியுடன் ரூ.950 கோடி செலவில் வேலைகள் தொடங்கப்பட உள்ளன.

காவிரி கழிமுக நீர்ப்பகுதியில், தற்போது உள்ள வடிகால் ஆறுகளை மேம்படுத்தும் நடவடிககைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மொத்தம் உள்ள 1022 வடிகால் திட்டங்களில், 431 வடிகால் திட்டங்கள் மேம் படுத்தப்பட்டு விட்டன. 1994-95 ஆம் ஆண்டுக்கு இந்த வடிகால் திட்டங்களுக்கு ரூ.55.47 இலட் சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

வட சென்னை, கன்னியாகுமரி, சிதம்பரனார் மாவட்டங்களில், கடல் அரிப்பைத் தடுத்து, சுவர்கள் கட்டும் பணி எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. 1994-95-ஆம் ஆண்டிற்கு, இப்பணிக்காக ரூ.61.15 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், உலக வங்கி நிதி ஆதாரத்துடன் ரூ.74 கோடி செலவில், 7 திட்டங்கள் சாத்தனூர். தாமிரபரணி, கோதையாறு, அமராவதி, கம்பம் நதிப் பள்ளத்தாக்கு, சேத்தயா தோப்பு, மருதாநதி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 4 திட்டங்கள் சாத்தனூர், அமராவதி, கம்பம் நதிப்பள்ளத்தாக்கு மருதாநதி முடியும் தறுவாயில் உள்ளன.

மேலும், 12 திட்டங்களில் நீர்ப் பங்கீட்டுத் திட்டத்தை மேம்படுத்தும் பணிக்காக, உலக வங்கி உதவியுடன் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட உள்ளன.

வேளாண்மை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் பொதுப்பணித் துறை பாசனப் பிரிவில், வெள்ளத்தினால், சேதமடைந்துள்ள 319 பணிகள், ரூ.10 கோடி செலவில், செப்பனிட புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலான அரசு ஒப்புதல் அளித் துள்ளது. இத்திட்ட முன்னேற்ற அறிக்கை உலக வங்கி ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாகவும், புயலினாலும் பெரும் சேதம் அடைந்த நீர்ப்பாசன ஆதாரங்கள் உடனுக்குடன் போர்க்கால அடிப்படையில், செப்பனிடப்பட்டு நீர்ப் பாசனம் தட்டுப்பாடின்றி நடைபெற வழிவகைகள் செய்யப் பட்டன. இதற்காக, ரூ.8 கோடி செலவில், தற்காலிக நிவாரணப் பணிகள், செய்யப்பட்டுள்ளன. அனைத்து நீர் ஆதார நிலைகளின் சேதங்களையும் முழு அளவில் நிரந்தரமாகச் செப்பனிடும் பணிக்கு, மேலும் சுமார் 100 கோடி

ரூபாய் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலையைப் பொறுத்த மட்டில் சென்ற ஆண்டு, தமிழ்நாட்டில் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள், நல்ல நீர்வரத்தைப் பெற்று விவசாயம் பொதுவாகத் திருப்தியுடன் நடைபெற்றது.

முத்தமிழ் அன்னையின் முத்தான ஆட்சியில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று நீர்த்தேக்கங்களும், முழு அளவில் நிரம்பி, குடிநீர்த் தட்டுப்பாடின்றி, தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

அணைப் பாதுகாப்பு உறுதி செய்தல் மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய பொருளாதரத்தை அபிவிருத்தி செய்ய, தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள அணைகளின் பாதுகாப்புப் பிரிவினைப் பலப்படுத்தவும், அணைப் பகுதிகளில் உள்ள அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்தவும், அணைகளைச் சீராக்கவும், உலக வங்கி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

அணைகளில் அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

பரம்பிக்குளம் மற்றும் ஆழியாறு திட்டத்தின் கீழ் பரம்பிக்குளம் கால்வாய் III பிரிவு, III Zone ஆழியாறு ஊட்டுக்கால்வாய் பொள்ளாச்சிக் கால்வாய் 'பி' மற்றும் பிரிவுப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. புதிய நான்கு மண்டல முறையின் கீழ், முதல் மண்டலத்திற்கு 27.4.94 அன்று தண்ணீர் திறந்துவிடப் பட்டது.

ஐரோப்பியப் பொருளாதாரக் குழு உதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் 1989 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 150 ஏரிகளையும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளையும் நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 22,380 எக்டேர் நிலப்பகுதியில் கூடுதல் பாசன வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புச் சிறுபாசனம் மற்றும் ஏரிகளில் தூர்வாரிச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ், 81 பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் 500 எக்டேர் நிலப்பரப்பு கூடுதல் பாசன வசதிபெறும்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க ஆந்திர மாநிலத்தில் பாயும் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு வர 1983-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டுத்தொகை ரூ.13,500 இலட்சம் ஆகும். டிசம்பர் 1993 முடிய இதுவரை ஆன மொத்த செலவு ரூ.9163 இலட்சம். 1994-95-ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 3018 இலட்சம் ஆகும்.

## நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை

புரட்சித்தலைவி அவர்களின் புகழ்மிக்க ஆட்சியில், 52,100 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் 3000 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டன. ஜூன் 1991-க்குப் பிறகு கடந்த மூன்றாண்டுக் காலத்தில் 13,171 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

பழுதடைந்துள்ள அரசுச் சாலைப் பகுதிகளை ரூ.150 கோடி மூலதனத்தில் ஐந்தாண்டுகளில் சீர்செய்வதற்கான புதிய சிறப்புச் சீரமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் 6,430 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

தொழிற்சாலைப் பகுதிகளில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள அரசு சாலைகளில் பழுதடைந்த பகுதி



களைச் சீரமைப்பதற்கான திட்டம் 1992-93-இல் தொடங்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

ஜூன் 1991-க்குப் பிறகு கடந்த மூன்றாண்டுகளில் 238 பெரிய /சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 503 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

ஜூன் 1991 முதல், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ரூ.40.38 கோடி மதிப்பில் 296 பாலங்கள் கட்டிடவும், 122 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

தனியார் முகமைகளால் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அரசுச் சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் பாலங்களைத் திரும்பக் கட்டுதல், சுங்கவரி மூலம் அப்பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையைத் திரும்பப் பெறுவ்து எனும் கோட்பாடு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

ஊட்டியில் 11.11.93 இல் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவில் துண்டிக்கப்பட்ட 1.20 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதி 107 நாட்களில் சரிசெய்யப்பட்டு, போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

சென்னை நெல்லூர் - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கொசஸ் தலை ஆற்றுப் பாலத்தில் 16.11.93 இல் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பகுதிகளுக்கு ரூ.196 இலட்சங்கள் செலவில் ஐம்பதே நாட்களில் பெய்லி பாலம் அமைத்து போக்குவரத்து 3.2.94-இல் அனுமதிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் ரூ.60.55 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.50.39 கோடி மதிப்பிலான 15 பணிகளுக்கு நிர்வாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.



**☐ இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையினையும் பேணிக் காப்போம்! இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்!**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருச்சியில் மூன்று இரயில்வே மேம்பாலங்கள், மதுரை தத்தநேரி ராஜா மில் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம், சென்னையில் உள்வட்டச் சாலை அகலப்படுத்தும் பணிகள் ஆகியவை ரூ.21.80 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

## மின் துறையின் சாதனைகள்

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் மற்றும் அனைத்துத் துறையினருக்கும் மின்சாரத்தில் பயன்கள் கிட்டும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் 1957-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## இன்றைய நிலை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இன்றைய மின் நிறுவு திறன் 6,158 மெ.வாட் ஆகும். இதில் புனல் 1947.75 மெ.வா., அனல் 2,340 மெ.வா., எரிவாயு 10 மெ.வா., காற்றாலை 19.355 மெ.வா. மற்றும் மத்திய அரசின் மின் நிலையப் பங்கு 1841 மெ.வா. அடங்கும்.

மின்சாரக் கட்டமைப்பின் மின் உச்சத்தேவை அதிக அளவான 3,960 மெ.வாட்டை எட்டியுள்ளது. மின்சாரக் கட்டமைப்பின் அன்றாட மின்சக்தி நாளொன்றுக்கு, முன் எப்பொழுதும் இருந்திராத உயர் அளவான 86 மில்லியன் யூனிட்டுகளை 24.3.94 அன்று எட்டியுள்ளது.

## மின்வெட்டு அடியோடு நீக்கப்பட்டது

இவ்வரசு பதவிப் பொறுப்பை ஏற்றபோது உயரழுத்த தொழிற்சாலைகள் மின் சக்தியைப் பயன்படுத்துவதில் 25 சதவிகித வெட்டும், மின் தேவையில் 30 சதவிகித வெட்டும் அமலில் இருந்தது. இவ்வரசின் பல்வேறு திட்டங்களினால் தமிழகத்தில் அனல் மற்றும் புனல் மின் நிலையங்களின் செயல்பாடு கணிசமான அளவிற்கு உயர்ந்ததால் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு 26.3.92 அன்று முதல் அடியோடு நீக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மின் நிலைமை சிறப்பாகவும், மின் வெட்டே இல்லாமலும் இருக்கிறது.

## கூடுதல் மின் உற்பத்தித் திறன்

இவ்வரசு பதவி ஏற்றபின், 228.02 மெ.வா. கூடுதல் மின் உற்பத்தித் திறன் அனல் 210 மெ.வா., எரிவாயு 10 மெ.வா., புனல் 2.75 மெ.வா. மற்றும் காற்றாலை 5.27 மெ.வா. சேர்க்கப்பட்டுள்ளது.

## மின் உற்பத்தி அதிகரிப்பு

1992 ஜூலை முதல் 1993 ஜூன் வரை நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் மைய அரசிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரம் 25,376 மில்லியன் யூனிட்டுகளாகும். இது 1990 ஜூலை முதல் 1991 ஜூன் வரை உற்பத்தி செய்யப்பட்ட மற்றும், மைய அரசிடமிருந்து வாங்கப்பட்ட மின்சார அளவான 21,300 மில்லியன் யூனிட்டுகளைவிட 19.1 சதவிகிதம் அதிகமாகும்.

## பெற்ற சிறப்பு விருதுகள்

1991-ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் சிறப்பு விருதைத் தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆறாவது முறையாகப் பெற்று உள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையம் 1992-93-ஆம் ஆண்டில் முதன் முறையாக உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெற்று உள்ளது. மேலும் இம்மின்

நிலையம் 1993-94-ஆம் ஆண்டில் உற்பத்தித் திறனுக்கான பரிசைத் தொடர்ச்சியாக இரண்டாவது முறை பெறத் தகுதி பெற்றுள்ளது. எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களில் எண்ணெய் பயன்படுத்தும் அளவு குறைக்கப்பட்டதாலும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் துணை இயந்திரங்களின் மின்பயனீட்டளவு குறைக்கப்பட்டதாலும் 1992-ஆம் ஆண்டு இம்மின் நிலையங்கள் மத்திய அரசின் ஊக்கப் பரிசைப் பெற்றுள்ளன. காற்றாலைகள் மூலம் அதிக அளவில் மின்சக்தி உற்பத்தி செய்த தனிச் சிறப்பு, தமிழ்நாட்டைச் சேரும். இதனால் தொடர்ந்து நான்காம் முறையாக 1993-94-ஆம் ஆண்டில் சிறப்பு விருதைத் தமிழ்நாடு மின்வாரியம் பெறவுள்ளது.

### மின்விசை செலுத்துதல் மற்றும் மின் பகிர்வில் சாதனைகள்

சீரான மின் விநியோகத்திற்காகக் கடந்த மூன்றாண்டுகளில் 97 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. அதே காலத்தில் 1184 கி.மீ. நீள புதிய மிகு உயர் அழுத்த மின்பாதைகள் மின்விசையூட்டப்பட்டன. மேலும் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 211 துணை மின் நிலையங்களில், 1818 எம்.வி.ஏ. கூடுதல் மின்மாற்றங்கள் நிறுவப்பட்டன.

### புதிய மின் இணைப்புகள்

கடந்த மூன்றாண்டுகளில் 11,91,496 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. இவற்றில் 41,069 உயர்மின் அழுத்த மற்றும் தாழ்மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குப் புதிய மின் இணைப்பு கொடுத்ததும் அடங்கும்.

### புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் கீழ்க்கண்ட மின் உற்பத்தித் திட்டங்கள் முடிவுற அனைத்துப் பணிகளும் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

| அ) எட்டாவது திட்டம் (1992-97) | | உற்பத்தித் திறன் மெ.வா. |
|---|---|---|
| 1. | வடசென்னை அனல் மின்திட்டம் முதல் கட்டம் | 630 |
| 2. | பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் | 120 |
| 3. | சாத்தனூர் புனல் மின் திட்டம் | 7.5 |
| 4. | கீழ்பவானி வடகரைக் கால்வாய் புனல் மின் திட்டம் | 8 |
| 5. | காற்றாலைகள் தனியார் துறையில் 80 மெ.வா. உட்பட | 100 |
| | மொத்தம் | 865.5 |
| ஆ) ஒன்பதாவது திட்டம் (1997-2002) | | |
| 6. | பைக்காரா இறுதிநிலைப் புனல் மின் திட்டம் | 150 |
| 7. | பார்சன் பள்ளத்தாக்குப் புனல் மின் திட்டம் | 30 |
| | மொத்தம் | 180 |

### திட்டச் செலவுகள்

1991-94-இல் மொத்த மூலதனச் செலவு ரூ.677.99 கோடியாகும். இத்தொகை இதுவரை எந்த ஆண்டும் எட்டாத அதிகபட்ச அளவாகும். 1994-95-ஆம் ஆண்டு மின்துறையில் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.805.18 கோடியாகும்.

### பகுத்தறிவு

பகுத்தறிவின் எல்லை பொதுவுடைமை ஆகும். பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வாகும்

-தந்தை பெரியார்

### விவசாயிகளுக்கான சிறப்புச் சுய நிதியுதவித் திட்டம்

கட்டுப்படுத்தப்பட்ட நிதி ஆதாரங்களைக் கவனத்திற்கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் 40,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. 1992-ஆம் ஆண்டில் விவசாய மின் இணைப்புகள் வழங்க ஒரு சிறப்புச் சுய நிதியுதவித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுதும் தொடர்கிறது. இத் திட்டத்தின் கீழ் ரூ.25,000 அல்லது மின் இணைப்புக்காகும் மொத்தச் செலவுத் தொகையைச் செலுத்தும் விண்ணப்பதாரர் மின் இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை பெறுகிறார். 1994 'மே' மாத இறுதி வரை, 5375 பம்பு செட்டுகள் இத்திட்டத்தின் கீழ் இதுவரை மின் இணைப்பு பெற்றுள்ளன.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள்

1994 மே மாதம் முடிய 1,07,418 கூடுதல் தெரு விளக்குகளுக்குச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

### மின் கம்பித் தொடரில் ஏற்படும் இழப்பு

மின் தொடரில் ஏற்படும் இழப்பைக் குறைக்கவும், மின் வழங்கல் அமைப்பில் மின் அழுத்த நிலையைச் சீராக்கவும் வாரியம் 252 எம்.வி.ஏ.ஆர். மொத்தத் திறன் அளவுள்ள ஷண்ட் கெபாஸிட்டர்கள் நிறுவி உள்ளது. மேலும் 63 எம்.வி.ஏ.ஆர் அளவுக்கு ஷண்ட் கெபாஸிட்டர்கள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 22 நகரங்களுக்கான மின் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

வாரியம் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக 1993-94-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தின் மின் கம்பித் தொடரில் ஏற்படும் மின் இழப்பு 17.25 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

எட்டாம் திட்ட ஆண்டின் முடிவில் கம்பித் தொடரில் ஏற்படும் மின் இழப்பை 15.1 சதவிகிதமாகக் குறைக்க வாரியம் திட்டம் ஒன்றை வரைந்துள்ளது.

### மின் உற்பத்தியில் தனியார் துறையினரின் பங்கு

மின் உற்பத்திக்குப் பெரும் அளவில் மூலதன முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தித் துறையில் தனியார் துறையினரைப் பங்கு பெறச் செய்வது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. கீழ்க் கண்ட திட்டங்களைத் தனியார் துறையிடம் ஒப்படைக்க அரசு அனுமதித்துள்ளது:



| திட்டம் | நிறுவு திறன் (மெ.வா.) |
|---|---|
| நெய்வேலி பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம் | 250 |
| கடலூர் அனல் மின் திட்டம் | 1000 |
| ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம் | 1500 |
| பிள்ளைப்பெருமாள் நல்லூர் வாயுச்சுழலி மின் திட்டம் | 200 |
| தூத்துக்குடி அனல் மின் திட்டம் | |
| 4 ஆம் நிலை | 500 |
| குலசேகரப்பட்டினம் பெருங்கடல் அனல் ஆற்றல் மின் உற்பத்தித் திட்டம் | 100 |
| திருமுட்டம் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம் | 250 |
| மொத்தம் | 3800 |

### புதிய திட்டங்கள்:

### தென்னக எரி வாயு மின் தொகுப்புத் திட்டம்

தென்னக எரிவாயு மின் தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டுமெனில். தென்னக மாநிலங்களில் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். மத்திய அரசு கொள்கை அளவில் தென்னக எரிவாயு மின் தொகுப்புத் திட்டத்தினைச் செயலாக்கிட ஒப்புதல் அளித்துள்ளது. தமிழகத்திற்கு 800 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டங்கள் கோயம்புத்தூர் சேலம் அல்லது தருமபுரி மாவட்டங்களில் அமைப்பதற்குத் தேவைப்படும் எரிவாயு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாநில அரசுத் திட்டங்கள்:

### டீசல் என்ஜின் மின் நிலையங்கள்

சமயநல்லூர் (மதுரை மாவட்டம்) சாமல்பட்டி (தருமபுரி மாவட்டம்) ஆரணி (திருவண்ணாமலை சம்பு வராயர் மாவட்டம்) மற்றும் சென்னையில் மின் உச்சத் தேவைகளை ஈடுசெய்வதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியம் 100 மெ.வா. டீசல் என்ஜின் மின் உற்பத்திச் சாதனங்களை நிறுவ உத்தேசித்துள்ளது.

### சூரிய ஒளியிலிருந்து மின்சாரம்

மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள கயத்தாறு காற்றாலைப் பண்ணை வடிவில் 15 கி.வாட் சூரிய ஒளிக்கலங்களை அமைத்திட, தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் 1994-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இணை மின் உற்பத்தி

சர்க்கரை ஆலைகளிலும் இரசாயனத் தொழிற்சாலைகளிலும், இணை மின் உற்பத்தி செய்வதற்குத் தமிழக அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. சேத்தியாத்தோப்பு மற்றும் செய்யாறு

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒவ்வொன்றும் 7.5 மெ.வா. திறன் கொண்ட மின் உற்பத்திச் சாதனங்கள் இயக்கப்பட்டு, அதில் உற்பத்தி செய்யும் மின்சாரம் மின்கட்டமைப்பிற்கு வழங்கப் படுகிறது.

## தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள்

அ. புதிய தொழில் கொள்கைக் கிணங்க, புதிய உயர்மின் அழுத்தத் தொழிற்சாலைகள் செலுத்தும் மின் கட்டணத்தில் முதலாண்டில் 40 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 30 சதவிகிதமும் மற்றும் மூன்றாம் ஆண்டில் 20 சத விகிதமும் சலுகைகள் வழங்கப்படு கின்றன.

ஆ: சிப்காட் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மற்றும் முற்றி லும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில் நிறுவனங் களுக்கு முன்னுரிமையில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

இ. புதிய தொழிற்சாலை உரிமையாளர்கள் மின் இணைப் புப் பெறுவதற்கான மதிப்பீட்டுத் தொகையினை முழுவதுமாகச் செலுத்த முன்வருவார்களே யானால் அப்புதிய தொழில் பிரிவுகளுக்கு மூன்று மாதக் காலத்திற்குள் மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஈ. தொழிற்சாலைகளுக்குக் குறைந்த அழுத்த மின்சாரம் வழங்குவதற்கான மின் சுமை உச்ச வரம்பு 130 குதிரைத் திறனிலிருந்து 150 குதிரைத் திறனாக உயர்த்தப்பட்டுள்ளது.

## சென்னைப் பெருநகர் மின் விநியோகச் சீரமைப்புத் திட்டம்

சென்னைப் பெருநகர் மின் விநியோகத்தைச் சீரமைத்து மேம்படுத்தும் வண்ணம் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது. இத்திட்டத் தின் சிறப்பு அம்சங்களாக மின் விநியோகப் பிரிவில் முதன் முறையாக 230 கிலோ வோல்ட் மின் தொடர் புதைவடம் அமைத்தல், 230 கிலோ வோல்ட் வாயுக் கோப்புத் துணைமின் நிலையம் அமைத்தல், மின் விநியோகத்தைச் சீராகக் கண் காணிக்க ஒரு நவீன கட்டுப்பாடு நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் 1995-96-இல் முடிவடையும்.

இவ்வாறாகப் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்காலப் பொதுப்பணித் துறைச் சாதனைகள், அளவிடற்கரியவை.

## மாநகராட்சி விளையாட்டரங்கில் செயற்கை இழை களம்



சென்னை எழும்பூரில் உள்ள, மேயர் இராதாகிருஷ்ணன் மாநகராட்சி விளையாட்டரங் கத்தில் ரூ.1.75 கோடி செலவில் செயற்கை இழை களம் (Astro turf) ஒன்றினை உடன் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். பொதுவாக, சர்வதேச ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் செயற்கை இழை களத்திலேயே நடத்தப்படுகின்றன. இதுபோன்ற உலக அளவிலான ஹாக்கி போட்டிகள் சென்னையில் நடத்துவதற்கு உரிய வசதிகள் இதுவரை இல்லாமல் இருந்தன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, தற்போது சென்னை நகரில் அமையவிருக்கும் புதிய செயற்கை இழை ஹாக்கி களம், தமிழ்நாட்டிலுள்ள ஹாக்கி ரசிகர்களின் நீண்ட கால விருப்பத்தை நிறைவு செய்யும் வண்ணம் அமையும். மேலும், வருகின்ற 1995-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் தெற்கு ஆசிய பெடரேசன் (South Asia Federation) விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டு அர்ங்க வசதிகள் சென்னையில் அமைய வேண்டியதன் அவசியத்தைப் பூர்த்தி செய்யும் வண்ணமும் இந்தப் புதிய வசதி திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெற்றிப் பாதையில் வீட்டுவசதித் துறை

## மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்

## திரு எஸ். ரகுபதி

ஒரு ஆட்சியின் மாட்சியை அகிலத்திற்கும் காட்டும் அற்புதச் சாதனைகள் பல. எல்லோர்க்கும் கல்வி, எல்லோர்க்கும் மருத்துவ வசதி, எங்கு நோக்கினும் தொழில் வளம் இருட்டை விரட்டும் மின்வசதி, வேளாண்மைத் துறையில் வியத்தகு முன்னேற்றங்கள்! இப்படி, துறைதோறும் நாம் பதிக்கும் சாதனை முத்திரைகள் தான் ஒரு சரித்திரச் சகாப்தத்தை உருவாக்குகின்றது.

புரட்சித்தலைவியின் பொற்கால ஆட்சியைச் சரித்திரச் சகாப்தம் என்று வரலாறு வாழ்த்துகிறது என்றால் நாட்டு மக்கள் நலன் கருதி அவர்கள் தீட்டிய அரிய திட்டங்களும் அதைச் செயல்படுத்திய திறமும்தான் காரணம்.

ஆட்சிக் கோபுரத்தின் அழகு மணி மாடங்களைப் போன்றது மற்ற துறைகள் என்றால், அஸ்திவாரம் போன்றதுதான் வீட்டு வசதித் துறை. ஒரு மனிதன் எவ்வளவுதான் அற்புதங்களை வெளியில் படைத்தாலும், அவன் தங்குவதற்குத் தகுந்த வீடு இல்லையென்றால் அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏது? எண்ணத்தில் எழுச்சி ஏது? இதை உணர்ந்துதான் 'எல்லோர்க்கும் வீடு' என்ற இனிய இலட்சியத்தை அடிநாதமாகக் கொண்டு, தமிழக அரசின் வீட்டு வசதித் துறை விரைந்து செயல்பட்டு வெற்றிப் பாதையில் அகில இந்திய அளவிலேயே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. அந்த முன்னேற்றத்தின் பயனால் அகில இந்திய அளவில் பெற்ற முதல் பரிசையும் நம் தங்கத் தலைவியின் தாமரைத் திருவடிகளுக்கும் காணிக்கையாக்கி மகிழ்ந்திருக்கிறோம்.



புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் தானா முடிந்திருக்கின்றன? முன்னூறு ஆண்டுக்காலச் சாதனையை நாடு பெற்றிருக்கிறதே! அந்த ஆற்றல் அரசியின் அற்புத வழிகாட்டலில் பிறதுறைகள் ஆட்சிக்குப் பெருமை சேர்ப்பதுபோல் வீட்டுவசதித் துறையும் கடந்த மூன்று ஆண்டுகளில் பல வெற்றிச் சுவடுகளைப் பதித்து வந்திருக்கிறது. சுவடுகள் பதிந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறேன் சுகமான அனுபவங்களையும் அதன் அடிப்படையில் சாதித்த சாதனைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

மக்கள் வாழ்வை வளப்படுத்தும் மகா நதியைப் போன்றது வீட்டு வசதித் துறை. இதில் 'திரிவேணி' சங்கமமும் உண்டு. இந்த மகா நதியிலிருந்து பிரிந்து சென்று வளமூட்டும் மகத்தான கிளை நதிகளும் உண்டு. ஆம்! தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய மூன்று முகமைகளும் சேர்ந்த திரிவேணிச் சங்கமம் தானே வீட்டு வசதித் துறை! சென்னை நகரைச் செழுமைப் படுத்தும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நாட்டின் பிற பகுதிகளை வளப்படுத்தும் நகர மேம்பாட்டுத் திட்டம் போன்றவை கிளை நதிகளைப் போன்றதாகும்.

இதோ, கடந்த மூன்றாண்டுகளில் வீட்டு வசதித் துறை படைத்த சாதனைகள் பதித்த முத்திரைகள்! 1991-92ஆம் ஆண்டில் ரூ.245.07 கோடி செலவில் 81,828 வீடுகளும், 1992-93ஆம் ஆண்டில் ரூ.255.02 கோடி செலவில் 82,992 வீடுகளும், 1993-94ஆம் ஆண்டில் 1,04,800 வீடுகளும் அந்த முகமைகளால் கட்டப்பட்டு மேம்படுத்தப்பட்டு ரூ.347.85 கோடி அதற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற முகமைகளால் ஆற்றப்பட்டுள்ள நிதி மற்றும் செயல்பாட்டுச் சாதனைகள் பலப் பல.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

1991-94ஆம் ஆண்டுகளில், குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.271.15 கோடி செலவில் 24,000 வீடுகள் இவ்வாரியத்தால் கட்டப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதியை ஊக்குவிக்கும் பொருட்டு, 1991-ஆம் ஆண்டு முதல் நடப்பு ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் உயரிய திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 1991-94-ஆம் ஆண்டுகளில்,

இத்திட்டத்தின் கீழ் 39 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.90 கோடி செலவில் 9,144 வீடுகள் கட்டுவதற்குப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும் வகையில் அமைக்கப்படும் ஓர் உன்னதத் திட்டமாகும். இரண்டாவது கட்டமாக, நடப்பாண்டில் (1994-95) 10,300 வீடுகள் உருவாக்கும் வகையில் ரூ.43 கோடி செலவில் மேலும் 29 நகரங்கள் இத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1991-94ஆம் ஆண்டுகளில் 40,536 வீட்டு மனைகள் ரூ.129.82 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன. நலிவுற்றோர் நலன் நாடும் அரசு இது என்பதால், இதில் 50 சதவிகிதம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு ஊழியர்களுக்கு வீடுகள் வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கருத்தில் கொண்டு 1991-94ஆம் ஆண்டுகளில் 23.42 கோடி செலவில் 2372 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசை வாழ் மக்களின் நலத்தினைக் கருத்தில் கொள்ளுவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். 1991-94ஆம் ஆண்டுகளில் எல்லாவித இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இன்னல்களைத் தாங்கும் வகையில் ரூ.30 கோடி செலவில் குடிசை வாழ் மக்கள் பயன்பெறும் வகையில் 10,927 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, 1991-94ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குடிசைப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு 29,508 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ரூ.9.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ், 1991-94ஆம் ஆண்டுகளில் ரூ.5.87 கோடி செலவிடப்பட்டு 35,800 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. நடைபாதைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் ரூ.2.32 கோடி செலவிடப்பட்டு 1996 நடைபாதைவாசிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. பாதையையே வீடாகக் கருதியவர்களுக்கும் பாங்கான வீடுகள் கட்டித் தந்துள்ளது புரட்சித் தலைவியின் புனித ஆட்சி.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கான திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ரூ.11.06 கோடி செலவில் 8,830 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஏழைகள் வாழ்வில் இன்ப ஒளியேற்றும் அரசு இது என்பதைக் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் கோடிட்டுக் காட்டும்.

## வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்கள்

கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவின் கீழ் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களிலும் முதன்மை நிறுவனமாக இயங்கி வருகின்றது என்பது அகில இந்திய அளவில் நம் ஆட்சியின் மாட்சிக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

1991-94ஆம் ஆண்டுகளில் இந்த இணையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ.370 கோடி கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை, இந்த இணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.594 கோடியாகும். எனவே, கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1991-94ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனுதவியானது, கடந்த 32 ஆண்டுகளில் —அதாவது 1959ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை இவ்விணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகையில் 62 விழுக்காடு ஆகும் என்பது



மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த திட்டம் அமல் நடத்தப்படவேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இதுதான் இப்போதைய நமது தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் தகவல்கள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உறுதியான திட்டமும், செயல் அளவிலான நடவடிக்கைகளும் தேவை. தேசிய மக்கள் தொகைக் கொள்கையை இதற்காகப் புதுப்பிக்க வேண்டும்.

தேசிய அளவில் இது குறித்து அனைத்துத் தரப்பினரும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.**

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடந்த 32 ஆண்டுகள் நாட்டை ஆண்டவர்கள் சாதிக்காத சாதனையை, மூன்றே ஆண்டுகளில் புரட்சித் தலைவி அவர்கள் சாதித்துள்ளார் என்பதற்கு இதுவும் ஓர் சான்றாகும். இந்த அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாகக் கிராமப் புறங்களில் வீட்டுவசதியை மேம்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1991-92ஆம் ஆண்டு முதல் 30.6.94 வரை ரூ.10 கோடி செலவில் 40,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

1991 -92ஆம் ஆண்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.111.38 கோடி செலவில் 42,350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதைப் போன்று, 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.117.02 கோடி செலவில் 43,016 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1993-94ஆம் ஆண்டில் (30.6.94 முடிய) 53,822 வீடுகள் 144.90 கோடி செலவில் கிராமப்புற மற்றும் நகர்ப் புறங்களில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 'வீடு இல்லார் இல்லை' என்னும் விந்தைக் காட்சியைக் காணவே புரட்சித் தலைவியின் அரசு இவ்வாறு விரைந்து செயல்பட்டு வருகிறது.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னை மாநகரின் சீரான வளர்ச்சிக்கு ரூ.50 கோடி செலவில் 'கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி' ரூ.6 கோடி செலவில் மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம், ரூ.17 கோடி செலவில் சாத்தங்காடு இரும்புமற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களை சென்னை நகரத்தின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம், மொத்த விற்பனைச் சந்தையாகிய அழுகும் பொருட்கள், உணவு தானியங்கள், துணி வியாபாரம் போன்றவைகளை மத்திய விற்பனைப் பகுதியாகிய ஜார்ஜ் டவுனிலிருந்து கோயம்பேட்டிற்கு இடமாற்றம் செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, மலர் அங்காடி இந்த வளாகத்தில் முடிவடைந்து உள்ளது. காய்கறி அங்காடி வளாகம் முடிவுறும் தறுவாயிலும், கனி வகை அங்காடி வளாகத்தில் வேலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு, 1994ஆம் ஆண்டின் மத்தியில் முடிவு பெறுமென உத் தேசிக்கப் பட்டுள்ளது. தானிய வகை அங்காடிகளின் விரிவான திட்டமானது தொடக்க நிலையில் உள்ளது. மாதவரம் பேருந்து மற்றும் சரக்கு வண்டி நிறுத்துமிடம் சென்னை நகரத்துக்கு வடகிழக்கில் சுமார் 66 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூபாய் ஆறு கோடி செலவில் அமைக்கப்பட்டு 1992-93ஆம் ஆண்டில் முடிக்கப் பட்டுள்ளது.



சென்னை மாநகரின் மையப் பகுதியில் வியாபார வட்டார நெரிசலைத் தவிர்க்க சாத்தங் காட்டில் 70 ஏக்கர் நிலப்பரப்பில் மரம், இருப்பு உதிரி மற்றும் சரக்கு உந்து முனையம் அமைக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மர அங்காடிகள், இரும்பு உதிரி அங்காடிகள் தவிர மணலியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளின் வசதிக்காகச் சரக்கு உந்து நிறுத்த ஒரு வளாகமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.16.70 கோடியாகும். இந்நிலம் அரசு நிலமாகையால் நில உரிமை மாற்றம் செய்யப் பட்டு, 1994-95-ஆம் ஆண்டில் முடிவுறும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது.

1991-94ஆம் ஆண்டுகளில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம், சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களுக்காக ரூ.27.60 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## மாபெருநகரத் திட்டம்

தேசிய நகராண்மைக் குழுமம், அனைத்திந்திய அளவில் தேர்வு செய்த ஆறு நகரங்களில் சென்னையையும் "மாபெரு நகரத்தில்" சேர்த்து, மத்திய அரசு உதவியுடன் செயலாக்கத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 1993-96ஆம் ஆண்டிற்குள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் ரூ.887 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் தீட்ட உத்தேசித்துள்ளது. சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள பல்வேறு முகமைகளால் செயல்படுத்தப்படும் பொதுச் சேவைத் திட்டங்கள், முதலீடு திரும்பப்பெறும் திட்டங்கள் மற்றும் ஆதாயம் ஈட்டித்தரும் திட்டங்கள் ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தை முன்னின்று நடத்துவதற்குப் "பெருநகர்

"அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்" என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தி அதில் மைய மற்றும் மாநில அரசின் மூலதனப் பங்குத்தொகையாக ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்காக ரூ.15 கோடி ஏற்கெனவே வழங்கப் பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு தவிர, இந்தப் புதிய அமைப்பிற்கு, அரசின் பங்குத்தொகையாக சென்னையில் முக்கியப் பகுதி களில் உள்ள அரசு நிலங்களை ஒப்படைப்பதற்காக கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிறுவனம், நிதி நிறுவனங் களிடமிருந்து நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக இந்நிலங்களை அடிப்படை மூலதனமாகக் கருத இயலும்.

## புதிய திட்டங்கள்

1993-94ஆம் ஆண்டில் புதிய திட்டமாக வெளிவட்டச் சாலை ஒன்றை உருவாக்கிட அரசு அனுமதித்துள்ளது. வண்டலூர் மற்றும் மீஞ்சூருக்கு இடையில் உள்ள 58 கிலோ மீட்டர் பிரதான சாலை "கட்டு இயங்கு மற்றும் மாற்றல்" அடிப்படையில் தனியார் முதலீடு மூலம் அமைக்கப்பட உள்ளது. இந்தச் சாலையில் முறைப்படுத்தப்பட்ட உத்தேசத் தடம் தயாரிக்கப்பட்டு, முடிவிற் காகத் தொடர்புடைய நிறுவனங் களுடன் கலந்து ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

மாதவரம் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்து மிடத்தை வெற்றிகரமாக முடித்த தும், மற்றொரு புதி திட்டமான பீர்க்கன்கரணையில் (ஜி.எஸ்.டி. ரோடு) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் உருவாக்கப்படவுள்ள பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டதிற்குண்டான இரண்டு மாற்றுத் திட்டங்களைப் பொதுப் பணித்துறை மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்காக முன்னரே அனுப்பப்பட்டுள்ளது.

சாத்தங்காட்டில் அமைய உள்ள மரம் மற்றும் இரும்புக் கழிவுகள் மொத்த அங்காடி வளர்ச்சித் திட்டத்தையும் அரசு அனுமதித் துள்ளது. மேலும், 1994-95ஆம் ஆண்டில் புதிய திட்டமாகக் கோயம்பேட்டில் சென்னையில் வெளியூர் பேருந்து நிறுத்துமிடம் அமைக்க அரசு அனுமதியளித் துள்ளது.

## நகர் ஊரமைப்பு இயக்ககம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டிற்காக மத்திய அரசு உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினைச் செயல் படுத்துவதில் நகர் ஊரமைப்புத் துறை ஒரு முன்னோடி நிறுவன மாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 23 நகரங்களில் 107 திட்டப்பணிகள் ரூ.2683 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, ரூ.760 இலட்சம் உள்ளாட்சி நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 40 திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று பயன்பாட்டிற்குக் கொணரப்பட்டுள்ளது.

இத்துறை 1991-92ஆம் ஆண்டில் 12 முழுமைத் திட்டங்களையும், 1992-93ஆம் ஆண்டில் 12 முழுமைத் திட்டங்களையும், 1993-94ஆம் ஆண்டில் 20 முழுமைத் திட்டங்களையும் தயாரித்து முடித்துள்ளது. 1994 – 95ஆம் ஆண்டில் மேலும் 20 முழுமைத் திட்டங்களைத் தயாரித்து முடிக்க உள்ளது. அவ்வாறே 1991-92ஆம் ஆண்டில் 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள், 1992-93ஆம் ஆண்டில் 40 விரிவு அபிவிருத்தித் திட் டங்கள், 1993-94-ஆம் ஆண்டில் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் இத்துறையினால் தயாரிக்கப் பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டில், மேலும் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்துறை பல்வேறு நகரங்களுக் கான போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங் களைத் தயாரிக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. 1991-92ஆம் ஆண்டில் 4 நகரங் களுக்கான திட்டங்களும், 1992-93ஆம் ஆண்டில் 4 நகரங் களுக்கும், 1993-94ஆம் ஆண்டில் மேலும் 4 நகரங்களுக்கும் போக்கு வரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1994-95ஆம் ஆண்டில், மேலும் 4 நகரங்களுக் கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்படும்.

எல்லோர்க்கும் வீடு என்ற இலட்சியப் பாதையில் வீறுநடைபோடும் வீட்டுவசதித் துறை, கடந்த மூன்றாண்டுகளில் பதித்த வெற்றி முத்திரைகளில் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டினேன். இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு வீடு கிடைக்கும் வரையில் இத்துறையின் தூய பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

'காணி நிலம் வேண்டும்' என்று பராசக்தியிடம் வரம் கேட்ட பாரதியார், அந்தக் காணி நிலத்தில் ஓர் மாளிகை கட்டித்தர வேண்டும் என்றும் வேண்டினார். அன்னை பராசக்தியின் அருள்வடிவாய் இன்று நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். அன்று பராசக்தியிடம் பாரதி கேட்டார். இன்று, நாட்டு மக்கள் கேட்கா மலேயே அவர்கள் தேவையறிந்து இனிய இல்லங்களை ஒதுக்கீடு செய்து இல்லங்கள்தோறும் இன்ப ஒளி வீசவும், நாட்டு மக்களின் உள்ளங்கள்தோறும் உவகை பெருகிடவும் புரட்சித்தலைவியின் புனித அரசு, விரைந்து செயல்பட்டு வெற்றிச் சரித்திரம் படைத்து வருகிறது.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்றார் பாவேந்தர். குடும்பம் நல்லதாக இருக்கவேண்டுமென்றால் குடி யிருக்கும் வீடும் நல்லதாக இருக்க வேண்டும் அல்லவா? தமிழ்த்திரு நாட்டின் அனைத்துக் குடும்பங்களுமே பல்கலைக் கழகங்களாகப் பரிணமிக்க, இந்த நாடு செய்த நற்றவப் பயனாய் நம்மை ஆண்டுகொண்டிருக்கும் புரட்சித்தலைவியின் புனிதப் பயணம் தொடரட்டும்! புது மைகள் நாளும் மலரட்டும்!

# சிறுதொழில் துறையில் சிறப்பான சாதனைகள்

## மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு துரை ராமசாமி

குறைந்த அளவு முதலீடு, ஆனால் பெரும் அளவில் வேலை வாய்ப்பு அளிப்பது சிறுதொழில் துறையின் சிறப்பு அம்சமாகும். சிறுதொழில்கள் குறித்த வெற்றி கரமான கொள்கைகளை வகுப்ப தன் மூலமாகவே விரைவான தொழில்மயமாக்கல் சாத்தியம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது இந்த அரசு.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992 ஆம் ஆண்டுக்கான தொழிற் கொள்கை யில், புதிய தனித்தன்மை வாய்ந்த கருத்துக்களையும் நடவடிக்கை களையும் அறிவித்துள்ளார். இதில் சிறுதொழில் துறைக்குக் கணிச மான அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வரசு சிறுதொழில்களுக்கும், ஊரகத் தொழில்களுக்கும் பல ஊக்க உதவிகளையும் சலுகைகளையும் அறிவித்துள்ளது. சிறுதொழில்கள் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக 1993 ஜூலைத் திங்களில் சிறுதொழில் துறை என ஒரு தனித்துறையே உருவாக்கப் பட்டுள்ளது.

### அரசு பொதுத்துறை நிறுவனங் களும், வாரியங்களும் சிறு தொழில் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் செலுத்துவதைக் கண்காணிக்க, கண் காணிப்பு அமைப்பை ஏற்படுத்துதல்

பொருட்கள் வழங்கப்பட்ட திலிருந்து 30 நாட்களுக்குள் அவற்றுக்கான பட்டிகளுக்குத் தொகை களைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்று அரசு 19.2.92-இல் மாநிலப் பொதுப்பணித் துறை நிறுவனங்களுக்கும் சட்டப் படி யான வாரியங்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளது. இதனைக் கண் காணிக்க சிறு தொழில் துறையின் செயலாளர் தலைமையில் அமைக் கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் முயற்சியால், 196 சிறுதொழில் நிறு வனங்கள் மொத்தம் நிலுவையாக இருந்த ரூ.1095.30 இலட்சத்தில் ரூ.1066.66 இலட்சத்தை வசூலிக்க முடிந்தது.



### மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு அதிக மூலதன மானியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் பின்தங்கிய 76 வட்டங்களில் அமைக்கப் பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு ரூ.15 இலட்சம் என்ற உயரளவுக்கு உட்பட்டு 15 சதவிகித மூலதன மானியம் என்றிருப்பதற்குப் பதி லாக, அதிக அளவு உதவியாக மிகவும் பின்தங்கிய 32 வட்டங் களில் ரூ.20 இலட்சம் என்ற உயரளவுக்குட்பட்டு, 20 சதவிகித மூலதன மானியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பின் தங்கிய வட்டங்களாக மேலும் 6 வட்டங்களை அதிகரித்து ஆணை யிடப்பட்டுள்ளது.

### வேடத்துக்குளத்திலுள்ள பின்ன லாடைத் தொழிற்பேட்டைகளுக்கு மாநில மூலதன உதவித் தொகை வசதியை நீட்டித்தல்:

தற்போது மூலதன முதலீட்டு உதவித்தொகை பெற்று வரும் 82 வட்டங்களில் உள்ள சிறுதொழில் நிறுவனங்கள் பெறும் அதே அளவு மூலதன மானியம் அரசு நிறுவனங்களால் மேம்படுத்தப் பட்ட அனைத்துத் தொழில் வளாகங்கள், கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த திருப்பூர் அருகிலுள்ள முதலிப்பாளையம் பின்னலாடைத் தொழிற்பிரிவு களுக்கான தனியார் தொழிற் பேட்டைகளும் பெறுகின்றன. சிட்கோ நிறுவனம் உருவாக்கிய வேடத்துக்குளத்திலுள்ள பின்ன லாடைத் தொழிற்பேட்டைகளுக் கும் பின்தங்கிய வட்டத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் பெறும் இம்மூலதன மானியம், தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், இவ்வுதவித் தொகை யினைச் சிறுதொழில் நிறு வனங்கள் பயன்பெறும் வகையில் அவை உருவாகும் ஒவ்வொரு நிலையிலும் படிப்படியாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்பிரிவுகளுக்கு இணையாக, குறைந்த அழுத்த மின்சக்திப் பிரிவுகளுக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் சலுகை வழங்குதல்:

வணிக உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குக் குறைந்த மின் அழுத்தப் பிரிவுகளுக்கு 30 சதவிகித, 20 சதவிகிதம், 10 சதவிகிதம் என்ற தற்போதைய அளவிலிருந்து 40 சதவிகிதம், 30 சதவிகிதம், 20 சதவிகிதம் என்ற அளவிற்கு இச்சலுகையினை அதிகரித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### தெரிவு செய்யப்பட்ட மின்னணுவியல் தொழில் வளாகங்களுக்கு விற்பனை வரி தள்ளுபடித் திட்டத்தை நீட்டித்தல்:

மிகவும் பின்தங்கிய 32 வட்டங்களிலும் புதுக்கோட்டை, கடலூர், மானாமதுரை ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தொழில் வளாகங்களிலும் உள்ள புதிய தொழிற்பிரிவுகளும் கணிசமான அளவிற்கு விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பிரிவுகளும் 5 ஆண்டுக்காலத்திற்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து முழு தள்ளுபடி (அல்லது 9 ஆண்டுக் காலத்திற்கு விற்பனை வரி ஒத்திவைப்பு) பெறத் தகுதியுடையனவாகும். இப்பயன் தற்போது திருவான்மியூரிலுள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்கும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள சோழிங்க நல்லூர் மின்னணுவியல் நகருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### தற்காலிக, நிரந்தரப் பதிவிற்காக எளிமையாக்கப்பட்ட திருத்த வடிவங்கள்:

தற்காலிக, நிரந்தரப் பதிவிற்கு விண்ணப்பிக்க எளிமையாக்கப்பட்ட ஒரு பக்க அளவுள்ள திருத்தப்பட்ட படிவம் ஒன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது.



சிறுதொழில் தொடங்குவதில் கடந்த மூன்றாண்டுகளில் தொடர் சாதனை எட்டப்பட்டுள்ளது. 1991-92-இல் 1,38,404 ஆக இருந்த நிரந்தரப் பதவுபெற்ற தொழிற்பிரிவுகள் 1993-94-இல் 1,78,114 ஆக உயர்ந்துள்ளது. இதே போல 1991-92-இல் 2906.48 கோடியாக இருந்த முதலீட்டுத் தொகை 1993-94-இல் 3972.27 கோடியாக உயர்ந்துள்ளது.

### குறைந்த அழுத்த மின்சக்தியின் பணிச்சுமை அதிகரித்தல்

சிறுதொழில் நிறுவனங்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்று குறைந்த அழுத்த மின் வழங்குதலின் கீழ் அனுமதிக்கப்படும் வரையறையை, தமிழ்நாடு மின்சார வாரியம், 1993 நவம்பரிலிருந்து 130 குதிரைத்திறனிலிருந்து 150 குதிரைத் திறனாக உயர்த்தியுள்ளது.

### ஒரே இடத்தில் அனைத்து நடைமுறைகளையும் செய்து கொடுக்கும் அதிகார மன்றம்

நமது மாநிலத்தில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள், விதிகளின்கீழ் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அதிகார மன்றங்களின் ஒப்புதல் பெறும் நடைமுறையினை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் நமது மாநிலத்தில் மாவட்ட அளவில் ஒரே இடத்தில் அனைத்து நடைமுறை மேற்கொள்ளும் குழுவும் நேரடி அனுமதி வழங்கல் முறையும் நடைமுறையில் இருந்து வருகின்றது. சிறுதொழில் தொடங்குவதற்கு இந்த அதிகார மன்றங்களின் அனுமதி முன் தேவையாகும். ஆலோசனை வழங்கும் இக்குழுவிற்கு வசதியாக அதிகாரம் வழங்கும் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### மிகச் சிறுதொழில் பிரிவுகளின் பிரச்சினைகளை நீக்குவதற்கு அமைக்கப்பட்ட குழு

மிகச் சிறிய தொழில்கள் பிரிவுகட்கு இன்றியமையாத தேவையான உரிய காலத்தில் போதுமான நிதி வசதி கிடைக்க வழிசெய்யும் வகையில் தொழில் கூட்டுறவு வங்கிகளை திருத்தியமைப்பதென்று அரசு தீர்மானித்துள்ளது.

### தொழில் முனைவர்களாகும் பெண்களுக்கான சிறப்புத் திட்டம்

அனைத்துப் புதிய தொழிற்பேட்டைகளிலும் தொழில் முனைவர்களாகும் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு செய்யவும், 30 சதவிகிதத்திற்கு மேல் பெண்கள் பணி அமர்த்தப்பட்டுள்ள புதிய தொழிற்பிரிவுகளுக்குச் சிறப்பு மானியம் 5 சதவிகிதம் வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### பெண்களுக்கான சிறப்புத் தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டம்

பெண்களுக்கான தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் ரூபாய் 10 இலட்சத்தில் 765 நபர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, 1993-94-இல் 800 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சத்தில் பயிற்சி அளித்து சாதனை படைக்கப் பட்டது.

1991-92-இல் பயிற்சி பெற்றவர் களில் 225 பெண்கள் ஏற்கெனவே தொழில் தொடங்கிவிட்டனர். 1992-93-இல் பயிற்சி பெற்றவர் களில் 686 பேர்களுக்குத் தொழில் தொடங்க நிதியுதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 394 பேர்களுக்குத் தொகை வழங்க அனுமதி கிடைத்து விட்டது.

1993-94-ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் செலவில் 300 ஆதி திராவிடர்பழங்குடியினருக்குப் பயிற்சியளிக்க தொழில்முனைவர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டு மாநிலம் முழுவதிலும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

### தொழில் கூட்டுறவு அமைப்புகள்

கூட்டுறவு முறையில் அல்லது கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் உதவி கிடைக்கச் செய்தல் ஆகிய வழிகளில், தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, தென்னை நார்த் தொழில் போன்ற வேறுபல தொழில்களை மேம்படுத்துவதே அரசின் அறிவிக்கப்பட்ட கொள் கையாகும்.

### படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் (SEEUY)

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான இது 1983-84-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு வருகிறது. 25 சதவிகித உதவித்தொகையுடன் நபருக்கு 35,000 ரூபாய் வரை நிதி உதவி வழங்கிட வங்கிகட்கு விண்ணப் பங்கள் பரிந்துரை செய்யப்படு கின்றன. சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய பகுதிகளில் நிறைவேற்றப்படுகின்ற இத்திட்டம், 10-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்துள்ள 18 முதல் 35 வயது வரையிலுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

### பிரதமரின் 'ரோஸ்கர் யோஜனா' வேலை வாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற இளைஞர் களுக்காகப் பிரதமரின் 'ரோஸ்கர் யோஜனா' என்ற வேலை வாய்ப்புத் திட்டம் 2.10.1993 முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தொழில்கள் சேவை நிலையங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அமைப்பதன் மூலம் சுயவேலை வாய்ப்பு முயற்சிகளை மேற் கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது. தனிநபர்களின் நேர்வில் ரூபாய் ஒரு இலட்சம் வரையில் செலவாகக்கூடிய பணித் திட்டங்களுக்கும் கூட்டா கச் சேர்ந்து நபர் ஒருவரின் பங்கு ரூபாய் ஒரு இலட்சமாகவோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருக்கும் பணித் திட்டங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக் கப்படும்.



### கைவினைத் தொழிற்பிரிவுகள்

கைவினைத் தொழிற்பிரிவுகளின் வளர்ச்சிக்காக மாவட்டத் தொழில் மையங்கள், கைத் தொழில் வல்லுநர்கள், கைவினை ஞர்களை ஆய்வு நடத்தி தெரிவு செய்கின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் இத்துறையில் எய்திய சாதனை வருமாறு:

1991-92-இல் 7822 சாதனைகள் எய்தப்பட்டு, 17,698 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. 1992-93-இல் இந்தச் சாதனை 7936 ஆக உயர்ந்து 19,741 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

### தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் தூண்டுதலாகப் பணியாற்ற வேண்டும் என்பதனையும் இம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதி களிலும் போதிய அளவு தொழில் வளர்ச்சி எய்தப்பெறாத பகுதி களிலும் சிறுதொழில்கள் தொடங்கவேண்டும் என்பதையும், திட்டவட்டமான நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அரசால் அமைக்கப்பட்டது. கடந்த காலங்களில் கிடைத்த அனுபவம் காரணமாக இப்பணியினைச் செம்மையாகவும் அரசு சார்பில் பல திட்டங்களைச் செயலாக்கி யும் வருகிறது.



### சிட்கோ வளர்ச்சிப் பணிகள்

### சிறுதொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குதல்

அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய பல்வேறு அளவுகளில் தொழிற்கூடங்கள் மற்றும் சீர்செய்த மனைகள் வழங்குவது, இந்நிறுவனத்தின் மிக முக்கியமான பணியாகும். பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்து மேலும் தேவை குறித்த ஆய்வினை மேற்கொண்டும், அவற்றில் தொழில் வளர்ச்சி மையங்களை மேம்படுத்துகிறது. தற்போது புதிய திட்டமாகத் தனியார் தொழிற் பேட்டைகளில் தொழிற்கூடங்கள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது.

### புரட்சித்தலைவி மின் அணுவியல் தொழில் வளாகம்

கிண்டி தொழிற்பேட்டையில் மின் அணுவியல் தொழிற் பிரிவுகளை மட்டுமே அமைப்பதற்காக ஐந்து ஏக்கர் நிலத்தில் மூன்று பலமாடிக் கட்டடங்களில் ஒவ்வொன்றும் 1000 ச.அடி அளவுள்ள 120 பிரிவுகள் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டு 40 பிரிவுகள் கொண்ட தொழில் வளாகங்கள் இரண்டு தொகுதி (I - II) கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இதற்குரிய மொத்த திட்டச் செலவு சுமார் ரூ.4.50 கோடி ஆகும். 8000 பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெறுவர். இதில் 50 சதவிகிதத் தொழில் நுட்பத் தகுதி பெற்ற மகளிர் பயன் பெறுவர்.

### ஆயத்த ஆடைகள் தயாரிப்புத் தொழில் வளாகம், கிண்டி.

கிண்டித் தொழிற்பேட்டையில் சுமார் 1.50 ஏக்கர் பரப்பில், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாடியிலும் 16 பிரிவுகள் இருக்கும். நான்கு மாடிகள் கொண்ட கட்டடமாகும் இந்த வளாகம். மொத்தம் 64 பிரிவுகள் கொண்ட இக் இக்கட்டடம் கட்டும் பணி 1994 செப்டம்பருக்குள் முடிக்கப் படும். மொத்த திட்டச்செலவு ரூ.3.80 கோடி ஆகும். 4000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கும்.

### உயர் தொழில் நுட்பத் தொழிற்பேட்டைகள் திட்டம்

'சிட்கோ' நிறுவனம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'அயல்நாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி' யிலிருந்து 'யென் கடன்வசதி' யைப் பெற்று திருப்பூரில் பின்னலாடைத் தயாரிப்புத் திட்டத்தைச் செயலாக்குவதைப் பொறுத்தவரை வெளிநாட்டிலிருந்து எந்திரங்களை இறக்குமதி செய்யும் பணி முடிக்கப்பட்டு 1994-95-இல் இப்பிரிவுகள் உற்பத்திப் பணியைத் தொடங்கும்.

சென்னை அருகில் பதப்படுத்தப் பட்ட உணவு தயாரிப்பு, மோட்டார் வண்டி துணைப் பாகங்கள் தயாரிப்பு ஆகிய இரு திட்டங்களுக்கான ஆரம்பப் பணி 1994-95-இல் முடிக்கப்படும்.

### ஏற்றுமதி

தமிழ்நாடு அரசின் பரிந்துரையின் அடிப்படையில், 'சிட்கோ' நிறுவனத்தை ஒரு ஏற்றுமதி இல்லமாக, மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. சிறுதொழில் நிறுவனங்கள் அவற்றின் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் உதவி செய்வதே இதன் நோக்கமாகும்.

### தொழிற்பேட்டைத் திட்டங்கள்

தொழிற்பேட்டைகளை அமைக்க

புதிய இடங்களைக் கண்டறிய அமைக்கப்பட்ட தொழிற் பேட்டைத் திட்டப் பிரிவு எய்திய கடந்த மூன்றாண்டுக்கால மற்றும் நடப்பாண்டுச் சாதனைகளாக, 1991-92-இல் புதிதாக உருவாக் கப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள் 4 ஆகும். 1993-94-இல் இதன் எண்ணக்கை 5 ஆக உயர்ந் துள்ளது.

### உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய உதவித் திட்டம்

சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்திப் பொருட் களை விற்பனை செய்வதற்கு உதவி செய்யும் திட்டத்தின்கீழ் அரசுத் துறைகளும், நிறுவனங்கள் வெளியிடும் ஒப்ப அறிவிப்பு களுக்கு ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பி அவற்றிடமிருந்து தேவைக்குறிப்புகளைப் பெற்று அவை சிறுதொழில் நிறுவனங் களுக்கு வழங்கி வருகிறது.

### தவணைக் கொள்முதல் வாடகைத் திட்டம்

சிட்கோ நிறுவனம், 1993 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து, எந்திரங்களைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்கும் திட்டத்தையும், சாதனங்களை வாடகைக்கு விடும் திட்டத்தையும் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. இந்தியச் சிறுதொழில் வளர்ச்சி வங்கி SIDBI சிட்கோ நிறுவனத்திற்கு இதற்கெனக் குறித்த காலக் கடனாக ரூ.100 இலட்சம் வழங்கி யுள்ளது.

### 'சிட்கோ'வின் ஒட்டுமொத்த சாதனை

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் சிட்கோ நிறுவனத் தின் சாதனை, சிறப்பாகவும், வியக்கத்தக்கதாகவும் உள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.108.92 கோடியாக இருந்த இதன் விற்பனைத் தொகை 1992-93-ஆம் ஆண்டில் ரூ.115.70 கோடியாக உயர்ந்து, 1993-94-ஆம் ஆண்டில் ரூ.200 கோடியைத் தாண்டியது.

> **தொண்டு**
>
> உங்களுக்குத் தொண்டு புரிவதைவிடப் பெரியதோர் அறம் இல்லை.
>
> -சுவாமி விவேகானந்தர்

1993-94-ஆம் ஆண்டில் இதன் சாதனை ரூ.261.67 கோடியாகும்.

### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்:

### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் (டான்சி) 1991-92-ஆம் ஆண்டுச் சாதனை

டான்சி நிறுவனம் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட 64 சிறுதொழில் பிரிவுகளைத் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு 1965-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

1991-ஆம் ஆண்டு அக்டோபரில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் டான்சியின் செயல்பாட்டையும், பிரச்சினைகளையும் ஆய்வு செய்து, இந்நிறுவனத்தின் செயல் பாட்டை மேம்படுத்த ஆணைகள் பிறப்பித்தார். டான்சி நிறுவனம் கீழ்க்கண்ட முக்கியமான பணி ஆணைகளை நிறைவேற்றியது.

மாநிலம் முழுவதற்கும், ரூ.370 இலட்சம் மதிப்புடைய ஆழ் கிணறு, கைப்பம்புகளும், உதிரிப் பாகங்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு 17,000 வாக்குப் பெட்டிகள் வழங்கப் பட்டன.

நுண்ணலைத் திட்டம், தொலைத் தொடர்புத் துறை இயக்குநருக்கு 2081 மெ.டன் எடையுள்ள துத்தநாகம் பூசப் பட்ட தாங்கு உருக்குக் கோபு ரங்கள் கட்டமைத்து வழங்கப் பட்டன.

மேற்கு இரயில்வே துறைக்கு 330 மெடன் எடையுள்ளகோபுரக் கட்டுமானங்கள் வழங்கப்பட்டன.

சென்னை-பெருநகர் இரயில்வே துறைக்குத் துத்தநாகம் பூசப்பட்ட 532 மெ.டன் எடையுள்ள கட்டு மானங்கள் கட்டமைத்து வழங்கப் பட்டன.

பெங்களூர் ஐ.டி.ஐ. நிறுவனத் திற்கு 45 மெ.டன் எடையுள்ள நுண்ணலைக் கோபுரங்கள் நிறுவப்பட்டன.

ஹெச்.எம்.டி. இண்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலம் அல்ஜீரியா நாட்டிற்கு எழுபத்தெட்டு எச்.எஸ்.30 பவர் ஹாக்சா எந்திரங்களையும், ஐந்து எச்.எஸ்.20 பவர் ஹாக்சா எந்திரங்களையும் ஏற்றுமதி செய்தது.

### 1992-93-ஆம் ஆண்டில் எய்திய சாதனை

அரசு எடுத்த தீவிர நடவடிக்கையினால் டான்சி நிறுவனத்தின் செயல்பாடு மேம் பாடு அடைந்து, 1991-92-இல் ரூ967.21 இலட்சமாக இருந்த இந்நிறுவனத்தின் இழப்பு, ரூ.1992-93-ஆம் ஆண்டில் ரூ.240.12 இலட்சமாகக் குறைந்தது.

அ. சென்னைத் தொலைத் தொடர்பு நுண்ணலைத் திட்டத் துறைக்கு 1360 மெ.டன் எடையுள்ள தாங்கு நுண்ணலைக் கோபுரங்கள் கட்டமைத்து வழங்கப்பட்டன. மேலும் ஆண் டனா பொருத்துச் சாதனங்களும் கம்பங்களும் கட்டமைத்து வழங் கப்பட்டன.

ஆ. வட சென்னை அனல்மின் நிலையத்திற்குக் 1741 மெ.டன் எடையுள்ள உருக்குக் கட்டுமானப் பணிகளைக் கட்டமைத்து வழங்கி நிறுவியது.

இ. தென்னக இரயில்வேக்கு 250 மெ.டன் எடையுள்ள நுண்ண லைக் கோபுரப் பாகங்கள் கட்டமைத்து வழங்கப்பட்டது.

ஈ. தமிழ்நாடு வடிகால் வாரியத்

திற்கு 580 மெ.டன் எடை அளவிற்கு வார்ப்பிரும்புச் சிறப்புப் பாகங்களை வழங்கியது.

மேலும், ரூ.1.21 கோடி மதிப்புடைய தண்ணீர்த் தொட்டிகளையும், அதைத் தாங்கும் உருக்குச் சாதனங்களையும் கட்டமைத்து வழங்கியது.

உ. தமிழ்நாடு முழுவதற்கும் ரூ.4 கோடி மதிப்புடைய ஆழ்கிணறு கைப்பம்புகளையும், உதிரிப் பாகங்களையும் வழங்கியது.

ஊ. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மின்னிணைப்புப் பொருட்கள் வழங்கியது.

எ. ஹெச்.எம்.டி. இண்டர் நேஷனல் நிறுவனத்தின் மூலம் இந்தோனேஷியா, குவையத், கட்டார், உகாண்டா, சவூதி அரேபியா, மலேசியா, நேப்பாளம் போன்ற பல்வேறு நாடுகளுக்குப் பத்து பவர் ஹாக்சா எச்.எஸ்.20 மற்றும் எச்.எஸ்30 எந்திரங்களை ஏற்றுமதி செய்தது. 'யுனிசெப்' நிறுவனத்தின் மூலம் உகாண்டா நாட்டிற்கு ரூ.29 இலட்சம் மதிப்புடைய ஆழ்கிணறுக் கைப்பம்பு உதிரிப் பாகங்களும் கருவிகளும் வழங்கப்பட்டன.

### 1993-94-ஆம் ஆண்டில் எய்திய சாதனை

அ. சென்னை மாநகராட்சிக்கு ரூ.4 கோடி மதிப்புடைய மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள், தெரு விளக்குக் கம்பங்கள், டெஸ்க்குகள் முதலியவையும், ஏனைய சாதனங்களும் வழங்கப்பட்டன,

ஆ. மாவட்ட ஆட்சியருக்கும், குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு ஆழ்கிணறுக் கைப்பம்புகளும், பம்பு உதிரிப் பாகங்களும் வழங்கப்பட்டன.

இ. தமிழ்நாடு மின் வாரியத்திடம் பெற்ற ரூ.950 இலட்சம் மதிப்புடைய 3100 மெ.டன் எடையுள்ள கோபுரப் பாகங்கள் கட்டமைத்து அதில் 2000 டன் துத்தநாகம் பூசப்பட்ட மின் அனுப்புகைக் கோபுரப் பாகங்கள் 1993-94-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

மேலும், மின்னிணைப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன.

ஈ. 'யுனிசெப்' நிறுவனத்திற்கு ரூ.104 இலட்சம் பெறுமானமுள்ள குழாய்களும், உதிரிப்பாகங்களும் வழங்கப்பட்டன.

### தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனம் 'டால்கோ' ரூ.10 கோடி அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், 1983 மார்ச்சில் ஓர் அரசு நிறுவனமாக அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தோல் தொழிலை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

### சிறிய அளவில் தோல் பதனிடுவோருக்கு நிதியுதவி

சிறிய அளவில் தோல் பதனிடுவோருக்கு, நியாய விலையில் இரசாயனப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட பசைப்பொருள் (Wattle extract) ஆகியவை போன்ற பொருட்களை வழங்குவதற்காக திண்டுக்கல், ஈரோடு, பேரணாம்பட்டு, திருச்சி, வாணியம்பாடி, இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் டால்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான பொருட்கள் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் இதன் செயல்பாடு குறித்த விவரங்கள் வருமாறு

| ஆண்டு | விற்பனை<br>ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1991-92 | 86.62 |
| 1992-93 | 239.45 |
| 1993-94 | 257.82 |

### காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறு கைத்திறப் பணியாளர்களுக்கு நிதியுதவி

கைத்திறப் பணியாளர்களுக்கு உதவி புரிவதற்காக, பெரம்பூரில் செயல்பட்டுவரும் கொள்முதல் மையம் கடந்த மூன்றாண்டுகளில் கைத்திறப் பணியாளர்களிடமிருந்து வாங்கிய தோல் பொருட்களில் மதிப்பு விவரங்கள் வருமாறு:

| ஆண்டு | பொருட்களின் மதிப்பு<br>ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1991-92 | 10.19 |
| 1992-93 | 17.68 |
| 1993-94 | 24.88 |

விற்பனைக் காட்சி அறைகள், பொருட்காட்சிகள் ஆகியவற்றில் செய்யப்பட்ட விற்பனை மதிப்பு, நிறுவனங்களுக்குச் செய்யப்பட்ட விற்பனை மதிப்பு ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:

| ஆண்டு | விற்பனை<br>ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1991-92 | 37.05 |
| 1992-93 | 50.77 |
| 1993-94 | 48.26 |

### கழிவு நீரைக் கட்டுப்படுத்துவதில் தோல் பதனிடுத் தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளித்தல்

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரால் தமிழ்நாட்டில் சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்காக 'டால்கோ' உதவியுடன் கழிவுநீர் சுத்திகரிப்புக்கென பொதுவான சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 'டால்கோ' உதவி பெற்ற நிறு

**பகுத்தறிவு**

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்

-தந்தை பெரியார்

வனங்கள் மூலம் வாணியம்பாடி, இராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல், திருச்சி ஆகிய இடங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## இலவசமாகக் காலணிகள் வழங்கும் திட்டம்

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், கிராமப்புறங்களில் பணிக்குச் செல்லும் மகளிருக்கும் இலவசமாகக் காலணி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் மைய அமைப்பாக 'டால்கோ' நியமிக்கப்பட்டுள்ளது. 'டால்கோ' வின் பங்காக 10 இலட்சம் இணை காலணிகளையும், 3 இலட்சம் இணை காலணிகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களையும் 1993-94-ஆம் ஆண்டில் அளித்துள்ளது.

## 'டால்கோ'வின் ஆதாயம் இழப்புக் கணக்கு விவரங்கள்

'டால்கோ' கடந்த மூன்றாண்டுகளில் செய்த விற்பனை ஈட்டிய ஆதாயம் பற்றிய விவரங்கள் வருமாறு:

1991-92-இல் ரூ.993.18 இலட்சமாக இருந்த டால்கோவின் விற்பனை 1992-93-இல் ரூ.1018.88 இலட்சமாக உயர்ந்தது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகத்தின் முக்கியப் பணிகளான அதாவது தொழில் நிதியுதவிக்காக அனுமதித்த தொகை, வழங்கிய தொகை, நிதியுதவி பெற்றவர்களிடமிருந்து வசூலித்தத் தொகை ஆகியவற்றில் காணப்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்கள் வருமாறு:

1991-92-இல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் நிதியுதவியாக அனுமதித்தத் தொகை ரூபாய் 236.09 கோடி இதில் ரூபாய் 161.53 கோடி வழங்கப்பட்டு 110.22 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது. 1993-94-இல் இக்கழகம் அனுமதித்த 312 கோடி ரூபாயில் 198.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, இதில் 187.12 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.

## விற்பனைவரி செலுத்துவோருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அதனிடமிருந்து நிதியுதவி பெறுகின்ற தொழில் நிறுவனங்களுக்கு வட்டியில்லா விற்பனைவரிக் கடனை விற்பனை வரி தள்ளுபடியை விற்பனை வரியைத் தள்ளிவைப்பதற்கான சலுகைகளைப் பயன்படுத்தும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தபடி, ஓட்டல்கள், மருத்துவமனைகள் உட்பட தற்போதுள்ள சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்பிரிவுகளை விரிவுபடுத்த, நவீனப்படுத்த, பணிகளைப் பலதிறப்படுத்த குறைந்த அளவாக 5 இலட்சம் ரூபாயிலிருந்து அதிக அளவாக 250 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி அளிப்பதற்காக, இக்கழகம் ஒப்பந்த உரிமை நிதியுதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1993-94-ஆம் ஆண்டில் நமது அரசு 10 தொழில் நிறுவனங்களுக்கு 440.40 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளித்துள்ளது.

■ எங்கள் பயணம் தொடர்கிறது; பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன. எதிர்ப்பட்ட மிரட்டல்களையும் உருட்டல்களையும் தவிடுபொடியாக்கித் தகர்த்து எறிந்துதான் கழக ஆட்சி மக்களாட்சியாக மலர்ந்திருக்கிறது.



வகையில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு தகுதிச் சான்றிதழை 1.4.91-ஆம் நாளிலிருந்து வழங்க அதிகாரம் பெற்றுள்ளது. இப்பணியில் கடந்த மூன்றாண்டுகால செயல்பாடு பற்றிய விவரங்கள் வருமாறு:

1991-92-இல் இக்கழகம் 67 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.10.90 கோடி தொகையில் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கியது. 1993-94-இல் 132 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 28.71 கோடி தொகையில் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சாதனை படைத்தது.

## செயல்படுத்தப்பட்டு வருகின்ற புதிய திட்டங்கள்

1993 ஜனவரி திங்களில் சட்டமன்றப் பேரவையில் தொழிற்கொள்கை பற்றி உரை நிகழ்த்தியபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் பெறுவோருக்கும் கழகத்திற்குமிடையே தோழமை உறவு நிலவுவதற்கான நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, கடன்பெறுவோர் ஒவ்வொருவருக்கும் கடன் நிருவாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுகிறார். மாதத்திற்கு ஒரு முறையாவது தொழில் நிறுவனத்தைப் பார்வையிட்டு, கழகப் பிரதிநிதியாகச் செயல்பட்டு அவற்றின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதுடன், அத்தொழில் நிறுவனங்களில் எந்த பிரச்சினையும் தொடக்க நிலையில் இருக்கும்போதே கழகத்திற்கு அதுபற்றி எச்சரிக்கை விடுக்கிறார்.

## பட்டு வளர்ச்சித் துறை

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கூடுதல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்காகக் கிராமப் புறங்களில் கிராமத் தொழில்களையும், சிறுதொழில்



களையும் ஊக்குவிப்பதே இந்த அரசின் முக்கியக் கொள்கை யாகும். பின்வரும் தனித் தன்மை களினால் பட்டு வளர்ச்சி மேம் பாடு குறித்து அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது:

1. குறைந்த முதலீடு.

2. அதிக வேலைவாய்ப்பு உண் டாக்கும் திறன்.

3. வருவாயைப் பகிர்ந்தளித்தல்.

4. ஊரக வளர்ச்சி.

5. அதிக அளவில் பெண்களை ஈடுபடுத்துதல்.

6. நகர்புற நாட்டம் குறைக்கப் படுகிறது.

7. அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.

பட்டு வளர்ச்சித் துறையின் நடவடிக்கைகளில் பின்வருவன வும் அடங்கும்:

1. உயர்ரக முசுக்கட்டைச் செடி வகைகளை நடுவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல், அதிக உற்பத்தியின் மூலம் வருவாயை அதிகரித்தல்.

2. முசுக்கட்டைச் சாகுபடி பட்டுப்புழு வளர்ச்சி மற்றும் பட்டு நூல் நூற்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.

3. பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தேவையான சாதனங்களை வாங்குதல் மற்றும் பட்டுப்புழு வளர்க்கும் புழு வளர்ப்பு மனைகளைக் கட்டுதல் ஆகிய வற்றிற்கு உதவி செய்தல்.

4. பட்டுப்புழுக் கூட்டின் உற்பத்தியினை அதிகரிக்க பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உத வியை வழங்குதல், பட்டுப் புழுக் களுக்கு உண்டாகும் நோயைக் கட்டுப்படுத்தி அறுவடை பழு தடைவதைத் தவிர்த்தல்.

5. நல்ல தரம் வாய்ந்த நோயற்ற பட்டுப்புழு முட்டைகளை விநியோகிக்க உதவி செய்தல்.

6. தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் பட்டுநூல் நூற்பதை அதிகரித்தல்.

ஏல முறை விற்பனையை அமல்படுத்துவதன் மூலம் பட்டுப்புழுக் கூடுகள் மற்றும் பட்டு நூல் ஆகியவற்றிற்கு நியாயமான விலை கிடைக்க வழிவகை செய்தல். 1979-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறை தனியாக ஏற்படுத்தப்பட்ட பின்னர், இத்துறையில் சிறந்ததொரு முறையான மற்றும் நிலையான வளர்ச்சியை எய்துவதற்காகப் பல கூடுதல் அடிப்படை வசதிகளான விதைப் பண்ணைகள், பட்டு வித்தகம், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில் நுட்பப் பயிற்சி மையங்கள், பட்டு பரிமாற்றகம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இத்தொழில் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்த கூடுதல் நிதி திரட்டும் பொருட்டு உலக வங்கி, சுவிஸ் மேம்பாட்டு நிறுவனம், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி நிறுவனம், ஃபோர்டு பவுண்டேஷன், பன்னாட்டுத் தொழிலாளர் நல நிறுவனம் போன்ற பல்வேறு வெளி முகவரமைப்புகளிடமிருந்து நிதியுதவி பெற்று பல திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டன. குறிப்பிட்ட பகுதி களிலுள்ள பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொருட்டும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகுதியினருக்கு அதிக வருவாய் ஈட்டித் தரவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டங்கள், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

# வேளாண்மைத் துறையின் வியத்தகு சாதனை!

## மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
## திரு கு.ப. கிருஷ்ணன்

வரலாற்றின் பொன்னேடுகளில் வைர வரிகளாய் மிளிர்ந்து
தொடர்ந்து கொண்டிருக்கிறது,
புதுயுகம் படைக்க வந்த புரட்சித்தலைவி அவர்களது ஆட்சி!
ஒட்டு மொத்த மக்களின் உற்சாகம் ததும்பும் ஆதரவோடு
முடிவின்றித் தொடரவிருக்கும்
புரட்சித்தலைவி அவர்களது ஆட்சியின் முதல்
மூன்றாண்டுகள்
இனிதே நிறைந்திருக்கின்றன.
கால யாத்திரையின் நெடும்பயணத்தில்
'சாதனைகளைப் படைத்தவர்களே நினைவில்
நிறைந்திருப்பவர்' என்பது
வரலாற்று உண்மை மட்டுமல்ல; வாழ்க்கையின்
நிதர்சனமும் ஆகும்!
துறைதோறும், தினந்தோறும், புதிது புதிதாய்-
பெருமை நிறைவாய்ச்-
சாதனைச் சரித்திரம் நிகழ்த்திவரும் புரட்சித்தலைவி
அவர்களது புகழ்
புவியினில் என்றென்றும் பேசப்பட,
இம் முதல் மூன்றாண்டுக் காலத்தில்



வித்தூன்றப்பட்டுள்ளது என்பது
உண்மையன்றோ?
தனித் தனியாய்த்-தீவுகளாய்த்-திட்டங்கள் இருந்து விடாமல்,
ஒட்டுமொத்த மக்கள் நலம்,
உற்பத்திப் பெருக்கம்,
சுயச் சார்பு முதலியன இணைந்த தொலைநோக்கும்,
துல்லியமும்,
செயலாக்கத் திறனும்,
சோர்வுறா உழைப்பும்
புரட்சித்தலைவி அவர்களது ஆட்சியின் மாட்சிக்கு
அடிப்படை.
அதனடிப்படையில்-
சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் சாதனைகளைத்
தமிழகத்தில் நிகழ்த்திவரும்
டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான அரசு
கடந்த மூன்று ஆண்டுகளில் நிகழ்த்தியுள்ள சாதனைகள்
போற்றிப் பெருமைப்படத் தக்கவை.
குறிப்பாக,
வேளாண் துறையில் விளைவித்துள்ள சாதனைகள்

அளப்பரியன.

கூரிய தொலைநோக்கு,

மிகச் சரியான திட்டமிடல்,

உழவர் சமுதாயத்தின்பால் மாறாப் பற்று ஆகியவையே

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

வேளாண் துறையில் விளைவித்துள்ள சாதனைகளுக்கு விதைநெல்லாகும்.

வேளாண் துறையைப் பொறுத்தவரை-

இயற்கைச் சீற்றங்கள்,

இறையாண்மையைக் காக்கத் தவறிய எதிரிகள் கொடுத்த இன்னல்கள்,

அனைத்தையும் கடந்து-

இல்லையென்ற சொல்லைத் தமிழகத்தே இல்லையென்று ஆக்கி-

உணவுப்பொருள் உற்பத்தியில் மாநிலம் உயர்ந்து நிற்பது மகத்தான சாதனை!

1991-ஆம் ஆண்டுக்கு முன்,

60 இலட்சம் மெ.டன் அளவாகத் தேங்கிநின்ற அரிசி உற்பத்தி

70 இலட்சம் என முதல் ஆண்டும், மறு ஆண்டு 74

இலட்சம் எனவும்,

மூன்று ஆண்டுகளில் 84.50 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்து நிற்கிறது.

90.45 இலட்சம் மெ.டன்னாக இருந்த மொத்த உணவு

தானிய உற்பத்தியும்

புரட்சித்தலைவி அவர்களது அரசு தந்த திட்டங்கள்

மற்றும் ஊக்கத்தால்



**☐ காவிரி நதிநீர்ப் பிரச்சினை, தமிழ் நாட்டின் ஒவ்வொரு தனிமனிதனின் பிரச்சினை ஆகும்.**



படிப்படியாக உயர்ந்து,

சாதனை அளவாக

103 இலட்சம் மெ.டன்னாகச் சரித்திரம் படைத்திருக்கிறது.

உற்பத்தி மட்டுமல்லாது, உற்பத்தித் திறனையும் கூட்டி

இந்திய வேளாண் அரங்கில்

தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பது

டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில்தான்!

இந்திய அளவில் அரிசி உற்பத்தித் திறனில் தமிழகம்

'நான்கு' என்ற நிலையிலிருந்து

இரண்டாவது நிலைக்கு உயர்ந்திருப்பது பெருமைக்குரியது.

கரும்பு உற்பத்தித் திறன்,

எண்ணெய்வித்து மற்றும் சிறு தானியங்கள் ஆகியவற்றில்

இந்திய அளவில் முதல் இடத்தில் இருப்பது

எண்ணி எண்ணி மகிழக்கூடியது.

92-93ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட

'எண்ணெய்ப் பனைச் சாகுபடித்' திட்டத்தின் கீழ் இதுவரை

‘காஸ்டாரிக்கா’விலிருந்து 7 இலட்சம் முளைவிட்ட பனங்கன்றுகள்

இறக்குமதி செய்யப்பட்டு,

நமது மாநிலப் பண்ணைகளில் வளர்த்து,

93-94-இல் 1,671 எக்டர் நிலப்பரப்பில்

எண்ணெய்ப்பனைச் சாகுபடி செய்யப்பட்டது.

94-95-இல் 2,000 எக்டர் நிலப்பரப்பில்

சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு

முனைப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக மக்களுக்கும் வேளாண் சமூகத்திற்கும்

டாக்டர் புரட்சித்தலைவியின் அருட்கொடையாகும் இத்திட்டம்.

திட்டங்களும் தொழில்நுட்பங்களும் நிலங்களைச்

சென்றடைய

வேளாண் மகளிர்க்குப் பயிற்சி அளித்தலே

நிலையான பயன்தரும் என்று கருதி,

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

வேளாண்மையோடு, வேளாண் பெண்டிர்

முன்னேற்றத்திற்காக

‘பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தைச்’

செயல்படுத்தி உள்ளார்கள்.

இதில் ஒரு இலட்சம் பண்ணை மகளிர் பயிற்சி

பெறுகின்றார்கள்.

மொத்தம் 28.735 கோடி ரூபாய் செலவில்

செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தினால்

பயன்பெற்ற மகளிர்,

தான் பெற்ற பயிற்சியைப்

பிற பண்ணை மகளிரொடு பகிர்ந்துகொள்ளும் போது

நவீன தொழில்நுட்பங்களும்,

சிறந்த திட்டமிடுதலும்,



சரியான நிர்வாகமும்

வயல் வரை சென்று தமிழகத்தை வளமாக்கும் என்பது திண்ணம்.

இதுவே புரட்சித்தலைவி அவர்களது எண்ணம்!

‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’,

‘ஆளுமைக்கு அடித்தளம் ஆரம்பக் கல்வி’

என்பதனை உணர்ந்த இதயதெய்வம் டாக்டர்

புரட்சித்தலைவி அவர்கள்

பள்ளிச் சிறார்களின் கவனத்தை வேளாண்மையின்பால்

ஈர்க்கவும்,

பசுமையை வளர்க்கவும்,

சுற்றுச் சூழல் காக்கப்படவும்,

‘புரட்சித்தலைவி தென்னை வளர்ப்புத் திட்டத்தை’

92-93-இல் அறிமுகப்படுத்தினார்கள்.

ரூபாய் 15 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ்

96,800 தென்னங்கன்றுகள்

ஆறாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கு

இலவசமாக வழங்கப்பட்டன.

93-94-இல் 1.50 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

94-95-இல் 4,00,000 தென்னங்கன்றுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் ஈராண்டுகளில்

மாணாக்கர்களின் மனதில் மட்டுமல்லாது

தென்னை உற்பத்தியிலும் இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது

உள்ளங்கை நெல்லிக்கனி.

மனங்களோடு நிலங்களையும் பண்படுத்த,

‘நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டு அடங்கல் திட்டம்’ என்ற திட்டத்தின்கீழ்

வ.உ.சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில்

வளம் குன்றிய 17,500 எக்டர் நிலத்தை வளமாக்கும் பணி
ரூபாய் 625 இலட்சம் செலவில்
மூன்று ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இதுபோன்று ரூபாய் 75 இலட்சம் செலவில்
தமிழகத்தின் எட்டு மாவட்டங்களில்
91-92-இல் செயல்படுத்தப்பட்ட ‘கறம்பு நில மேம்பாட்டுத் திட்டம்’
தொடர்ந்து செயலாக்கப்பெற்று
இதுவரை 25,814 எக்டர் நிலப்பரப்பு
சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளது.
இத்தனைத் திட்டங்களும் ஒருபுறம் செயல்பட்டுக் கொண்டிருக்க
புயலும் வெள்ளமும் நம்மை
மறுபுறம் சீண்டிப் பார்த்தன.
1991 நவம்பரில் புயலால் பாதிக்கப்பட்டபோது
0.06 இலட்சம் எக்டர் பரப்பில் இருந்த பயிர்கள்
முற்றிலுமாக அழிந்தன.
1.28 இலட்சம் எக்டர் பரப்பில் இருந்த பயிர்களில்
ஒரு பகுதி சேதமடைந்தது.
உழவர் துயர் கண்ட உன்னதத் தாய்
புரட்சித்தலைவி அவர்கள்
போர்க்கால அடிப்படையில் உழவர்க்கு உதவிடப் பணித்து,
ரூபாய் 9.336 கோடியைத் தாராளமாக ஒதுக்கினார்.
தொடர்ந்து,
1992 நவம்பர் இரண்டாம் வாரத்தில் தாக்கிய புயல் மற்றும் வெள்ளம் காரணமாகக்
கடலோர மாவட்டங்களில் உள்ள
2.3 இலட்சம் எக்டர் பரப்பிலிருந்த பயிர்களுக்குப்
பெருத்த சேதம் விளைந்தது.
இதனால் ஏற்பட்ட இழப்பு
ஈடு செய்யப்பட



தாயுள்ளங்கொண்ட புரட்சித்தலைவி அவர்கள்
ரூபாய் 86.55 இலட்சம் அனுமதித்து
ஏறத்தாழ ஒரு இலட்சம் தமிழக விவசாயிகளின் வயிற்றில்
பால் வார்த்தார்கள்.
இதனைப் போன்றே
1993 நவம்பர் மற்றும் டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் புயலாலும்
2.13 எக்டர் பரப்பு பாதிக்கப்பட்டது.
நிவாரண நடவடிக்கைகளுக்காக ரூபாய் 1,294.272 இலட்சம்
டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால்
அனுமதிக்கப்பட்டதால்,
வீழ்ந்த உழவர்தம் விழிநீர்த் துடைக்கப்பட்டு
வேளாண் பணிகள் மீண்டும் விரைந்து நடக்க
வழிவகை செய்யப்பட்டது.
வேளாண் பயிர்கள் விளைக்கும் விளைவோடு
தோட்டக்கலைப் பயிர்களும் சேர்ந்தால்
சேரா வளங்கள் நாட்டில் இல்லை என்றுணர்ந்த
டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்
தோட்டக்கலை மேம்பாட்டிற்குத்
தனிக் கவனம் செலுத்தினார்கள்.
பசுமை நிறைக்க
பாரினில் தமிழகம் சிறக்க
தரிசு நில மேம்பாடு தவிர்க்க இயலாதது என்பதால்,
‘தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்’
தமிழகத்தில் தனிச் சிறப்போடு செயல்படுத்தப்பட்டு,
தோட்டக்கலைத் தரிசு நிலங்கள்
பசுமை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது.
விளைபொருள் உற்பத்தியில் சாதனை புரியப்பட்டது.
1991-92-ஆம் ஆண்டில் 31.5 இலட்சம் மெ.டன்னாக இருந்த
பழங்கள் உற்பத்தி

93-94-இல் 35 இலட்சம் மெ.டன்னாக உயர்த்தப்பட்டது.
1991-92-இல் 74.27 இலட்சம் மெ.டன்னாக இருந்த
மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி
93-94இல் 77.68 இலட்சம் மெ.டன்னாக உயர்த்தப்பட்டது.
சாகுபடிப் பரப்பும் கணிசமாக உயர்ந்தது.
களையிழந்த கோயில்களைக் கலை மிளரச் செய்த
டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்
ஆகம நியமங்களோடு, ஆலய விருட்சங்களும் செழிக்க
வேண்டும் என விரும்பி,
திருக்கோயில் நந்தவனம் அமைக்கும் திட்டத்தைச்
செயல்படுத்தினார்கள்.
திட்டத் துவக்கத்தில் இருந்து
தேர்ந்தெடுக்கப்பட்ட 66 திருத்தலங்களில்
பெரும்பான்மையான தலங்களில்
நந்தவனப் பணி முடியப்பெற்று
அழகுக்கு அழகு சேர்த்துக் கொண்டிருக்கின்றன.
மற்ற திருத்தலங்களிலும் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது.
நிலத்தைப் பண்படுத்தல், மனத்தைத் திடப்படுத்தல்
ஆகியவற்றோடு
நீர் நிர்வாகம் சிறப்பாக இருந்தால்தான்
வேளாண்மை சிறக்கும் என்பதால்
வேளாண் பொறியியல் துறையின் மூலமாக அரசு
பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.
சிறப்புத் தன்னிறைவு திட்டம்,
ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம்
உழவர்களின் ஒத்துழைப்போடு
நீர் நிர்வாகப் பணிகள்,
சிக்கனமாக நீரைப் பயன்படுத்தும் திட்டங்கள்
செயலாக்கம் பெற்று



சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளன.
இதனைக் கருத்திற்கொண்டு,
நுண் பாசன முறைக்கு முக்கியத்துவம் அளித்து
சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக
92-93-ஆம் ஆண்டு ரூபாய் 187.50 இலட்சம்
உதவித்தொகையாக
வழங்கப்பட்டது.
இதனால் 7,500 எக்டர் பரப்பு பாசன வசதி பெற்றது.
93-94-இல் ரூபாய் 195 இலட்சம் உதவித்தொகை
வழங்கப்பட்டு
தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் விளைவிக்க

ஏதுவாகி
1,325 எக்டர் பயன்பெற்றது.
அரசு வழங்கும் திட்டங்கள், நிதியுதவிகள்,
இடுபொருட்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள்
மற்றும் விளைபொருட்களை நெறிப்படுத்தி
உழவர்களிடம் முறையாகப் போய்ச் சேர
அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது.
இன்பத் தமிழ்நாட்டில்
இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களது
முதல் மூன்றாண்டு ஆட்சியிலே
முத்துக்கள் முத்தாய்ப்புச் சாதனைகள்
ஒளிர்கின்றன வளர்கின்றன.
உழவர், விற்பனையாளர், வேளாண் அலுவலர்கள் என
எல்லாத் தரப்பும் மகிழ்வும் பயனும் பெறத்தக்க





எண்ணற்ற திட்டங்களும் செயல்பாடுகளும்
நாளும் பூத்து நல்லாட்சி மணக்கிறது!
வேளாண் துறையில் முதன்மை!
வீறுகொண்ட தமிழகம்
வேறு பல துறைகளிலும் சிறப்புறச் சீரிய தலைமை!
மூன்றாண்டுகளிலேயே பூவுலகு போற்றும்
சாதனைச் சிகரங்களை
எட்டியுள்ளது புரட்சித்தலைவி அவர்களது ஆட்சி.
வளமான தமிழகம் உருவாக
வாஞ்சைமிகு நம் முதல்வர் அவர்களின் சீரிய தலைமையும்
திறமிகு வழிகாட்டுதலும் தொடர
வான், நிலம், வையகத்து மக்கள் என
யாவருமே விழைகின்றார்.
வளர்க நல்லாட்சி!
ஓங்குக புரட்சித்தலைவி அவர்கள் புகழ்!!

# பால்வளத் துறையின் பாங்கான பணிகள்

## மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்
## திரு டி. ஜனார்த்தனன்

இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் கடந்த மூன்று ஆண்டு ஆட்சியில் பல துறைகளிலும் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கால்நடைப் பராமரிப்புத்துறை, பால்வளத் துறை மற்றும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகள் இந்நாட்டின் கவனத்தை ஈர்க்கும் சாதனைகள் பல படைத்துள்ளன. அவற்றில் சிலவற்றைச் சுருக்கமாக இங்கு குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் 2254 ஆட்டு அலகுகள் வாங்க ரூ.120.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் பசுங் கன்றுகள் வாங்க ரூ.160.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீலகிரி-மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் மருத்துவப் பரிசோதனை நிலையம் மற்றும் தேவையான மருந்து ஆகியவை வழங்க ரூ.22.17 இலட்சம் கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கால்நடைகளின் அபி விருத்திக்காக 123 முரா பொலி எருமைகளும் 124 முரா பொலி காளைகளும் வாங்க ரூ.29 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்திக்குத் தீவன அபிவிருத்தி இன்றியமையாதது. கடந்த மூன்று ஆண்டு



களில் ரூ.1.80 இலட்சத்திற்குத் தீவன விதைகள் வாங்கப்பட்டுள்ளன. இதுதவிர ஓசூர் கால்நடைப் பண்ணையில் தீவனத் தயாரிப்புகளுக்கு ரூ.8 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மலைப்பகுதி விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக, 335 கறவை மாடுகள் மற்றும் 374 ஆட்டு அலகுகள் வாங்க ரூ.63.93 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியில் கால்நடைப் பராமரிப்புப் பணி முன்னேற்றத்திற்காக இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் நோய்ப் புலனாய்வு மையத்திற்காக ரூ.13.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஓசூர் கால்நடைப் பண்ணையில் காங்கேயம் இனக் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. உறைவிந்து மூலம் செயற்கைக் கருத்தறித்தல் முறையைப் பயன்படுத்தி கடந்த மூன்று ஆண்டுகளில் 20 இலட்சம் கன்றுகள் ஈன்றப்பட்டுள்ளன.

வெறி நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மையங்களில் 28,076 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குக் கால்நடை மருத்துவ வசதி கிடைப்பதற்காக, தமிழ்நாட்டில் 41 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. 20 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கால்நடை நோய்ப் புலனாய்வுக்காக 3 கூடுதல் பரிசோதனை மையங்களும், கோழி நோய்ப் புலனாய்வுக்காக, சேலம் மாவட்டம் ஆண்டலூர் கேட் என்னுமிடத்தில் ஒரு பரிசோதனை மையமும் திறக்கபட்டுள்ளன. சைதாப்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனை பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கால்நடைகளின் தொற்று நோய்த் தடுப்புக்காக 7.10 இலட்சம் மருந்து ஊசிகள் போடப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்படும் தடுப்பு மருந்தூசிகளைப் பல்வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல குளிரூட்டு வேன் ஒன்று ரூ.14 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வீடு தேடிச் சென்று கால்நடைகளுக்கு மருத்துவ வசதியளிக்க, தமிழ்நாட்டில் 386 நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் ரூ.1.25 கோடி செலவில் இயங்கி வருகின்றன.

1993 ஆம் ஆண்டு கால்நடைப் பராமரிப்புத்துறை நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அகில இந்தியக் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சி 21.9.93 முதல் 27.9.93 வரை நடத்தப் பட்டன. கண்காட்சித் தொடக்க விழாவில் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பறவைகளுக்குத் தொற்று நோய்த் தடுப்பு ஊசி மருந்தை வெளியிட்டார்கள்.

இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் வெளியிடப் பட்ட கோழியினத் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 42,000 தடுப்பூசி அலகுகள் தயாரிக்கப்பட்டு கோழி களுக்குப் போடப்பட்டது.

### பால்வளத்துறை

இத்துறை, அத்துறை என்று இல்லாது எத்துறையிலும் தனது பொன் முத்திரை பதித்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவியின் ஆட்சியிலே பால்வளத்துறை புரிந்திட்ட சாதனைகளைப் பட்டியல் போட்டுச் சொல்லலாம்.

எத்திசையிலும் புகழ் பரப்பி, ஏற்றமிகு ஆட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆசிகளோடு இன்றைக்கு ஏறத்தாழ 21 இலட்சம் விவசாயப் பெருமக்கள் பால் பண்ணைத் துறையில் பயன்பெறும் வகையில் ஈடுபட்டு வருகிறார்கள். பாலுக்குத் தட்டுப்பாடு என்பதே பழங்கதை ஆகிப் போய்விட்டது. ஒரு பக்கம் உற்பத்தியாளர் மனம் மகிழும் வண்ணமும், இன்னொரு பக்கம் பால் நுகர்வோர் முழு மன நிறைவு அடையவும் பால் பெருக்கத் திட்டங்கள் தமிழ்நாட்டில் எல் லோரும் பாராட்டும் வண்ணம் இனிதே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### பால் கொள்முதல்

1993-94 ஆம் ஆண்டு வாக்கில் பால் கொள்முதலில் ஒரு உத் வேகம் உண்டாயிற்று. 1991-92-இல் பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு



11.36 இலட்சம் லிட்டர் ஆகவும் 1992-93 ஆம் ஆண்டு நாள் ஒன் றுக்கு 11.83 இலட்சம் லிட்டர் ஆகவும் உயர்ந்தது. புரட்சித் தலைவியின் வழிகாட்டுதலோடு கிராமப் புறங்களிலே விரிவான முறையில் பணிகள் மேற் கொள்ளப்பட்டும் உற்பத்தியாளர் மனதிலே நம்பிக்கை தோற்று வித்தும், பால் கொள்முதல் பணப் பட்டுவாடாவை விரைவுபடுத்தியும், நல்ல கொள்முதல் விலையைக் கொடுத்தும், புதிய கால்நடைகளை இத்துறையில் மேலும் வருவதற்கு ஏற்பாடு செய்தும், பால் பெருக்குத் துறை வலிமைப்படுத்தப்பட்டு கூட்டு றவுப் பால் பண்ணைத் துறையின் கொள்முதல் 1993-94-ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 14.34 இலட்சம் லிட்டராக உயர்ந்தது. தமிழகத்தின் வரலாற்றிலேயே இல்லாத வகை யில் இன்று பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு 17 இலட்சம் லிட்டராக உயர்ந்து உள்ளது என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஒப்புயர்வற்ற ஆட்சித் திறமைக்குச் சான்றாக அமைகிறது.

### பால் விற்பனை

பால் பெருக்குப் பணியில் ஏற்பட்ட சிறப்பான முன்னேற்றம் காரணமாக விற்பனைத் துறையிலும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் ஆட்சியிலே புதிய சாத னையை நிகழ்த்தி வருகிறது. 1992-93 ஆம் ஆண்டில் சராசரி விற்பனை நாள் ஒன்றுக்கு 12.31 இலட்சம் லிட்டராக இருந்தது. இதை இந்த ஆண்டு சராசரி நாள் ஒன்றுக்கு 12.73 இலட்சம் லிட்டராக விரிவடைந்து இருக் கிறது. பால் விற்பனை இன்றைய தேதியில் நாள் ஒன்றுக்கு 13.36 இலட்சம் ஆக இருக்கிறது.

### கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலை

பால் உற்பத்திக்கு நல்ல கொள்முதல் விலை தேவை என்பதை உணர்ந்த இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் 1.5.92 மற்றும் 1.5.93 முதல் பால் கொள்முதல் விலையை உயர்த்தி பால் உற்பத்தியைப் பெருக்க விவ சாயிகளுக்கு ஊக்கம் அளித் தார்கள். நகர்ப்புற மக்களின் நலன்களை மனதில் கொண்டு இந்த அரசு கொள்முதல் விலையை இரண்டு முறை உயர்த்தியும் விற்பனை விலையை ஒரு முறைதான் 1.7.93 முதல் உயர்த்தியது. பாலிதின் பைகளில் லிட்டருக்கு ரூ.7 ஆகவும், தானியங்கி விற்பனை நிலையங் களில் விற்பனை செய்யப்படும் பால் லிட்டர் ரூ.7.50 ஆகவும் இன்று விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், பால் விற்பனை விலை இன்றைக்கும் தமிழ் நாட்டில் மிகக் குறைவு என்பது குறிப்பிடத் தக்கது.

### பால் பொருட்கள்

ஆவின் பால் பொருட்கள் விற்பனை புது டெல்லியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆமதாபாத், டில்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், ஐதராபாத், ஜோத்பூர் மற்றும் அந்தமான், போர்ட்பிளேயர் ஆகிய இடங் களில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய முகவர்கள் நியமிக்கப்பட்டனர். ஆவின் பால் பொருட்களுக்குத் தனி மதிப்பும் வரவேற்பும் எங்கும் தரப் படுகின்றன.

### மூன்றாவது பால் பெருக்குத் திட்டம்

ரூபாய் 88.25 கோடி மூல தனத்தில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, இது தமிழ்நாடு எங்கிலும் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் கூட்டுறவுத் துறையில் புதிய கால்நடைகளைக் கொணரவும், புதிய கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கவும் பால்

குளிரூட்டும் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகளைப் பெருக்கவும், சென்னை மற்றும் மாவட்டங்களில் பால் விற்பனையை வலுவாக்கவும் வகை செய்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பதன ஆலை ஒன்று 24.08 கோடி மூலதனத்தில் உருவாகி வருகிறது.

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் நாள் ஒன்றுக்கு 30 டன் பால் பொடி தயாரிக்கும் ஆலை ஒன்று ரூ.9 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த ஜூலை 1993 முதல் செயல்படத் தொடங்கி உள்ளது. பால் குளிரூட்டும் நிலையமும் அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையமும் விரிவாக்கப்பட்டுள்ளன. பால் பதன ஆலையின் திறன் 1 இலட்சம் லிட்டரிலிருந்து 1.50 இலட்சம் லிட்டர் கொண்டதாக உயர்த்தப்பட்டுள்ளது.

திருச்சியில் நாள் ஒன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் பக்குவப்படுத்தும் பால் பதன ஆலை ஒன்று துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. விழுப்புரத்தில் உள்ள பால் பண்ணை நாள் ஒன்றுக்கு 0.50 இலட்சம் லிட்டர் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டு ஏப்ரல் 1994 முதல் செயல்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் குளிரூட்டும் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்று செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் உள்ள சானூரிலும், மற்றொன்று வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள கோடக்கல்லிலும் உருவாகி வருகிறது. மூன்றாவது பால் பெருக்குத் திட்ட முடிவில் இப்போது இருக்கும் பால் பக்குவப்படுத்தும் வசதிகள் நாள் ஒன்றுக்கு 16.88 இலட்சம் லிட்டரில் இருந்து 26.87 இலட்சம் லிட்டராக உயர இருக்கிறது.

அதேபோல் குளிரூட்டும் வசதிகள் நாள் ஒன்றுக்கு 7.34 இலட்சம் லிட்டரிலிருந்து 11.06 இலட்சம் லிட்டராக உயர இருக்கிறது.



பால் பெருக்குத் திட்டம் அமலில் இல்லாத திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராசர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டங்களின் கீழ் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் ஆக திருநெல்வேலியில் பண்ணை விரிவாக்கம் செய்யப்படுகிறது. மேலும், ஸ்ரீவில்லிப்புத்தூரில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் பக்குவப்படுத்தும் திறன் கொண்ட பதன ஆலை ஒன்று அமைக்கப்பட உள்ளது.

பால் உற்பத்தியில் கடந்த மூன்று ஆண்டுகளில் திருப்திகரமான முன்னேற்றம் கண்டு, பால் பெருக்குப் பணிகள் தெளிவான இலக்கை நோக்கிச் செல்கின்றன. மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் முடிவில், தமிழகம் பால் பெருக்குத் துறையில் மேலும் புதிய கட்டத்தை அடையும் என பெரிதும் நம்புகிறோம். இதுவரை நட்டத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம் இவ்வாண்டு 6 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது, நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் தான் என்பதை எண்ணி நாம் பெருமைப்படுகிறோம்.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுச் சாதனைகள்

கல்வி, ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை நன்கு விளக்கமாகப் பரப்பி அதன் மூலம் கால்நடை, கோழியினம் மற்றும் மீன்வளத் துறைகளில் உற்பத்தியை அதிகரித்து, மக்களின் ஊட்டச் சத்து உணவுகளைப் பூர்த்தி செய்யவும், அவற்றிலிருந்து பெறும் வருவாயை அதிகரித்து, உழவர்களை மேம்பாடு அடையச் செய்வதுடன், தமிழ்நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தவும், தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.

இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மூன்று கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவை தவிர நிறைய ஆராய்ச்சி நிலையங்கள், பால் பண்ணைகள், இனப்பெருக்க ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகம், கல்வி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் மிகவும் தீவிரம் காட்டி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடம், நூலகம், ஆய்வகம் ஆகியவை ரூ.2.70 கோடி செலவில் கட்ட, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நிறைவேறி வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய வழி காட்டுதலுடன் கால்நடைப் பராமரிப்புத்துறை, பால்வளத் துறை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் திட்டங்கள் பலவும் துரிதமாக நிறைவேற்றப்பட்டு தமிழகம் பெருமைமிகு பீடுநடை போடுவதைக் காண்கிறோம்.



ஆண்டுகள் மூன்றில்
ஆயிரம் ஆயிரம்
சாதனை படைத்துச்
சமூக உரிமை காக்கும்
இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களின்
பொற்கால ஆட்சியில்
தொடர்ந்து புதுப்புதுச்
சகாப்தம் படைப்போம்!

–ஜே. பீர்மைதீன்
உறுப்பினர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.



69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.



# படமும் செய்தியும்

69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பல்வேறு கட்சிக் குழுவினருடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்தார்.



# படமும் செய்தியும்

தமிழ்நாட்டில், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 69 சதம் இடஒதுக்கீடு தொடரவேண்டும்; இதுபற்றிய தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையிலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூகநீதி கிடைப்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை என்பதை மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற வகையிலும் 17.6.94 வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நாடெங்கும் முழு கடையடைப்பு பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ளுவது என்று தமிழ்நாடு அரசு சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். அதன்பேரில் நடைபெற்ற 'பந்த்' நாளன்று காணப்பட்ட சென்னை மாநகரக் காட்சிகளின் புகைப்படங்களே இங்கே இடம்பெற்றுள்ளன.




M.A.Jacob & co.
Unitex





# வணிகவரித்துறையின் மூன்று ஆண்டுச் சாதனைகள்

## மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி



வண்ணத்தில், எழுத்தில், சிந்தனையில் புதிய புரட்சிகரமான திட்டங்கள் தெளிவாக்கிடும் வல்லமை படைத்தவர் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அரசின் வருமானத்தின் 'ஊற்றுக்கண்' வணிகவரித் துறையாகும். இத்துறை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் நிருவாகத்தின் கீழ் இருந்தபொழுது புதிய பொலிவும், செயல் உத்வேகமும் பெற்றது. மக்கள் நலம், வறியோர், எளியோர் வாழ்வு ஏற்றம் இவை நம் புரட்சித் தலைவியின் இலட்சியங்கள் ஆகும்.

இந்நலத் திட்டங்களை நிறைவேற்ற நிதி தேவை. அரசின் வருவாயைப் பெருக்குவதில் வணிகவரித்துறை கடந்த மூன்று ஆண்டுகளாகச் செய்து வரும் சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1992- 93 ஆம் ஆண்டுநிதிநிலை அறிக்கையில், குங்குமம், கண்மை, கோதுமை, கணிப்பொறி சாஃப்ட்வேர், தங்கத்தாலி, (இணைப்புகளுடன் எட்டு கிராமிற்கு மிகாமல்) போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மேலும், அதே நிதியாண்டில், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிக்குறைப்புச் செய்யப்பட்டதும் குறிப்பிடத் தக்கது:

நெய் மற்றும் பால் பொருட்கள் (வாணிபக் குறியீட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு இடாதது). குச்சிக்கிழங்கு, சிப்சுகள், மாவு, சேமியா, போலி நகைகள், லாமினேட் செய்யப் பட்ட சாக்குப் பைகள், சில மளிகைப் பொருட்கள், வாடகைச் சீருந்து, பதனிடப்பட்ட தோல் உரிவைகள், வெந்தியம், கிராம்பு முதலியன. தமிழ்நாடு ஜாரி நிறுவனத்திலிருந்து விற்கப்படும் ஜாரிகளுக்குக் கொள்முதல் வரி நீக்கமும் செய்யப்பட்டுள்ளது.

### 1992-93-இல் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

விருதுநகர் வணிகவரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு, புதிதாக சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையரின் தலைமையில் சிவகாசி வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னை செயலாக்கப் பிரிவில் சுற்றும் படைகளைப் பலப் படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களும் ஐந்து புதிய உதவி வணிகவரி அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப் பட்டன.

கோவை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு) வணிகவரி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக உதவி ஆணையரின் தலைமையில் ஒரு வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. வணிகவரி மாவட்டங்கள் கோவை சரகம் 1 (தெற்கு) கோவை சரகம் 2 (வடக்கு), கோவை 3 (புதியது) எனப் பெயரிடப்பட்டது.

வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களைப் பலப்படுத்தும் நோக்குடன் துணை வணிகவரி அலுவலர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த பத்து வரிவிதிப்பு வட்ட அலுவல கங்களுக்கு, பத்து வணிகவரி அலுவலர் பணியிடங்கள் வழங்கப் பட்டு அவை வணிகவரி அலு வலர் அலுவலகங்களாக உயர்த்தப் பட்டன.

மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிப்பதிவைச் சீர்படுத்தி, மேல்முறையீடுகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் சென்னை யில் கூடுதலாக ஒரு மேல்முறை யீட்டு உதவி ஆணையர் பணி யிடம் தோற்றுவிக்கப்பட்டது.

### 1993-94-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1993- 94 ஆம் ஆண்டு அறிக்கை 12.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டதில் விற்பனை வரிவிதிப்பதில் கீழ்க்கண்ட வரிக் குறைப்பு/சலுகைகளை அரசு

அறிவித்துள்ளது:

முன்னர் அமலில் இருந்த 17 வரிவிகிதங்கள், 9 வரிவிகிதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருட்கள் 5 வரி விகிதங்களில் கொண்டுவரப் பட்டன. வரிவிகித வாரியாகப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டன.

சாமான்ய மக்களால் பயன் படுத்தப்படும் பெரும்பான்மையான பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, காப்பிக் கொட்டை, மண்ணெண்ணெய், தாவர எண்ணெய்கள், மஞ்சள், மிளகாய், தனியா, சிகைக்காய், புளி, மிளகு, வெல்லம், கோதுமைப் பொருட்கள் கையினால் தயாரிக்கப்பட்ட சோப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் குறைக்கப் பட்டுள்ளன.

இதே போன்று மருந்துவகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், உலர் மின்கலங்கள் ஆகிய உபயோகப் பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளன.

தொழில்துறைப் பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கச்சா திரைப்படச்சுருள், எலக்ட்ரோட்ஸ், மற்றும் உருளைகள் மீதான விற்பனை வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளன

ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனைத் தொகை இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 60,000 வணிகர்களுக்கும் மேலாகப் பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, ஒரு சில தனியே குறிப்பிட்ட இனங்களைத் தவிர துணைப் பொருட்கள், உதிரிகள், கூட்டு உறுப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதமும், அவற்றின் மூலப் பொருட்களுக்கான வரி விகிதத்திற்கு இணையாக அமைத்திட வழிவகை செய்யப் பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் ஒருசில பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள் தவிர (எரிசாராயம், நாப்தா, மினரல் ஆயில், மசகு எண்ணெய், (கிரீஸ்) அனைத்து வாயு (கேஸ்) உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவைப்பட்ட அனைத்து மூலப் பொருட்களுக்கும் பிரிவு 3(3)ன் கீழ் விதிக்கப்படும் 3 சதவிகிதச் சலுகை வரி, விற்பனைப் பொருட்களுக்கான பேக்கிங் பொருட்கள், பெயர் வில்லைகள் மற்றும் பயன்படு பொருட்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

பணி ஒப்பந்தங்கள் மற்றும் குத்தகை மீதான வ்ரிவிதிப்பு தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத் தீர்ப்புக் கிணங்க வரிவிதிக்கும் முறை மாற்றியமைக்கப்படுகிறது. ஏற்கெனவே, வரிவிகித்தகப்பட்ட பொருட்கள் மீது மீண்டும் வரி விதிக்கப்படமாட்டாது. மேலும், கட்டடப்பணி ஒப்பந்ததாரர் களுக்கு இணக்க முறையில் இரண்டு சதவிகித வரி செலுத்தும் முறை அமலாக்கப்பட்டுள்ளது.

சுயவரிவிதிப்புமுறை 68,000 வணிகர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரூபாய் 75,000 வரை விற்பனைத் தொகையுள்ள அனைத்து வணிக வரிகளுக்கும், வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1992-93ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட வரித்தொகையான ரூ.3,016.89 கோடி ரூபாயை விட, கடந்த 1993-94ஆம் நிதியாண்டில் 382.40 கோடி ரூபாய் அதிகமாக, அதாவது ரூ.3,399.29 கோடி ரூபாய் வசூல் செய்து இத்துறை சாதனை படைத்துள்ளது.

வணிகவரித்துறையின் பணியினை மேம்படுத்தும் வகையில் 1993-94ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் ஆவாரம்பாளையம் மற்றும் சேலம் கோட்டத்தில் அரிசிப்பாளையம் ஆகிய இரண்டு புதிய வரிவிதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சென்னையில் புதிய வணிகவரி சரகம், அதாவது 11-வது சரகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விற்பனைவரி மேல்முறையீட்டு வழக்குகளை முடிக்கும் பணியினைத் துரிதப்படுத்தும் வகையில் இரண்டு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் பதவியினை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.

செயலாக்கப் பிரிவின் பணியினை மேம்படுத்தும் வகையில் 1993-94ஆம் ஆண்டில் கனியூர் (கருமத்தப்பட்டி) வெளிவழி மற்றும் பள்ளிபாளையம் ஆகிய இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து பாண்டிச்சேரி மற்றும் காரைக் காலுக்கும், மேலும் அந்த மாநிலத்



திலிருந்து தமிழ்நாட்டிற்கும் எடுத்துச் செல்லப்படும் பொருட்களைத் தணிக்கை செய்வதற்காகப் பாண்டிச்சேரியைச் சுற்றி 8 சோதனைச் சாவடிகளும், மற்றும் காரைக்காலைச் சுற்றி 3 சோதனைச் சாவடிகளும் அமைத்திட அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. இது செயலாக்கப் பிரிவின் பணியினைத் துரிதப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 1993-94ஆம் ஆண்டில் திருவள்ளூர், பூவிருந்தவல்லி, செங்கை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட கூடுதல் சுழற்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வணிகவரித்துறை அலுவலகங்களை அரசின் சொந்தக் கட்டடங்களில் அமர்த்தி பணியின் தொடர்ச்சியாக வாணியம்பாடியிலும், ஆரணியிலும் உள்ள வணிகவரி கட்டடங்களுக்குத் தலா ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டவும், பன்னாரியில் உள்ள சோதனைச் சாவடிக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டடம் கட்டவும் 1993-இல் அனுமதி அளிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

காலந்தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்பட, பல்வேறு விற்பனை வரிச் சலுகைகள் தொழிலகங்களுக்கு இவ்வரசு வழங்கி வருவது தெரிந்ததே. இவ்வகையில், 1993-94ஆம் ஆண்டில் ரூ.85.76 கோடி வரியினைக் காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகையாகத் தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காலந்தள்ளி வரிசெலுத்தும் திட்டத்தின் கீழ் தொழிலகங்கள் ஒதுக்கி வைக்கும் வரித்தொகையினைத் தொழிலகங்களின் வருமானமாகக் கணக்கில் கொண்டு, வருமான வரியினர் வரிவிதிக்க முயற்சித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மக்கள் அரசு அவ்வகைத் தொகை வரியாகச் செலுத்தப்பட்டதாகக் கருதி, அதைத் தொழிலகங்களுக்குக் கடனாக அளித்ததாகக் கொள்ளும் வகையில் ஆணை பிறப்பித்து, மேற்படி தொகையின் மீது வருமான வரி விதிப்பைத் தடுத்து, பல நலிந்த தொழிலகங்களைக் காத்து வருகிறது.

1994-95ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சில பொருட்களுக்கு வரிவிதித்து, சட்டப் பேரவையில், இல்வரசு அறிவித்திருந்தாலும், மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும்-அதைக் கருத்திற் கொள்ளாமல் பல பொருட்களுக்குப் பூரண வரிவிலக்கு அறிவித்துள்ளது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் கீழமைந்த மக்களரசு தான்.

உதாரணமாகப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள், தென்னங்கீற்று, விறகு போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வணிகர் நல வாரியம்

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். இவ்வாரியத்தின் மூலம் நலிவுற்ற வணிகர்களின் குடும்பத்திற்கு இவ்வரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. உதாரணமாக, வணிகர்களின் குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு, இவ்வாரியம் செயல்படுத்தும் 'குடும்ப நலத் திட்டத்தின்' மூலம் வழங்கப்படும் உதவித் தொகையான ரூ.5,000த்தை ரூ.10,000மாக உயர்த்தி உள்ளது. மேலும், நலிவுற்ற வணிகர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகையினை ரூ.1,500லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி வணிகப் பெருமக்களின் குழந்தைகளின் வாழ்வில் கல்வி ஒளி ஏற்றி வைத்துள்ள பெருமை இவ்வரசையே சாரும்.

## கணிப்பொறி மையம்

வணிகவரித்துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும், நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள, கணிப்பொறி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. உயர்மட்ட விற்பனைவரிச் சீராய்வுக்குழு தனது அறிக்கையில் அதிவேகமாக வளர்ந்துவரும் வியாபாரத் துறைக்கு ஈடுகொடுக்கவும், பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்புச் செய்வோரை உறுதியுடன் சமாளிக்கவும், காலதாமதம் செய்யாமல் வணிகவரிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கும் முறையைக் கணிப்பொறி மயமாக்குதல் மூலம் செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. அதனடிப்படையில் தற்போதுள்ள கணிப்பொறி மையத்தின் அமைப்பை மேம்படுத்துவதற்காக ரூபாய் 35 இலட்சங்கள் அனுமதித்து, துறையின் வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது இவ்வரசு. புள்ளி விவரத்தொகுப்பு மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தும் முறையைப் படிப்படியாகப் பரவலாக்கும் பொருட்டு, முதல் கட்டமாகக் கோவை, திருச்சி மற்றும் மதுரைக் கோட்டங்களில் கணிப்பொறிகள் அமைக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**☐ சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல், தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும்.**



# தொழில் துறையில் அரசின் சாதனைகள்


## மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
## திரு எம். சின்னசாமி




**மா**ண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்துவரும் ஆக்கமும், ஊக்கமும் தொழில் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இந்தியத் தொழில் துறை வரைபடத்தில் தமிழகம் தனிப்பெரும் இடத்தைப்பெற கடந்த 3 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முயற்சிகள் புரட்சித்தலைவி அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல்களில் 1991 ஆம் ஆண்டானது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. நிதி, வர்த்தகம் மற்றும் தொழில் ஆகியவற்றின் கொள்கைகளை மறு ஆய்வு செய்யும் வகையில் ஒரு முயற்சி நாட்டின் வெவ்வேறு பொருளாதார மண்டலங்களில் மேற்கொள்ளப் பட்டது. எனவே, நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும், நிதி ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு தொழில் துறையின் வேகமான வளர்ச்சிக்கான புதுமையான கொள்கைகளை உருவாக்குவது இந்த அரசு ஆட்சி அமைக்கும் தருணத்தில் முக்கியப் பணியாக இருந்தது.

1992 ஜனவரியில் புதிய தொழில் கொள்கை அறிவிக்கப் பட்டது. புதிய தொழில் கொள்கையின் ஒரு பகுதியாக புதிய தொழில்கள் தொடங்குவதற்கும், தற்போதுள்ள தொழில்களை விரிவாக்கம் செய்வதற்கும் பயனுடைய ஊக்குதவித் தொகுப்புத் திட்டம் அளிக்கப் பட்டுள்ளது. மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்குச் சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதையும் அரசால் வழங்கப்படும் பல்வேறு ஊக்குதவிகளைப் பரவலாக விளம்பரப்படுத்துவது மட்டுமின்றி அச்சலுகைகள் தொழில் பிரிவுகளுக்கு விரைவாக அடைவதை உறுதி செய்தவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

### தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாடு

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) இராணிப்பேட்டை, ஒசூர், கும்மிடிப்பூண்டி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களை ஏற்கெனவே வெற்றிகரமாக அமைத்துள்ளது. மேலும் கும்மிடிப்பூண்டி, கடலூர் மற்றும் ஒசூரிலுள்ள தொழில் வளாகங்களை விரிவாக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

புதிய தொழில் கொள்கைக் கிணங்க தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டில் கவனம் செலுத்த, தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) என்ற புதிய நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. பெரியார் மாவட்டம் பெருந்துறையில் ஒன்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கைகொண்டானில் ஒன்றுமாக இரு புதிய வளர்ச்சி மையங்களை நிறுவும் பணியை மத்திய அரசு பொறுப்பேற்குத் திட்டத்தின் கீழ் 'டாசிட்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது. முக்கிய ஏற்றுமதி நகரமாகிய திருப்பூரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அவற்றைத் தரம் மேம்படுத்தும் திட்டமொன்றையும் 'டாசிட்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது. டாசிட் நிறுவனம் தருமபுரி மாவட்டம் பர்கூரில் வளர்ச்சி மையம் அமைக்கும் திட்டத்தையும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையில் வேளாண்மை

சார்ந்த தொழில் வளாகத்தை உருவாக்கும் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது. மேலும் சென்னைக்கு அருகில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய அளவிலான ஒரு புதிய வளர்ச்சி மையத்தை அமைக்க உத்தேசித் துள்ளது.

### மெகா முதலீடுகள்

முதலமைச்சர் அவர்களின் சோர்வுறா முயற்சிகளின் பயனாக, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங் களின் கூட்டு முயற்சியுடன் ரூ.2000 கோடி செலவில், ‘அரோ செம்’ என்ற நறுமணப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. துணைப் பொருள் தயாரிக்கும் பல தொழில்களை மேம்படுத்து வதற்கு அடிப்படையாகவும், சுமார் 70,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இது வகை செய்யும்.

ஜெயங்கொண்ட சோழ புரத்தில், கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடியில் மிகப்பெரிய அளவிலான நிலக்கரி வெட்டும் பிரிவும், மின் உற்பத்தி திட்டங் களும் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாட்டில் கிடைக்கும் நில்க்கரியைப் பயன்படுத்தி முடிவில், 1500 மெ.வா. மின் உற்பத்திக்கு வகைசெய்யும்.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டத்தைச் செயல்படுத்த அவசியமான பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்கத் தனியார் துறைக்கு அனுமதி அளிக்கும் வகையில் நிலக்கரி நாட்டுடமையாக்கல் சட்டத்தைத் திருத்தி அமைக்கு மாறு மத்திய அரசுக்கு வேண்டு கோள் விடுக்கப்பட்டது. மேற் கண்ட சட்டத்துக்குத் தகுந்த திருத்தமும் இப்போது செய்யப் பட்டுள்ளது. இந்த மின்திட்டத் திற்கு அயல்நாட்டு முதலீடு மேம்பாட்டு வாரியம் ‘கொள்கை அளவில்’ அனுமதி அளித் துள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி ஆர். மாவட்டத்திலுள்ள சோளிங்க நல்லூர் மற்றும் பள்ளிக்கரணை கிராமங்களில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில் “சென்னைத் தொழில் பூங்கா” ஒன்றினைத் தொடங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஆசியாவிலேயே சிறந்த அடிப்படை வசதிகளுக்கு இணையான வசதிகளையும், மத்திய அரசின் தற்போதைய தாராள மயமாக்கப்பட்ட கொள்கைகட்குட்பட்டு ஊக்கு தவிகளையும் இப்பூங்கா வழங்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்த “சென்னைத் தொழில் பூங்கா” என்ற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுளளது. இத்திட்டத்திற்கான கூட்டுத் தொழில் முனைவரை மாநில அரசு விரைவில் தெரிந் தெடுக்கும்.

செங்கல்பட்டு-எம்.ஜி ஆர். மாவட்டம் கும்மிடிபூண்டியில் சுமார் ரூ.20 கோடி முதலீட்டுடன் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கான செயற்குறிப்பு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்

இந்த அரசு பொறுப்பேற்ற திலிருந்து இதுவரை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) ரூ.10,831 கோடி மொத்த முதலீடு கொண்ட 42 புதிய திட்டங்களுக்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. இதைப் போல, தமிழ்நாடு மின்னணு வியல் நிறுவனத்தின் (எல்காட்) ரூ.141 கோடி மொத்த முதலீடு கொண்ட 17 புதிய திட்டங் களுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

ரூ.27,231 கோடி முதலீடு கொண்ட மின் திட்டங்கள் உள்ளிட்ட ரூ.43,910 கோடி முதலீடு கொண்ட திட்டச் செயற்குறிப்புகள் தமிழ்நாட்டில் பெறப்பட்டுள்ளன என்பது மிகவும் பெருமைக்குரிய விஷய மாகும். மற்ற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தொழில் முனைவர்களை ஈர்க்கும் திறன் இம்மாநிலத்திற்குள்ளது என்பது





■ விஞ்ஞான வசதிகளைக் கிராமங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது காலத்தின் கட்டாயம்.

குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.2,376.87 கோடி முதலீடு கொண்ட இத்தகைய 24 திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ரூ.1,288 கோடி முதலீடு கொண்ட 9 திட்டங்கள் முடிவாக அனுமதியளிக்கும் நிலையிலுள்ளன. 24 திட்டங்களுக்கான செயற்குறிப்புகள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தப் பட்டு வருகின்றன. ரூ.700 கோடி முதலீடு கொண்ட தூத்துக்குடி காப்பர் ஸ்மெல்ட்டர் திட்டத்திற்கு சமீபத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் முனைவர்களின் கனவுகளை நனவாக்கும் (Dream Destination) மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது என்பதைத் தான் மேற்கூறியவை தெளிவு படுத்துகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்.) ரூ.525 கோடி மதிப்பீட்டுச் செலவில் அதன் விரிவாக்கத் திட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனம் இந்தியாவிலேயே மிகப்பெரிய, அதாவது ரூ.50 கோடி செலவில் 15 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலை மின் திட்டத்தை திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் தேவர்குளம் மற்றும் பெருங்குடி கிராமங்களில் அமைத்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி தமிழ்நாடு மின் வாரியத்தின் மின்னிணைப்பில் இணைக்கப் பட்டுள்ளது.

### நேரடிக் கடன் உதவி

1991 லிருந்து தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 205 தொழில் பிரிவுகளுக்கு 194 கோடி ரூபாய் கடன்களை வழங்க அனுமதியளித்துள்ளது. 1994 – 95 ஆம் ஆண்டில் ரூ.60 கோடி கடனாக வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதனால் ரூ.230 கோடி வரையில் முதலீடு பெருகும் என்றும், 5550 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியில் மறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியளவு குறைக்கப்பட்டபோதிலும் சிப்காட் நிறுவனத்தின் கடன் வழங்கும் திட்டங்களில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

### தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்-(கைடன்ஸ்)

புதிய தொழில் கொள்கையின் கீழ் முதலீட்டாளர்கள் ஆவதற்கு விழையும் அனைவரும் தொடர்பு கொள்ளக்கூடிய ஒருமுனை மையமாகத் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அரசின் கொள்கைகள், நடைமுறைகள், ஊக்கச் சலுகைகள் மற்றும் உதவித் தொகைகள் போன்ற தொழில்களுக்குச் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கணிப்பொறித் தகவல் தொகுப்பு ஏற்பாடுகள் (Floppy Diskettes) வடிவில் கைடன்ஸ் கொண்டு வந்துள்ளது. மேலும், கைடன்ஸ், இந்திய வெளிநாட்டு வணிகம் மற்றும் தமிழ்நாட்டில் ஏற்றுமதி வாய்ப்புகள், வளர்ச்சிக்கு முக்கிய தொழில்கள் போன்ற தகவல்களை பயனுள்ள முகவர்களுடன் கணினி அடிப்படையிலான தகவல் தொடர்பு ஏற்பாடுகள் மூலம் கொண்டுவந்துள்ளது. மாநிலத்தில் நேரடி வெளிநாட்டு முதலீடு, மற்றும் அயல்நாடு வாழ் இந்தியர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்கும் முகவரமைப்பாக (Nodal Agency) கைடன்ஸை அரசு அறிவித்துள்ளது. பன்னாட்டுத் தகவல் மையங்களுடன் நேரடி தொடர்பினை ஏற்படுத்த CD ROM கையகராதி தேடல் வசதிகளை கைடன்ஸ் அமைத்துள்ளது. தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்க பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற மாநகரங்களிலும் மற்றும் துபாய், அபுதாபி, பஹ்ரைன் ஆகிய வெளிநாட்டு மாநகரங்களிலும் தொழில் மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. தொழில் மேம்பாட்டிற்கான கருத்தரங்கின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டை புதிய முதலீடுகள் செய்வதற்குகந்த மாநில மென்பதை விளக்கமாக எடுத்துக் காட்டும் ஒரு விளம்பர முகாமை நடத்த கைடன்ஸ் உத்தேசித் துள்ளது.

### சர்க்கரைத் தொழில்

தஞ்சாவூர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சர்க்கரை ஆலை வீதம் ஐந்து புதிய சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துவதற்கு உரிமம் கோரி செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் தொடங்கப்பட்டு 37 இலட்சம் யூனிட் மின் சக்தி

தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் தொகுப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. புதிய கொள்கைக்கிணங்க, இரண்டு தனியார் துறை ஆலைகள் இணை மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்க உத்தேசித்துள்ளது. ரூ.18 கோடி மொத்த செலவில் மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி மற்றும் அரூரிலுள்ள மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளன. சர்க்கரைத் தொழிலில் இணை மின் உற்பத்தி நிலையங்களைத் திட்டமிட்டு அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டங்களில் மத்திய அரசு ஏற்கெனவே அனுமதி அளித்த இரு சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### சுரங்கம் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) தருமபுரி மாவட்டம் மாதப்பள்ளியில் கிரானைட் தளக்கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் சிவகங்கையில் கிராபைட் பயன்பாட்டுத் தொழிற்சாலை ஒன்றையும் தொடங்கியுள்ளது. கிரானைட் தளக்கற்கள் தயாரிப்புத் தொழிற்சாலையில் வணிக ரீதியிலான உற்பத்தி நவம்பர் 1993-இல் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.1000 கோடி மொத்த முதலீடு கொண்ட பல துணைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்க வாய்ப்புள்ளது. இந்த கிராபைட் பயன்பாட்டுத் தொழிற்சாலை மற்றும் சுரங்கங்களின் மூலம் 250 பேர்கள் நேரடியாகவும் மற்றும் 250 பேர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புப் பெறுவர். தருமபுரி மாவட்டத்தில் ஏராளமாகக் கிடைக்கும் மாலிப்டினத்தை வெட்டியெடுக்கும் திட்டத்தையும் டாமின் தொடங்கியுள்ளது.



## சிறந்த திரைப்படங்களைத் தேர்வு செய்யக் குழு அமைப்பு

ஆண்டுதோறும் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர் நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் கலைத்துறை வித்தகர்களைத் தேர்வு செய்து விருதுகள் வழங்கி சிறப்பிக்கும் நோக்கத்துடன் மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் 1993ஆம் ஆண்டிற்கான விருதுகளுக்குத் தகுதியுடைய திரைப்படங்கள் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து செய்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்கென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் அவர்கள் தலைமையில் ஒரு தேர்வுக் குழுவை நியமித்து ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தத் தேர்வுக்குழுவில் திரு. எம்.எஸ்.விஸ்வநாதன், திரு. எம்.ஏ. திருமுகம், திரு. என். பாலகிருஷ்ணன், சிரிப்பு நடிகர் திரு. சி.கே. நாகேஷ், திரு. கே.சங்கர், டாக்டர் பானுமதி ராமகிருஷ்ணா, திருமதி வாணி ஜெயராம், கவிஞர் முத்துராமலிங்கம், திருமதி மஞ்சுளா ரமேஷ், திரு. வியட்நாம் வீடு சுந்தரம், டான்ஸ் மாஸ்டர் சுந்தரம், திரு. மோகன் காந்திராம், தமிழக அரசின் செய்தித்துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நியமித்துள்ள இந்தத் தேர்வுக் குழு 1993ஆம் ஆண்டு வெளியான தமிழ்த் திரைப்படங்களை ஆராய்ந்து விருதுக்குரிய திரைப்படங்கள் நடிகர், நடிகையர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள், கலை வித்தகர்கள் ஆகியோர்களைத் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

# சமூக நலத்துறையின் சிறப்பான பணிகள்

## மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண்"

என்ற தேசிய கவி பாரதியாரின் கனவினை நனவாக்கும் விதத்தில் 4.5 கோடி தமிழக மக்களால் ஒருமித்த மனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நாட்டின் வளர்ச்சி பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் ஆகியோரின் நலத்தையும் முன்னேற்றத்தையுமே வெகுவாகச் சார்ந்துள்ளது என்ற உண்மையை முழுமையாக உணர்ந்து அவர்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ஒல்லும் வகையெல்லாம் உதவி செய்வது என உறுதி பூண்டு அவர்களுக்கு நீண்ட காலப் பயன்தரக் கூடிய பல புதிய திட்டங்களை ஆட்சிப் பொறுப்பேற்று 3 ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளார்.

■ பெண் சிசுவைத் தடுப்பதற்காக "தொட்டில் குழந்தைத் திட்டம்" ஏற்படுத்தி அதன் மூலம் பெண் குழந்தைகளைப் பெற்று அரசே அவர்களைப் பேணுகிறது. இதன் மூலம் இதுவரை 75 பெண் குழந்தைகள் அரசால் காப்பாற்றப்பட்டு தற்போது நம் நாடு மற்றும் மேலை நாடுகளில் குழந்தைகள் இல்லாத தம்பதியருக்குத் தத்து கொடுக்கப்படுகிறது. இந்தியாவிலேயே இத்தகைய திட்டம் தமிழ்நாட்டில் மட்டும் தான் செயல்படுத்தப்படுகிறது. உலக அரங்கில் பல ஏடுகள் இத்திட்டத்தைப் போற்றியுள்ளன.



■ பெண் சிசுவதையைத் தடுக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டினை ஊக்குவிக்கவும் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் 1.4.92 முதல் தொடங்கப்பட்டு பெண் குழந்தைகளது படிப்பு மற்றும் திருமணச் செலவு வரை ஆகும் தொகையைப் பெறும் வகையில் அவர்கள் பெயரில் ரூ.5000-க்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

■ ஸ்வீடன் நாட்டுச் 'சிடா' உதவியுடன் 1.7.93 முதல் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., நீலகிரி மற்றும் 'புதுக்கோட்டையில் ரூ.46 கோடி செலவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

■ பல்வேறு திருமணத் திட்டங்களின்கீழ் நிதியுதவி பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட ஆண்டு வருமான வரம்பைச் சீர்ப்படுத்தி ரூ.12,000 என ஆக்கப்பட்டுள்ளது.

■ ஊரக வளர்ச்சி ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஊரகப் பகுதியிலுள்ள பள்ளிகளின் சத்துணவு மையங்கள் சமூக நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

■ சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அமைப்பாளர்களின் மதிப்பூதியம் கணிசமாக உயர்த்தப்பட்டதுடன் அவர்களுக்குப் பொங்கல் பரிசாக ரூ.500 வழங்கப்பட்டுள்ளது.

■ சத்துணவுத் திட்டம் செயல்படுவதைக் கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழுவினை அரசு மீண்டும் அமைத்துள்ளது.

■ பொதுமக்கள் நன்கொடை உதவியுடன் சத்துணவு மையக் கட்டடங்களைச் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 5,000 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்

என. 2,661 கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

■ உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் - II ரூ.350 கோடி செலவில் தொடங்கப்பட்டு நன்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

■ நீதிபதி திரு. செங்கோட்டு வேலன் அவர்கள் தலைமையில், மாநில மகளிர் ஆணைக் குழு ஒன்றையும் இந்த அரசு அமைத்துள்ளது.

■ இந்தியாவிலேயே இதுவரை மகளிர் மேம்பாட்டுக்கான கொள்கை விளக்கம் எந்த மாநிலத்திலும் வெளியிடப் படவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக மேம்பாட்டுக்கான இவ்வரசின் கொள்கை விளக்கம்"தொலைநோக்குத் திட்டம் 2000'' ஒன்றை புகழ்பெற்ற சமூக சேவகி அன்னை தெரசா அவர்கள் வெளியிட்டார். இது அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும்.

■ 1993-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நல 15 அம்சத் திட்டம்" உலகளாவிய பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இத்தகைய திட்டவட்டமான பயனுள்ள செயல்திட்டத்தைக் கொண்டு வந்த தமிழ்நாடு தான், முதல் இந்திய மாநிலம் என்ற வகையில் இவ்வரசுக்கு 'யூனிசெப்' தனது உளமார்ந்த பாராட்டு தலைத் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டம் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அலுவலர் திரு. டிவி. அந்தோணி அவர்களை மாநில ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2000 ஆண்டில் மாவட்ட அளவில், குழந்தைகள் பிரச்சினைகள் ஏதும் இல்லை என்ற இலக்கினை எட்டும் நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



■ சேவையில்லங்கள், ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ.90-லிருந்து ரூ.120 ஆகவும், சேவை இல்லங்களில் உள்ள பெரியவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ.120லிருந்து ரூ.150ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

■ திருநெல்வேலி, வேலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல், ஆகிய இடங்களில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான பராமரிப்பு இல்லங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

■ இன்னும் குழந்தைகள் நலன், மகளிர் நலன் ஆகியோருக்கான பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

# வனத்துறையின் விரைவான பணிகள்

## மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கு. லாரன்ஸ்



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து உலகமே போற்றும் ஒப்பற்ற திட்டங்களைத் தீட்டி, அதனைப் பாங்குடன் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், புரட்சித்தலைவி அவர்களின் சிந்தனையில் உதித்த பல திட்டங்கள், பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகவும், இந்தியாவிலேயே தமிழகம் முன்னணியாகவும் விளங்குவதற்கு அடிப்படையாக அமைந்து வருகின்றன.

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் தலைமையின் கீழ், வனத்துறை வளமான பல பணிகளை ஆற்றி வருகின்றது.

காடுவளர்ப்புப் பணிகளில் மலைப்பகுதிகளிலும் சமவெளிப்பகுதிகளிலும் காடுகள் தரம் இழந்து வருவதை ஈடு செய்யும் நோக்குடன் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் ஏழை மக்களின் விறகு, தீவனம் மற்றும் சிறுமரங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் உள்ளூர் மக்களின் வருவாயைப் பெருக்க உதவுகின்றன. மலைப்பகுதிகளில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு வனவள மேம்பாட்டுப் பணிகள் மக்களின் ஈடுபாட்டுடன் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் நிலப்பரப்பு 1,30,057 சதுர கிலோ மீட்டர். அதில் 22,699 சதுர கிலோ மீட்டர் காடுகள் அமைந்துள்ளன. இது மொத்த நிலப்பரப்பில் 17.45 விழுக்காடாகும். இந்திய வனக் கொள்கை 1988-ன்படி புவியின் பரப்பளவில் 33 விழுக்காடு குறைந்தபட்சம் காடுகளாக அமைந்து இருக்க வேண்டுமென வகுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வனப்பரப்புகள் தவிர்த்து தீவிரச் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வனப்பரப்புகட்கு வெளியே சமுதாய நிலங்களில் 3,00,000 எக்டேர் பரப்பளவில் வளம் மிகுந்த காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சமூகக் காடுகள் நிலப்பரப்பில் 2.3 விழுக்காடாக அமைந்துள்ளது.

### 1991-92, 1992-93 மற்றும் 1993-94-ஆம் ஆண்டுகளில் சாதனைகள்:

### திட்டப்பணிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு மத்திய மாநிலத் திட்டங்களுக்கென, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டச் சாதனை அளவாக ரூ.138.17 கோடிக்கு எதிராக ரூ.222 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் காடு வளர்ப்புப் பணி 1,80,000 எக்டர் பரப்பளவில் நிறைவு செய்யப்பட்டதற்கு எதிராக, எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,20,000 எக்டர் பரப்பில் காடு வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### ஆண்டு திட்டச் செயலாக்கம்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலப்பரப்பில் போதிய அளவு வனப்பரப்பை அதிகரிக்கும் இலக்கை எய்த காடுவளர்ப்பு,மண்வளப் பாதுகாப்பு போன்ற பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உயிரினச் சூழல் சமநிலை பாதுகாக்கப்படும். வனப்பரப்புக்குள்ளேயும் வெளியேயும் பசுமைச் சூழலை மேம்படுத்தி வற்றாத வன வளச்செல்வங்களை அதிகரித்து மக்களின் விறகு, தீவனம், சிறுமரம் போன்ற இதர வனப் பொருட்கள் தேவை மற்றும் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் தேவையும் நிறைவு செய்யப்படும்.

இந்த முதல் மூன்று ஆண்டுகளில் 1,52,500 எக்டர் பரப்பளவில் காடு வளர்ப்பு மற்றும் இதர அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ரூ.151.20 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

### இருபது அம்சத் திட்டம்

இருபது அம்சத் திட்டத்தின்படி (அம்சம்16), 3,175 இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, 2,57,700

எக்டர் பரப்பளவில் காடு வளர்ப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசு நிர்ணயித்த இலக்குகள் விஞ்சப்பட்டன.

### வான்வழி விதைத்தெளிப்பு மூலமாக உயிரினச் சூழல் மேம்படுத்துதல்

தரம் தாழ்ந்த காடுகளை மேம்படுத்துவதற்கான 46,500 எக்டர் பரப்பளவில் வான் வழி மூலம் விதைத் தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

### சமுதாய நிலங்களில் காடு வளர்ப்பு

சுவீடன் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், சமுதாய நிலங்களில் தரிசு நிலங்கள், குளக் கரைகள், புறம்போக்கு நிலங்கள் போன்றவற்றில் விறகு, தீவனம், சிறுமரங்கள் வளத்தைப் பெருக்க மூன்று ஆண்டுகளில் 50,750 எக்டர் பரப்பளவில் தொகுப்புத் தோட்டம் வளர்க்கப்பட்டு மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. இந்த மரத்தொகுப்புகளை வளர்க்க ரூ.68.53 கோடி முதலீடு செய்யப்பட்டது.

### தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் இத்திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஐந்து கோட்டங்களும் மூன்று ஆராய்ச்சிப் பிரிவுகளும் வன வள அபிவிருத்தி மற்றும் நீர்வள அபிவிருத்திக்கென, தரமான விதைகள் உற்பத்தி, மண்வளப் பொறியியல் பணிகள், காடுவளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1993-94-ஆம் ஆண்டுவரை 8,200 எக்டர் பரப்பில் ரூ.846 இலட்சம் முதலீட்டில் நிறைவு செய்யப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்- கால்நடைப் பராமரிப்பு இனத்தின் கீழ் தீவன வளர்ப்புத் திட்டம் ஒன்று வனத்துறையால் ரூ.377 இலட்சம் நிதி அளவில் 6,100 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### டானிடா உதவி பெறும் மருந்துச் செடிகள்

தமிழ்நாட்டில் மருந்துச் செடிகளின் வளத்தைப் பெருக்க 1993-94-ஆம் ஆண்டில் டானிடா நிதியுதவியுடன் மருந்துச் செடிகள் வளர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 11 இடங்களில் இத்திட்டத்தின் கீழ் மருந்துச் செடிகள் பாதுகாக்கப்பட்டு உற்பத்தி பெருக்கப்படும்.

இந்த மருந்துச் செடிகள் பாதுகாப்புத் திட்டம் உள்ளூர் மக்கள் நலப் பாரம்பரியத்தை மீண்டும் வலுப்படுத்தும் அமைப்பின் (Foundation for Revitalisation of Local Health Tradition) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

### ஆராய்ச்சி விரிவாக்கம்

வனத்துறைத் தலைவரின் (ஆராய்ச்சி) பொறுப்பின் கீழ், வண்டலூரில் மாநில ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு அடிப்படைத் தேவை மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கு என இந்த மூன்று ஆண்டுகளில் ரூ.86 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக விரிவாக்கம்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 3,000 எக்டர் பரப்பளவில் உயர் விளைச்சல் தரும் பதியன் கன்று தேயிலை வளர்க்கும் திட்டம் ஒன்று ரூ.60 கோடி நிதி இலக்குடன் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டுகளில் 1,260 எக்டர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. கோத்தகிரி, நெல்லியாளம் பகுதிகளில் ரூ.6 கோடி செலவில் மேலும் இரண்டு தேயிலைத் தொழிற்சாலை கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இக்கழகம் ரூ.235.90 இலட்சம் மதிப்புள்ள 513 டன்கள் தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

### தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் - கூழ்மர வளத்தைப் பெருக்குதல்

இக்கழகம் ரூ.85 கோடி நிதி இலக்குடன் 30,000 எக்டர் பரப்பளவில் கூழ்மரத் தோட்டங்கள் வளர்க்கும் திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆறு ஆண்டுகளில் நிறைவு செய்யப்படும். இதில் முதல் மூன்று ஆண்டுகளில் 14,900 எக்டர் பரப்பளவில் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளது.

### சந்தன மர வளத்தைப் பாதுகாத்தல்

சந்தன மரக் குற்றங்கள் 7,445 எண்ணிக்கை கண்டுபிடிக்கப்பட்டு 2,160 டன்கள் சந்தனக் கட்டைகளும், 1,870 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட சந்தன மரங்களின் மதிப்பு ரூ.3,763 இலட்சம். சந்தன மரக் குற்றவாளிகள் 410 பேர் குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். மொத்த குற்றவாளிகள் 16,309 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### வனச் செல்வங்கள் பாதுகாப்பு

வனச்செல்வங்களின் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தவும், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகளை எதிர்த்துச் சமாளிக்க உதவியாக அவர்கட்கு அரசு நவீன ஆயுதங்கள், வாகனங்கள், படைக்கலன்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

| பொருள் | ஜூன் 91-இல் இருப்பு | 3 ஆண்டுகளில் வாங்கப் பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| 1. வாகனங்கள் | 320 | 179 | 499 |

| | | | |
|---|---|---|---|
| 2. நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் போன்றவை | 57 | 173 | 230 |
| 3. படைக்கலன்கள் | 319 | 168 | 487 |

சேலம் மற்றும் வேலூருக்கு நாய்ப்படைகள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

காடுகளிலிருந்து திருட்டுத்தனமாக விறகு மரம் எடுத்துச் செல்வதைத் தடுக்க 8 இடங்களில் விறகு மர டிப்போக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

அட்டவணை மரக்குற்றங்களில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களைக் கைப்பற்றி கையகப்படுத்த, திருத்தப் பட்ட வனச்சட்டத்தின்படி 1.10.1992 முதல் "நியமன அலுவலர்களை'' நியமிக்க வகை செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

### சிறப்பு நீதிமன்றங்கள்

சந்தனமரம் மற்றும் இதர அட்டவணை மர வனக்குற்றங்கள் மாவட்ட நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களில் ஆண்டுக்கணக்காக நிலுவை யிலுள்ளன. இதுபோன்று நிலுவையிலுள்ள வனக் குற்றங்களைத் துரிதமாக முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் முதல் கட்டமாகத் திருப்பத்தூரில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மார்ச் 1992-இல் தொடங்கி செயல்பட்டு வருகிறது. சேலத்திற்கு மற்றொரு நீதிமன்றம் அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டு விரைவில் தொடங்க உள்ளது.

### தலைமையிடத்தில் ஒரு அதிரடிப்படை

வனக்குற்றவாளிகளின் கடத்தல் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் ஒரு துணை வனப்பாதுகாவலர் இ.வ.ப. நிலை, தகுந்த பாதுகாப்பு மற்றும் இதரப் பணியாளர்களுடன் ஒரு அதிரடிப்படைத் தலைமையிடத்தில் முதன்மை வனத்துறைத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.

### மனித வள மேம்பாடு

வனத்துறையின் பாதுகாப்புப் பணியாளர்களின் நல்லொழுக்கத்தை மேம்படுத்தி ஊக்குவிப்பதற்காக, பாதுகாப்புப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.20ஐ இடர் ஏற்புப் படியாக வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

வனச்சரகர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள் வரையிலான பதவித் தரத்திலுள்ள 50 வன அலுவலர்களுக்கு விருதுகளும், வெகுமதிகளும் வழங்குவதற்கான செயற்குறிப்புக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

வன அலுவலர்களுக்கும் தகவல் அளிப்பவர் களுக்கும் (வெகுமதியாக) ஊக்கத்தொகையாக ரூ.17.74 இலட்சம் வழங்கப்பட்டது.

> **பிறப்புரிமை**
>
> சமத்துவம் என்பது எவரும் கருணை காரணமாக இடும் பிச்சை அல்ல; அது அனைவருடைய பிறப்புரிமை.
>
> -தந்தை பெரியார்

### புதிய திட்டங்கள் செயல்படுத்துதல்

1. ரூ.20 இலட்சத்தில், காடுவளர்ப்பு வனப்பரப்பை அதிகரித்தல், தரம் தாழ்ந்த மலைப்பகுதிகளில் கையினால் விதை தெளித்தல்.

2. ரூ.10 இலட்சத்தில், பல்வேறு பஞ்சாயத்துகளிலும் தனியார் நிலங்களில் சமூகக் காடு வளர்ப்பு.

3. ரூ.7 இலட்சத்தில், ஆற்றுப்படுகை அபிவிருத்தி, பாலார், பெண்ணையார், காவேரி, கோதையார், கெடிலம் போன்ற நதிகளில் மரம் வளர்த்து நேர்ப்படுத்துதல்.

### 1993-94

1. ரூ.6 இலட்சத்தில், வனப்பாதுகாப்புச் சந்தன மரம் மற்றும் இதரக் குற்றங்களைத் தடுக்க சென்னையில் ஒரு அதிரடிப்படை நியமித்தல்.

2. ரூ.3 இலட்சத்தில், தரம் தாழ்ந்த காடுகளின் மலை இடுக்குகளில் 12,000 இடங்களில் மரக்கன்றுகள் வளர்த்தல்.

வனத்துறை இவ்வாறாகச் சுற்றுச்சூழல் சுருதியுடன் இணைந்து தேவையானவர்கட்குப் பகிர்ந்து அளிக்கும் முற்போக்குச் சிந்தனையுடன் மேம்பாட்டுப் பணி களைத் துரிதப்படுத்தி ஒருங்கிணைந்து செயல் படுத்துவன் மூலம், இயற்கைச் சூழல் தரத்தை மீட்கவும் அதனை உயிரினங்கள் வாழத் தகுதியானதாக்கவும் தொடர்ந்து முயன்று வருகிறது.

நம் நாட்டின் மொத்த நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதி வனப்பரப்பாக இருக்க வேண்டுமென்பது தேசிய வனக் கொள்கையாகும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு நம் வனத்துறை பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய நெறிமுறைகளின் கீழ், தமிழ்நாடு மாநில வனத்துறை அனைத்து உயிர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மக்களின் ஆதரவையும் ஈடுபாட்டையும் பெற்று வனங்களைப் பாதுகாக்கவும், வனச் செல்வங்களை மேம்படுத்தவும், அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. எனவே, நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப் பரப்பாக இருக்க வேண்டுமென்ற தேசிய இலக்கினை நாம் விரைவில் எய்துவோம் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# செய்தித்துறையின் சீர்மிகு பணிகள்

## மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர்

## திரு மு. தென்னவன்

மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசின் திட்டங்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் மக்களுக்குத் தெரிய வைத்து, அதன் முழுப்பயன்களும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்திட வேண்டும் என்னும் தலையாய கொள்கையை செயல்படுத்தி வருவது செய்தி-மக்கள் தொடர்புத்துறை ஆகும்.

சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் வாழுகின்ற அனைத்து மக்களின் ஒட்டுமொத்த நலன்களை மேலோங்கச் செய்திடவும், தமிழகத்தின் தன்னுரிமையை நிலைநாட்டவும் உயிர் கொடுத்துப் பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் செயல்படுத்தப்படும் ஆற்றல்மிகு திட்டங்களையும், அதனால் விளையும் அளப்பரிய நன்மைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி பயன்பெறச் செய்வதில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அரும் பணி ஆற்றி வருகிறது.

சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்ந்து, மக்களின் வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்துவதில் பேரறிஞர் அண்ணாவும், டாக்டர் புரட்சித்தலைவரும் அவர்களைத் தொடர்ந்து மிகவும் சீரிய முறையில் டாக்டர் புரட்சித் தலைவியும் கைக்கொண்ட கருவியான திரைப்படத் துறையை மேம்படுத்த ரூ.14.93 கோடி செலவில் தரமணியில் எழில்மிகு திரைப்பட நகரம் உருவாக்கப் பட்டுள்ளது.



இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையின் வெளிப்பாடாக, அவரது கலை நுணுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக, திரையுலகின் மணிமகுடம் எனப் போற்றும் வகையில் சர்வதேசத் தரத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப்பட நகருக்கு, திரையுலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வரும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெயரால், 'ஜெயலலிதா திரைப் பட நகர்' என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

எழில்மிகு 'ஜெயலலிதா திரைப்பட நகரில்' உட்புற, வெளிப்புறப் படப்பிடிப்பு நடத்திட அனைத்து வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. உட்புறப் படப்பிடிப்பு நடத்த, குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு நிலையமும், நீதிமன்றம், காவல் நிலையம் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

வெளிப்புறப் படப்பிடிப்பு மேற்கொள்ள கிராமியச் சூழல், நகர்ப்புறம், கோவில் மற்றும் மொகலாயத் தோட்டம், இத்தாலியத் தோட்டம், ஜப்பானியத் தோட்டம், இங்கிலாந்து புல்வெளிகள் போன்றவையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை தவிர, குழந்தைகளின் பொழுதுபோக்குக்காக, கணினி மூலம் இயங்கும் படம், இராட்டினம், டோரா டோரா, குதிக்கும் பலூன் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், குளிர்சாதன வசதியோடு கூடிய ஒரு முன்னோட்டக் காட்சித் திரையரங்கு ஒன்றும், திறந்தவெளித் திரையரங்கு ஒன்றும் இடம் பெற்றுள்ளன. திரைப்படத் துறையினரின் பொழுதுபோக்கிற்காகக் குளிர் சாதன வசதியுடன் கூடிய குடியிருப்புகள், நீருக்கடியில் படப்பிடிப்பு நடத்துவதற்குரிய நீச்சல் குளம், உணவு விடுதி ஆகியவையும், வெளிப்புற விளையாட்டு வசதிகளுடன் கூடிய ஒரு பொழுதுபோக்குச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரைப்பட மற்றும் வீடியோ சம்பந்தப்பட்ட மாணவர்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் திரைப்பட ஆவணக் காப்பகம், வீடியோ நூலகம் மற்றும் நூல் நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

விரைவிலே திறப்பு விழா



நடைபெறும் நிலையில் அனைத்துப் பணிகளும் முடிந்த நிலையில் இருக்கும் 'ஜெயலலிதா திரைப்பட நகர்' இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாகும். 'ஜெயலலிதா திரைப்பட நகர்' தொடங்கப்பட இருப்பதை இந்தியாவில் இருப்பவர்கள் மட்டுமல்லாது, அனைத்துலக திரைப்பட வல்லுநர்களும், வீடியோ நிபுணர்களும் ஆவலாக எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல.

சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்களை ஊக்குவித்து உற்சாகமளிக்கும் வகையில் பரிசுகளும், விருதுகளும் வழங்கி வருகிறது தமிழக அரசு.

தமிழகம் காக்க வந்த தலைமகன் பேறிஞர் அண்ணா, சமுதாயக் கேடுகளை நெருப்பு வார்த்தைச் சாட்டையால் அடித்த புரட்சிக்கவி பாரதிதாசன், திரையுலகப் பெருமை காத்த இராஜா சாண்டோ, பாரத ரத்னா டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெயராலே கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளைத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

மேம்பட்ட கலை இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோல்- பண்பட்ட பண்பாட்டின் சிறப்புக்கு வித்து- திரைப்படத் துறை அழியாமல் காக்கும் அன்னைக் கரத்திற்கு சொந்தக் காரர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெயரால் 'ஜெயலலிதா விருது' என்னும் சிறப்பு விருது புதிதாக ஏற்படுத்தப்பட்டு, திரைப்படத் துறையில் நீண்டகாலம் சிறந்த முறையில் தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு, அவர்களின் சேவையைப் பாராட்டித் தமிழக அரசு இவ்விருதுகளை வழங்கு கிறது.

சிறந்த தமிழ்த் திரைப்படங் களுக்குப் பரிசாக முதற்பரிசு ரூ.1,25,000, இரண்டாவது பரிசு ரூ.75,000, மூன்றாவது பரிசு ரூ.50,000, சிறப்புப் பரிசு ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகின்றது.

குறைந்த செலவில் சமுதாய நோக்குடன் கூடிய நல்ல தரமான திரைப்படங்கள்தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும்; நோக்குடன் மானியத்தை தமிழக அரசு ரூ.3 இலட்சம் ஆக உயர்த்தி 75 திரைப் படங்களுக்கு ரூ.225 இலட்சம் உதவித் தொகை வழங்கப் படுகிறது. மேலும், திரைப்படத் துறையினருக்கும், திரைப்படக் கலைஞர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களின் குழந்தைகளுக் கும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் சேர சலுகைகள் வழங்கியும், படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறையைக் கொண்டு வந்தும், வீடியோ திருட்டுக்களைத் தடுக் கவும், கேபிள் டி.வி. முறைப்படுத் தவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் உள்ளார் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

எவரும் எதிர்பாராத வகையில், தமிழ்நாட்டின் திரைப்படத் தொழிலே நசிந்துபோகுமோ, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலை வாய்ப்பு இழந்து தவிக்க

நேருமோ என்று அனைவரும் அஞ்சும் வகையில், 1993-ஆம் ஆண்டில் மாபெரும் சிக்கல் ஏற்பட்டபோது, ஆறு மணி நேரத்திற்குத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி 14 அம்சத் திட்டங்களை அறிவித்து, சிக்கல் தீர்த்து வைத்தவர் டாக்டர் புரட்சித்தலைவி.

### தியாகத் தலைவர்கள் நினைவு போற்றல்

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீளாத் துயில் கொண்டிருக்கும் இடத்தை, சீர்மிகு நினைவகமாக தாமரை இதழ்கள் கவிழ்ந்து தண்மை சேர்ப்பது போல, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களே மாற்றி வடிவமைத்துத் தொடங்கி வைத்தார்கள். அதுமட்டுமல்ல; புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை, அவர்தம் சீரிய கருத்துக்களை, செம்மை மிகு சாதனைகளை விளக்கும் காட்சிகள் கொண்ட ஒலி -ஒளிக் காட்சி நடத்த டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், பேரறிஞர் அண்ணா அவர்களது நினைவிடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகம் போன்றே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவக வளாகத்தில் எம்.ஜி.ஆர் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

கேரள மாநிலத்தில் வைக்கத்திலே "கோவிலுக்குள் நுழையக் கூடாது; தெருவில் நடமாடக் கூடாது; நடந்தால் தீட்டு; பட்டால் பாவம்" என்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தார்கள். நாய் நடக்கலாம், கழுதை கனைக்கலாம், எருமை ஓடலாம், பன்றி பவனி வரலாம், ஆடு வரலாம், மாடு வரலாம், ஆனால், ஒரு பஞ்சமன் வரக் கூடாது என்று இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து, தந்தை பெரியார் போராடினார்; அதிலே வெற்றி கண்டார். அதை நினைவுகூரும் வகையிலே ரூ.15 இலட்சம் செலவிலே புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே




அங்கே ஒரு நினைவகம் எழுப்பப் பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தைக் கண்டறிந்து தகர்த்து வீசிட மூண்டெழுந்த பேர் இடியாய், தமிழன் இந்த ஞாலத்தில் தலை நிமிர்ந்து வாழ்வதற்குப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வெற்றியை எடுத்துக் காட்டும் வகையில் வைக்கத்தில் ஆண்டுதோறும் அரசு விழா நடத்தப்படும்.

நாட்டு நடப்பிலும், சமுதாய அமைப்பிலும் திருப்புமுனையாக அமைந்த சரித்திர நிகழ்ச்சிகள் பற்றியும் அதற்கு அடிப்படையாக இருந்த மாபெரும் தல்லவர்கள் பற்றியும் எடுத்துச் சொல்ல இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள டாக்டர் அம்பேத்கர், சர்.பிட்டி தியாகராயர், பாவேந்தர் பாரதிதாசன், காயிதேமில்லத், பெருந்தலைவர் காமராஜர், வ.உ.சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியார், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், கவியரசு கண்ணதாசன், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஆகிய பெருந் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை அனைத்து மாவட்டங்களிலும் அழகுற நடத்திக் கொண்டிருக்கிறது தமிழக அரசு. அது மட்டுமின்றி, விடுதலை நாள், தேசிய மறு சமர்ப்பண நாள், தேசிய ஒருமைப்பாடு வாரம், மனித உரிமை நாள் ஆகிய விழாக்களையும் அரசு நடத்தி வருகிறது.

மகாகவி பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணி இல்லம் ரூ.5.79 இலட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டு ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு, அவரது புகழ் கூறும் நினைவிடமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 9 அடி உயர வெண்கலச் சிலையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. மேலும் அங்கு அவரது வெண்கலச் சிலை ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் கிண்டி காந்தி மண்டபத்தில் ரூ.3 இலட்சம் செலவில் உருவாக்கப் பட்ட நினைவுத்தூணை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்துவைத்தார்கள்.

இதுமட்டுமின்றி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது நல்லாட்சி எதிர்வரும் ஆண்டில் இன்னும் பல புதிய திட்டங்களைச் செயல் படுத்த உள்ளது.

"காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக்குக் கூழுமில்லை, பாழுக்கு உழைத்தோமடா, பசையற்றுப் போனோமடா, கோடிக்கால் பூதமடா, தொழி

லாளி கோபத்தின் ரூபமடா!"- என்று வீரக்கனல் எழுப்பும் வகையில் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அமரர் ஜீவா பிறந்த பூதப்பாண்டியில் அவர் பிறந்த இல்லம் அரசின் சார்பில் நினை விடமாக்கப்படும்.

கி.பி.18-ஆம் நுற்றாண்டில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு, பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அழகுமுத்துக் கோன் நினைவாக நெல்லைச் சீமையில் அரசு சார்பில் விழா நடத்தப்படும்.

18 -ஆம் நூற்றாண்டில் பரங் கியரை எதிர்த்துப் போரிட்டு 24 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடிய 'ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி' நினைவாக விழா நடத்த சிலை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

மண்ணருமை, பெண்ணருமை, பொன்னருமை வெறுத்துவிட்டு, 'என்னருமைத் தாயகமே என் உரிமை' என்று சொன்ன முத்து ராமலிங்கத் தேவரின் பிறந்தநாள் விழா மாநில அளவில் கொண் டாடப்பட உள்ளது.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் நினைவாக அவர் பிறந்த ஊரான பட்டுக்கோட்டையில் எழில்மிகு நினைவகம் அமைக்கப்பட உள்ளது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவாக நாமக்கல் நகரில் அவர் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக்கப்பட உள்ளது.

உரிமைப் போரில் முன்னின்று தமிழினத்தின் மானம் காத்த மருது சகோதரர்கள் நினைவாக திருப்பத்தூரில் நினைவிடமும் சிலையும் அமைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று போராடி உண்ணாநோன்பிருந்து உயிர் விட்ட தியாகி சங்கரலிங்கனார் சிலை சென்னை மாநகரில் திறந்து வைக்கப்பட உள்ளது.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்



களின் நினைவாகவும், விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் நினைவாகவும், தாழ்த்தப்பட்ட இனத்து மக்களின் மேம்பாட்டுக் குப் பாடுபட்ட சென்னை நகர முன்னாள் மேயர் சிவராஜு நினைவாகவும் சென்னை நகரில் சிலை அமைக்கப்பட உள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டை யிலுள்ள சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் சமாதி அமைந்துள்ள இடம் அரசு நினைவிடமாக ஆக்கப்படும்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள வ.வே. சுப்பிரமணியம் அவர்களின் நினைவில்லம் ரூ.1,25,000 செலவில் பழுதுநீக்கி மேம்படுத்தப்பட உள்ளது.

உலகப் பொதுமறை தந்து, வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகைக்கு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறிய பாறை மீது 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை ரூ.3.60 கோடி செலவில் நிறுவப்படவுள்ளது.

## செப்பனிடுதல் - சீர்படுத்துதல்

192 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட இராஜாஜி மண்ட பத்தை ரூ.17.97 இலட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள் ளது.

தனியார் பத்திரிகைகளைவிட கவர்ச்சியான அட்டையுடன், எளிய கருத்துக்களுடன் அரசு நலத்திட்டச் செய்திகளை வெளி யிட்டு வருகின்றது "தமிழரசு".

சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய 'பிராட்மா' முறையிலிருந்து கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 இலட்சம் செலவில் 'தமிழரசு' அச்சகத் திற்குப் புதிய கணினி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரைப்படக் கல்லூரியிலுள்ள நூல் நிலையத்தை ரூ.3 இலட்சம் செலவில் நவீனப்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது.

சென்னையில் கலைவாணர் அரங்க வளாகத்தில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தை மேம்படுத்தும் வகையில், ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் மேம் பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

## பொருட்காட்சிகள்

1994- 95-இல் வேலூர், கடலூர் ஆகிய இரு இடங்களிலும் கூடுத லாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிய நகரங்களில் வாழும் மக்களும் பொருட்காட்சிகளைக் காணும் வகையில் தூத்துக்குடி, இராமநாதபுரம், காரைக்குடி, கிருஷ்ணகிரி, திருப்பூர் ஆகிய ஐந்து நகரங்களில் சிறிய அள விலான பொருட்காட்சிகள் 1994- 95-ல் நடத்தப்படும்.

பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் அரசின் வளர்ச்சிப் பணிகள், பலன்கள் குறித்து, ஏற்கெனவே சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட் டங்களில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. மேலும் 4 மாவட்டங்களில் ரூ.12 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

## திரைப்படப் பிரிவு

இந்தியாவிலேயே மாநில அரசால் நடத்தப்படும் ஒரே நிறுவனமான தமிழ்நாடு அரசின்

# கிடைத்தற்கரிய செல்வம்!



கலை உலகில் ஈடுபட்டிருப்போர் பெரிதும் எதிர்நோக்குவது, வெறும் பணமும், பொருளும் ஈட்டுவது மட்டுமல்ல. அவர்கள் தேடும் செல்வம் ஓரளவு தான் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும். ஆனால், உண்மையான வெற்றியால் தங்களது கலைப்படைப்புகள், மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டு, பாராட்டினைப் பெறும்போதுதான், அதனை கிடைத்தற்கரிய செல்வமாகத் திரை உலகக் கலைஞர்கள் கருதுகின்றார்கள்.

அந்த வகையில் மாநிலத் 'திரைப்பட விருதுகள்' பெறும் ஒவ்வொருவரும், அவர்கள் நடிகர்களானாலும் சரி, நடிகையரானாலும் சரி, அல்லது தொழில்நுட்ப வல்லுநர்களானாலும் சரி, இந்த விருதுகளை, தங்களது கலைத் திறமைகளுக்கு அளிக்கப்படும் மாபெரும் அங்கீகாரமாகக் கருதுகிறார்கள். இதனைப் பெறும்பொழுது பெருமை கொள்கிறார்கள். இத் துறையில் மேலும் பல சாதனைகள் புரிய ஊக்குவிக்கும் தூண்டுகோலாக இதை நம்புகிறார்கள். அதனால்தான், இந்தத் திரைப்பட விருதுகள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த அனைவருமே பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள்.

அந்த வகையில் இன்று நீங்கள் பெறுகிற ஒவ்வொரு பரிசிலும், உங்கள் சகோதரியின் பாசமும் இழையோடியிருக்கிறது

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.**

திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிலையம் திரைத் துறையின் பல்வேறு பிரிவிலும் புதிய புதிய கலைஞர்களை உருவாக்கி வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, மாநிலம் முழுவதிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், அரசின் மக்கள் நலத்திட்டங்களையும் படமாக்கி, செய்தி மலர் வெளியிட்டும், விளக்கப் படங்கள் தயாரித்து அளித்தும் மக்கள் கண்டு ரசித்து அதே நேரத்தில் சிந்தனைத் தெளிவும் பெறத்தக்க வகையில் வெளியிட்டு வருகின்றது.

### பத்திரிகையாளர் நலன்

செய்தித்துறையின் தோளோடு தோள் சேர்ந்து பணி செய்யும் பத்திரிகையாளர்களை மறக்கவில்லை இவ்வரசு. சென்னைப் பத்திரிகையாளர் சொந்த வீடு கட்டிக்கொள்ள ரூ.20 இலட்சம் அரசு மானியத்துடன் 5.5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. செய்தியாளர்கள் வீடு கட்டிக்கொள்ள அரசு மானியமாக வீடொன்றிற்கு ரூ.40 ஆயிரம் வீதம் ரூ.50 இலட்சம் வரை வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.500-ஆக உயர்த்தப் பட்டு உள்ளது.

### சிறப்பு வெளியீடுகள்

அரசின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க தமிழிலும் ஆங்கிலத்திலும் 'தமிழரசு' இதழை வெளியிட்டு வருகிறோம். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளில் டாக்டர் புரட்சித்தலைவி ஆற்றிய சீர்மிகு உரைகளைத் தொகுத்து 'புரட்சித் தலைவியின் முழக்கம்' எனத் தமிழிலும், 'Jayalalitha speaks' என்று ஆங்கிலத்திலும் வெளியிடப் பட்டுள்ளன. இந்தச் சிறப்பு வெளியீடு, காலங்கள் பல கடந்தாலும் புகழ் மங்காது மறையாது நிற்கும் வகையில் அரியதொரு தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

இயற்கை இன்னல்களை எதிர்த்து வெற்றி கண்டும், செயற்கை அல்லல்களைத் தூசு எனத்துடைத்தெறிந்தும் மக்கள் தொண்டு ஒன்றே எம் பணி என அயராது அல்லும் பகலும் பாடுபட்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றி வரும் அளப்பரிய பணிகளின் ஒரு சிறு துளியே மேலே சொல்லப் பட்ட சாதனைகள். அன்புக்குரிய அன்னையாம், ஆற்றல்மிகு தலைவியாம், போற்றுதலுக்கு உரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் தமிழகம் இன்னும் பல கோடி நன்மை பெறும் என்பது உறுதி.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

## உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

# 2%

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**

*சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPPR/519/CMS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

# கல்வியால் உலக அரங்கில் ஓங்கும் தமிழகம்

## மாண்புமிகு கல்வி அமைச்சர்
## பேராசிரியர் திரு க. பொன்னுசாமி

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் இன்று இணை யிலாப் புகழுடன் விளங்கும் மனித நேய மாமணி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலம், தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவரும் பொற் காலமாகும்.

காட்சிக்கு எளியராய்க் கடுஞ் சொல் கூறா மாட்சிமை உடையராய்த் தமிழகத்தின் ஆட்சிக்கு அழகு சேர்க்கும் அற்புதமாய் விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுக் காலத்தில், ஏழை எளியவர்கள் எல்லாம் ஏற்றம் பெறும் வகையில் – பல்வேறு துறைகளிலும் படைத்துள்ள சாதனைகள் மூலம், "உன்னத இமயம் போல ஓங்கிடும் கீர்த்தி எய்தி" உயர்ந்து விளங்குகிறார்கள் என்பதனை உறுதியுடன் தெரிவிப்பதில் உவகை அடைகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த அளவில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில் நிகழ்த்தியுள்ள சாதனைகள், இதுவரை வரலாறு காணாதவையாகும்.

*நிதி ஒதுக்கீட்டைப் பாருங்கள்!*

*1991-92 இல் நிதி ஒதுக்கீடு ரூ.1299 கோடி.*

*1994-95 இல் நிதி ஒதுக்கீடு ரூ.2002 கோடி.*



டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில் அதாவது 1991-92 இல் கல்வித்துறையில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.1299 கோடியாகும். கடந்த மூன்றாண்டுகளில் ஏறத்தாழ ரூ.803 கோடி அதாவது 62 சதவிகிதம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து மிகப் பெரிய சாதனை செய்துள்ளார்கள். இதன் மூலம் தமிழகக் கல்வி மேம்பாட்டில் தமக்குள்ள ஆர்வத்தினையும், ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் எல்லாம் தரமான கல்வியைத் தடையின்றிப் பெற வேண்டும் என்பதில் தமக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டையும் புலப்படுத்தியுள்ளார்கள், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

### இந்தியாவுக்கே வழிகாட்டும் தமிழகத்தின் தொடக்கக் கல்வி

அகிலம் புகழும் அன்னை தெரசா அவர்கள் அண்மையில் சென்னை வந்தபோது, புரட்சித் தலைவி அவர்களின் இல்லம் தேடிச் சென்று அவர்களைப் பாராட்டிய புதுமைத் திட்டம் "முதலமைச்சரின் 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்" ஆகும்.

இந்தியாவுக்கே வழிகாட்டும் இம்முன்னோடித் திட்டம், மனித ஆற்றல் முழுமையையும் குழந்தைப் பருவம் முதல் ஒருங்கே சீராகப் பேணி வளர்த்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள சீரிய திட்டமாகும். இதன் 8-வது அம்சம் "குறைந்தது 5-வது வகுப்புவரை குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும் என்பது சட்டமாக்கப்படும்" என்பதாகும். இதன்படி "தொடக்கக் கல்வி" எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி' எனச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படிச் சட்டமாக்கும் முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இது தகுந்த முறையில் பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வலியுறுத்தப் படும்.

பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்ந்து பயில வகை செய்யப்பட வேண்டும் என்பது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசின் உயரிய குறிக்கோள் ஆகும். இதை நிறைவேற்றும் வகையில், 6-14 வயதுடைய குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் பணியும், பள்ளிப் படிப்பை இடையில் விடும்

போக்கைத் தடுக்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பயனாகக் கடந்த மூன்றாண்டு களில் 6.33 இலட்சம் குழந்தைகள் கூடுதலாகத் தொடக்கப் பள்ளி களில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

6-14 வயதுடைய குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்படுதவதில் இந்தியாவில் தமிழகமே முதலிடம் பெற்றுச் சாதனை படைத் துள்ளதாக அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தமிழகத்தில் நடைமுறைப்படுத் தப்பட்டு வரும்-

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்.

இலவசச் சீருடைத் திட்டம்.

இலவசக் காலணி வழங்கும் திட்டம்.

பள்ளி செல்லும் மாணவர் களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்.

முதல் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசக் கல் பலகைகள் வழங்கும் திட்டம்.

முதலிய நலத் திட்டங்களுடன் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் மூன்றாண்டுக்கால அரசி னால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க் கண்ட நடவடிக்கைகள் மிக முக்கியக் காரணங்கள் ஆகும்.

■ ஒரு கி.மீ. இடைவெளியில் ஒரு தொடக்கப் பள்ளியேனும் அமைக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில் கூடுதலாக 464 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப் பட்டுள்ளன.

■ 2678 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

■ தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் பெண் ஆசிரியை களே நியமனம் செய்யப்படு கின்றனர்.

■ 74 ஆரம்பப் பள்ளிகள் நடு நிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டுள்ளன.

■ கட்டட வசதி இல்லாத பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன.

## நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவியல் சிந்தனை மிகுந்தவர்கள். தமிழக மாணவர்கள் அறிவியல் திறனு டன் வளரவேண்டும் எனும் நோக்கத்தில் அறிவியல் கல்வியை மேம்படுத்தி வருகிறார்கள்.

– முதலாம் கட்டமாக 1159 நடுநிலைப் பள்ளிகளுக்கு 19.08 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

– இரண்டாம் கட்டமாக 1151 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.13.24 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

– மூன்றாம் கட்டமாக 328 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.3284 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

– எஞ்சியுள்ள 2002 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பெட்ட கங்கள் வழங்கிட ரூ.40.04 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## உலக வங்கி உதவியுடன் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய முயற்சியின் விளைவாக உலக வங்கித் திட்டத்தின் மூலம் கிடைக்கும் ரூ.120 கோடி நிதி உதவியில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தமிழகத்தில் 4 மாவட்டங்களில் செயல்படுத்தப் படவிருக்கிறது.

இத்திட்டம் தருமபுரி, விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில், ஊரகப் பகுதிகளில் தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்திடப் பயன் படும்.

இத்திட்டத்தின் செயலாக்கம் காரணமாக, தமிழகத்தில் தொடக் கக் கல்வி மேலும் செழித்து தழைத்து விளங்கும்.



## உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்வி

டாக்டர் புரட்சித்தலைவி அவர் களது அரசு கடந்த மூன்று

ஆண்டுகளில் 338 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 225 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தியுள்ளது.

இவற்றின் மூலம் குழந்தைகள் நெடுந்தொலைவு சென்று கல்வி கற்கும் சிரமம் நீக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக 326 இடைநிலைப் பணியிடங்களும் 209 பட்டதாரி-தமிழாசிரியர் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுப் பாட போதனையில் முன்னேற்றம் கண்டு உள்ளது.

### மகளிர் கல்வி

மகளிர் கல்வி என்பது சமூக ரீதியில் ஒரு சிறப்பான அம்சமாகும். மேல்நிலைக் கல்வி வரை மாணவிகள் தடையின்றிப் படிக்க பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 8-ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்குத் திருமண நிதி உதவி வழங்கப்படுகிறது. பள்ளிகளில் அதிக அளவில் ஆதி திராவிட மாணவியர்களைச் சேர்க்கும் தலைமையாசிரியர்களுக்கு ஊக்கப்பரிசு வழங்கும் புரட்சித்தலைவி அவர்களின் இத்திட்டத்தினால் ஆதி திராவிட மாணவியரின் பள்ளிச் சேர்க்கை அதிகரித்துள்ளது.

### கிராமப்புற மாணவர்களின் அறிவுத் திறன் மேம்பாட்டுத் திட்டம்

கிராமப்புறங்களில் வாழும் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் 1991-92 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 100 மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 வீதம் ஊக்கத் தொகையாக 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை நான்காண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதி மாணவர்களின் சீரான அறிவு வளர்ச்சி கருதி, புரட்சித்தலைவி அரசு மேற்கொண்டுள்ள சீரிய திட்டமிது.



எல்லாப் புத்தகங்களையும்விடச் சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தை விட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

### தொழிற் கல்விக்கு உயர் மட்டக் குழு

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வியைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துதல், தற்கால இயல்புகளுக்கு ஏற்பப் பாடத் திட்டத்தைத் திருத்தி அமைத்தல், தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி யளித்தல் போன்றவற்றை ஆய்ந்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்கிட உயர்மட்டக்குழு ஒன்று புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனைப்படி அமைக்கப் பட்டுள்ளது. அக்குழு வழங்கும் பரிந்துரைகள் அடிப்படையில் தொழிற்கல்வி விரிவாகச் செயல் படுத்தப்படும்.

### அறிவியல் கல்வி

அறிவியல் கல்வியை மேம் படுத்தும் பொருட்டு ரூ.12.13 கோடி செலவில் 3302 உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

### கட்டட வசதிகள்

உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.75 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### பள்ளிக் கல்விப் புரவலர் திட்டம்

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகள் படி, தமிழகக் கல்வி வளர்ச்சிப் பணிகளில் பொதுமக்களின் ஈடுபாட்டை ஈர்க்கும் வகையில், ரூ.1000 வீதம் நன்கொடை வழங்கும் கொடையாளர்களைத் திரட்டும் பள்ளிக் கல்விப் புரவலர்த் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் ரூ.3.37 கோடி சேமிக்கப்பட்டு, இத் தொகையின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, அந்தந் தப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

### பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

பள்ளிக்கூடங்கள், மக்களின் நல நிலையம் என்பதை அவர்கள் உணரும் வகையில் நடத்தப்படும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம், பள்ளிகளின் வளர்ச்சிக் காகக் கட்டடமாக, இருக்கைகளாக, அறிவியல் கூடப் பொருள்களாக, நிலமாக, விளையாட்டுப் பொருள்களாக, இன்ன பிறவாக அறச் சிந்தனை வாய்ந்தவர் களிடமிருந்து நன்கொடைப் பொருள்கள் திரட்டப்பட்டுள்ளன. இப்பொருள்கள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள பள்ளிகளில் கற்பித்தல், கற்றல் பணிகள் சிறப்பாக நடைபெற உதவி வருகின்றன.

இவ்வகையில் கடந்த ஆண்டில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பள்ளிகளுக்குக் கிடைத்துள்ளன.

இத்தகைய மாநாடுகள் தமிழகக் கல்வி வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடத் தூண்டுகின்றன.

### ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி

தமிழகத்தில் ஆசிரியர் கல்வியை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட இவ்வியக்ககத்தின் கீழ், 14 மாவட்டங்களில் மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறு

வனங்கள் செயல்பட்டு வந்தன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசு அமைந்தபின் மேலும் 7 மாவட்டங்களுக்குப் புதிதாக இந்த நிறுவனங்கள் அமைக்கப்பட்டு தற்போது 21 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள், ஆசிரியர்களுக்கு அவ்வப்போது புத்தொளிப் பயிற்சிகளை வழங்கிக் கற்பித்தல் முறைகளில் மேம்பாடுகளைப் புகுத்தி வருகிறது.

### புரட்சித்தலைவி சீர்மிகு உயர் பள்ளிகள்

கிராமப் புறங்களில் வாழும் வறுமை நிலையில் உள்ள சிறந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் "புரட்சித்தலைவி சீர்மிகு உயர் பள்ளி" எனும் பெயரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவச விடுதி வசதியுடன் உடனுறைப் பள்ளிகள் அமைக்க புரட்சித்தலைவி அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது. அதன் படி பர்கூரில் கடந்த ஆண்டு முதல் முன்னோடிப் பள்ளியாக முதலில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பள்ளிகள் பிற மாவட்டங்களிலும் படிப்படியாக நிறுவப்படவிருக்கின்றன.

### பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்

தமிழ்நாடு எழுத்தறிவில் இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்கள் வரிசையில் இரண்டாம் இடம் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

தமிழகத்தில் வாழும் எழுத்தறிவு இல்லாத மக்கள் எல்லோருக்கும் எழுத்தறிவு நல்கும் அறிவொளி இயக்கப் பணிகள் தமிழகத்தின் 18 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. புரட்சித்தலைவி அவர்கள் அரசின் தீவிர நடவடிக்கைகள் காரணமாகப் புதுக்கோட்டை, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் இத்திட்டம் தீவிரமாய்ச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995 இறுதிக்குள் இத்திட்டம் மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்பட்டு 'தமிழகம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம்' எனும் சிறப்பைப் பெறும்.

### அறிவொளித் தொடர் கல்வித் திட்டம்

எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்ற எழுத்தறிவினை வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் அறிவொளித் தொடர்க் கல்வித் திட்டமும் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டம்

பள்ளிப் படிப்பை இடையில் விட்ட, பள்ளிக்கே செல்லாத 6-14 வயதுடைய குழந்தைகள் கல்வி பெற்றுத் திரும்பவும் பள்ளிக் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கும், இத்திட்டம் 1.5 இலட்சம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். இதன் மூலம் 15 இலட்சம் பேர் பயன்பெறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### கல்லூரிக் கல்வி

பெண்கள் முன்னேற்றத்தில் தீவிர கவனம் செலுத்தும் புரட்சித்தலைவி அவர்களின் அரசு, கல்லூரிக் கல்வியில் பெண்களுக்கு அதிக முன்னுரிமை வழங்குவதில் பெரிதும் நாட்டம் கொண்டு உள்ளது.

பெண்களுக்கெனத் தனியே கல்லூரிகள் இல்லாத இடங்களில் உள்ள ஆடவர் கல்லூரிகளில் 30 சதவிகிதத்திற்குக் குறையாமல் மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர்.

கடுமையான நிதி நெருக்கடிகளுக்கிடையிலும், புரட்சித்தலைவி அவர்கள் தருமபுரி மாவட்டம் பர்கூரில் புதிய மகளிர் கல்லூரி ஒன்றைத் தமிழ்நாடு அரசின் சார்பில் ஏற்படுத்தி உள்ளார்கள். வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் பாடப்பிரிவுகள் இக்கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றன.

மேலும், இவ்வாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.35.57 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு முன்னுரிமையுடைய பாடப்பிரிவுகளுடன் மேலும், ஒரு மகளிர் கல்லூரியைத் தொடங்கவும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது.

### சுயநிதிக் கல்லூரிகள்

அரசின் நிதி நெருக்கடி காரணமாக, புதிதாகக் கல்லூரிகள்

■ கல்வி கற்பது என்பது வெறும் அறிவைப் பெற்று, ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்துகொண்டு சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி.





■ கல்விதான் எத்தனையோ ஏழைக் குடும்பங்களில் ஒளி யேற்றி, அவர்களுக்கு வாழ வழி காட்டியுள்ளது. அந்த அடிப் படையில்தான் இன்று கல்விக்கு முன்னுரிமை கொடுத்து வரு கிறது எங்கள் அரசு.

அரசின் சார்பில் தொடங்குவதில் மிகுந்த சிரமம் உள்ளது. இதன் காரணமாக 1993-94 இல் 14 அரசு உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஓர் உதவி பெறாத உடற்கல்விக் கல்லூரியையும் ஏற்படுத்தியுள்ளது.

## தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

மாநில அளவிலும், தேசிய அளவிலும், உயர்கல்வி ஒருங் கிணைப்புக்காக 'தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்' டாக்டர் புரட்சித்தலைவி அரசினால், அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. பல்கலைக் கழகங்களுக்கிடையே இணக்கமான உறவை ஏற்படுத் தவும், பாடத்திட்டங்கள், பயிற்சி முறைகள், தேர்வு முறைகளில் தேவையான மாற்றங்களைப் புகுத் தவும், உயர்கல்வி மன்றம் திட்ட மிட்டுச் செயலாற்றி வருகிறது.

## தொழில்நுட்பக் கல்வி

அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டு வருவதால் தொழில் வாய்ப்புகள் பெருகிவரும் இந்நாளில், தொழில் நுட்பக் கல்வியறிவு, செறிவுடன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பாடுபட்டு வருகிறது.

பர்கூரில், 1994-95 இல் புதிய அரசு பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவிட தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் அமைந்துள்ள 55 தொழில்நுட்பப் பயிலகங்கள் பயன்பெறும் வகையில், ரூ.76 கோடி உலக வங்கியிலிருந்து கடன்பெற ஏற்பளித்து நிதியுதவி பெற்றுள்ளது. மாணவ மாணவி யரின் பயிற்சித் திறனை மேம்படுத்தும் வகையில் புதிய இயந்திரங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 40 புதிய பட்டயப் படிப்பு மற்றும் 12 பட்டய மேற்படிப்பு வகுப்புகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டன. பல்தொழில்நுட்பப் பயிலகங் களிலும், தொழில்நுட்ப இயக்கத் திலும் கணினி வசதிகள் படிப்படியாகச் செய்து தரப் படுகிறது. இத்திட்டத்திற்குப் புரட்சித்தலைவி அரசு ரூ.15 கோடி நிதியுதவி செய்துள்ளது.

கோவை அரசினர் பொறியியல் கல்லூரியில் ஆய்வகக் கட்ட டங்கள் கட்ட ரூ.6 இலட்சம் தற்காலிகமாக ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் தொழில்நுட்பக் கல்வியறிவு பெருக மேலும் பல்வேறு பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## விளையாட்டு மற்றும் இளைஞர் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச் சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழகத் தில் மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

தமிழக இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இந்த அரசு. ரூ.40 கோடி செலவில் பிரமிக்கத் தக்க வகையில் சர்வதேச அளவுக்குச் சமமாகக் கட்டி முடிக்கப்பட்ட நேரு விளையாட்டரங்கம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அர சின் சாதனைக்கு மகுடம் வைத்தது போலாகும்.

நேரு விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடு பாதையமைத்துப் பன்னாட்டுத் தடகளப் போட்டியை முன்னின்று நடத்திச் சாதனை செய்துள்ளது தமிழ்நாடு அரசு.

1995-இல் சென்னையில் தெற்காசியக் கூட்டமைப்பின் போட்டிகள் நடத்தப்படவிருக் கின்றன.

பல்நோக்கு உள் விளை யாட்டரங்கம், மிதிவண்டி விளை யாட்டரங்கங்கள் நவீன ஹாக்கி செயற்கைப் புல்பாதை, சென்னை நுங்கம்பாக்கத்தில் பன்னாட் டரங்க அளவில் ஒரு டென்னிஸ் விளையாட்டரங்கம் ஆகியவை கட்டப்படவிருக்கின்றன.

சர்வதேசப் போட்டிகளில் வெற்றிபெற்ற 21 தமிழக விளை யாட்டு வீரர்களுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் அர்ச்சுனா, துரோணாச்சாரியார் விருதுகள் அரசு சார்பில் வழங்கப் பட்டுள்ளன.

## அடுக்குமாடி வீடு அல்லது வீட்டு மனை பரிசு

இனிப் பன்னாட்டு விளை யாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர்களுக்கு வீட்டுவசதி வாரிய உயர்வருவாய் பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடோ, வீட்டு மனையோ பரிசாக வழங்க புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

*ஊக்கப் பரிசாக*

*மாணவர்களுக்கு மதிப்பெண்கள்*

விளையாட்டின் கவனம் செலுத்தும் மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தில் பின்தங்கிவிடக் கூடாது எனும் எண்ணத்தில் அவர்களுக்கு, அவர்கள் ஈட்டும் வெற்றிகளின் அடிப்படையில் கூடுதல் மதிப்பெண்கள் ஒவ்வொரு பாடத்திலும் வழங்க வகைசெய்யும் சிறப்பான ஆணை ஒன்றை மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

இது, விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள மாணவ, மாணவியருக்குப் புரட்சித்தலைவி அவர்கள் அரசு அளித்துள்ள ஊக்கப் பரிசாகும். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இப்படி ஒவ்வொரு வகையிலும் தாம் நோக்கும் இடமெல்லாம் ஆக்கம், நீக்கமறப் பல்கிப் பெருக வேண்டும் எனும் வேட்கையுடன் எல்லோர்க்கும் எல்லாப் பிரிவினர்களுக்கும் ஊக்கம் தந்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உறுதியாக அதே நேரத்தில் விரைவாக வழி வகுத்துக் கொடுக்கிறார்கள். அதனால்தான் சாதனைச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறது புரட்சித் தலைவி அவர்களின் புகழ்பரப்பும் தமிழக அரசு.

எனவேதான், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் அன்புடன் இன்று, 'இதய தெய்வம்' என்றும், தமிழக நலன் காப்பதில் அவர்கள் காட்டும் அக்கறையையும் ஆர்வத்தையும் உணர்த்தும் வகையில், 'தமிழகக் காவல் தெய்வம்' என்றும் போற்றிப் புகழ்கிறார்கள். இத்தகைய சிறப்புகளுக்கு உறைவிடமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய சிந்தனைகளால் சாதனைகள் படைத்துவரும் தமிழ்நாடு, 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலம் எனும் பெருமையைப் பெறும் என்பதுடன் உலக அரங்கிலும் ஓங்கி நிற்கும் என்று உளமார நம்புகிறேன்.

# பல்கலைக் கழகம் ஆன்மாக்களின் நட்புக் கூடம்...



மனித சிந்தனைகளில் பெரிய முன்னேற்றங்கள் பல்கலைக் கழகங்கள் மூலம் ஏற்பட்டுள்ளன. விஞ்ஞானங்களிலும் அதன் பல்வேறு கிளைகளிலும் புதிய ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்கலைக் கழகங்கள் மூலமாக நடைபெற்று விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் பல்கலைக் கழகத்திலிருந்துதான் தொடங்கியிருக்கின்றன.

கற்றுக் கொடுப்பதும், தகவல்களைத் தருவதும் சிக்கலான வாழ்க்கை முறைகளுக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள சிறப்பான திறமைகளையும் அறிவாற்றல்களையும் மாணவர்க்கு வழங்குவதும் மட்டும் பல்கலைக் கழகத்தின் நோக்கமல்ல. மாறிவரும் மக்களின் தேவைகளுக்கேற்ற அம்சங்களைக் கல்வி முறை கொண்டிருக்க வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகளை வலியுறுத்தி, மனித நலத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதே என் கருத்து. பல்கலைக் கழக மாணவர்கள் பாடத்தை மட்டும் படிப்பதில்லை. தன் வாழ்க்கையில் என்றும் நினைவுகூரத்தக்க பருவத்தில், உயரிய, உன்னதப் பண்புகளால் கவரப்பட்டு மாணவர் குறிப்பிடத்தக்க ஒருவராகிறார். மனித அறிவு வளர்ச்சியையும், சிந்தனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவதன் மூலமும் உள்ளத்தோடு உள்ளம் உராய்ந்து கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதன் மூலமும் பக்குவம் பெற்ற மனிதராக உருவாக மாணவரிடத்தில் இப்பண்புகள் கிரியா ஊக்கியாகச் செயல்படுகின்றன. பல்கலைக் கழகம் ஆன்மாக்களின் நட்புக்கூடமாக - சத்தியத்தை நாடுவோரின் சங்கமாக அமைய வேண்டும். தற்கால வாழ்க்கைச் சூழ்நிலையில் எவ்வளவுதான் அவசியமாக இருந்தாலும் பொருளைப் பெறுவதையும் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதையும்விட மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் வாழ்க்கையில் இருக்கின்றன என்பதை நம்புபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அகிலத்துத் தீமைகளை அகற்ற அளவில்லாத ஆவல், பெருந்தன்மைமிக்க ஒரு நெஞ்சம், பரந்துபட்ட பார்வை இவற்றைப் பெறவும் தன்னலமற்ற, ஒருபால் கோடாத வழியிலே இலட்சியங்களைத் தொடரவும் பல்கலைக் கழகம் மாணவருக்கு உதவ வேண்டும்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.

# தொழிலாளர் நலம்

## மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## திரு மேலூர் ஏ.எம். பரமசிவன்



நம்பி வாக்களித்த நாட்டு மக்கள் இல்லந்தோறும் ஒளிவிளக் கேற்றுவதே தமது குறிக்கோளாகக் கொண்டு நல்லாட்சி நடத்தி வருகிறார் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்; இந்த மூன்றாண்டுக்காலமுத்தான ஆட்சியில் தமிழ்நாடு பெற்றுள்ள வளமும் நலமும் ஏராளம். புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகத் தொழிலாளர் நலம் பாதுகாக்கப் பட்டிருக்கிறது; வேலைவாய்ப்புகள் பெருகியுள்ளன.

1991-ஆம் ஆண்டில் 13039 தொழிற் தகராறுகளும், 1992ஆம் ஆண்டில் 10113 தொழிற் தகராறு களும் தவிர்க்கப்பட்டன. 1993ஆம் ஆண்டில் 8834 தொழிற் தக ராறுகள் நேரடிப்பேச்சு வார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்க்கப் பட்டுள்ளது.

திருப்பூரிலுள்ள பனியன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 1,00,000 தொழிலாளர்களின் சம்பளம் உள்ளிட்ட இதரப் பிரச்சினைகள் 9.8.93 அன்று டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் முயற்சியால் சுமுகமாகத் தீர்த்து வைக்கப் பட்டது.

1991-ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 72,78,969 ஆகவும். 1992-ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 28,68,472 ஆகவும் இருந்தது; ஆனால் 1993-ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 24,22,103 ஆகக் குறைந்துள்ளது.

இந்த அரசு 1993-ஆம் ஆண்டில் தேங்காய் உரித்தல், பாலிதீன் பிளாஸ்டிக் தயாரிப்பு, தச்சு வேலை மற்றும் கருமான் வேலை மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகிய நான்கு தொழில்களுக்கு முதல் முறைக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்துள்ளது.

1994-ஆம் ஆண்டில் கடல் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு முதல் முறையாகக் குறைந்தபட்ச ஊதி யத்தை நிர்ணயித்து அரசு ஆணை பிறப்பிக்க உள்ளது. பட்டு கைத்தறி நெசவுத் தொழில், தையல் தொழில் மருத்துவமனைத் தொழில் மற்றும் கைத்தறித் தொழில் (பருத்தி) ஆகிய நான்கு தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது. இன்ன மும் தோட்டத் தொழில், வன்த் தொழில், உள்ளிட்ட 14 தொழி லாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை விரைவில் மறு நிர் ணயம் செய்து ஆணை பிறப்பிக்க உள்ளது.

முக்கிய நகரங்களில் தொழி லாளர் துறை அலுவலகங்கள் எல்லாம் ஒரே கட்டடத்தில் இருக்க வேண்டும், அவ்வாறு இருந்தால்தான் தொழிலாளர்கள் இடர்ப்பாடு இல்லாமல் அலு வலர்களை அணுகமுடியும் என்ற தொழிற்சங்கங்களின் நீண்ட காலகோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த் அரசு கோவையில் ரூ.60 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி அது முடியும் தறுவாயில் இருக்கிறது.

1993-ஆம் ஆண்டு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 12 மூடப்பட்ட ஆலையிலுள்ள 8163 தொழிலாளர்களுக்கு ரூ.32,65,200 வழங்கப்பட்டது.

ஏழையின் சிரிப்பில் இறை வனைக் காண்போம், என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள் கையைச் செயல்படுத்திக் கொண் டிருக்கும், புரட்சித்தலைவி அரசு, கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல் படுத்த உள்ளது.

கட்டடத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் குழந்தைப் பராமரிப்பு இல்லம், பெண் களுக்குப் பேறுகாலச் சலுகை, விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வைப்பு நிதித் திட்டம், ஓய்வூதியத் திட்டம் ஆகியவை அடங்கும். முதற்கட்டமாக, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்படும். 1982-ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழில் (பன் முறைப்படுத்துதல் மற்றும் வேலை நிபந்தனைகள்) சட்டத்தின் கீழ் விரைவில் வாரியம் அமைக்கப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழக அரசின், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் மூன்றாண்டுச் சாதனைகள்

தமிழக அரசின் தொழிற் சாலைகள் ஆய்வகத்துறை கடந்த மூன்றாண்டுகளில் 5,601 தொழிற் சாலைகள், தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து 31.12.93 முடிய 2,05,899 தொழிற் சாலைகள், தொழிற்சாலைச் சட் டத்தின் கீழ் இயங்கி வருவதோடு, இதன் மூலமாக 9,72,975 தொழி லாளர்கள் பணியாற்றி, தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் பயன டைந்து வருகிறார்கள்.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தினைப் புதுப்பித்தலுக்குப் பதிலாக, முதல் உரிமத்தினையோ அல்லது புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமத்தையோ ஓராண்டு முதல் ஐந்தாண்டு வரை உரிமம் பெற்றுக்கொள்ளத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதிக வேலைப்பளு காரணமாக, மிகை நேர வேலை பார்க்க ஆண் தொழிலாளர்களுக்கு விதி விலக்கு ஓராண்டுக்குப் பதில், தொடர்ச்சியாக மூன்று ஆண்டுக்கு அளிக்கப்படுகிறது.

### தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் கையாளுதல், செயல்படுத்துதல் ஏற்றிச் செல்லுதல், சேமித்து வைத்தல் போன்ற பணிகளில் பாதுகாப்பு முறைகளைப் பற்றி தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி நிலையம் 2.4.93 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் 934 தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில், புரட்சித்தலைவியின் பொற்கால ஆட்சி மலர்ந்த கடந்த மூன்று ஆண்டுகளின் சாதனை

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகளைத் துத்துக்குடி, வேலூர், ஈரோடு மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏற்படுத்த அரசு ஆணையிட்டது. இதன் மூலம் உடல் ஊனமுற்றோர் பணியில் அமர்வதற்குச் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தொழில் நெறி வழிகாட்டும் பணியினைச் செய்வதற்கென, சேலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழிகாட்டும் இரண்டு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம் ஒன்று கடலூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கான கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 23,001 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்குப் பயிற்சி தமிழ்நாடெங்கிலும் வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சி வகுப்பும் சுமார் 21 நாட்கள் நடைபெற்றது. மேற்காணும் பயிற்சிக்கு இதுவரை ரூ.94.81 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் ஆகிய புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்ட காரணமாகத் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரத்தில் புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

### சுயவேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்களிடத்தில் சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வேலூர், மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தனியாக "சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவு" ஒன்று செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இப்பிரிவுகளின் சாதனை பின்வருமாறு:

சுயவேலைவாய்ப்பு தொடங்கக் கடனுதவி அளிக்கப்பட்டவர்கள் 980 பேர்.

அளிக்கப்பட்ட தொகை ரூ.1.69 கோடி

ஐ.டி.ஐ. / ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்று வேலைவாய்ப்பு. அலுவலகங்களில் பதிவு செய்தவர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு துவங்க, கடந்த மூன்றாண்டுகளில் பயனடைந்தவர்கள் விவரம் பின்வருமாறு:

கடனுதவி அளிக்கப்பட்டவர்கள் 69 பேர், அளிக்கப்பட்ட தொகை ரூ. 5,88300, அளிக்கப்பட்ட மானியத்தொகை ரூ.1,26,800.

### பணியில் அமர்த்தப்பட்டோர்

1991ஆம் ஆண்டு முதல் 1993 வரையான காலகட்டத்தில் 91,678 நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 29,255 பேர்;



ஆதிதிராவிடர் 25,141 பேர் பழங்குடியினர் 753 பேர்ஆவர்.

### வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம்

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் வேலை கிடைக்காமல் காத்திருந்தோருக்குக் கடந்த 3 ஆண்டுகளில் 1991 முதல் 1993 வரை ரூ 24,69,65,759 வேலை வாய்ப்பு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1991 முதல் 1993 வரையிலான காலத்தில் 12 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் மூலம் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட இடங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது:

வரிசை எண்களும் பகுதியின்பெயரும், மாவட்டம் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள் விவரம்:

1. கடப்பேரி, மெட்ராஸ் எக்ஸ்போர்ட் ப்ராசசிங் ஜோன் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள் 1.9.93
2. கே.ஜி.சாவடி மற்றும் நலக்கரை கோயம்புத்தூர், புறநகர் கோயம்புத்தூர் மாவட்டம் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள்1.12.93

ஒசூரில் ரூ.1,732 கோடி திட்ட மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதித் தொழிலாளர்கள் மருத்துவமனையின் கட்டடம் முடியும் தறுவாயில் உள்ளது. கருவிகள் மற்றும் மரச்சாமான்கள் வாங்க ரூ.42.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 1992-93-ஆம் நிதியாண்டின் சாதனைகள்:

### திட்ட விரிவாக்கமும், புதிய மருந்தகத் தொடக்கமும்

மறைமலைநகர் சென்னை மண்டலம் புதிய மருந்தகமும் மறைமலை நகர் மற்றும் கூடுவாஞ்சேரிப் பகுதிகளிலில் உள்ள காப்பீடு செய்யப்பட்ட 2000 நபருக்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் 2 மருத்துவர் வகை மருந்தகம் 1992-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

### பூவிருந்தவல்லி சென்னை மண்டலம் அரசுத் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம்

பூவிருந்தவல்லி ஒரு மருத்துவர் வகை அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்குவதற்கு மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 1943-ஆம் ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதிச்சட்டத்தின் விதி 3 (1)ன் கீழ் மைய அரசின் முறையான அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### கும்மிடிப்பூண்டி சென்னை மண்டலம் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம்

கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட்டில் 2 மருத்துவர்வகை மருத்துவமனை தொடங்குவதற்காக மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. 1948-ஆம் ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டத்தின் விதி 3 (1)ன்கீழ் மைய அரசின் முறையான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### கன்னியாகுமரி மாவட்டம் மதுரை மண்டல ஆரல்வாய்மொழி சிறிய அரசினர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்குதல்.

740 ஈட்டுறுதி செய்த நபர்கள் பயன்பெறும் வகையில், ஆரல் வாய்மொழியில் ஒரு மருத்துவர் வகை அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க ஆணை வெளியிடப்பட்டது. இந்த மருந்தகம் 15.10.93 முதல் செயல்பட்டு வருகிறது.



**பெண்ணின் பெருமை**

பெண்ணின் பெருமை உணர்ந்த உலகமே நாகரிக உலகம் எனப்படும். பெண்ணின் பெருமை உணர்ந்து நடப்பது நாகரிகத்தை வளர்ப்பதாகும்.

-தமிழ்த் தென்றல் திரு.வி.க.

### புரட்சித்தலைவி ஆட்சியில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிலப் பயிற்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் பற்றிய விவரம் வருமாறு:

அரசு அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பயிற்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம், வாரியத்தால் வழங்கப்படுகின்றன.

### பொறியியல், மருத்துவம், சட்டப்படிப்பு உதவித் தொகை

தொழிலாளர்களின் மகன்கள் / மகள்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது:

பொறியியல் (பட்டம்) ரூ.1200.

மருத்துவக் கல்வி (பட்டம்) ரூ.1200.

சட்டக் கல்வி (பட்டம்) ரூ.1200.

வேளாண்மைக் கல்வி (பட்டம்) ரூ.1200.

பொறியியல் கல்வி (டிப்ளமோ) ரூ.720.

மருத்துவக் கல்வி (டிப்ளமோ) ரூ.720.

### புத்தகம் வாங்க உதவித் தொகை

உயர்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு முதல் கல்லூரி வரை படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்க உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### விளையாட்டுப் போட்டிகள்

தொழிலாளர்களும் அவர்களது குழந்தைகளும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறந்த விளையாட்டு வீரர் களாகவும், வீராங்கனைகளாகவும் வரவேண்டும் என்பதற்காக, வாரியம் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. இவ்விளையாட்டுப் போட்டிகள், முதலில் மாவட்ட அளவிலும், இறுதியாக மாநில அளவிலும் நடைபெறுகின்றன. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### தொழிலாளர்கள் தங்கும் ஓய்வு இல்லங்கள்

தொழிலாளர்கள் சுற்றுலா செல்லும்போது தங்குவதற்கு ஏதுவாக, சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில், "ஜவகர்லால் நேரு ஓய்வு இல்லம்", குற்றாலத்தில் "திரு.வி.க.இல்லம்" மற்றும் வால்பாறையில் "சிங்காரவேலர் ஓய்வு இல்லம்" ஆகியவை கட்டப்பட்டுள்ளன. இவற்றில் தங்குவதற்குத் தொழிலாளர்களிடம் குறைந்த அளவு வாடகையே வசூல் செய்யப்படுகின்றது. இவை தவிர, சென்னையில், தொழில் தகராறு வழக்குகளுக்காக வரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக, ஜீவா இல்லம் கட்டப் பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை பயிற்சிப் பிரிவுின் கடந்த மூன்று ஆண்டுச் சாதனைகள் விவரம் வருமாறு:

நிருவாகத்தை முனைப்பூட்டுவதற்கும் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களின் நிருவாகம் பணிப் பளுவைக் குறைத்துப் பயிற்சியில் அதிகக்கவனம் செலுத்தி பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், 6 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிருவாக அலுவல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

கோயம்புத்தூர், அரியலூர், நாகர்கோயில் தொழிற் பயிற்சி நிலையங்களில் குடிதண்ணீர் வழங்குதல் தொடர்ந்து ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. இதனால் அடிக்கடி பயிற்சியாளர் களிடையே அமைதிக் குலைவும் ஏற்பட்டு வந்தது. இந்த இன்றியமையாத அடிப்படை வசதியை ஏற்படுத்தும் பொருட்டு, சம்பந்தப் பட்ட நகராட்சிகள் மூலம் குடிநீர் இணைப்புகள் ரூ.8 இலட்சம் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ரூ.14 இலட்சம் செலவில் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குப் புதுக் கருவிகளும் தளவாடங்களும் வாங்கித் தரப்பட்டன.

ரூ.6 இலட்சம் செலவில் பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங் களுக்கு மரச்சாமான்கள் வாங்கித் தரப்பட்டன.

தண்ணீர் தேவையினைச் சந்திக்க ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ.2 இலட்சம் செலவில் ஒசூர் மற்றும் கடலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அமைக்கப்பட்டது.

ரூ.2.5 இலட்சம் செலவில் 9 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குக் கூடுதல் பம்பு செட் நிறுவப்பட்டது.

தருமபுரி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது ரூ 44 இலட்சம் செலவில் நிரந்தரக் கட்டடம் கட்டப் பட்டு வருகிறது.

செங்கல்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களுக்கு வகுப்புகள் நடத்தப் போதிய வகுப்பறைகள் இல்லாமலிருந்தது. எனவே, ரூ.2.5 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டன.

பெண்கள் வேலை வாய்ப்பினை மேம்படுத்தும் வகையில் 'ஸ்கிரீன் பிரிண்டிங்' மற்றும் 'எக்ஸ்போர்ட் கார்மெண்ட் டெய்லரிங்' ஆகிய தொழிற் பிரிவுகளில் குறுகிய காலப் பயிற்சித் திட்டம் ஈரோடு மற்றும் கிண்டி (மகளிர்) அரசினர்

---

**அன்பில் நம்பிக்கை வை. அது துயரில் கொண்டுபோய் விட்டாலும் பரவாயில்லை. இதயக் கதவுகளை மட்டும் மூடிவிடாதே.**

**தாகூர்**

---

தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.7.44 இலட்சம் செலவில் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் அதிக அளவில் வளர்ச்சியடைந்துள்ளதால் பிளாஸ் டிக் தொடர்பான தொழிற் பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ளது. எனவே, 'பிளாஸ் டிக் பிராசசின் ஆபரேட்டர்' என்ற புதிய தொழிற் பிரிவு கடலூர் மற்றும் சேலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.12 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

### உலக வங்கி நிதியுதவியில் வாழ்வியல் பயிற்சித்திட்டத்தின் மூன்றாண்டுக் காலச் சாதனைகள்

1990- 91 முதல் 1994- 95 வரை ஐந்து ஆண்டுகளின் குறியீட்டு நிதியாக இத்திட்டத்திற்கு ரூ.21.74 கோடி ஒதுக்கப்பட்டது. இப்பொழுது அது ரூ.33.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உலக வங்கித் திறன் மேம்பாட்டுத் திட்டச்செலவினை மாநில அரசும், மத்திய அரசும் ஏற்கின்றன.

சமுதாயத்தில் மகளிர் நிலை உயர்த்தப்பட வேண்டும் என்னும் அரசின் சீரிய கொள்கையின் அடிப்படையில் தொடங்கப்பட்ட 5 புதிய மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒன்று மதுரையிலும் மற்றொன்று அம்பத்தூரிலும் இத்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டன. இதன் மூலம் 144 பயிற்சியாளர்கள் பயன் பெற்றுள்ளனர். இயந்திரங்கள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 31 அரசினர் தொழிற் பயிற்சி

# கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்குப் புதிய பெயர்

தமிழகத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்காகக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூரிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குச் 'சாமியப்பா' கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், மதுரையில் உள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குப் "பாண்டியநாடு" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், திருநெல்வேலியில் உள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "மேடைத்தளவாய் குமாரசுவாமி" கூட்டுறவு நிலையமென்றும், கோயம்புத்தூரிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "இராமலிங்கம்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், சேலத்திலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "நாச்சியப்பா" கூட்டுறவுப் பயிற்சி நிலையமென்றும் ஏற்கெனவே பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றது.

காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையங் களுக்குப் பெயரிட்டு அழைக்கப்படாமல், அந்தந்த ஊரின் பெயரே அப்பயிற்சி நிலையங்களுக்குப் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வந்தது.

இந்த மூன்று கூட்டுறவுப் பயிற்சி நிலையங் களுக்கும் பெயரிடப்படவேண்டுமென்ற கோரிக் கையின் அடிப்படையில் காஞ்சிபுரம் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குப் "பேரறிஞர் அண்ணா" அவர்களின் பெயரையும், கடலூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "டாக்டர் எம்.ஜி.ஆர்" அவர்களின் பெயரையும், சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குத் "தியாகி சங்கரலிங்கனார்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஒப்புதலுடன் பெயர் சூட்டப்படுமென்று, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் சட்டமன்றத்தில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையினைத் தாக்கல் செய்து உரையாற்றியபோது தெரிவித்தார்கள்.

இந்த அறிவிப்பினையொட்டி காஞ்சிபுரம் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குப் "பேரறிஞர் அண்ணா" கூட்டுறவுப் பயிற்சி நிலையமென்றும், கடலூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "டாக்டர் எம்.ஜி.ஆர்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குத் "தியாகி சங்கரலிங்கனார்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும் பெயர் சூட்டித் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

---

நிலையங்களில் 19 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பழைய வழக்கொழிந்த இயந் திரங்கள் சென்ற மூன்றாண்டு களில் நவீனப்படுத்தப் பட்டது. மேலும் ஏழு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் *1994*-ஆம் ஆண்டில் மேற்படி திட்டப்படி நவீனப்படுத்தப்பட உள்ளது. இதற்கென ரூ.*552.61* இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் தற்போது *10* தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகம் செய்யப் பட்டன. மேலும் *6* தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் *1994* முதல் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப் படவிருக்கின்றன. சென்ற மூன் றாண்டில் *923* பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

உலகவங்கி செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்வியல் மேம் பாட்டுத் திட்டம் புதிய தொழிற் பிரிவுகளுடன் விரிவாக்கம் செய் யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் *225* பயிற்சியாளர்கள் தொழிற் சாலைப் பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இரசாயனத் தொழிற் பிரிவுகளுக்கென இராணிப்பேட்டையில் ஒன்றும், உணவகம் மற்றும் உணவாக்கத் தொழிற் பிரிவுகளுக்கென அம்பத் தூரில் ஒன்றும் ஆக இரு அடிப் படைப் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. *24* பயிற்சி யாளர்கள் இரசாயனத் தொழிற் பிரிவுப் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் நான்கு தொடர் அறிவுரை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதில் *6223* தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன மூலம் கடந்த *1991 -92, 1992- 93* டிசம்பர் முடிய அயல் நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள் விவரம்:

பஹரின் *1*, அமெரிக்கா *9*, ஐக்கிய அரபுக் குடியிருப்பு *11*, லிபியா *1*, ஓமென் *4*, ஜோர்டான் *1*, சவூதி அரேபியா *290*, கட்டார் *2*, குவைத் *166*, சிங்கப்பூர் *17*, மலேசியா *11*, மாலே *1*,

இத்தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்ற முத்தமிழன்னை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் மூன்றாண்டுக் காலச் சீரிய ஆட்சி இவ்வாறு தீட்டிச் செயல்படுத்தி வரும் திட்டங்கள் இவைமட்டு மல்ல; இன்னும் ஏராளம் ஏராளம்!

# கூட்டுறவுத் துறையின் பொற்காலச் சாதனை

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
## திரு. கா.ப. பட்டாபிராமன்

கூட்டுறவு என்பது ஒரு அரசின் கொள்கையோ அல்லது இலட்சியமோ மட்டுமல்ல, அது மனித சமுதாயத்தின் தார்மீகப் பிணைப்பு நல்லுறவுகளின் சங்கமம்.

EACH FOR ALL; ALL FOR EACH;

'ஒவ்வொருவரும் எல்லோருக்காக எல்லோரும் ஒவ்வொருக்காக! இதுதான் கூட்டுறவின் ஒட்டுமொத்த சித்தாந்தம்.

Co-operation is the powerful instrument without which, nothing can be achieved in man's life.

"கூட்டுறவு என்பது மனித வாழ்வின் மிகச் சக்தி வாய்ந்த சாதனம். அஃதில்லாமல் மனித வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது". இவ்வைர வரிகள், தடுமாறுகிற தலைவர்கள், தடம் மாறுகிற தலைவர்கள், இடம் மாறுகிற தலைவர்கள் என்று முரண்பட்டுக் கிடக்கின்ற தலைவர்களின் கூட்டத்தில் இலட்சிய நோக்கத்தோடும், நாட்டுக்கு நலம் பயக்க வேண்டுமென்ற ஒரே கொள்கையோடும் ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையில் உதிர்ந்த சீரிய கருத்து மலர்கள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா கூட அடிக்கடி அழகுத் தமிழில் சொல்லுவார் 'தம்பி, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்று. இதன்மூலம் கூட்டுறவின் இலக்கணத்தையே நாட்டு மக்களுக்கு உணர்த்தினார்.



"கரைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?

பேரெதிர்ப்பால், பகையால், வஞ்சத்தால்

உண்மைதான் ஊனம் ஆமோ?"

என்ற தத்துவத்தின் இலக்கணமாகத் திகழும் புரட்சித் தலைவி அவர்கள், "ஒரு கை தட்டினால் சத்தம் வராது இரு கைகளின் கூட்டுறவே ஓசையின் எழுச்சி" என்றார்.

ஊர் கூடி அல்லவா தேர் இழுக்கவேண்டும்? இது தமிழகத்தில் பண்டைக்காலத்திலிருந்தே வழக்கில் இருக்கும் பழமொழி.

"கூடித் தொழில் செய்தோர் கொள்ளை இலாபம் பெற்றார்

வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே!

நாடிய ஓர் தொழில், நாட்டார் பலர் சேர்ந்தால்

கேடில்லை, நன்மை கிடைக்கு மன்றோ தோழர்களே!

சிறு முதலால் இலாபம் சிறிதாகும் ஆயிரம்பேர்

உறுமுதலால் இலாபம் உயருமன்றோ தோழர்களே!

அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்

பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!

பற்பல பேர் சேர்க்கை பலம் சேர்க்கும் செய்தொழிலில்

முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே!

வாடித் தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம்

கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!

கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை

மூடிய தொழிற்சாலை முக்கோடி தோழர்களே!

கூடைமுறம் கட்டுநரும், கூடித் தொழில் செய்யின்

தேடி வரும் இலாபம் சிறப்பு வரும் தோழர்களே!"

என்ற கூட்டுறவுக் கொள்கை முழக்கம் செய்தார் பாவேந்தர் பாரதிதாசன்.

உண்மையை மறைத்து, நரம்பில்லாத நாக்கினால் வரம்பில்லாமல் வசைபாடும் நயவஞ்சர்களுக்கு நெருப்புப் பிழம்பாய்த் திகழும் தமிழக முதல்வர் அவர்கள் 7.2.1994 நாளன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், "எங்களுடைய கொள்கைகளிலும், இலட்சியங்களிலும் எங்களுக்குக் கிட்டப் பார்வையும் இல்லை தூரப் பார்வையும் இல்லை. தமிழகத்தை

அனைத்துத் துறைகளிலும் விரைந்து முன்னேற்ற வேண்டு மென்ற தொலைநோக்குப் பார்வைதான் உண்டு" என்றார்கள் அந்தத் தொலைநோக்குப் பார் வைக்கு அடித்தளம் அமைப்பது கூட்டுறவுத் துறை.

இந்தியப் பெருநாட்டிலேயே கூட்டுறவுத் துறையில் முன்னணி யில் நிற்பது இன்றைய தமிழகம் தான். வளர்த்த கடா மார்பிலே பாயும் என்ற நன்றி கொன்ற இன்றைய அரசியல் உலகில் குறிப்பாக தமிழ்நாட்டு அரசியலில் தன்னுடைய அபூர்வ அறிவாற் றலை அறிந்து, தன்னை அரசிய லில் வளர்த்து ஆளாக்கிய, தன் அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருப்பெயரால் போக்குவரத்துக் கழகம் -

அவர் பெயரால் சத்துணவுத் திட்டம்-

அவருக்கு உலகம் வியக்கும் நினைவிடம் - இல்லை, இல்லை நினைவாலயம் -

தலைநகரில் அவரது திருவுருவச் சிலை -

சட்டமன்றத்திலே அவரது திரு உருவப்படம் அதுவும் அண்ணா வைப் பின்பற்றிச் செல்வதைப் போல,

இவைகள் மட்டும் போதாது என்று, அந்த மாமனிதர் பெயரால் இன்று தமிழகத்தில் சமூக நீதி காக்கும் வீராங்கனையாகக் காட்சியளிக்கும் புரட்சித் தலைவி அவர்களால் திருப்பெயரிடப் பட்ட செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தான்

அ. 1904-ஆம் ஆண்டில் திரூர் என்ற சிறு கிராமத்தில் முதன் முதலில் கிராமக் கூட்டுறவுக் கடன் வங்கி (Credit Cooperative Rural Bank) உருவாக்கப்பட்டது என்பது தமிழகத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்ச்சி.

ஆ. அதேபோல் 1904-ஆம் ஆண்டில் முதன்முதலில் சென்னை நகரில் டி.யு.சி.எஸ். என்ற அழைக்கப்படும் திரு வல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் உருவானது.

இ. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் கூட்டுறவுத்துறை பல முன்னோடிச் சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது.

ஈ. 8.10.1904-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில்தான், பெரிய காஞ்சிபுரம் நகரக் கூட்டுறவு வங்கி என்ற முதல் நகரக் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டது.

உ. அப்படியே தலைமைக் கூட்டுறவு வங்கி என்பது தமிழ கத்திலேயே சென்னையில்தான் 1905 -இல் உருவாக்கப்பட்டது.

ஊ. 19.10.1905-இல் சென்னை மத்திய நகர வங்கி அமைக்கப் பட்டது.

எ. 1913-இல் முதல் மத்தியக் கூட்டுறவு வங்கி மதுரையில் அமைக்கப்பட்டது.

ஏ. அனைத்திற்கும் மேலாக, கூட்டுறவாளர்களின் முதல் மாநாடு 1909-ஆம் ஆண்டில் தான் அன்றைய செங்கல்பட்டு மாவட்ட மும், இன்றைய செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டமுமான காஞ்சிபுரத்தில், கல்வி வள்ளல் பச்சையப்பன் பள்ளியில் நடை பெற்றது.

ஐ. முதல் கூட்டுறவு அச்சகம், சென்னைக் கூட்டுறவு அச்சகம்,



என்ற பெயரில் 1991-இல் சென்னையில் அமைக்கப்பட்டது.

பராக்கிரமத்தால், படை பலத்தால், பக்க பலத்தால் வந்த இராவணனைத் தோல்வியால், தலை குனிந்து நிலம் பார்க்கச் செய்த இராமச்சந்திரன் தான் பெண் வடிவம் பூண்டு தாய்க் கோலத்தில் தனி அரசியாக நின்று இன்று தமிழகத்தை ஆட்சி செய்யும் தனிப்பெரும் முதலமைச்சர் அவர்கள், இதுவரை உலக சனநாயக அரசியல் வரலாற்றில் எங்கும் கண்டிராத, ஆனால் எவரும் பிரமிக்கத் தக்க வகையில் தமிழக மக்களின் ஏகோபித்த நல்லாதரவுடனும் ஆசியுடனும் 24.7.1991 அன்று முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால், கூட்டுறவுத் துறையில் அரிய பெரிய பல திட்டங்களைத் தமிழகத்துக்குத் தந்து, அளப்பரிய சாதனைகளைக் கூட்டுறவில் படைத்து, உலக அரங்கிற்கே ஒரு ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்கிறார்கள்.

புதிய புரட்சிகரமான தொழில் கொள்கையை உருவாக்கி தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்கவும், வேளாண்மை வளத்தைப் பெருக்கவும், ஏழை எளியோர் வாழ்வில் வசதியற்றோர் ஆகியோரிடம் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடச் செய்யப் புரட்சித்தலைவி அவர்களின் அயராத உழைப்பு தமிழகத்துக்கே ஒரு அரிய படைப்பாய் கடந்த மூன்று ஆண்டுகளாய்த் திகழ்வதைப் போற்றிப் பாராட்டாதவர் எவரும் இலர். புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற திட்டங்கள் அனைத்தும், தமிழக மக்களுக்கு நிரந்தரமான வாழ்வளிக்கும் வகையில், வறுமையை விரட்டி, வளமான வாழ்வை உருவாக்கி இந்திய உபகண்டத்திற்கே வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருகின்றன.

### புதிய மாவட்டங்களில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் 1984-ஆம் ஆண்டு ஜூலையில் இராமநாதபுரம்,



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் ஆகிய மூன்று மாவட்டங்களாகப் பிரித்துப் பல ஆண்டுகளாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் புதிய மாவட்டங்களுக்கு உருவாக்கப்படாத நிலையில், ஆட்சித் துறையில் பல அதிசயங்களை நிகழ்த்தி வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியின் கீழ் 2.9.93-இல் காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய இரு மாவட்டங்களுக்கும் தனித்தனியே மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உருவாக்கப்பட்டு, தொடங்கப்பட்டு, விவசாயிகளுக்குத் திறம்படச் சேவை புரிந்து வருகின்றன.

மேலும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் உடனடியாக ஏற்படுத்தப் படவேண்டுமென எதையும் நன்றே செய் அதையும் இன்றே செய் என்ற கருத்தினை ஆழமாகக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கியதற்கேற்ப, வெகுவிரைவில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தோற்றுவிக்கப்பட உள்ளன.

### விவசாயக் கடன்

தமிழகத்தில் விவசாயிகட்கு 1991-92-இல் குறுகிய காலக் கடனாக ரூ.278.52 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.44.71 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.41.71 கோடியும், நகைக் கடனாக ரூ.843.70 கோடியும் வழங்கப்பட்டது.

1992-93-இல் குறுகிய காலக் கடனாக ரூ.340.86 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.45.75 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.64.21 கோடியும், நகைக் கடனாக ரூ.1080.28 கோடியும் வழங்கப்பட்டது.

1993-94-இல் குறுகிய காலக் கடனாக ரூ.439.54 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.52.65 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.112.70 கோடியும், நகைக் கடனாக ரூ.1363.00 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

எதிலும் முன்னேற்றம் எங்கும் முன்னேற்றம் என்று ஆட்சி நடத்தும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல் மிகு ஆட்சியில் 1994-95-இல் குறுகிய காலக் கடனாக ரூ.370.00 கோடி இலக்காக இருந்தாலும், திறன்மிக்க இவ்வாட்சியில் ரூ.450.00 கோடி அளவிற்கு வழங்கப்படும். மத்தியக் காலக் கடனாக ரூ.55 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.53

கோடியும், நகைக் கடனாக ரூ.1300 கோடியும் நடப்பு நிதியாண்டில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

### உடனடிக் கடன் வழங்கும் திட்டம்

ஒட்டு முறையில் நம்பிக்கை இழந்தவர்கள், வேட்டு முறையில் கலகம் நடத்தலாமா? என்று வேவு பார்த்துக் கொண்டிருப்பவர்கள், மக்களை நம்பாமல் மனுக்களை நம்பிக் கொண்டிருப்பவர்கள் தலை குனியும் வகையில் மக்கள் குரலே மகேசன் குரல் என்ற அண்ணாவின் மணிமொழிக்கேற்ப அரசு நடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் தான், கூட்டுறவுத் துறையில் கடன் வழங்கும் முறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறிய உறுப்பினர்களுக்குப் பயிர்க்கடன் களைத் துரிதமாக வழங்கி உறுதிப்படுத்தியும் தேர்ந்தெடுக் கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி களில் உடனடியாக்க் கடன் வழங்கும் திட்டம் என்ற 'பச்சை வண்ண அட்டை முறை' அறிவிக்கப்பட்டு வேகமாக நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் வேளாண் பெருங்குடி மக்கள் இன்று மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய வேளாண் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் கேட்கும் புதிய கடன்களை உரிய காலத்தில் பச்சை வண்ண அட்டையைக் காட்டிய மாத்திரத் தில் உடனடியாக வழங்குகின்ற இந்தத் திட்டத்தின் கீழ் பலன் பெற்று வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அளவிட முடியாது.

இத்திட்டத்தின் கீழ் 1992-93-இல் 1,24,607 நபர்களுக்கு ரூ.57.75 கோடியும், 1993-94- இல் 2,95,426 நபர்களுக்கு ரூ.167.74 கோடியும் வள்ளலின் வாரிசு ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-இல் 3,50,000 பேர்களுக்கு ரூ.175.00 கோடி இந்த பச்சை வண்ண அட்டை திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டு உள்ளேன்.

விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் தமிழ்நாட்டில் வெகுவான முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. அதாவது மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 1991-92- ஆம் ஆண்டில் கடன் வசூல் நிலுவை 34.6 விழுக்காடாக இருந்தது. 1992-93-ஆம் ஆண்டில் 23.9 விழுக்காடாகக் குறைந்துள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூல் நிலுவை 1991-92-இல் 41.04 விழுக்காடு நிலுவையிலிருந்து. 1992-93-இல் கடன் வசூல் நிலுவை 31.08 விழுக்காடாகக் குறைந் துள்ளது. இதுகூட தமிழக தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் விருப்பப்படிக் கடன் பெற்றவர்கள் தாமாக முன்வந்து திருப்பிச் செலுத்தியது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இதைத் தான் 'நபார்டு' எனப்படும் விவசாய வளர்ச்சி மற்றும் ஊரக மேம்பாட்டுத் தேசிய வங்கியின் தலைவர் திரு. கோட்டையா அவர்கள் 5.4.94-இல் சென்னைக்கு வருகை புரிந்தபொழுது சொன்னார். States such as Tamil Nadu has logged good performance in advances and recovery rates even without elected bodies.

அதாவது விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதிலும் சரி, கொடுத்த கடனைத் திருப்பி வசூல் செய்வதிலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களில் மக்களாட்சி நிர் வாகம் இல்லாத நிலையிலும் கூட தமிழ்நாட்டின் செயல்திறன் பாராட்டுதற்குரியதெனத் திட்ட வட்டமாகக் கூறியிருக்கிறார்கள். இதுபோலவே, அண்மையில் தமிழகம் வந்த அண்டையிலுள்ள ஆந்திரக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், கர்நாடகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மனம் திறந்து தமிழக முதல்வரைப் பாராட்டிச் சென் றனர்.

### வட்டி போனஸ் திட்டம்

பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தாத விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மீண்டும் புதிய கடன்களை வழங்க இயலாத நிலை இருந்த நிலையை மாற்றி மக்களை மக்குகளாக நினைத்துக் கொண்டு, வம்புரைகளை, வசை மாரிகளைப் பொழிந்து கொண் டிருக்கும் வகையற்றோர் மத்தியில் எதையும் தாங்கும் இதயத்தோடு பீடு நடைபோடும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான், போனஸ் திட்டம் என்கிற ஒரு புதிய திட்டத்தை அவர்களுடைய அறிவு சூட்ச மத்தைப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள்.

■ பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில், நாம் விரும்பாமலேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சி னைகள் ஏராளம் உள்ளன. மாநிலங்களிடையே இப்படிப் பட்ட பிரச்சினைகள் ஏற்படும் போது நியாயமும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும்.



தவணை வட்டி, அபராத வட்டி ஆகியவைகளைத் தள்ளுபடி செய்ததன் மூலமாக, 58.73 கோடி ரூபாயைப் போனசாக வழங்கி சுமார் 4.48 இலட்சம் விவசாயிகள் பலன் பெற்றிருக்கிறார்கள்.

### நலிந்த பிரிவினருக்குக் கடன் வசதி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படுகின்ற மொத்த குறுகிய காலக் கடன்களை 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தை வைத்திருப்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கடன் வழங்கப்படவேண்டுமென்கிற அரிய திட்டத்தை இந்த நாட்டிற்கு அறிவித்து தமிழக முதலமைச்சர் அவர்கள், வாழ்வில் நலிந்தவர்களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கிறார்கள்.

அந்தவகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தமிழகத்திலுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடனாக 1992 -93- இல் ரூ.251.91 கோடியும், 1993 -94- இல் ரூ.320.50 கோடியும் வழங்கியுள்ளது. இதைப்போலவே 1994-95-இல் ரூ.353.50 கோடி வழங்கப்படவிருக்கிறது.

### ஆதிதிராவிடர்கட்குக் கடன் திட்டம்

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரம் குறுகிய காலக் கடன் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.34.54 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.11.26 கோடியும், 1993-94-இல் குறுகிய காலக் கடனாக ரூ.44.54 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.13.00 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 1994 -95இல்குறுகியகாலக் கடனாக ரூ.58.50 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.13.20 கோடியும் வழங்கப்பட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### ஆதிதிராவிடர் குடும்பத்தில் ஒருவரை, கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக்குதல்

ஆதிதிராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக ஆக்கும் நோக்கத்துடன் புரட்சித் தலைவியின் அரசு 1991-92-ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிட விவசாயிகளை அதிகளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டி, ஒவ்வொரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த நபர் ஒருவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குப் பங்குத் தொகை ரூ.100ஐ அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதுவரை இத்தகைய புரட்சிகரமான திட்டத்தில் தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 85,032 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் உறுப்பினராகச் சேர்ந்திருக்கிறார்கள். இந்தவகையில் 1991-92- இல் ரூ.20 இலட்சமும் 1992-93- இல் ரூ.20 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.250 வழங்கி அவர்களின் பங்குத் தொகையைப் பெருக்கி, கடன்பெற இவ்வரசால் வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த வகையில் 1993-94-இல் 8000 பேருக்கு ரூ.20 இலட்சம் புரட்சித் தலைவியின் அரசு வழங்கியுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் 8000 பேருக்கு ரூ.200 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### தேவையின் அடிப்படையில் சிறு வியாபாரங்கள்

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி புரிய அதிகபட்சமாக ரூ.500 வரை தேவையின் அடிப்படையில் கடன் வழங்கும் திட்டத்தில் 1992-93- இல் மொத்தம் 55,200 பேருக்கு ரூ.18.42 கோடியும் 1993-94-இல் மொத்தம் 38,893 பேருக்கு ரூ.4 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. அதில் பெண்கட்கு மட்டும் 1992-93-இல் 23,248 பேருக்கு ரூ.3.74 கோடியும், 1993-94 இல் 24,417 பேருக்கு ரூ.2.18 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1994-95-இல் இக்கடன் திட்டத்தில் அதிகப்பட்சத் தொகை ரூ.500லிருந்து ரூ.750 வரை நபர் ஒன்றுக்குக் கடன் வழங்க புரட்சித் தலைவி அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### நகரக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கும் பணிகள்

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் 129 நகரக் கூட்டுறவு வங்கிகள் பாங்கோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 129 நகரக் கூட்டுறவு வங்கிகள் 1991-92- இல் ரூ.410·86 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.284.15 கோடி நகைக் கடன்களையும், 1992-93-இல் ரூ.451.81 கோடி பல்வேறு கடன்களையும் ரூ.317.58 கோடி நகைக் கடனையும், 1993-94-இல் ரூ.480.97 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.367.36 கோடி நகைக் கடனையும் வழங்கியுள்ளது. 1994-95-இல் நகைக் கடன் ரூ.350 கோடியும், பண்ணை சாராத் தொழில் கடன் ரூ.20 கோடியும் வழக்கம்போல் பல்வேறு வகையான கடன்களும் வழங்கப்படவுள்ளன.

### மத்தியக் கூட்டுறவு வங்கியில் பெண்கள் கிளைகள்

பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ஒரு கிளையும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 16 கிளைகளும் தற்பொழுது பெண்களால் நடத்தப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் 5 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெண்களால் நடத்தப்படும் கிளைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆணைக்கேற்ப கன்னியாகுமரியில் வடசேரியிலும், கும்பகோணத்தில் கொறநாடு, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல்

என்.ஜி.ஓ., காலனி தஞ்சாவூரில் நெற்களங்கம் மற்றும் காஞ்சி புரம் நகரத்திலும் உருவாக்கப் படவிருக்கிறது.

■ வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் தினை விதைத்தோம், எனவே, அதை நாட்டு மக்களுக் கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.



## பொது விநியோகத் திட்டம்

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது 126 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 75 முதன்மைச் சங்கங்கள் மற்றும் 4,915 இணைப்புச் சங்கங்கள் வழி யாகவும், 20,912 நியாயவிலைக் கடைகள் மூலமும் செயல் படுத்தப்படுகிறது. பொது விநி யோகத் திட்டம் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.75.00 கோடி அளவிற்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்மிணணெணெய் மற்றும் பாமாயில் விநியோகம் செய்யப் படுகின்றது. இதில், நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப்பகுதிகளில் 4,384 நியாயவிலைக் கடைகளும், கிராமப்புறங்களில் 16,528 நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரம் செய்யும் அமைப்பை, பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 1992 -93- ஆம் ஆண்டில் ரூ.901.43 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.902.23 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களும் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

## கண்காணிப்புக் குழுக்கள்

நியாயவிலைக் கடைகளிலுள்ள குறைகளையும், சிக்கல்களையும் தீர்க்கும்வண்ணம் அனைத்து மாவட்ட, மற்றும் வட்டங்களில் நியாயவிலைக் கடையளவில் கண்காணிப்புக் குழுக்களும், மாவட்டளவில் மாவட்ட நுகர் வோர் பாதுகாப்புக் குழுவும் சேவை புரிகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டில் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் காணப் படுமாயின், இதுதொடர்பான புகார்களை முறையே மாவட் டங்களிலுள்ள வட்ட வழங்கல் அலுவலர்களிடமும், சென்னை நகரமாயின், சென்னையிலுள்ள உதவி ஆணையாளர்களிடமும், விழிப்புக் கமிட்டி உறுப்பினர்கள் தெரிவிக்கவேண்டும். விழிப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட எல்லைக்குள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடை களினால் பெறப்படும் அத்தியா வசியப் பொருட்கள் குறிப் பிட்டுள்ள தரத்தில் உள்ளனவா? எனச் சரிபார்க்கலாம். அவ்வாறு இல்லையெனில் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லலாம். மேலும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டுப் பாட்டுப் பொருட்களின் அளவு முழுவதும் வந்து சேர்ந்துள் ளனவா? என்பதையும் சரிபார்க்கவேண்டும்.

இதுபற்றி மண்டல இணைப் பதிவாளர்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களைக் கொண்டு நியாய விலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்ய 'சிறப்புப் பறக்கும் படைகள்' அமைக்கப்பட்டு செயல் புரிகின்றன.

## மலைப்பகுதிகளில் நடமாடும் நியாயவிலைக் கடைகள்

மலைப்பகுதிகளில் மற்றும் அணுக முடியாத இடங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங் களுக்கு மலைவாழ் மக்களின் மேன்மைக்காக நடமாடும் நியாய விலைக் கடைகளை நடத்தக் கூண்டு உந்துகள் வாங்க அரசு நிதியுதவி செய்து வருகிறது. 18 கூட்டுறவு சங்கங்களுக்கு 19 கூண்டு உந்துகள் வாங்க ரூ.59.50 இலட்சங்கள் இதுவரை அரசு ஒப்பளித்துள்ளது. இக்கூண்டு உந்துகள் மலைப்பகுதி மற்றும் மலைவாழ் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நடமாடும் நியாயவிலைக் கடைகளாக செயல்பட்டு வருகின்றன.

## நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர் களின் சம்பளம்

நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குறைவாகச்! சம்பளம் தருவதால் தவறுகள் நடந்து வருகின்றதென்று சொல்லப்படுகின்ற நிலையை மாற்ற டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு தீர்க்கமாக ஆராய்ந்து 1.3.92 முதல் ரூ.350 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தியும், 1.3.93இல் மேலும் ரூ.100 உயர்த்தி ஒவ்வொருவருக்கும் சம்பளம் ரூ.600 ஆகக் கொடுக்கப்பட்டது. அதுவும் 1.4.94 முதல் ரூ.750 ஆக டாக்டர் புரட்சித்தலைவி அவர் களால் உயர்த்தப்பட்டிருக்கிறது. 25 மாதங்களில் ரூ.400 என்ற அளவில் ஊதிய உயர்வாகக் கொடுக்கும் வகையில் கூட்டுறவுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5 கோடி அளவில் கூடுதல் செலவாகும். இது தவிர, கருணைத் தொகையாக இந்தாண்டுப் பொங்கலுக்கு ரூ.200 வழங்கிட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை யிட்டார்கள்.

## கூட்டுறவுத் துறையில் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாண்புமிகு புரட்சித்தலைவி

அவர்களுடைய ஆணைக்கேற்ப, தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களில் துணி வெட்டுதல் மற்றும் தையற் கலை ஆடை தயாரிக்கும் கலை, கணிப்பொறிப் பயிற்சி, மின்சாரப் பணியாளர் ஆகிய பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு இலவசமாகத் தங்கும் வசதியும், இலவசமாகப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த நான்கு பயிற்சி வகுப்புகளிலும் 1993-94-ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டையில் 111 மாணவர்களும், பர்கூரில் 111 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இதே முறையில் பயிற்சி நடைபெறவிருக்கிறது. இதன் மூலமாகச் சுயவேலை வாய்ப்புப் பெருக்கத் திட்டத்திலும், புரட்சித்தலைவி ஆட்சி பெரும் பங்காற்றுகிறது எனப் பெருமிதம் கொள்ளலாம்.

இந்தப் பயிற்சிக் கேந்திரங்களை நடத்துவதற்குக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.150 இலட்சம் வழங்கிட, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குப் புரட்சித்தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார். இதற்கான செலவினங்களுக்காக ரூ.125 இலட்சத்திற்குக் குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்தத் தொகையை முதலீடு செய்யும் வகையில் கிடைக்கின்ற வட்டித் தொகையைக் கொண்டு இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பெற்று வருகின்றன. பர்கூரில் 'உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, ரூ.70.00 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டுகின்ற பணியும் தொடங்கி முடியும் தறுவாயில் உள்ளது.

### குறை தீர்க்கும் அமைப்பு

கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளிலுள்ள குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளை உடனடியாகப் போக்குவதற்காக, மாவட்டளவில் ஒரு குறை கேட்கும் அமைப்பு ஒன்றினை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளதையொட்டி, அதற்குரிய அரசு ஆணை வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மாண்புமிகு முதல்வர் தொழில் கடன் திட்டம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் தொழிற் கடன் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டு வாழ்வில் நலிவுற்றோருக்குத் தொழில் தொடங்குவதற்காக நகரக் கூட்டுறவு வங்கியின் மூலம் கடன் மிக எளிதில் கிடைக்க வழிவகை காணப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1992-93- இல் 1,42,447 பேருக்கு ரூ.68.23 கோடியும், 1993-94-இல் 1,89,492 பேருக்கு ரூ.83.72 கோடியும் கடன்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

நடப்பு நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 2 இலட்சம் பேருக்குத் தொழில் தொடங்குவதற்குக் கடன் வழங்கப்படவிருக்கிறது. இதில் 1992-93- இல் 62,980 பெண்கட்கு ரூ.23.05 கோடியும், 1993-94- இல் 1,00,707 பெண்கட்கு ரூ.38.67 கோடியும் தொழில் தொடங்கக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 'லேம்ப்' எனப்படும் மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்-லேம்ப் சங்கங்கள் 75,754 உறுப்பினர்களுடன் செயல்படுகின்றன. தற்போது இந்தச் சங்கம் வட்டியில்லாக் கடன்களைப் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு வழங்கி வருகின்றன. புரட்சித் தலைவியின் அரசு 1991-92-இல் ரூ.91.50 இலட்சம், 1992-93-இல் ரூ.78.28 இலட்சம், 1993-94-இல் ரூ.79.11 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 1994-95-இல் ரூ.78.99 இலட்சம் மானியம் வழங்க உத்தேசித்துள்ளது.

### விவசாய விளைபொருட்கள் விற்பனை

மாநிலம் முழுவதும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களுக்கு விவசாய விளைப்பொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்ய உதவியுள்ளது. 1991-92- இல் ரூ.325.39 கோடி, 1992-93- இல் ரூ.389.48 கோடி, 1993-94- இல், ரூ.428.32 கோடி மதிப்புள்ள விவசாய விளைப்பொருட்களை விற்பனை செய்யவும் தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

### விவசாய இடுபொருள் விநியோகம்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிக்கு 1991-92- இல் ரூ.168.04 கோடியும், 1992-93- இல், ரூ194.64 கோடியும், 1993-94- இல் ரூ.169.63 கோடி மதிப்புள்ள வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

### நுகர்பொருள் விற்பனை

கூட்டுறவு மூலம் 1991-92- இல் ரூ.1267.35 கோடியும், 1992-93- இல் ரூ.1236.10 கோடியும், 1993-94-இல் ரூ.1400.10 கோடி மதிப்புள்ள நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் காமராசர் மாவட்டம், தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம் -இராமசாமி படையாட்சியார் மாவட்டம் உட்படக் கடந்த சில ஆண்டுகளாய் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் காமராசர் மாவட்டத்தில் ரூ.862.51 இலட்சம் மதிப்பீட்டிலும், தென்னார்க்

காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம்- இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ.1508.207 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 1993-94-இல் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. மேலும் திருவண்ணாமலை சம்புவராயர் தருமபுரி மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். படிப்படியாக இத் திட்டம் இராமநாதபுரம், பெரியார், புதுக்கோட்டை, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## கூட்டுறவுப் பயிற்சி

தமிழ்நாட்டில் 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் தத்துவமும் வரலாறும், கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவுத் தணிக்கை, கூட்டுவுக் கணக்கியல், கூட்டுறவு வங்கியியல், கூட்டுறவு மேலாண்மை, கூட்டுறவுக் கடன், கடனற்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய எட்டுப் பாடங்களைப் பட்டயப் பயிற்சிக்கும், அஞ்சல் வழிப் பயிற்சிக்கும் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

1992-93- இல் 3000 பேர் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும், 3336 பேர் அஞ்சல் வழிக் கூட்டுறவுப் பயிற்சிக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 1993-94- ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியினை அதிக அளவில் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பெருகின்ற வகையில் 4336 பேர் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும், 5274 பேர் அஞ்சல் வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

## வானொலி கூட்டுறவுக் கல்விக் கூடம்

பள்ளிப் பருவத்திலேயே வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் அனைத்துத் துறைகளிலும் அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்டவர்கள் என்பதை நாடு அறியும். மாணவப் பருவத்திலேயே கூட்டுறவுப் பற்றிய அடிப்படை கருத்துக்களைக் கற்பிக்க வேண்டுமென்ற அடிப்படையில் திருச்சி வானொலி மூலம் 15.1.94 முதல் 31.3.94 வரை கூட்டுறவுப் பாடம் கற்பிக்கப்பட்டது.

14,000 மாணவர்கள் இப்பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டார்கள். 12 பாடங்கள் பற்றி தினம் 5 முதல் 7 நிமிடம் வரை நடத்தப்பட்டது.

பாடம் முடிந்த பின்னர் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. வானொலி மூலம் கேள்விகள் ஒலிப்பரப்பப் பட்டன. பதில் தபால் மூலம் பெறப்பட்டு 28 தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவருக்குப் பரிசுகள் வழங்கப்படும். 1994-95-ஆம் ஆண்டில் இத்திட்டம் மற்ற வானொலி நிலையங்கள் மூலமும் செயல்படுத்தப்படும்.

## கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணி:

கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறையைச்சார்ந்த நிறுவனங்கள் அனைத்திற்குமான கட்டுமானப் பணிகளுக்கெனப் பிரத்தியேகமாக மாநிலம் முழுமைக்குமாகக் கண்காணிப்புப் பொறியாளர் (கட்டுமானம்) நியமிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கேற்ப மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 1991-92-இல் 121 வேலைகள் ரூ.6.92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றன. 1992-93- இல் 140 வேலைகள் ரூ.6.38 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றன. இவற்றில் 139 வேலைகள் முடிவுற்றன. 1993-94- இல் 120 வேலைகள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டில் 150 வேலைகள் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளன.

பல்வேறு ஆக்கப் பூர்வமான பணிகளைக் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மேலான அரிவுரைகளோடும், ஆணைகளோடும், கூட்டுறவுத் துறையின் மூலம் செயல் படுத்தப்பட்டு வருவதைத் தமிழகத்து மக்கள் மிகவும் நன்றாக அறிவார்கள், தமிழகத்து மக்கள் மேலும் பல பயன்களைப் பெறுகின்ற வகையில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

## தேவை அடிப்படையிலான கடன்களை அதிகரித்தலும், இக்கடன் தொகைகளுக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதங்களைக் குறைத்தலும்

தற்போது சிறு வணிகர்கள், பெட்டிக்கடை வியாபாரிகள் போன்றவர்களுக்குத் தேவை அடிப்படையினான கடன்களை மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்களைப் பெரும்பாலும் பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்போது இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகை அளவான 500 ரூபாயை 750 ரூபாயாக அதிகரிக்கவும், அதற்காக வசூலிக்கப்படும் வட்டி வீதத்தை 16 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதமாகக் குறைக்கவும் ஆணையிடப் பட்டுள்ளது.

## நகைக் கடன் தொகைக்கான உயர் அளவுக் கடன் தொகையை அதிகரித்தல்

கடன் நிவாரணச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முறையான நிதி நிறுவனங்கள் அல்லாதவை கடன் வழங்குவதைக் குறைத்துக் கொண்டன.

வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களின் கோரப்பிடியில் அவசரக் கடன் தேவைகளைச் சமாளிக்கவும், மாநிலம் முழுவதிலும் உள்ள கடன் கூட்டுறவுச் சங்கங்கள், நகைக்கடன்களை அடமானத்தின் பேரில் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நகைகளை அடமானம் வைப்பதன் பேரில் தற்போது ஒருவருக்கு வழங்கப்படும் உயரளவுக் கடன் தொகை ரூ.25,000. ஒரு சவரனுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.2,200 ஆகும். வழங்கப்படும் உயரளவுக் கடன் தொகையை ரூ.40,000 ஆகவும், ஒரு சவரனுக்கு வழங்கப்படும் கடன் தொகையை ரூ.2,400 ஆகவும் அதிகரிக்கப்படுகிறது.

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகங்களை அமைத்தல்

கிராமப்புற மக்களுக்கு நகைக் கடன் வழங்க, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும்பொருட்டு மற்றும் திருடர்கள் அணுக முடியாத வகையில் நகைகள் பாதுகாப்பாக வைப்பதற்காகப் பெட்டகங்கள் 1994-95-இல் தெரிந்தெடுக்கப்பட்ட 450 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.225 இலட்சம் கூட்டுறவு வளர்ச்சி நிதிகளிலிருந்தும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தும் நடப்பாண்டில் மானியமாக ஒதுக்கப்படும்.

மேலும், 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அரசு நிதியிலிருந்து 150 தெரிந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.30 இலட்சம் கடனாக வழங்க வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 1993-94-இல் வரை இத்திட்டத்தின் கீழ் ரூ.100.95 இலட்சம் கடனாக 895 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

எனவே, 1994-95-ஆம் ஆண்டில் தெரிந்தெடுக்கப்பட்ட 450 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ள ரூ.225 இலட்சம் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தும் நடப்பாண்டில் மானியமாக ஒதுக்கீடு செய்யப் படும்.

### கூட்டுறவுத் துறை நடத்தக் கருதியுள்ள மாநில, மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள்

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி விளையாட்டுத் துறையில் ஒரு பொற்காலமாகும். தடகளப் போட்டிகளுக்கும், உடல் திற விளையாட்டுகளுக்கும் ஊக்கமளிப்பதற்காக மாநில அரசு அண்மையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த அணுகுமுறைக்கு இணங்க, அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 47,067 பணியாளர்களும் பங்கேற்பதற்காக ஒவ்வோராண்டும் மாநில அளவிலான தடகளப் போட்டிகளை நடத்தவும், சிறந்த விளையாட்டு அணியினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில் சிறந்த வேலைப்பாடுகள் அடங்கிய சுழற்கோப்பை ஒன்று வழங்கப் படும்.

### கூட்டுறவுக் கோட்பாடுகளை விளக்குகின்ற திரைப் படங்களைத் தயாரித்தல்

கூட்டுறவு இயக்கம் அடித்தள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மாபெரும் இயக்கமாகும். கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு வளர்ச்சி தற்போது கூட்டுறவு இயக்கம் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற மகத்தான சேவை குறித்தும் விளக்குகின்ற 15 நிமிடங்கள், 30 நிமிடங்கள் கால அளவுடைய இரண்டு திரைப்படங்களைத் தயாரிப்பதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அதனுடைய பிரச்சார விளம்பர நடவடிக்கைகளை மேலும் முடுக்கி விடக் கருதியுள்ளது. இத்திரைப் படங்கள் அந்தத் துறையில் பிரபலமாக உள்ள வல்லுநர்களின் மூலம் தயாரிக்கலாம். அவை அண்மை ஆண்டுகளில் கூட்டுறவினால் அடைந்த வெற்றிகளைப் பற்றிய சில விவரங்களை விளக்குவதாக இருக்கும்.

### நியாயவிலைக் கடைகளுக்கு விளிம்புத் தொகையை அதிகரித்தல்

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் நட்டத்தில் இயக்கும் நிலையினைத் தவிர்க்க, கிராம நியாயவிலைக் கடைகளுக்கு 1993-94- ஆம் ஆண்டில் ரூ.1260 இலட்சங்கள் மானியமாக அரசு ஒப்பளித்துள்ளது. நியாயவிலைப் பொருட்கள் வழங்கும் முதன்மை மற்றும் இணைப்புச் சங்கங்களுக்கு இதுவரை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் அரிசியைப் பொறுத்தமட்டில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.10 வீதம் விளிம்புத் தொகையாகக் கிடைத்து வந்தது. டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப நியாயவிலைக் கடைகள் நட்டத்தில் இயங்கும் நிலையை தடுக்கும் வண்ணம் 1994-95-ஆம் ஆண்டில் இந்த விளிம்புத் தொகை இருமடங்காக அதாவது குவிண்டாலுக்கு ரூ.20 ஆக உயர்த்தப்படும்.

பார்புகழும் சாதனைகளைக் கூட்டுறவுத் துறை நாள்தோறும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் உருவாக்கி வருகிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்கிற சித்தாந்தம் தமிழகத்தில் இன்றைய தினம் வளர்ந்தோங்கி உள்ளது என்பது வெள்ளிடையாகும்.

# ஏற்றமிகு நகராட்சி நிர்வாகமும்,வளமிகு வாழ்வளிக்கும் குடிநீர்த் திட்டங்களும்

## மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
## திரு டி.எம். செல்வகணபதி

வரலாறு காணாத வகையில் தமிழக மக்களின் பேராதரவைப் பெற்று,நமது இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தின்ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்றாண்டுகள் முடிவுற்றுள்ளன. என்றுமுள செந்தமிழில் இனிமையும் ஏற்றமிகு ஆட்சித் திறனும் அறிவாற்றலும் கொண்டு தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் நடத்தி, நல்லாட்சி செலுத்தும் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் தமிழகம் இமயம் போல் கீர்த்திபெற்று வருகிறது. இந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தின் தன்மானத்தை உயர்த்தி, இந்திய அளவில் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் காணச்செய்துள்ளார், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

அரசியல் சாதுரியமும், தொலை நோக்குப் பார்வையும் மக்களின் நலனே கருத்தாகக் கொண்ட பொதுநல நோக்கமும் கொண்ட புரட்சித்தலைவி அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் இயங்கும் தமிழக அரசு, இந்த மூன்றாண்டுகளில் ஆற்றிய அளப்பரிய சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள்ள இயலும். பல்வேறு துறைகளில் வியத்தகு முன்னேற்றம் எய்தியுள்ளது போன்றே நகராட்சி நிர்வாகத்திலும் குடிநீர் வழங்கு துறையிலும் எழுச்சிமிகு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் மிகவும் குறிப்பிடத் தக்க சாத்னைகள் பின்வருமாறு:

(1) அரசியல் அமைப்பு 74 வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கு இணங்க தமிழ்நாடு



மாவட்ட நகராட்சிகள் சட்டம், சென்னை, மதுரை,கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டங்களில் தகுந்த திருத்தங்கள் கொண்டுவரப் பெற்றுள்ளன.

(2) இதுவரை பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் இயங்கி வந்த பேரூராட்சிகள் நகராட்சிகள் சட்டம் 1920-ன் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

(3) 1.06.1994- லிருந்து திருச்சி திருநெல்வேலி மற்றும் சேலம் நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

(4) சென்னையில் நிலவிய கடுமையான குடிநீர்த் தட்டுப் பாட்டைக் கருத்திற்கொண்டு, 1993 ஆகஸ்ட் திங்கள் "புதிய வீராணம்" திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### எழில்மிகு சென்னை

சென்னை மாநகரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக ஐந்து ஆண்டுகளில் ரூ.1250 கோடி செலவில் அமல்படுத்துவதற்கான "எழில்மிகு சென்னை2000" என்னும் பெருந் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டை ரூ.1250 கோடியிலிருந்து ரூ,4000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை மாநகராட்சியின் திட்டப் பணிகளுக்கான மதிப்பீடும் ரூ.135 கோடியிலிருந்து ரூ.435 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

"எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி செயல்படுத்த வேண்டிய பணிகள் மும்முரமாகத் தொடங்கி நடைபெற்றுவருகின்றன.

மூலதனச்செலவுப் பணிகளுக்காக, சென்னை மாநகராட்சிக்கு 1990- 91-ல் செலவிட்ட தொகை ரூ.26.96 கோடி மட்டுமே ஆகும். ஆனால் 1994-95-இல் இச்செலவு ரூ.143 கோடி அளவுக்கு அதிகரித்து உள்ளது.

சென்னை மாநகராட்சியின் வருவாய் 1990- 91-ல் ரூ.79 கோடியாக இருந்தது. 1993- 94-இல் ரூ.189.00 கோடியாக அதிகரித்து உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் (1994-95) வருவாய் ரூ.204.00 கோடியாக அதிகரிக்கும்.

### மெரினா மற்றும் எலியட்ஸ் கடற்கரை மேம்பாடு

உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை என்று பெயர் பெற்றது நம் மெரினா கடற்கரை. ஒரு கோடி ரூபாய் செலவில் மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலையிலிருந்து கலங்கரை விளக்கம் வரை உள்ள நடை

பாதையில் பளிங்குக்கற்கள் பதித்தல், வாகனங்கள் நிறுத்தும் பகுதிகளை மேம்படுத்துதல், அழகிய கைப்பிடிகள் கொண்ட அடைப்புகள் அமைத்தல் ஆகிய பணிகள் தற்போது விரைவான முறையில் நடைபெற்று வருகின்றன.

ரூ.45 லட்சம் செலவில் ஐந்து உயர் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு மெரினா கடற்கரைப் பகுதி ஒளியூட்டப்பட்டுள்ளது.

காமராஜர் சாலையை ரூ.5.00 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரிட் சாலையாக மாற்றும் திட்டம் இவ்வாண்டு செயல் படுத்தப்பட்டுள்ளது.

ரூ.68 இலட்சம் செலவில் எலியட்ஸ் கடற்கரையை அழகு படுத்தும் பணி நிறைவேற்றப் பட்டுள்ளது.

மெரினா கடற்கரையிலுள்ள நீச்சல் குளம் ரூ.60 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டு பொதுமக்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள்.

### மதுரை மாநகராட்சி

தமிழகத்தில் சென்னை மாநகரத்திற்கு அடுத்தப்படியாக உள்ள பெரிய நகரம் மதுரை மாநகர் ஆகும். சுற்றுலா மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த இந்நகரில் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது மதுரை மாநகராட்சியின் தலையாய கடமையாகும். ரூ.602.00 இலட்சம் செலவில்190 கி.மீ. நீளச்சாலைகள் தார்ச்சாலைகளாக மேம்படுத்தப் பட்டுள்ளது. ரூ.80.86 இலட்சம் செலவில் புதிய பள்ளிக் கட்டடங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதேபோன்று ரூ.79.67 இலட்சம் செலவில் மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடங்கள் மேம்படுத்தப் பட்டுள்ளன. நகரில் சாலைகளின் சந்திப்புகளில் ஒளி உமிழும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டு, ரூ.33.78 இலட்சம் செலவில் 1289 விளக்குகள் அமைக்கப்பட்டுள்



■ எந்த வசதியும் தொட முடியாத தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் தேவையான வசதிகளைப் பெருக்குவதும், அங்குள்ள கிராம மக்களுக்கு வாழ்வு வளங்களை உருவாக்கி வழங்குவதும் எங்களது அரசின் தலையாய கடமை ஆகும்.

ளன. இதேபோன்று நகரின் விரிவாக்கப் பகுதிகளில் 2027 குழல் விளக்குகள் ரூ.17.98 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளன. நகரின் மையப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் ஏற்கெனவே இருந்த பெரியார் பேருந்து நிலையத்தைச் சீரமைக்கும் பணியுடன், புதிய பேருந்து நிலையங்கள் ஆரப் பாளையம் மற்றும் பழங்காநத்தம் பகுதிகளில் துவக்கப்பட்டன. கீழ்க்கண்டவாறு பேருந்து நிலைய அபிவிருத்திக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு முடிக்கப்பட்டன.

| | |
|---|---|
| பெரியார் பேருந்து நிலையம் | 30.00 இலட்சம் |
| பழங்காநத்தம் | 29.00 இலட்சம் |
| ஆரப்பாளையம் | 12.00 இலட்சம் |
| அண்ணா பேருந்து நிலையம் | 5.00 இலட்சம் |

இதுதவிர மேலூர் சாலையில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்கும் பணி ரூ.20 கோடி செலவில் திட்டமிடப்பட்டு 21.10.93 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பேருந்து நிலைய முதல் கட்டப் பணிகள் விரைவாகத் தற்போது நடை பெற்றுக்கொண்டு வருகின்றன.

சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதோடு பொழுதுபோக்கு அம்சத்தையும் மேம்படுத்தும் வண்ணம் 1993-94-இல் 22 பூங்காக்கள் ரூ.23.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன. இது தவிர சிறுவர்களுக்கெனப் பிரத்தியேகமாக ரூ.40 இலட்சம் செலவில் ராஜாஜி பூங்கா மேம்படுத்தப்பட்டு, தற்போது பணி முடிவடையும் நிலையில் உள்ளது. மாநகராட்சி பணிகளைத் துரிதமாகச் செய்யவும், வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்தவும் சொத்து வரி வசூலிக்கும் பொருட்டு வெளியிடப்படும், கேட்பு அறிவிப்புகள் துரிதப்படுத்த ரூ.29 இலட்சம் செலவில் கணிப் பொறி மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### கோயம்புத்தூர் மாநகராட்சி

கோவை மாநகராட்சியில் சுமார் 614.00 கி.மீ. நீளச் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. 1993- 94-ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 601 இலட்சத்தில் சாலைகள் பராமரிப்பு பணி நடைபெற்றுள்ளது. ரூ.802 இலட்சம் செலவில் புதிய பள்ளிக்கட்டடங்கள், தாய்சேய் நல விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மாநகராட்சிக்குச் சொந்தமான தாய்சேய் நல விடுதிக்கட்டடங்கள் ரூ.90 இலட்சம் செலவில் புதுப் பிக்கப்பட்டுள்ளன. பழமை வாய்ந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட விக்டோரியா டவுன்ஹால் கட்டடம் ரூ.8.50 இலட்சம் செலவில் நவீன இருக்கை வசதி மற்றும் பொது மக்கள் உபயோகத்திற்குப் புதுப்பிக் கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் வருவாயைப் பெருக்க நவீன மயமான மின்னணு பளுதூக்கிப் பாலம் மேட்டுப்பாளையம் ரோடு மாநகராட்சிப் பணிமனை அருகில் ரூ.8.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. வ.உ.சி.பூங்கா ரூ.10 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகளுடன் நவீனமாக்கப்பட்டது. ரூ.20 இலட்சம் செலவில் நகரப் பேருந்து நிலையம்முறையே மிதிவண்டி நிலையம் மற்றும் பயணிகள் அமர்வதற்கு நாற்காலிகள் பொருத்தப்பட்டுள்ளன.

ரூ.15 இலட்சம் செலவில் மாநகராட்சி மத்தியப்பேருந்து நிலையத்தில் ஆஸ்பால்டிக் கான்கிரீட் சாலைகள் அமைத்தும், சுவர்க் கடிகாரங்கள் அமைத்தும் மற்றும் சாலையோரப் பூங்காக்கள் அமைத்தும் அபிவிருத்தி செய்யப் பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் இம் மாநகராட்சியில் மின் விநியோகம் பகுதியில் 8,695 தெரு விளக்கு களும், இம்மாநகராட்சி மின்துறை யாலும் சேர்க்கப்பட்ட பகுதியில் 7,791 தெரு விளக்குகளும் மின் வாரியத்தாலும் பராமரிக்கப் படுகின்றது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நலி வடைந்த நகர்ப்புற மக்களுக்கு 25 சதவித மானியத் தொகையுடன் கூடிய கடன் தொகை சிறு தொழில்கள் தொடங்க வங்கிகள் மூலம் 525 நபர்களுக்கு ரூ.12.86 இலட்சம் மானியமாகவும் ரூ.51.06 இலட்சம் கடனாகவும் வழங்கப் பட்டுள்ளது.

### நகராட்சிகள்:

சேலம், திருச்சி, மற்றும் திருநெல்வேலி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கூத்தாநல்லூர் நகரப்பஞ்சாயத்து 1.4.94 முதல் நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. உசிலம் பட்டி, குளித்தலை மற்றும் வந்த வாசி நகரப் பஞ்சாயத்துகளை நகராட்சியாக உயர்த்த முன்னிலை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நகராட்சிகள், மாநகராட்சிகளின் முக்கிய வருமானம் சொத்து வரியேயாகும். அனைத்து நக ராட்சிகளும், நகரியங்களும் 1.10.93 முதல் சொத்துவரியைத் திருத்திய மைக்கப்பட்ட சொத்துவரியினால் கிடைக்கும் கூடுதல் வருமானம் கொண்டு தங்கள் பணிகளை நல்ல முறையில் செயல்படுத்த வழி வகுக்கும்.

1.4.92-லிருந்து தொழில்வரியைத் திருத்தியமைப்பதற்கான சட்டத் தைச் சட்டமன்றம் நிறைவேற்றி யுள்ளது.மாதம் ஒன்றுக்கு ரூ.1500/ க்குக் கீழ் ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சாலைகளை மேம்படுத்து வதற்குப் பாதிகடன் மற்றும் பாதி மானியம் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் நகராட்சி களுக்கு ரூ.150. 00 இலட்சம் மான்யமும் ரூ.150. 00 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

சாலை மேம்பாடு முழுகடன் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 49 நகராட்சிகளுக்கு ரூ.130 இலட்சம் கடனாக அளிக்கப் பட்டுள்ளது.

சிறப்புத் திட்டத்தின்கீழ் 1993-94-ஆம் ஆண்டிற்குச் சாலை பழுது பார்ப்பதற்கு 63 நகராட்சி களுக்கு ரூ.300 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது.

ஹட்கோ கடன், மைய அரசு மான்யம், நகராட்சிகளின் பங்குத் தொகை ஆகிய ஆதாரங்களைக் கொண்டு 1991 ஜூன் முதல் இன்று வரை "குறைந்த செல விலான கழிப்பறை கட்டும் திட்டத்தின்" கீழ் ரூ.18.90 கோடி செலவில் 68,633 தனியார் கழிப் பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நேரு வேலைவாய்ப்புத் திட்டத் தின்கீழ் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் நிகழ்த்தியுள்ள சாதனை விவரங்கள் பின்வருமாறு:

அ) நகர்ப்புறங்களில் நலிவுற்ற மக்களுக்குச் சிறு தொழில் மூலம் சுய வேலைவாய்ப்புக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 45,186 நபர்களுக்குச் சிறு தொழில்கள் நிறுவ ரூ.755.45 இலட்சம் மானியமும் ரூ.2,240.76 இலட்சம் வங்கிக் கடனுதவியும் அளிக்கப் பட்டுள்ளது.

ஆ) பொதுப்பணிகளைச் செய் வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டத்தின்கீழ் 18.04 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக் கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ரூ.985.75 இலட்சம் செலவில் 3,908 வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன.

இ) குடியிருப்பு மேம்பாட்டின் மூலம் வேலைவாய்ப்பினை அளித்தல் என்னும் திட்டத்தின் கீழ் 31.3.94 வரை, 83,768 குடியிருப்புகள் மேம்படுத்தப்பட்டு 53.30 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி முடித்தவர்களும், பயிற்சி பெறுபவர்களும் சேர்த்து மொத்த எண்ணிக்கை 7,991 ஆகும்.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து உதவிபெற்ற 59 நகராட்சிக்கும், 3 மாநகராட் சிக்கும் மொத்தம் ரூ.116.10 கோடி அளவிளான வருவாய் தரத்தக்க மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொண் டுள்ளன.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14.4.1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. அது இத்தனை ஆண்டுக் காலங்களில், குடிநீர் வடிகால் திட்டங்களுக் கான ஆய்வுப் பணிகளை ஏற்றல், திட்டங்களை வடிவமைத்தல், திட்டங்களைச் செயலாக்குதல்



### தன்னம்பிக்கை

மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாட்டையவேண்டுமானால், தன்னம் பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

ஆகிய பணிகளில் சிறப்பான முன்னேற்றம் எய்தியுள்ளது. இவ்வாரியம், விமானத்திலிருந்து ஆய்வுசெய்து வரைபடம் தயாரித்தல் தொலையுணர்வு போன்ற வகைகளில் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வருகிறது. வாரியம் ஏற்றுக்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக, இம்மாநிலத்தின் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் முற்றிலுமாகக் குடிநீர் வழங்குவது என்னும் குறிக்கோளை நோக்கி தமிழகம் சீராக முன்னேறிச் செல்கிறது.

இந்திய அரசின் கோட்பாடுகளுக்கிணங்க 1992-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி, குடிநீர் வசதிப்பெறாத 1,216 குடியிருப்புகளுக்கும் விரைவில் குடி நீர் வசதி செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளைப் பொறுத்த வரை கடந்த மூன்று ஆண்டுகளில் 11,679 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்தம் ரூ.228.12 கோடி செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டது. இதனால் 74.78 இலட்சம் மக்கள் பயன்பெற்றனர்.

நகரப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்களின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூ.86.63 கோடி செலவில் 36 நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 13.31 இலட்சமாகும்.

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல்லை ஆதாரமாகக் கொண்டு 2 நகராட்சிகள் 14 பேரூராட்சிகள் மற்றும் 4,152 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.400 கோடி மதிப்பீட்டில் சுமார் 26 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

திருச்சி நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.36.76 கோடி செலவில் 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், சேலம் மற்றும் கோவை வடிகால் திட்டங்களுக்காக ரூ.3.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் பழனி நகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், வீரபாண்டி பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம் மற்றும் இனாம் கரூர் பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.12.376 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டங்கள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சுமார் 9000 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் துப்புரவுத் திட்டத்திற்கு வகை செய்தல் ஆகிய திட்டப் பணிகளுக்காக ரூ.530 கோடி மதிப்பீட்டில் ஒரு செயல் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறும்போது சுமார் 40 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் ஆதாரங்கள் இல்லாத பகுதிகளில், ரூ.53 கோடி மதிப்பீட்டில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி, குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுப் பணிகள் கிட்டத்தட்ட 39 இலட்சம் மக்களின் தேவையை நிறைவு செய்வதற்காக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் இரண்டு முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அவை யாவன:

1. சென்னை குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டம்.

2. கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம் பணிகளின்கீழ் நீர் கொணர்ந்து வழங்கல் திட்டம்.

புதிய நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கும் பணிகள் தொடர்பாகக் கொடுதலையாற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

குடிநீர் விநியோக அமைப்பிலுள்ள பழைய அடைப்பு ஏற்பட்ட குடிநீர் முதன்மைக் குழாய்த் தொடர் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 101 கி.மீ. நீளத்திற்குப் புதிய குடிநீர் முதன்மைக் குழாய்கள் அமைக்கப்பட்டன. மேலும் 169 கி.மீ. நீளத்திற்குப் பழைய அடைப்பு ஏற்பட்ட குடிநீர் முதன்மைக் குழாய்கள் மாற்றப்பட்டன.



கடந்த மூன்று ஆண்டுகளில் திருவான்மியூர், வில்லிவாக்கம் மற்றும் சாலிக்கிராமம் ஆகிய பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், விருகம்பாக்கம், கொளத்தூர் மற்றும் வேளச்சேரி ஆகிய பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதிப் பணி நடைபெற்று வருகிறது. கோயம்பேடு, கானகம் மற்றும் தரமணி ஆகிய பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். கடந்த மூன்று ஆண்டுகளில் 389 கி.மீ. நீளத்திற்குக் கழிவு நீரகற்று முதன்மைக் குழாய்கள் அமைக்கப்பட்டன.

சென்னைக் குடிநீர் வாரியம், ஜப்பானிய நிதியுதவியுடன் சென்னை நகரில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுக் குழாய்களின் தரத்தினை மேம்படுத்தவும், தொழிற்சாலைகளுக்கு நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கவும் ரூ.572.09 கோடி மதிப்பீட்டிலான திட்டம் விரைவில் அமல்படுத்தபடவுள்ளது.

## சென்னைக் குடிநீர் வழங்கல்

1992-இல் வடகிழக்குப் பருவ மழையின்மையால் சென்னை மாநகரத்தில் 1993ல் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. இக்குடிநீர் தட்டுப்பாட்டினைச் சமாளிக்க, கூடுதலாக 2,664 பம்புகள் சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகளில் போடப்பட்டன. தினசரி 370 தண்ணீர் லாரிகளும், 486 டிராக்டர்களும் அமர்த்தி மாநகரிலுள்ள 7,005 நீர்த்தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டன. மேலும் நெய்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலிருந்தும் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவந்து விநியோகம் செய்யப்பட்டு பிரச்சினை சமாளிக்கப்பட்டது. 1.4.94லிருந்து தினசரி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

## கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்

சென்னை நகரத்திற்குக் கிருஷ்ணா குடிநீர் 1995 ஜூன் முதல் வழங்க வேண்டும் என்று அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உலக வங்கி உதவியுடன் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறைவேற்ற இருக்கிறது. குடிநீர் வழங்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் 1991-92-இல் தொடங்கப்பட்டு நல்ல முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது.

## புதிய வீராணம் திட்டம்

சென்னையில் நிலவிய கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு 1993 ஆகஸ்டு திங்களில் "புதிய வீராணம்" திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர், தற்போதுள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு வழங்கப்படும். உலக வங்கி இப்பெருந்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. வீராணம் ஏரியிலிருந்து கொண்டுவரப்படும் நீர் தற்போதுள்ள குடிநீர்ப் பகிர்வு முறை அமைப்பின் மூலம் வழங்கப்படும். இத்திட்டம் 1996 மார்ச் திங்களில் நிறைவுபெறும்.

# ஒவ்வொரு நாளும் முன்னேற்றம்தான்!



**பொருளாதார வளர்ச்சிப் பணிகளிலும் சரி; தொழில் வளர்ச்சித் திட்டங்களிலும் சரி; தமிழகத்திற்கு இனி தேக்க நிலை எப்போதும் இருக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி ஒவ்வொரு நாளும் முன்னேற்றம்தான் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.**

**எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும், இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங்களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மையான வளர்ச்சியை நாம் அடைய முடியும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில் நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான், வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தியுள்ளோம்.**

**நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியாவிலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடுதான் என்று, மைய அரசே பாராட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.**

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.**

# ஆதிதிராவிடர் வாழ்வில் மறுமலர்ச்சி!

## மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
## திரு எம். ஆனந்தன்

**1991** ஜூன் திங்களில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடிய நல்ல பல திட்டங்களைத் தீட்டி மின்னல் வேகத்தில் அத் திட்டங்களை நிறைவேற்றி தமிழக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து, இதயதெய்வத்தின் ஆட்சியின் பெருமையை வெளிக்காட்டும் வண்ணம் நடைபெற்ற இடைத் தேர்தல்கள் அனைத்திலும் எதிரிகளைப் புறமுதுகிட்டோடும் வண்ணம் மக்கள் செல்வாக்கையும் பெற்று, என்றும் எங்களின் தலைவி, என்றும் எங்களின் முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவிதான் என்பதைத் தமிழகத்திலுள்ளோர் மட்டுமல்லாது, அகில இந்தியாவே அறியும் வண்ணம் மக்கள் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தியதன் வாயிலாக மக்கள் சக்தியின் மாபெரும் சக்திதான் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

கடந்த மூன்று ஆண்டுகாலப் பொற்கால ஆட்சிக்கு மக்களால் அளிக்கப்பட்ட நற்சான்றுதான் சமீபத்தில் கிடைத்த இடைத் தேர்தல்களின் வெற்றிகள் ஆகும். சிங்கத்தை எதிர்த்து நிற்க



எவருமுண்டோ இவ்வுலகில், அதுபோல் எங்கள் தலைவியின் தலைமைக்கு நிகர் எவருமில்லை என்பதைத்தான் தமிழக மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தகைய வெற்றிக்குக் காரணம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் மூன்றாண்டுக் காலம் அறநெறி நின்று புரிந்த செங்கோலாட்சிதான்.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திடல் வேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உன்னத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தீட்டிய திட்டங்கள், பலவற்றினால், பல்லாண்டுக் காலமாகச் சமுதாயத்தின் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்டு, வறுமையில் வாடிய ஆதிதிராவிட, ஏழை எளிய மக்கள் வாழ்வில் முன்னேற்றம் கண்டு சமுதாயத்தில் மற்றவர்களோடு சம அந்தஸ்து பெறும் அளவுக்கு அவர்தம் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் 5.6 கோடி மக்கள் தொகையில் ஐந்தின் ஒரு பங்கு ஆகிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தரவும் பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தாலும் அம்மக்கள் வாழ்வில் சீரிய முன்னேற்றம் காண கல்விதான் அடிப்படைத் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்து அம் மக்களின் கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி அதன் மூலம் அவர்கள் பொருளாதார மேம்பாடும் சமுதாயத்தில் சம அந்தஸ்தும் பெறும் பொருட்டு இவ்வரசு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்ற கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் ஆதி

திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்க்கு இலவசக் கல்வி, உதவித்தொகை, ஊக்கப் பரிசுகள், இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடை போன்ற பல்வேறு வசதிகள் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகள் தவிர, இத்துறையில் நேரடி நிர்வாகத்தில் 1225 பள்ளிகள் மற்றும் 952 விடுதிகள் இயங்கி வருகின்றன. பள்ளி மற்றும் விடுதி மாணவ, மாணவியரின் கல்வித்தரம் உயர பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுத்துள்ளன.

இப்பள்ளிகளில் 2.58 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இவ்விடுதிகளில் 71,690 மாணவ, மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர்.

### பள்ளிகளின் நிலையை உயர்த்துதல்

ஆதி திராவிடர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி, 1992-93-ஆம் ஆண்டில் 2 நடுநிலைப் பள்ளிகள உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. அதேபோல் 1993-94-ஆம் ஆண்டில் 13 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளி களாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் களாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த் தப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவி யரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு பலமுனைத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்ய சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளாக அரசுப் பொதுத் தேர்வுக்கு இணையாக இத்துறையின் மூலம் ஒரு முன்னோடிப் பொதுத் தேர்வு நடத்தப்பட்டு விடைத் தாள்கள் மைய மதிப்பீட்டு முறையில் (Central Valuation) திருத்தப்பட்டு மாணவர்களின் திறன் ஆய்வு செய்யப்பட்டது. குறைவான மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியருக்கு அந்தந்தப் பாடங்களில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வாராந்திரத் தேர்வுகள் நடத்தப்பட்டன. மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு "சிறப்பு வழிகாட்டிகள்" அச்சிடப்பட்டு 22,600க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு உரிய நேரத்தில் இலவசமாக வழங்கப்பட்டது.

இத்திட்டம் சராசரி மாணவனும் எளிதாகத் தேர்வுக்குத் தயார்



செய்து கொள்ளப் பெரிதும் உதவியிருக்கிறது. இதன் காரணமாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் தேர்வு விகிதம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

1991- 92 ஆம் ஆண்டு 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இத்துறை பள்ளிகளில் ஒட்டு மொத்த சராசரி வெற்றி விழுக்காடு 34 சதவிகிதத்திலிருந்து 57 சதவிகித மாக உயர்ந்துள்ளது. இது மேலும் உயர்ந்து 1992-93 இல் 70 விழுக் காட்டினை எட்டியுள்ளது.

12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இத்துறைப் பள்ளிகளில் ஒட்டு மொத்த சராசரி வெற்றி விழுக்காடு 1991-92-ஆம் ஆண்டில், 38 சதவிகிதத்திலிருந்து 59 சத விகிதமாக உயர்ந்தது. 1992-93-ஆம் ஆண்டில் இது 62 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களில் கல்வி அறிவைப் பெருக்கவும், இவர்களது சிந்தனைகள் செயல் பாடுகளைச் செம்மைப்படுத்தவும் பள்ளிப்பாடங்களை ஒட்டிய புத்தகங்கள் மட்டுமல்லாத அறிவு வளர்ச்சிக்கு உகந்த நூல்கள் பலவும் கொண்ட நூல் நிலையங்களை 1991-92-ஆம் ஆண்டு ரூ.12.33 இலட்சம் செலவில் இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலும் இந்த அரசு அமைத்துள்ளது. புதிதாகத் திறக்கப்படும் விடுதிகள் அனைத்திலும் இந்த வசதிகள் செய்து தரப்படுகின்றன.

தங்கள் வீடுகளில் போதிய வசதியற்ற நிலையில் இருந்து கல்வி கற்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியருக்கு உதவும் வகையில் 1991-92- மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் கூடுதலாக 3,500 மாணவர்கள் பயன்பெறும் வகையில் மேலும் 70 புதிய விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1993-94ஆம் ஆண்டில் மேலும் 20 விடுதிகள் திறக்கப்பட்டு அவற்றின் மூலம் 1000 மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

1994-95ஆம் ஆண்டில் மேலும் 20 மாணவ, மாணவியரில்லங்கள் திறக்கப்பட உள்ளன. இதன் மூலம் 1000 மாணவ மாணவியர்கள் கூடுதலாகச் சேர்க்கப்படுவர். அவற்றுள் பெரும் பகுதி மாண வியர் விடுதிகளாக அமையும்.

அதுமட்டுமின்றி, ஏற்கெனவே இயங்கி வருகின்ற விடுதிகளில் 1991-92 , 1992-93-ஆம் மற்றும் 1993-94-ஆம் ஆண்டில் கூடுதலாக 3000 மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 1994-95ஆம் ஆண்டில் மேலும் 500 மாண வர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள இவ்வரசு முடிவெடுத் துள்ளது.

இத்துறையின் கீழ் இயங்கும் எல்லா மாணவ, மாணவியர் விடுதிகளுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்ற சீரிய நோக்குடன்

இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு ரூ.8.30 கோடி செலவில் 34 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் ரூ.3 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.4.70 கோடி செலவில் 27 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு 1994-95-ஆம் நிதியாண்டில் ரூ.1.73 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களில் பயிலும், மாணவ, மாணவியருக்கு 1991-92-ஆம் நிதியாண்டில் ரூ.14 கோடி மற்றும் 1992-93ஆம் ஆண்டில் ரூ.15.31 கோடி உதவித்தொகையாக வழங்கப் பட்டுள்ளது. 1993-94ஆம் ஆண்டில் ரூ.18.07 கோடி உதவித் தொகையாக எட்டு இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1990-91இல் வழங்கப்பட்டதை விட 1991-92-ஆம் ஆண்டில் ரூ.2 கோடியும் மற்றும் 1991-92-இல் வழங்கப்பட்டதை விட 1992-93-ஆம் ஆண்டில் ரூ.1.31 கோடியும் அதிகம் வழங்கப் பட்டுள்ளது. 1992-93ஆம் ஆண்டை விட 1993-94ஆம் ஆண்டில் சுமார் 3 கோடி ரூபாய் அதிகம் செல விடப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் கீழ் எட்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

## சமூக பொருளாதார முன்னேற்றம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியின மக்கள் பிற சமூகத் தினர்க்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாகப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடும், பொருளா தாரத்தில் அவர்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடும் நமது முதல்வர், மாண்புமிகு



டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே 10 அம்சத் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் ஓர் அம்சமாக ஐந்து ஆண்டுகளில் 3.5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டு உதவிகளை வழங்க வேண்டும். 1991-92, 1992-93 மற்றும் 1993-94ஆம் ஆண்டில் 2.46 இலட்சம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

1994-95ஆம் ஆண்டில் 65,000 பேர் பயனடைவர்.

அடுத்து, ஏழை ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்கு 10,000 பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கவும், அக்கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கவும், எடுக்கப் பட்ட முடிவிற்கேற்ப இதுவரை 11,235 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1000 கிணறுகள் வெட்டப்படும்.

ஆதிதிராவிடர் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 5 ஆயிரம் பேருக்குத் தொழில் தொடங்க நிதியுதவிகள் செய்யப்படும் என்ற இலக்கினைத் தொடர்ந்து, 1993-94ஆம் ஆண்டு வரை 3,227 பேர்கள் டிராக்டர், லாரி, டாக்சி, ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர் களாகவும், ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற் சாலைகள், பின்னலாடைகள் தயாரிக்கும் ஆலைகள் போன்ற வற்றின் உரிமையாளர்களாகவும் இன்று உருவெடுத்துள்ளனர். 1994-95-ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்தின்கீழ் 1,500 நபர்கள் பயனடைய வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற ஆதிதிராவிட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து உதவும் வகையில் அவர்களுக்குக் கூடுதல் பயிற்சி அளிப்பதற்காகத் தக்க அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

மேலும், 5 ஆண்டுக் காலத்தில் 4 இலட்சம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது இலக்கினைத் தொடர்ந்து 1993-94 முடிய 5.32 இலட்சம் குடும் பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 75,000 குடும்பங் களுக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டு மென்ற இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இந்த 5 ஆண்டுக் காலத்தில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு கட்டித்தர வேண்டுமென்ற முடிவிற்கேற்ப, 1993-94ஆம் ஆண்டு

வரை 83,158 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் மதிப்பினை ரூ.19,200 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. 1994-95ல் 25,000 வீடுகள் கட்டித் தரப்படும்.

குடிநீர் வசதியைப் பொறுத்த வரை ஒரு குடிநீர் வசதிகள்கூட இல்லாத ஆதிதிராவிடர் குடியிருப்புகளே தமிழ்நாட்டில் ஏதும் இல்லை என்ற நிலை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின் உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற 1993-94ஆம் ஆண்டில் 1,571 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. இவ்வாண்டில் 1,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சென்ற 1993-94ஆம் ஆண்டில் 30,000 வீடுகளுக்கு "ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு'' திட்டத்தின்கீழ் மின்விளக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 35,000 வீடுகளுக்கு மின்விளக்கு அளிக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு கணிப்பொறிப் பயிற்சி, ஆகாய விமானம் பராமரிப்புப் பயிற்சி, இராணுவம் மற்றும் காவல் துறையில் சேரப் பயிற்சி, தொலைபேசி, டெலக்ஸ் இயக்கப் பயிற்சி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி போன்ற பணிகளில் சேர இவர்களுக்கென ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தில் 60 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இந்த நிலையத்தில் பயிற்சி பெற்ற 63 நபர்கள் இப்பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு களுக்குத் தேவையான பாதை வசதி, இடுகாடு மற்றும் இடுகாட்டிற்குச் செல்லும் பாதை வசதி போன்றவைகளும் செய்து தரப்படுகின்றன. சென்ற மூன்று ஆண்டுகளில் இதற்கு ரூ.101.68 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு நிதியாண்டில் இதற்கு ரூ.51.23 இலட்சம் செலவிடப்படும்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 4 கூடங்களும், 1992-93-இல் 3 கூடங்களும், 1993-94-இல் 3 கூடங்களும் கட்டப்பட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென ரூ.36.21 இலட்சம் வழங் கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் இத்திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் செலவிடப்படும்.

ஆதிதிராவிடர் வாழ்வு வளம்பெற, ஒளிபெற பாடுபட்ட அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவாக ஒரு நினைவு மண்டபம் சென்னையில் கட்ட இவ்வரசு ரூ.5 கோடி அனுமதியளித்துள்ளது.

## பழங்குடியினர் நலம்

1991ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.74 இலட்சம் பழங்குடியினர் வசிக்கின்றனர்.

பழங்குடியின மக்களின் ஒட்டு மொத்தமான முன்னேற்றத்திற்கு கல்வியே அடிப்படையானது என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு இம்மக்களுக்கு 218 உண்டுறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இதில் 14,000க்கு மேற்பட்ட பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களின் கல்வி நிலை உயர புதிய உண்டுறைவிடப் பள்ளிகள் திறக்கும் திட்டத்தின் கீழ் 1991-92ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் உள்ள குட்டையூர் மற்றும் காக்காயனூர் என்ற சிற்றூர்களிலும், 1992-93இல் அதே மாவட்டத்தில் சோழகணை என்ற சிற்றூரிலும் உண்டுறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் 150 பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

1993-94-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு உண்டுறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மேலும் ஒரு உண்டுறைவிடப் பள்ளி திறக்கப்படும்.

போதிய வசதிகள் கூடிய பள்ளி மற்றும் இல்லக் கட்டடங்கள் கட்டும் நோக்குடன் இந்த அரசு 1991-92இல் 8 உண்டுறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.36 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் 1991-92-இல் பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளில் 8 புதிய பள்ளிகள் திறப்பதற்கு அடிப் படைத்தேவையான கட்டடங்கள் கட்ட ரூ.40 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் 7 பள்ளிகள் திறப்பதற்கு ரூ.49 இலட்சம் செலவில் கட்ட டங்கள் கட்ட அனுமதி வழங்கி யுள்ளது.

மாணவர் விடுதிகளுக்குத் தேவையான புதிய கட்டடங்கள் கட்டும் திட்டத்தின் கீழ் இவ்வரசு 1992-93ஆம் ஆண்டு ரூ.80.35 இலட்சம் செலவில் 4 மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-இல் மலை வாழ் மக்கள் முன்னேற்றத் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.15.76 கோடி ரூபாய் செலவில் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு, பால் மாடுகள் வளர்ப்பு போன்ற பல மேம் பாட்டுத் திட்டங்கள் செயல்படுத் தப்பட்டன. 1992-93-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.17.11 கோடி இம்மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகச் செலவிடப்பட்டுள்ளது. 1993-94இல் இத்திட்டத்தின் கீழ் ரூ.22.48 கோடி செலவிட வகை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.28.33 கோடி செலவிடப்படும். சென்ற மூன்று ஆண்டுகளில் 27,591 பழங்குடியினர் குடும்பங்கள், பொருளாதார மேம்பாடடைய உதவிகள் வழங் கப்பட்டுள்ளன. இவ்வாண்டு 9,000 குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்படும்.

இவ்வரசு பொறுப்பேற்றதும் பண்டைய பழங்குடியினர் மற்றும் சிதறி வாழும் பழங்குடியின மக்கள் வாழ்வு ஒளிபெறச் சிறப்புத்

திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இலவசமாகக் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், பொதி சுமக்கும் மட்டக்குதிரைகள் மற்றும் உழவு மாடுகள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன இத்திட்டத்தின் கீழ் 1992-93 வரை 1,683 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதற்கென ரூ.81.68 இலட்சம் மட்டும் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 315 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.47.31 இலட்சம் செலவில் 315 வீடுகள் கட்டித் தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 1993-94-ஆம் ஆண்டில் ரூ.83.33 இலட்சம் செலவில் 317 பழங்குடியினக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரவும், ரூ.32.06 செலவில் 490 குடும்பங்களுக்கு ஆடுகள், கறவை மாடுகள் வாங்கி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இவர்களின் நலனைப் பேணிக்காக்க 1994-95ஆம் ஆண்டில் ரூ.94.26 இலட்சம் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு இவர்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக, இவர்கள் கல்வி முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் நிதி கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. இது 1990-91இல் ரூ.50.02 கோடியாக இருந்தது. இது இன்று வளர்ந்து ரூ.95.94 கோடியை எட்டியுள்ளது. இத்துறைக்கான மொத்த ஒதுக்கீட்டைப் பொருத்தவரை 1990 – 91ஆம் ஆண்டில் ரூ.87.05 கோடியாக இருந்தது. இது உயர்ந்து வளர்ந்து இந்த ஆண்டு ரூ.161.40 கோடியை எட்டியுள்ளது. இது இந்த அரசு இம்மக்கள்பால் கொண்டுள்ள அக்கறைக்குச் சான்றளிக்கும். இப்பணி தொடரும்-வளரும்.

**ஏழை பெண் குழந்தைகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை உதவி**

நடப்பு ஆண்டிலிருந்து 2-ஆம் வகுப்புடன் இடையில் படிப்பை



நிறுத்திவிடும் ஏழ்மை நிலையிலுள்ள கிராமப்புற ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு 3ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் தேர்வு பெறும்போது ரூ.500 ஒட்டுமொத்த சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்க வகைசெய்யும் ஒரு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் தேசிய அளவில் பெண்கள் கல்வி விகிதம் குறைவாக உள்ள மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

மேலும், ஏழ்மையின் காரணமாக ஆதிதிராவிடப் பெண் குழந்தைகள் தங்கள் குடும்பத்திற்கு வருவாய் ஈட்டித்தரும் சொத்து எனப் பெற்றோர்களால் கருதப்பட்டு இக்குழந்தைகள் 5ஆம் வகுப்பிற்கு மேல் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையைப் போக்கி, இந்தப் பெண் குழந்தைகள் 6ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வழங்கும் ஒரு புரட்சிகரமான வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை மாநில முழுமைக்கும் செயல்படுத்தவும் நமது மாண்புமிகு முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் 30,000 ஏழை ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் பயனடைவர் என்றும், இதற்கு ரூ.3 கோடி செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**முப்பெரும் பொருளாதாரத் திட்டங்கள்**

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், பனியன் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துதல், இறால் வளர்ப்புப் பண்ணைகள் உருவாக்குதல், பட்டுப்புழு வளர்த்தல் ஆகிய முப்பெரும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களையும் அறிவித்துள்ளார்கள்.

அதன்படி கோவை மாவட்டம், திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையத்தின் ஒரு பனியன் தொழிற்பேட்டை நிறுவும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இங்கு ஒரு ஏக்கர் ரூ.70,000 என்ற விலையில் 95.93 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. நிலத்தைச் சமப்படுத்தவும், உட்புறச் சாலைகள் போடவும் ரூ.50,19,600 வழங்கப்பட்டுள்ளது. 7 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு ரூ.8.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர்த்தொட்டி கட்டவும், நீர் இறைக்க மோட்டார் பம்ப் அறை கட்டவும் ரூ.8.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், நல்லகவுண்டன் பாளையம் கிராமத்தில் அமையவிருக்கும் தொழிற்பேட்டைக்கு 116.04 ஏக்கர் நிலம் உடமை மற்றும் உரிமை மாற்றம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தைச் சமப்படுத்தவும், உட்புறச் சாலைகள் ஏற்படுத்தவும் ரூ.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 4 ஆழ்துளைக் கிணறுகள் எடுக்க ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 50 சதவிகிதத்திற்கு மேல் தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியப் பணிகளும் துரிதமாக முடிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, கூடிய விரைவில் உற்பத்தியைத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இறால் வளர்ப்புப் பண்ணைகள் சென்னை, கன்னியாகுமரி நீங்கலாக எட்டுக் கடலோர மாவட்டங்களில் 1,000 எக்டேர் பரப்பில் ஏற்படுத்தப்படும்.

இதுவரை நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் 51.34 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நபார்டு நிதியுதவி

அளிக்க முன்வந்துள்ளது. நபார்டு வரைமுறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 33,000 இறால் சினை முட்டைகளுடன் ஒரு பண்ணை ஏற்படுத்த ரூ.1.5 இலட்சம் ஆகிறது. இதுதொடர்பாக NSFDC ரூ.2 கோடி நிதியுதவி அளிக்க கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தையும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம்

இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி நீலகிரி நீங்கலாக எஞ்சிய இருபது மாவட்டங்களில் 80 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படும். இதில் பயனடைவோர் 6,000 ஆதி திராவிடர் நிலம் வைத்துள்ளவர் களாகவும், 4,000 ஆதிதிராவிடர் நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர் களாகவும் இருப்பர். இத்திட்டம் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது. முசுக் கொட்டை மரக்கன்றுகள் நடவும் பயனாளிக்குப் பயிற்சி அளிக்கவும் ரூ.18 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்களுக்கு நிலம் விலைக்கு வாங்கித் தரவும், பட்டுக் கூடு சேகரித்தல், முறுக்கேற்றுதல் போன்றவற்றிற்கு மையங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கு ரூ.2.14 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,209 நிலம் வைத்துள்ள பயனாளிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

## பிற பொருளாதார உதவித் திட்டங்கள்

'தாட்கோ' நிறுவனம் மூலம் எண்ணற்ற பொருளாதாரக் கடன் உதவித் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. சிறப்பு நடவடிக்கையாக நடப்பு ஆண்டில் தாட்கோ நிறுவனம் மூலம் மாவட்டத் தலைமையிடங்கள், நகராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகளில் 'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா வணிக வளாகங்கள்' என்ற பெயரில் 30 வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்படும். ஒரு வணி வளாகத்திற்கு 10 கடைகள் வீதம் 300 கடைகள் கட்டி ஆதிதிராவிடப் பயனாளிகளுக்கு வாடகைக்கு விடப்படும். இதற்காக ஒரு கடைக்கு ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.1.50 கோடி செலவாகும்.

அதேபோல். கிராமப்புற இளைஞர்களுக்குத் தாட்கோ நிறுவனத்தின் நேரடிப்பார்வையில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்க மாவட்டந்தோறும் 2000 சதுர அடி தளப்பரப்பில் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். இப்பயிற்சி மையங்களில் பயனாளிகளுக்குத் தங்கும் இடவசதியும் செய்து கொடுக்கப்படும். ஒரு பயிற்சி மையம் ஏற்படுத்த கட்டடப் பணிக்காக ரூ.6 இலட்சமும், கருவிகள், மூலப்பொருட்கள் பயிற்சி உதவித்தொகை போன்றவற்றிற்காக ரூ.2 இலட்சமும் ஆக ரூ.8 இலட்சம் வீதம் 23 பயிற்சி மையங்கள் ஏற்படுத்த ரூ.1.84 கோடி செலவாகும். நிலமற்ற 1000 ஆதிதிராவிட ஏழை விவசாயிகளுக்கு ரூ.1 கோடி செலவில் நிலம் கொடுத்து, அந்நிலம் சரியாகச் சீர்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகிறதா என்பதைத் தொண்டு நிறுவனங்கள் மூலம் உறுதி செய்து நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் ஒரு திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாலையோரங்களில் அமர்ந்து வெய்யில் என்றும், மழை என்றும் பாராது, காலணிகள் தைத்து விற்று தங்களது பிழைப்பை நடத்தி வருகின்ற ஏழை அருந்ததிய மக்களுக்கு 100 சதவிகித மானியத் துடன் ரூ.10,000 மதிப்பீட்டில் இலவசமாக ஒரு பணிக்கூடமும், ஒரு தோல் தைக்கும் தையல் இயந்திரமும் வழங்க வகை செய்யும் திட்டம் ஏற்கெனவே செயலில் இருந்து வருகிறது. இந்தப் பணிக்கூடங்கள் மூலம் இம்மக்கள் காலணிகள் செய்யும் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு மனநிறைவு கொள்ளும் வகையில் வருவாய் ஈட்டி வருவதைக் கண்டறிந்து, 1993-94-ஆம் ஆண்டி லும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த 2,000 காலணிப் பணிக்கூடங்களை ரூ.2 கோடி செலவில் செய்து, அதற்குரிய தையல் இயந்திரங்கள் மற்றும் பிற கருவிகளுடன் இந்தக் காலணிப் பணிக்கூடங்கள் விநியோகிக்கப்படும்.

தமிழ்நாட்டில், பழங்குடி மக்கள் 13 பகுதிகளில் ஆங்காங்கே பரவலாக வசிக்கின்றனர். பழங் குடியினர் அதிகமாக வாழும் 9 இடங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் (I.T.D.P) செயல் படுத்தப்படுகின்றன.

பழங்குடியினர் உதவித் திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு மற்றும் கறவை மாடுகள் வாங்க உதவித் தொகை, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப் படுகின்றன. கறவை மாடுகள் ஒன்றிற்கு ரூ.4,750 வீதம் இரண்டு மாடுகள் வாங்க 50 சதவிகிதம் உதவித் தொகையாக வழங்கப் படுகிறது. கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் பழங்குடி யினருக்கு இது 75 சதவிகித உதவியாக வழங்கப்படுகிறது. அதேபோன்று ரூ.10,000 செலவில் ஆடுகள் வாங்க 50 சதவிகித உதவித்தொகை வழங்கப்படுகிறது. கல்வராயன் மலைப்பகுதிப் பழங்குடியினருக்கு 75 சதவிகித உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு மணிமண்டபம்

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கருக்கு நூற்றாண்டு மணிமண்டபம் கட்ட சென்னை யின் மையப்பகுதியில் 5 ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மணி மண்டபம் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள்.

# இந்து அறநிலையத்துறையின் இணையிலாச் சாதனைகள்

## மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு. வெ. நடேசன் பால்ராஜ்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது நம் ஆன்றோர் வாக்கு. கோயில் இருந்தால் மட்டும் போதுமா? அவை சரியாக நிர்வகிக்கப் படவேண்டும்; பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார்கள். எனவே, மாநில அளவில் திருக்கோயில் நிர்வாக வாரியமும் மாவட்ட அளவில் 19 மாவட்டக் குழுக்களும் அமைத்து அறங்காவலர்களையும் நியமித்துள்ளார்கள்.

பண்டைய புராதனக் கோயில்கள் பல கவனிப்பாரற்று ஒரு கால பூஜைக்குக் கூட வழியின்றி இருந்த நிலையைக் கண்ணுற்று வருந்திய மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அனைத்து திருக்கோயில்களிலும் நித்திய பூஜை நடைபெற வேண்டும் எனக்கருதி ரூ.25,000 வைப்பு நிதித் திட்டத்தை அறிவித்தார்கள். இதன்மூலம் 2,500 திருக்கோயில்கள் பயன்பெற வுள்ளன. ரூ.7 கோடி திட்டத்தின் கீழ் ஒரு கால பூஜைக்கு திருக் கோயில் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் 1,353 திருக்கோயில்கள் பயனடைந் துள்ளன.

ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து ஒரு கால பூஜை நடைபெற 1991-92-இல் 547 திருக்கோயில்



களுக்கு 13.67 இலட்சமும், 1992-93-இல் 265 திருக்கோயில் களுக்கு 9.27 இலட்சமும், 1993-94-இல் 581 திருக்கோயில் களுக்கு 20.33 இலட்சமும் வழங்க மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஆலயங்கள் சிறப்பாகப் பராமரிக் கப்பட வேண்டும் என்பதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கண்ணும் கருத்துமாக உள்ளார்கள். சென்ற மூன்றாண்டு களில் 221 திருக்கோயில்களில் திருப்பணிகள் நிறைவுபெற்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து கிராமப்புற திருக்கோயில்கள் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 1991-92-இல் 66 திருக்கோயில்களுக்கு ரூ.16.50 இலட்சமும், 1992-93-இல் 95 திருக்கோயில்களுக்கு ரூ.23.15 இலட்சமும், 1993-94இல் 88 திருக்கோயில்களுக்கு ரூ.22 இலட்சமும் வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள் ளார்கள். இப்பொழுது 20 திருக்கோயில்களுக்கு ரூ.5 கோடி செலவில் திருப்பணி செய்ய ஆணைபிறப்பித்து உள்ளார்கள். நெல்லை கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் உள்ள நவத் திருப்பதி என்னும் 9 வைணவத்திருத்தலங்களில் 240 இலட்சம் செலவில் திருப்பணி செய்யவும், நவ கைலாசம் என்னும் 9 சைவத் திருக்கோயில்களில் ரூ.250 இலட்சம் செலவில் திருப் பணி செய்யவும் ஆணை பிறப்பித் துள்ளார்கள்.

திருக்கோயில்களும் அதன் சுற்றுப்புறங்களும் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டும் என இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள் ளார்கள். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத் திருக்கோயில் களில் சுத்தமாகப் பராமரிக்கப் படும் ஆலய ஊழியர்களுக்கும் கேடயம் வழங்கிப் பாராட்டலாம் என ஆணையிட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களில் நடைபெறும் பூஜைகளும் திருப்பணிகளும் ஆகம விதிகளுக்குட்பட்டே நடக்க வேண்டும் என ஆன்மீக மக்கள் விரும்புகிறார்கள். மக்களின் எண் ணத்தை ஈடேற்றும் பொருட்டு தமிழகத்தில் முதன்முறையாக வேதாகமக் கல்லூரி நிறுவ திருச்சி அருகே உள்ள கம்பரசன்பேட்டை யில் 25 ஏக்கர் நிலம் அளிக்கப் பட்டு - வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப் பயிற்சித் திட்டத்திற்கு ரூ.8 இலட்சம் நிதி மாற்றம்



செய்யப்பட்டு 10 இடங்களில் பயிற்சி அளிக்க, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. கூடிப் பிரார்த்தனை செய்தால் இன்னும் எத்தனையோ நன்மைகள். எனவேதான், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அனைத்துக் கோயில்களிலும் மாலையில் ஒரே நேரத்தில் தினமும் "ஜெப யோகம்" என்னும் கூட்டுப் பிரார்த்தனை செய்ய ஆணையிட்டு எண்ணுபவை எல்லாம் உயர்வாக இருக்க வழி வகுத்துள்ளார்கள்.

கடவுளே இல்லை என்று மக்களின் மனதில் விஷத்தை ஊட்டி வளர்த்து வந்தனர் சிலர். அதன் காரணமாகக் கோயில்களில் சிலைத் திருட்டும் களவும் நடந்து வந்தன. 20 ஆண்டுகளுக்கு முன்பு களவு போன புகழ் பெற்ற பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டு புரட்சித்தலைவியின் ஆணைப்படி ரூ.7 இலட்சம் செலவில் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது. திருவாரூரில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு ரூ.9 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதியும் செய்யப்பட்டுள்ளது. 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினர் கொண்ட கோயில் பாதுகாப்புப்படை ஒன்று கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளது. அதோடு 337 திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்த புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாண்டு பிப்ரவரி மாதம் சிலைத் திருட்டுகளில் ஈடுபட்டு இருந்த சோலைமலை என்பவரையும் அவனது கூட்டாளிகளையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இதன்மூலம் சிலைத்திருட்டுக்கள் பெருமளவு குறைந்துள்ளன.

தமிழகத்துப் பெரிய திருக்கோயில்களில் நித்திய பூஜைகளைக் கட்டளைதாரர்களைக் கொண்டே நடத்த முடியும். எனவே, ஆன்மீகப் பெருமக்களை அணுகிக் கட்டளைகளை ஏற்று நடத்தக் கோரவும், திருக்கோயில்களில் இதனால் கிடைக்கும் பிற வருமானங்களைக்கொண்டு சுற்றியுள்ள சிறிய மற்றும் வருமானமில்லாத கோயில்களைப் பராமரிக்க இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் யாத்ரிகர்களும் பக்தர்களும் மதுரை மற்றும் தஞ்சை போன்ற புராதன நகர்களிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள திருக்கோயில்களுக்கு வந்தவண்ணம் உள்ளனர். இவர்கள் வழிகாட்டிகள் என்று கூறிக்கொள்பவர்களாலும், தனியார் ஊர்தி ஓட்டுநர்களாலும் ஏமாற்றப்படுகின்றனர். எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மதுரை மற்றும் தஞ்சையை மையமாகக் கொண்டு, அவற்றைச் சுற்றியுள்ள அனைத்துத் திருத்தலங்களுக்கும் ஒரே நாளில் சென்று வர சிற்றுண்டி மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய அழகு உலா ரதங்கள் விட ஆணையிட்டுள்ளார்கள்.

இறை பணி செய்வதுடன் இறைவனுக்குப் பணி செய்பவர்களுக்கும் நலத்திட்டங்களை இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தி வந்துள்ளது. ஓதுவார்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை ரூ300 ஆக உயர்த்தியும், வேதபாராயணம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பாடுவோர் மற்றும் அறையர் சேவை செய்வோர்க்கும் ஓய்வுபெற்ற தகுதி வாய்ந்த அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியும் இந்த அரசு சாதனை படைத்துள்ளது.

இறையுணர்வு இருந்தால் அன்பும், பணிவும், நாட்டுப்பற்றும் தானாகவே வந்து சேரும். கடந்த மூன்று ஆண்டுகளாகத் தெய்வீக ஆட்சி நடைபெறும் காரணத்தினால், தமிழகம் இந்தத் திசையில் வீறு நடைபோடுகிறது.



# மனித நேயத்தின் மணிமகுடம்



## மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்

## திரு டி. ஜெயக்குமார்

மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்ற அரசுதான் மக்கள் சக்தி வாய்ந்த அரசாக அமையும். இதன் அடிப்படையில்தான் ஆசியக் கண்டத்தின் அற்புதத் தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக மக்களின் ஒட்டுமொத்தமான அன்பையும் ஆதரவையும் பெற்று மக்கள் சக்தியாக இருந்து வருவதோடு, மக்கள் விரும்பும் மக்களாட்சியை மூன்று ஆண்டுகளாக நடத்தி மகத்தான சாதனைகளைப் புரிந்துவருகிறார். இந்த மகத்தான சாதனைகளின் உயிரோட்டமாய் அமைந்திருப்பது, இதயதெய்வத் திடம் இருக்கும் மனிதநேயம் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

மனிதநேயமும் மக்கள் சக்தியும் ஒருங்கே கொண்ட இணையற்ற தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏழைகளின் வாழ்வில் விடிவெள்ளியாகவும், அவர்களது குடும்பத்தின் குலவிளக்காகவும் இருந்து உழைத்து வருவதால்தான் ஏழைகள் தங்கள் துயரங்களை மறந்து சிரிப்புடன் வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்தில் மேடுபள்ளங்கள் இருப்பது தவிர்க்க முடியாததாக இருப்பினும், மேடுகளைப் பள்ளங்களாக்காமல், பள்ளங்களை மேடுகளாக்க வேண்டும் என்ற உன்னத எண்ணத்துடன் செயல்பட்டுவரும் சமூக நீதிகாக்கும் வீராங்கனையாகத் திகழ்ந்து வருகிறார்.

இந்திய நாட்டிலேயே பிற்பட்டவர்க்கும், மிகவும் பிற்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டோர்க்கும், உரிய சலுகைகளைத் தந்து கல்வி நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புகளிலும் 69 சதவிகித இட ஒதுக் கீட்டைத் தொடர்ந்து செயல்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் அவ்வப்போது எடுத்துச் செயல்பட்டு வருவதோடு, இதற்கெனத் தனிச்சட்டத்தை நிறைவேற்றி ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பாதுகாப்பை உறுதிபடுத்திட, இதுவரையில் எந்த அரசும் சாதிக்காத அளவிற்குப் பிற்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்கள் அனைத்து வகையிலும் மேம்பாடு அடைய கல்வி ஒன்றுதான் ஆதாயம் எனக் கண்டறிந்து, இலவசக் கல்வியை அளித்து வருவதோடு, மாணவ மாணவியர் தங்கி படிப்பதற்கேற்ப 804 விடுதிகள் இயங்கி வருகின்றன. மேலும் இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவமாணவியர்க்கு இலவச உணவு, இலவசப் புத்தகங்கள், இலவச் சீருடைகள் போன்ற சலுகைகளை அளித்து வருவதோடு, பொது அறிவை வளர்த்துக்கொள்ள ஒவ்வொரு விடுதிகளிலும் சிறிய நூலக வசதிகளை ஏற்படுத்தியுள்ளார். தொழில் சார்ந்த தொழிற் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

பெண்களுக்கு என்று தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி கைவினைப் பொருட்கள், ஊறுகாய், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. அகில இந்தியப் பணிகளுக்காகத் தனிப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுவதோடு, பெற்றோரின் வருமான வரம்பிற்கும் விலக்களிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தொழில் செய்ய,



## இராணுவ வீரரின் மனைவிக்கு அரசுப் பள்ளியில் வேலை!

**திருமதி ஏ. விஜயலட்சுமி என்பவர் தனது கணவரான திரு. கே. அருள், இந்திய இராணுவத்தின் ஹவில்தாராகப் பணிபுரிகிறார் என்றும், அவர் இலங்கையில் இந்திய இராணுவம் மேற்கொண்ட அமைதிப்பணியிலும், பின்னர் பஞ்சாபில் தீவிர வாதிகளை அடக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கும் போது, காயமுற்று தற்போது மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், தனது குடும்பத்தின் ஏழ்மை நிலையினைச் சுட்டிக் காட்டி, தான் இடைநிலை ஆசிரியர் பயிற்சித் தகுதி பெற்றுள்ள காரணத்தால், தனக்கு அரசுப் பள்ளி ஏதேனும் ஒன்றில் இடைநிலை ஆசிரியர் பணி கோரி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களுக்குக் கருணை மனு ஒன்றினை அனுப்பி வைத் திருந்தார்.**

**திருமதி விஜயலட்சுமியின் கருணை மனுவினை கனிவோடு பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருமதி விஜயலட்சுமியின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது கோரிக்கையைச் சிறப்பு இனமாகக் கருதி, அவருக்கு அரசுப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் உடன் வழங்கப்படவேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.**

---

குறைந்த வட்டியில் கடனுதவி அளிக்கப்படுகின்றன. மீனவர்களின் நல்வாழ்விற்கெனச் சிறப்புமிக்க பொருளாதாரத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கடலில் தொழில் செய்யும்போது எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டால் இறந்த மீனவ குடும்பத்துக்கு ரூ.50,000 நிவாரணத்தொகை வழங்க ஏற்பாடு செய்துள்ளார். சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், தொழில் செய்யும் மாதங்களில் மாதம் ரூ.45 வசூலிக்கப்பட்டு, தொழில் செய்யாத 4 மாதக் காலத்தில் மாதத்துக்கு ரூ.270 வழங்கப்படுகிறது.

கடல் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மீன்பிடித் துறைமுகங்களில் அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன. வலைகள், மீன்பிடிப் படகுகள், விசைப்படகுகள் வாங்க 20 சதவிகித மானியம் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மீனவர்கள் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றப்பட்டுள்ளது. இதே முனைப்புடன் அனைத்துத் துறைகளிலும் மக்கள் நலங்காக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதால்தான், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியை நல்லாட்சி என்றும், சிறப்பான ஆட்சி என்றும், சான்றோர்களும், தமிழக மக்களும், அண்டை நாட்டினரும், உலக அரங்கில் முற்போக்கான நாடுகளும் புகழ்ந்து கூறுகின்றனர்.



ஆதரவற்ற நிலையில் இருந்த திராவிடப் பாரம்பரியக் குழந்தைகளுக்கு அன்னையாய் வந்து, அருள்வடிவாய் நின்று காத்திடும் தெய்வமாய்த் திகழும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அகில இந்திய அண்ணா தி.மு.கழகத்தின் காவல் தெய்வமாகவும், கோடானுகோடி ஏழை மக்களின் நடமாடும் தெய்வமாகவும் இருந்து வருகிறார். அத்துடன் மனிதநேயம் கொண்ட ஒப்பற்ற தலைவியாகவும் துலங்குகிறார். இதனால்தான் தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறியதோடு, தமிழ் மண்ணின் பெருமைகளையும் திரும்பப் பெற்றுள்ளது.

கற்பூரம் தன்னைத்தானே உருக்கிக்கொண்டு எரிவதால்தான் கற்பூரதீபத்தில் தெய்வத்தையே காண முடிகிறது. மெழுகுவர்த்தி தன்னைத்தானே உருக்கிக்கொண்டு எரிவதால்தான் நிலையான ஒளிவெள்ளம் வீசுகிறது. சான்றோர்கள் தன்நலன் கருதாது தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டு பிறருக்காக உழைப்பதால்தான் மற்றவர்களின் வாழ்வில் ஒளி பிறக்கின்றது. பொதுவாக மனிதனைத்தவிர, உலகில் அனைத்து உயிர்களும் பிறருக்காகவே வாழ்கின்றன. மனிதகுலத்தில் ஒரு சிலர் மட்டும் தனக்காக வாழாமல் மற்றவர்களின் நல்வாழ்விற்காக வளவாழ்விற்காக வாழ்வதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளனர்.

இந்த வரிசையில் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இருந்து, தனக்காக வாழாமல் தன்னுயிருக்கு ஆபத்து இருப்பதை அறிந்தும் மக்களுக்காக, மக்கள் நலனுக்காக, அல்லும் பகலும் உழைத்து வருவதால்தான் மக்கள் சக்தி அனைத்தும் அவர் பின்னால் திரண்டு நிற்கின்றது. இந்த மாபெரும் மக்கள் சக்தியைப் பொதுத் தேர்தலிலும், அண்மையிலே நடந்துமுடிந்த இடைத்தேர்தல்களிலும் நாம் கண்டுகொண்டோம். எத்தனைத் தடைகள் வந்தாலும் அத்தடைகளைச் சந்தித்து, சமாளித்து, வெற்றிபெற்று, வீரவரலாற்றைப் படைத்து வருவதோடு சமூக நீதியைக் காத்து மனித நேயத்தின் மணிமகுடமாக மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் திகழ்ந்து வருகிறார்.

வாழ்க எங்கள் புரட்சித்தலைவி! ஓங்குக அவரது புகழ்!

# இந்தியச் சுற்றுலாவில் தமிழ்நாட்டின் தனிப்பெருமை!

## மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
## திரு எஸ். நாகூர்மீரான்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாடு மேலும், மேலும் பல பெருமைகளைப் பெற்று வருகிறது. தமிழகத்தின் சுற்றுலாப் பெருமையைத் தரணிக்கே உணர்த்திடும் உன்னதப்பணியில் சுற்றுலாத் துறை சிறப்பாகப் பாடுபட்டு வருகிறது. ஆற்றல்மிகு முதல்வர் அவர்களின் தலைமையில், தமிழகத்தைச் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாக மாற்றும் பணி மென்மேலும் சிறப்புடன் உயர்ந்துவருகிறது.

இந்தியக் கலாச்சாரத்தின் மிகப் பழம்பெரும் ஓர் அரணாகத் தமிழகம் விளங்குகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு சிறப்புகளை வெளி மாநிலங்களுக்கும், வெளிநாட்டவருக்கும் அறிமுகப்படுத்தும் பணியில் சுற்றுலா முக்கியப் பங்கு வகிக்கிறது. காலத்தால் அழியாத கட்டடக்கலை, சிற்பங்கள், ஓவியங்கள், இயல், இசை, நாட்டியம், கைவினைப் பொருட்கள், கிராமப் புறக் கலைகள், திருவிழாக்கள் முதலானவை தமிழ்நாட்டில் பாரம்பரியங்களாகும். தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக் கூடியவை, உயர்வும், சிறப்பும் ஒருங்கே கொண்ட பழமை வாய்ந்த கோவில்கள், அழகிய கடற்கரைகள், அமைதி தவழும் மலைவாழிடங்கள், வளம் மிக்க வனச் செல்வங்கள், வன விலங்குகள் ஆகியவையாகும்.

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணியர் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்ற ஒரு முக்கிய மாநில மாகும். 1992-ஆம் ஆண்டு 4.01



இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளும், 131 இலட்சம் உள் நாட்டுப் பயணிகளும் இங்கே வருகை புரிந்தனர். 1993 ஆம் ஆண்டு 4.41 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளும், 138 இலட்சம் உள் நாட்டுப் பயணிகளும் வருகை புரிந்தனர். ஆண்டுக்கு, ஆண்டு உயர்ந்து வரும் இந்தப் புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டு முறையாகவும், கவனமாகவும் திட்டமிடப்பட்டுப் பணிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுற்றுலா மையங்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிக எண்ணிக்கையில் ஈர்ப்பது மிக முக்கியம்.

அதன் வழியே அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டுவதற்கு இது ஓர் சிறந்த உறுதியான வழியாகும். முறையாகவும், கவனமாகவும், சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் அங்கு நீண்ட நாட்கள் தங்கவும், அவர்கள் மீண்டும், மீண்டும் அங்கு வருகை தரவும் ஊக்கமளிப்பதாக இது இருக்கும். இதுவே மாநில அரசின் முக்கிய நோக்கமாகும்.

செல்லும் இடமெங்கும் வசதியான தங்குமிடங்கள், உணவு விடுதிகள் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ள சுற்றுலாக்கள், படகுக் குழாம் இதுபோல் இன்னும் பல்வேறு வசதிகளைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வழங்குகிறது. அழகிய கடற்கரை, பிரமிப்பூட்டும் மலைத் தொடர்கள், விண்ணைமுட்டும் கோபுரங்கள், வனப்புமிக்க வன விலங்குச் சரணாலயங்கள் சென்று வர, கண்டுமகிழ வசதியான சிறப்புச் சுற்றுலாத் திட்டத்தைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்துச் சுற்றுலாப் பயணிகளும் பாராட்டும் வகையில் சிறப்பாக நடத்திவருகிறது.

தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில், தமிழகத்தின் தொன்மையான கலாச்சாரப் பெருமை, கூடுதல் சிறப்புப் பெற்றிருக்கிறது. இவருடைய சீர்மிகு ஆட்சிக் காலத்தில் 'சுற்றுலா' என்பது வளர்ச்சியும், எழுச்சியும் பெற்று சாதனைகளைக் கொண்டு விளங்குகிறது.

அனைத்துச் சலுகைகளும், மானியங்களும் இதரப் பயன்களுடன் கூடிய ஒரு தொழிலாகச் சுற்றுலாத்துறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

மாமல்லபுரம், தரங்கம்பாடி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சிறப்புச் சுற்றுலா மையங்களாக

அறிவிக்கப்பட்டு, இங்கு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு ஊக்க வசதிகள் வழங்கப்பட உள்ளது.

தொன்மைக் கலாச்சாரப் பெருமைகொண்ட எல்லா நகரங்களும் பழம்பெரும் கலாச் சார நகரங்களாக அங்கீகரிக் கப்பட்டு, சிறப்புப் பகுதி வளர்ச்சிக் குழுமத்தின் மேற் பார்வையில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு உள்ளன.

சாகச விளையாட்டுச் சுற்றுலா (Adventure Tourism), புனல் விளையாட்டு (Water Sports), மலைவெளியில் நடைப்பயணம் (Trekking) ஆகியவற்றை மேலும் ஊக்குவித்தல்–மேம்படுத்துதல்.

கலாச்சாரச் சுற்றுலா வளர்ச்சி யில் (Cultural Tourism) சிறப்புக் கவனம்.

தமிழக மக்களின் விருந்தோம்பல் பண்பை அறியச் செய்யும் வகையில் தங்கும் விருந்தினர் திட்டம் (Paying Guest Accommodation.)

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென மத்திய அரசு நிதியுதவியுடன் கீழ்க்கண்ட சுற்றுலாத் திட்டங்கள் இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ளன:

| திட்டங்கள் | அனுமதிக்கப்பட்டுள்ள தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பெரம்பலூரில் சுற்றுலா விடுதி | 23.97 |
| நாமக்கல்லில் சுற்றுலா விடுதி | 23.25 |
| விருதுநகரில் சுற்றுலா விடுதி | 28.78 |
| கிருஷ்ணகிரியில் சுற்றுலா வளாகம் | 33.54 |
| குற்றாலத்தில் சுற்றுலா விடுதி | 30.00 |
| சமயபுரத்தில் யாத்ரிகர் விடுதி | 39.92 |
| சேலத்தில் சுற்றுலா வளாகம் | 33.21 |
| கும்பகோணத்தில் சுற்றுலா வளாகம் | 39.97 |
| பழனியில் சுற்றுலா விடுதி | 22.73 |
| திருநெல்வேலியில் சுற்றுலா வளாகம் | 39.93 |
| தமிழகத்தில் சிறப்பு இரயிலுக்கான பெட்டிகளை நவீனப்படுத்த | 48.00 |
| முட்டுக்காடு மற்றும் பழவேற்காடு ஏரிக்கு உரிய படகுகள் வாங்குதல் | 14.93 |

இவையெல்லாம் சுற்றுலாவின் வளர்ச்சி மற்றும் எழுச்சிமிகு சாதனைகளின் ஒரு சில துளிகள் ஆகும். வெளிநாட்டுச் சுற்றுலா முகவர்கள், திட்டமிட்ட தொகுப் புச் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த முறையில் முன்னதாகவே ஏற்பாடு செய்ய இயலும் வகை யில், தமிழ்நாட்டில் பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த, பின் வரும் விழாக்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்படுகின்றன:

குன்னூரில் தேநீர் மற்றும் சுற்றுலா விழா - சனவரி.

முக்கியச் சுற்றுலா மையங்களில் பொங்கல் விழா - சனவரி.

மாமல்லபுரத்தில் நாட்டிய விழா சனவரி, பிப்ரவரி.

சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா - பிப்ரவரி, மார்ச்.

மதுரையில் சித்திரைத் திருவிழா, சுற்றுலா கலைவிழா - ஏப்ரல், மே.

உதகை, கொடைக்கானல், ஏர்க் காடு, ஏலகிரி ஏனைய மலைவாழிடங்களில் கோடை விழா - மே.

கிருஷ்ணகிரியில் மாங்கனி விழா - ஜூன்.

குற்றாலத்தில் சாரல் விழா - ஜூலை, ஆகஸ்ட்.

முக்கியச் சுற்றுலா மையங்களில் உலகச் சுற்றுலா தின விழா - செப்டம்பர்.

இவை தவிர, வரும் கோடை காலத்தில் முதுமலையில் 'யானைகள் திருவிழா' கன்னியா குமரியில் 'குமரிமுனைத் திரு



விழா'வும் நடத்தக் கருதப் பட்டுள்ளது.

தமிழகத்தின் 'அரண்மனை இரயில்' (Palace on Wheels)என்னும் சொகுசு இரயில் விடும் திட்டத் திற்கு அரசு ஒப்புதல் அளித் துள்ளது. இந்தச் சொகுசு இரயில் சென்னைக்கும் இராமேஸ்வரத் திற்கும் இடையே முக்கியச் சுற்றுலா மையங்களான சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார், வேளாங் கண்ணி, நாகூர், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ' மண்டபம் ஆகிய ஊர்களை உள்ளடக்கிச் செல்லும். இந்த இரயில் இந்த ஆண்டு இறுதியில் ஓடத் தொடங்கும். இவ்வகையான புதிய சுற்றுலாக் கொள்கை, இம்முக்கியமான கூறுகளைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்தில் சுற்றுலா மேம் பாட்டுக்கான விரிவான முனைப் புத் திட்டங்களுக்கு வகை செய்கிறது. மாறிவரும் பொருளா தாரச் சூழ்நிலைக்கேற்ப, சுற்றுலா மேம்பாட்டில் தனியார் துறையை யும் ஈடுபடுத்துவதற்கும், சுற்றுலா வாய்ப்புள்ள பகுதியை மேம் படுத்தும் அணுகுமுறையைப் பின்படுத்தவும் தக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் புரட்சித்தலைவி அவர் களின் ஆட்சியில் 'சுற்றுலா' வளர்ச்சியும், எழுச்சியும் பெற்று புதிய பல சாதனைகளைப் படைத்து வருகிறது என்பது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

# கைவினைப்பொருட்கள், கதர்த் துறையின் மூன்றாண்டுச் சாதனை



மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு பி. ஈஸ்வரமூர்த்தி

துறைதோறும் துறைதோறும் சாதனைச் சரித்திரம் படைத்து வருவது, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சி. கடந்த 3 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் பற்பல. அந்த வகையில் கதர் கிராமத் தொழில் வாரியத்தில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் வருமாறு:

* வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல்,

* உள்ளூரிலேயே கிடைக்கும் வசதிகளைப் பயன் படுத்தி விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்,

* மக்களிடத்தில் தற்சார்பு நிலையை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்வை வளர்த்தல்.

ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்பட்டு வருகிறது. கிராமத் தொழில்களாக;

1. கனிமப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்;

2. வனப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்;

3. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்; உணவுப் பொருள் தயாரிப்புத் தொழில்கள்;

4. பாலிமல் மற்றும் இரசாயனத்தை அடிப்படை யாகக் கொண்ட தொழில்கள்;

5. பொறியியல் மற்றும் மரபு சாரா எரிசக்தி;

6. துணித் தொழில்;

7. சேவைத் தொழில்கள்;

ஆகியவை அறிவிக்கப்பட்டு வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

தற்போது 10,000 மக்கள் தொகை கொண்ட பகுதியில் வாழ்கின்ற கைவினைஞர் ஒருவர் ரூ.15,000 வரை முதலீடு செய்து மின் சக்தியைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாமல், தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கலாம். இக்கிராமத் தொழில்கள் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரம்புக்குள் வரும்.

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில், 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர் தொழில்களையும் மூன்று பிரிவாக வகைப்படுத்தி பின்வருமாறு வாரியம் செயல்படுத்துகிறது:

வாரியத்தின் சொந்தத் தொழில் பிரிவுகள் - 1284.

வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள் - 1876.

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று நிதியுதவி அளிக்கப்பெற்ற கைவினைஞர்கள் - 82,045.

1994-95-ஆம் ஆண்டில் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.340.00 மற்றும் ரூ.385.00 கோடிக்கு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் வாரியம் 1.20 இலட்சம் நபர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டு முழுநேரப் பருவகாலப் பகுதிநேர வேலை வாய்ப்பினை 1.30 இலட்சம் நபர்களுக்கு வழங்கிட வாரியம் திட்டமிட்டுள்ளது.

1994-95ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் பின்வரும் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப் படவுள்ளன:

| | ரூபாய் இலட்சத்தில் | பயனீட்டாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. 500 கதர் நெசவாளர்களுக்கு நவீன தறிகள் வழங்குதல் | 7.50 | 500 |
| 2. 300 பட்டு கதர் நெசவாளர்களுக்கு ஜாக்குவார்ட் பெட்டிகள் வழங்குதல் | 3.60 | 300 |
| மொத்தம் | 11.10 | 800 |

கதர்த் திட்டங்கள், உண்ணா எண்ணெய், சோப்புத் தொழில் ஆகியவை வாரியத்தின் தொழில் அலகுகள் மூலம் செயல்படுத்தபடுகின்றன. பனைவெல்லம், பனங்கற்கண்டு, பழுப்புச் சர்க்கரை, பருப்பு மற்றும் தானிய வகைகள், தும்பு, சுண்ணாம்பு, பிரம்பு, மூங்கில் ஆகிய தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாகச் செயல்படுத்தப் படுகின்றன. ஏனைய அனைத்துத் தொழில்களும் வாரியத்தின் தொழில் அலகுகள், தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் (1991-92-லிருந்து 1993-94-முடிய) இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 3,50,000 (1,40,000) பெண்கள் உட்பட கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய தேதியில் மொத்த வேலை வாய்ப்பு பெற்ற 12,88,000 பேரில் மகளிர் மட்டும் 4,85,000 பேர் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.



வாரியக் கட்டமைப்பிலும், திட்டங்களை செம்மையாக நிறைவேற்றுவதிலும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்தையும் விட முன்னணி வகிக்கிறது. இந்த வகையில் இந்தியாவிலுள்ள கதர் கிராமத் தொழில் வாரியங்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மட்டும்தான் 'ஏ' கிரேடு பெற்று முதல் இடத்தை வகிக்கிறது என மத்திய அரசின் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஆய்வு செய்து, தேர்வு செய்து அறிவித்துள்ளது. வேறு எந்த மாநிலமும் 'ஏ' கிரேடு பெறவில்லை.



இதற்காகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மத்தியக் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒரு சிறப்புக் கேடயம் வழங்கவுள்ளது. கடந்த 33 ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறாத இந்த ஏற்றமிகு சிறப்பு, புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இக்கைவினைஞர்களை உயர்த்தும் பொருட்டு "தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம்" என்ற தனி வாரியம் 1994-லிருந்து அமைக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி, விற்பனை, வேலை வாய்ப்பு அளித்தல் ஆகியவற்றில் மிகப் பெரும் சாதனை புரிந்துள்ளது.

| | உற்பத்தி | | மொத்தம் | விற்பனை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | கதர் | கிராமத் தொழில் பொருட்கள் | | கதர் | கிராமத் தொழில் பொருட்கள் | | வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | இலட்சம் பேர் |
| 1991-92 | 2280 | 27041 | 29321 | 2895 | 29565 | 32460 | 10.83 |
| 1992-93 | 2650 | 29871 | 32521 | 2834 | 31862 | 34696 | 11.83 |
| 1993-94 | 3700 | 33000 | 36700 | 3850. | 37500 | 41350 | 12.88 |
| 1994-95 (இலக்கு) | 4040 | 34000 | 38040 | 4190 | 38500 | 42690 | 14.18 |

கடந்த மூன்று ஆண்டுகளில் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அடைந்துள்ள முன்னேற்றத்தினைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாக அறியலாம்:

புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிக வேகமாக முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை மேற்காணும் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 3,50,000 கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய தேதியில் மொத்த வேலை வாய்ப்பு பெற்ற 12.88 இலட்சம் பேரில், மகளிர் மட்டும் 4,85,000 பேர் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் தமிழ்நாடு உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும், கிராமத் தொழில் பொருள் உற்பத்தியில் மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது.

வாரியக் கட்டமைப்பிலும், திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றுவதிலும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்தையும் விட முன்னணி வகிக்கிறது.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-











